
# ஊடறு



# ஊடறு

பெண் படைப்பாளிகளின்
தொகுப்பு

2002/05

தொகுப்பாளர்கள்
**றஞ்சி** (சுவிஸ்)
**தேவா** (ஜேர்மனி)
**விஜி** (பிரான்ஸ்)
**நிருபா** (ஜேர்மனி)

# UDARU

Collection of Women s Writings
and Paintings.

Published on
May 2002

Published
&
Compiled
by
Ranji (Swiss)
Theva (Germany)
Viji (France)
Niruba(Germany)
email : rran@bluewin.ch

Layout by
Ravi (swiss)

Printed at
Mani Offset
Chennai-5

Distribution in India
Vidiyal Pathippagam
11, Periyar Nagar
Masakkalipalayam (North)
Coimbatore 641 015
email: vitiyal2000@eth.net

## ஊடறுப்பு

புகலிட வாழ்வு, பெண்ணியம், தலித்தியம், தமிழ் அரசியல் என்பன குறித்த பின்நவீனத்துவப் படைப்புக்கள்வரை இன்று புகலிடத்தில் தொகுப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் இன்று நாம் சொல்வதற்கு பல விடயங்கள் இருந்தாலும், பெண்களின் பிரச்சினைகளே எமக்கு முக்கியமாக உள்ளன. தமது நிலை பற்றி பெண்கள் கேள்வியெழுப்பத் தொடங்கியுள்ளனர். யுத்தமும் பெண்ணொடுக்கு முறையும் பெண்களை வாழ்வின் எல்லைக்கே துரத்துகின்றது.

உலகெங்கும் பெண்கள் சுரண்டப்பட்டும், அடக்கப்பட்டும் வருகின்றார்கள். பிற்போக்குத்தனமான சமூகக் கட்டுப்பாடுகளும், அடிப்படை மதவாதங்களும் ஆண்மேலாதிக்கத்துடன் சேர்ந்து பெண்களுக்கே புத்திமதிகளை உதிர்த்து வருகின்றன. பெண்ணுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்று பெண்கள் குரல் கொடுக்க முனையும் போது பெண்கள் ஆணாதிக்க சட்டங்களாலும் சமூகத்தாலும் அடக்கப்படுகிறார்கள்.

தமிழ் இலக்கியம் என்று வரும்போது அதனைப் படைப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். இப் படைப்பாளிகள் தமது படைப்புகளுக்கு ஊடாக தாம் மறைமுகமா-கவோ அல்லது நேரடியாகவோ ஏற்றுக் கொண்டுள்ள ஆணாதிக்கச் சிந்தனைகளை எமது சமூகத்திற்கு ஊட்டி வந்துள்ளனர். சிறிய அளவிலேனும் பெண் விடுதலைக் கருத்துக்கள் எமது சமூகத்தில் உள்வாங்கப்பட்ட பின்னர் பெண்ணிய எழுத்துக்கள் வெளிவரத் தொடங்கின வளர்ந்து வருகின்றன.

ஆண் அதிகாரத்தால் பாதிக்கப்படும் அனுபவங்களும், யுத்தத்தால் –ஆண்களைவிட– அதிகளவில் பாதிக்கப்பட்ட அனுபவங்களும் புலம்பெயர் சமூகத்தின் வாழ்பனுபவங்களுமாக பெண்நிலை அனுபவங்கள் பெண்களின் படைப்புகளில் பதிவாகின்றன.

இந்தவகை பெண்படைப்புலகின் ஒரு பதிவாக ஊடறு வெளிவருகிறது. ஆண்நோக்கிலான எழுத்துக்களை, அதன் படைப்புலகை ஊடறுத்து வெளிவரும் ஒரு தொகுப்பாக இதை உள்ளீடாக்க முனைந்துள்ளோம்.

## கட்டுரைகள்


கண்டகாரரை நோக்கிய ஒரு பயணம் 007 உமா, ஜேர்மனி
வேசிகளைப் பற்றிய சித்திரம் 017 யசோதா, இந்தியா
இன்பமும் அபாயமும்
பாலியல் தன்மையின் அரசியலை நோக்கி 021 யசோதா, இந்தியா
தலித்தியமும் தமிழ் இலக்கியமும் 049 அரங்கமல்லிகா, இந்தியா
மொழியும் ஆண்வழிச் சமூகமும் 070 செல்வி திருச்சந்திரன், இலங்கை
ஒரு தேவதாசியின் கதை 080 ஞானபாரதி, இந்தியா
Pfüi Pfüi புனிதவிழா 103 நிருபா, ஜேர்மனி
யுத்தம் எதற்காக 115 தேவா, ஜேர்மனி
சபியா ஒரு முடிவல்ல அவள் ஒரு தொடர் 124 ஜயந்திமாலா, சுவிற்சர்லாந்து
பாரம்பரியமற்ற தொழில்களில் பெண்கள் 128 பாரதி.கே, இலங்கை
சோவியத்திலிருந்து இன்றைய
அமெரிக்காவரை -ஒரு பெண்நிலைப்பயணம் 142 றஞ்சி, சுவிற்சர்லாந்து
தொழில்நுட்பமும் பெண் விடுதலையும் 158 சுபா, ஜேர்மனி
பெண்களும் அடங்குதலும் 163 சந்திரவதனா செல்வகுமாரன், ஜேர்மனி


## இதழியப் பதிவுகள்


பெண்களின் சில வெளியீடுகள்
-சில பகிர்தல்கள் 092 றஞ்சி, சுவிஸ்
ஒரு வெட்டுமுகம் 145 விஜி, பிரான்ஸ்
அந்த எரிந்த இதயம் 148 தயாநிதி, நோர்வே


## சிறுகதைகள்


பால்யம் 039 சந்திரா இரவீந்திரன், லண்டன்
சத்தமில்லா யுத்தங்கள் 062 சந்திரவதனா செல்வகுமாரன் , ஜேர்மனி
ஒத்த 083 பாமா, இந்தியா
ஒரு முற்போக்குவாதி காதலிக்கிறான் 135 ராஜேஸ்வரி பாலசுப்பிரமணிம், லண்டன்
ஸ்டிரைக் 152 பாலரஞ்சனி ஜெயபால் , இலங்கை


## கவிதைகள்


இனியும் நான் தனியாக இல்லை 014 ஜெயந்தி தளையசிங்கம், இலங்கை
மனிசியாக வாழ என்ன வழி 033 அருட்கவிதா, இலங்கை
நான் நானாக மட்டும் 034 அனார், இலங்கை
தலைப்பில்லாத கவிதை 035 பாமதி, அவுஸ்திரேலியா
அவர்களின் பார்வையில் 038 அருட்கவிதா, இலங்கை
தென்றல் ஒன்று பூகம்பமாய் 044 கி. கலைமகள், இலங்கை
வெட்கம் 046 மல்லிகா, ஜேர்மனி
Shame 047 Mallika, Germany
கருவேலமரமொன்று 048 திலகபாமா, சிவகாசி, இந்தியா
எனக்கான தேடலில் 056 நளாயினி தாமரைச்செல்வன், சுவிஸ்
துளிர் 061 விஜயலட்சுமி சேகர், இலங்கை
எட்ட ஒரு தோட்டம் 068 ஆழியாள், அவுஸ்திரேலியா
இன்னமும் என் இமை நனைய 088 சாந்தி ரமேஷ் வவுனியன், ஜேர்மனி
வேண்டியதில்லை சாவிகள் 091 கோசல்யா சொர்ணலிங்கம், ஜேர்மனி
பிணவலி 101 சந்திரா இரவீந்திரன், லண்டன்
தேடல்வலி 112 ஜெயந்தி சாம்சன், பிரான்ஸ்
உரிமைகளின் கருவாவாள் 114 வாசுகி குணரத்தினம், இலங்கை
வன்மப்படுதல் 123 அனார், இலங்கை
எடுக்கவோ கோர்க்கவோ 127 திலகபாமா, சிவகாசி, இந்தியா
மாலதி மைத்ரியின் இரண்டு கவிதைகள் 131 மாலதி, இந்தியா
பைத்தியக்காரன் 134 மஸாஹிறா பாயிஸ், இலங்கை
2000ம் ஆண்டில் 157 சிறிவதி, இலங்கை
விஜிகலாவின் கவிதைகள் 165 விஜிகலா, இலங்கை
பாடல் 167 உமா, ஜேர்மனி


## உள் ஓவியங்கள்


015,099 அருந்ததி ரட்ணராஜ், லண்டன்
059 வாசுகி ஜெயசங்கர், இலங்கை
160,161 றஞ்சினி, பிராங்போர்ட்


## அட்டை ஓவியங்கள்


முன் அட்டை ~ அருந்ததி ரட்ணராஜ்
பின் அட்டை ~ வாசுகி ஜெயசங்கர்

**நன்றிகள்**

**ஆக்கங்களை தந்துதவிய அனைத்து**
**படைப்பாளிகளுக்கும்**
**ஆக்கங்களை சேகரித்து தந்த**
**தோழிகளுக்கும்**
**அத்துடன் இத் தொகுப்பினைக் கொண்டு**
**வருவதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிய**
**-விடியல் பதிப்பகம் உட்பட-**
**அனைத்து நண்பர்களுக்கும்**
**பண உதவி செய்த நண்பர்களுக்கும்**
**எமது மனமார்ந்த நன்றிகள்!**




# கண்டகாரை நோக்கிய ஒரு பயணம்

**பயணம் 1**

உலகெங்குமுள்ள இஸ்லாமியர்கள் வானில் பிறைநிலவை எதிர்பார்த்து நோன்பிலிருந்த காலத் தில், வி52 குண்டுகளும், மலைகளைக் குடைந்து பங்கர்களைத் தாக்கும் அதிசக்தி வாய்ந்த குண்டு களும் உலக பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்த மென்ற போர்வையில் கண்டகாரையும், ஆப்கானிஸ் தானின் ஏனைய நகரங்களையும் தாக்கின.

சூரியகிரகணத் தினத்தன்று தற்கொலை செய்யவிருக்கும் தனது சகோதரியைக் காப்பாற்றுவதற்காக கண்டகாரை நோக்கி பயணம் செய்கிறாள் நாவாஸ் என்ற பெண்.
மோசன் மக்மல்பவ் (Mohsen Makhmalbaf) தான் எழுதிய நாவலை அடிப்படையாகக் கொண்டு இயக்கிய திரைப்படம் கண்டகார் (Kandahar).
இத் திரைப்படத்தில் நிலுபார் பஸீரா(Niloufar Pazira), ஹஷென் டன்டாய் (Hassan Tantai), சாடூ டெய்மோரி (Sadou Teymouri) என்போர் முக்கிய பாத்திரமேற்று நடித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து தாயின் இறப்பிற்குப் பின் தந்தையுடன் வெளியேறும் நாவாஸின் சகோதரி ஆப்கானிஸ்தானில் விட்டுச் செல்லப்படுகின்றாள். கனடாவில் பத்திரிகையாளராக கடமையாற்றும் அவளுக்கு தனது சகோதரியிடமிருந்து, தான் சூரியகிரகணத்தன்று தற்கொலை செய்யப் போவதாகக் கூறி கடிதம் வருகின்றது. அவளை எப்படியாவது காப்பற்றவேண்டுமென்ற நோக்கத்தில் ஈரான் எல்லையிலிருந்து கண்டகாரை நோக்கிப் புறப்படுகிறாள். அவளது கண்டகாரை நோக்கிய பயணத்தில் அவள் எதிர்கொள்ளும் இன்னல்களும், அனுபவங்களும் அப்போது ஆட்சியிலிருந்த தலிபானின் பெண்கள் மீதான இறுக்கமும் ஒவ்வொரு காட்சிகளையும் சித்தரித்து நிற்கின்றன.

சூரியகிரகணத்துடன் ஆரம்பிக்கும் இத் திரைப் படத்தின் ஒவ்வொரு காட்சிகளும் உயிரோட்டமான ஒளிப்பதிவும், ஆப்கானில்தான் இசையுடன் இணைந்து வரும் சுப்ரபாதமும் எம்மையும் நாவாஸுடனேயே நகர்த்திச் செல்கின்றன.

ஈரானிலிருந்து மீண்டும் ஆப்கானிஸ்தான் திரும்ப உத்தேசித்திருக்கும் ஒரு குடும்பத்துடன் நவாஸ் தன்னை இணைத்துக் கொள்கிறாள். அந்தக் குடும்பத்தில் உள்ள ஓர் ஆணின் மனைவியாக வேடம் தரித்தே அவள் புறப்படு கிறாள். அவள் தனக்குப் பழக்கமற்ற பர்தா அணியவேண்டியுள்ளது. முகத்திலிருந்து கால் வரை தம்மை மறைத்துக் கொண்டு வாழப் பழகிக் கொண்ட பெண்களில் அவளும் ஒருத்தியாகிறாள்.

போகும் வழியில் அவள் தனது முகத்தைத் தெரியும்படியாக விடுகிறாள். அதற்கு அந்த ஆண் எனது மனைவியான நீ பர்தாவை ஒழுங்காகப் போடு எனக் கூறுகையில், அவள் “நான் உனது உண்மையான மனைவியில்லையே” எனச் சொல்கிறாள். அதற்கு அவன், “இப்போது நீ எனது மனைவி. பார்ப்பவர்கள் என்னைத்தான் பரிகசிப்பார்கள்” எனக் கூறுகிறான்.

நவாஸ் தனது பயணத்தின்போது கூடவே ஒரு டேப்ரெகோடரையும் வைத்திருக்கிறாள். அதில் தனது சகோதரிக்காக, தான் காண்பவற்றையும், தனது உணர்வுகளையும் பதிவு செய்கிறாள்.

இந்த நாட்டில் பாசுட்ஸ்(40%), டட்சிக்ஸ் (25%), மோங்கோல் பூர்விகத்தைக் கொண்ட ஹசோரன (5%), உஸ்பெக்கன், மற்றும் ஐமக், நுரிஜ்டானிஸ், துர்மென்ஸ் (5% ) என பல இனக்குழுக்கள் இங்கே வாழ்கின்றனர். ஆனால் சனத்தொகையில் பாதியாக இருக்கும் தலிபானினால் கறுப்புத் தலைகள் என அழைக்கப்படும்-பெண்களை ஒருவரும் கணக்கிலெடுத்துக் கொள்வதில்லை; அவர்களுக்கு குரல்களில்லை என தனது ஒலிப்பேழையில் பதிவுசெய்கிறாள் நாவாஸ்.

ஈரானின் பாடசாலைக்குச் செல்லும் பெண் குழந்தைகளிடம் “இனிமேல் நீங்கள் ஆப்கானிஸ்தானில் பாடசாலைக்குச் செல்லமுடியாது” எனக் கூறப்படும்போது அக் குழந்தைகளின் முகத்தில் பீதி நிறைந்து காணப்படுகின்றது.

வரும் பாதையில் கொள்ளையடிக்கப்பட்ட அந்தக் குடும்பம் மீண்டும் ஈரான் திரும்புகின்றது. அவள் தனது சகோதரிக்காக தனது பயணத்தைத் தொடர்கிறாள்.

குரானைக் கற்கும் பாடசாலையிருந்து ஒழுங்காக கற்காத காரணத்தால் வெளியேற்றப்பட்ட ஒரு சிறுவன் தனது தாயிற்கு உதவியாக சி-றுசிறு வேலைகளைச் செய்துவருகிறான். அச் சிறுவனை நாவாஸ் சந்திக்க நேர்கிறது. அவன் பணத்திற் காக இவளை கண்டகாரிற்கு அழைத்துச் செல்ல சம்மதிக்கிறான். அவன் தான் தனது குரலை வைத்தே சம்பாதிப்பதாக இவளிடம் கூறுகிறான். அவன் இவளிற்காக ஒரு பாடலைப் பாடுகிறான். அவனது பாடலையும் அவள் பதிவு செய்கிறாள்.

அவர்கள் செல்லும் வழியில் அவன் திடீரென மறைகின்றான். அவனைத் தேடிச் செல்லும்போது அவன் மணலில் புதைக்கப்பட்டிருந்த உடல் ஒன்றிலிருந்து ஒரு மோதிரத்தைக் கழற்றிக் கொண்டிருக்கிறான். இவள் பீதியில் ஓடுகிறாள். அவன் இவளிடம் வந்து ஒரு மோதிரத்தைக் காட்டி அதனை வாங்கிக் கொண்டு பணம் தரும்படி கேட்கிறான். இவள் மறுக்கிறாள்.

இருபது ஆண்டுகளாக போரைச் சந்தித்து நிற்கும் தேசத்தில், 53 வீதமான மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் தேசத்தில், மனித மதிப்பீடுகள் அழிந்து, வயிற்றுப் பசிக்காக எதுவும் செய்யத் தோன்றும் அவலத்தின் பிரதிபலிப்புத் தான் இந்தக் காட்சிகள்.

பயணத்தின் கடுமையால் நோய்வாய்ப்படும் அவளை வைத்தியரிடம் அழைத்துச் செல்கிறான் அச் சிறுவன். அவ் வைத்தியரின் அறையில் குறுக்காக ஒரு துணி கட்டப்பட்டு, நடுவில் ஒரு சிறிய துவாரம் இடப்பட்டுள்ளது. துணிக்குப் பின்னால் நிற்கும் பெண்களை அத் துவாரத்தினூடாகவே மருத்துவர் பரிசோதிக்க முடியும். பெண்கள் ஆண்களுடன் நேருக்குநேர் பேசிக் கொள்வதைத் தலிபான் தடைசெய்திருப்பதால் அவர்களுடன் வரும் சிறிய குழந்தைகள் ஊடாகத்தான் அவர்கள் வைத்தியரிடம் பேச வேண்டும். அவரிடம் வரும் பல பெண்களுக்கு நோய், பசி என கண்டுபிடிக்கும் அவ் வைத்தியர் அவர்களிடம் பாணைக் கொடுத்து அனுப்புகிறார்.

இவள் திரைக்குப் பின்னால் ஆங்கிலம் கதைப்பதைக் கேட்ட வைத்தியர், இவள் பற்றிய விபரங்களை அறிந்து, தான் ஒரு ஆப்ரோ அமெரிக்கனென்றும், தான் வைத்திருப்பது ஒட்டுத் தாடியென்றும் பிரித்துக் காட்டுகிறார். தான் போராடுவதற்காக இங்கு வந்ததென்றும், தான் உண்மையில் வைத்தியர் அல்லாத போ-தும் வறுமையால் வாடும் மக்களிற்கு உதவி செய்யும் நோக்கத்துடன் தான் வைத்திய வேடம் ஏற்று இங்கு தரித்திருப்பதாக இவளிடம் கூறுகிறார்.

“நான் கடவுளைத் தேடி வந்தேன். பாசுட்ஸ் தம்மிடமே கடவுள் உள்ளது என்கின்றனர். டட்சிக்குகள் கடவுள் தமதென்கின்றனர். நான் அவர்கள் ஒருவரிடமும் போக விரும்பவில்லை. வறிய மக்களுடன் வாழ்ந்து, அவர்களுக்கு

**பயணம் 2**

அமெரிக்காவில் இஸ்லாமிய எதிர்ப்பும், ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்களுக்கும் பின்னணியில் அமைந்த சில உண்மைகளை நாம் மறந்து விடமுடியாது.

இன்று சமாதானம் பேசிக்கொண்டும், தன்னை சமாதானத்தின் நீதவானாகக் காட்டிக் கொண்டும், சமாதானத்திற்கான யுத்தமென புதுக்கதை விட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கா உலகத்தில் விட்டுச் சென்ற வடுக்களை நாம் எளிதில் மறந்துவிட முடியாது.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்கா பின்வரும் நாடுகளைத் தாக்கியுள்ளது.
சீனா (1945~1946,1950~53)
கொரியா (1950~53)
குவாத்தமாலா (1954,1967~69)
இந்தோனேசியா (1958)
கியூபா (1959.60)
பெல்கியன் கொங்கோ (1964)
பெரு (1965)
லாவோஸ் (1964~1973)
வியட்நாம் (!961~73)



கம்போச்சியா (1969.70)
கிரேனடா (1983)
லிபியா (1986)
எல்சல்வடோர் (1980களில்)
நிக்கரக்குவா (1980களில்)
பனாமா (1989)
ஈராக் (1991~99)
பொஸ்னியா (1995)
சூடான் (1998)
யூகோஸ்லாவியா (1999)
இப்போது ஆப்கானிஸ்தான்...



செப்டெம்பர் 11ம் திகதி 2001 இல் நியூயோர்க்கில் அமைந்திருந்த உலக வர்த்தக நிலையத்தின் கட்டிடங்கள் விமானம் மூலம் தாக்கப்பட்டது. அதேயன்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகனும் தாக்கப்பட்டது.. ஒரு உயிரேனும் அநியாயமாகக் கொல்லப்படுவதை நாம் எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

இத் தாக்குதல்களுக்கு பின்லாடனின் தலைமையில் இயங்கும் அல்கைடா வையே அமெரிக்கா குற்றம் சாட்டியது.

உதவி செய்து வாழ்கிறேன்.

அவ் வைத்தியரின் வேண்டுகோளிற்கு இணங்க அச் சிறுவனை இவள் திருப்பியனுப்புகிறாள். அவன் எப்படியும் அம் மோதிரத்தை இவளிடம் விற்கப் பார்க்கிறான். இறுதியில் இவளிடம் அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் செல்கின்றான்.

தனது சகோதரிக்காக அவளது ஒலிப்பேழையில் ஏதவாது கூறிவிடும்படி அவ் வைத்தியரிடம் நாவாஸ் நீட்டுகிறாள்.

"பசியில் இருப்பவனுக்கு கடவுள் உணவு
தாகத்தில் இருப்பவனுக்கு கடவுள் நீர்.
தனிமையில் இருப்பவனுக்கு கடவுள் அன்பு
ஆப்கானிஸ்தான பெண்களிற்கு கடவுள் -
அவர்கள் திரைகளின்றி தெரியப்படும் நாள்."

என்ற வரிகளை அதில் கூறிவிடுகிறான். பின் அதில் அதிருப்தியுற்று வேறு வரிகளை பதிவு செய்து விடுகிறான்.

அவனுடன் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் வந்து சேர்கிறாள். இங்கு செயற்கைக் கால்களுக்காக நூற்றுக்கணக்கான மக்கள் வருடக் கணக்கில் காத்துநிற்கின்றனர். அவர்கள் தமக்காகவும், தமது குடும்பத்தின் பெண் அங்கத்தவர்களுக்காக அவர்களது ஆடை அளவு களை கொண்டுவந்தும் பெற்றுக் கொள்கின்றனர்.

தனது தாய்க்கு கால்கள் தேவையெனக் கூறி, அவற்றை விற்பனை செய்வதற்காகக் கால்களை வேண்டிவருகின்றார். அவனே நாவாஸின் இறுதிப் பயணத்திற்கு வழித்துணையாகிறான்.

அவனும் பெண் வேடம் தரித்து, ஒரு திருமண ஊர்வலத்தினூடாக இவளை கண்டகாரிற்கு அழைத்துச் செல்ல முற்படுகிறான். இறுதியில் தலிபானின் சோதனையின் போது, பெண் வேடம் தரித்த ஆண்கள், இசைக் கருவிகளை வைத்திருந்தவர்கள், வேறு சில பொருட்களை வைத்திருந்தவர்கள் எல்லோரும் கைது செய்யப் படுகிறார்கள். நாவாஸூம் டெப்ரெகோடர் வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறாள்.

இத் திரைப்படம் ஆப்பானிஸ்தானில் தலிபானின் ஆட்சியின் கீழ் இழைக்கப்பட்ட அனைத்து அட்டூழியங்களையும், அநீதிகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

குரான் பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் தமது பாடங்களிற்கு நடுவே ஆயுதங்களைக் கையிலெடுத்து, அவற்றைப் பற்றிச் சொல்வது போன்ற காட்சிகள் மனதிற்கு உறுத்தலைக் கொடுக் கின்றது. இஸ்லாமியர் தீவீரவாதத்தை ஊக்குவிப் பவர்கள் என்ற அமெரிக்கா, மற்றும் மேலைத்தேய நாடுகளின் பிரச்சாரத்திற்கு இக் காட்சி சான்று பகர்வது போலுள்ளது.

வானத்தில் ஹெலிகொப்டர் தோன்றி பரசூட்டுகளில் செயற்கைக் கால்களை இணைத்துக் கீழே அனுப்புவதும், இதைப் பெறுவதற்கு காலை இழந்த மக்கள் பெருவாரியாக குதித்துக் குதித் துச் செல்வது போன்ற காட்சியும் அமெரிக்கர் களை இரட்சகர்களாக உலகிற்குக் காட்டுவ தாகவே உள்ளது.

ஒரு ஆப்கானிஸ்தான் பிரஜையாக தனது இனத்தவரால் தனது இனத்திற்கு இழைக்கப்பட்ட கொடூரங்களை விமர்சிப்பது ஒவ்வொருவரினதும் கடமை. ஆனால் இன்று நிலவும் உலகளாவிய இஸ்லாமிய எதிர்ப்புப் பிரச்சாரத்தின் அங்கமாக இத் திரைப்படமும் மாற்றப்படும் அபாயமுள்ளது.

சில வரலாற்றுக் குறிப்புகள்

இத் திரைப்படம் தலிபான் ஆட்சிக்கு வந்த ஆரம்ப காலகட்டத்தில் எடுக்கப்பட்டிருந்தும், அமெரிக்காவிற்கும், தலிபானுக்குமிருந்த நல்லுறவினால் இப்படம் திரையிடலை அமெரிக்கா தடை செய்திருந்ததும் இங்கே குறிப்பிடப்பட வேண்டும்.

இத் திரைப்படத்தையும், இன்று நிகழும் இஸ்லாமிய எதிர்ப் பிரச்சாரத்தையும், ஆப்கானிஸ்தான் மீதான யுத்தம் ஆகியவற்றையும் விளங்கிக் கொள்ள சில வரலாற்றுப் பிண்ணனித் தகவல் களை ஆராயவேண்டியுள்ளது. இவற்றை சொல்ல தவறுவோமாயின், நாமும் மேலைத்தேய நாடு களின் ஏகாதிபத்திய பிரச்சார வலைக்குள் சிக்கிக் கும்பலில் கோவிந்தாவாக ஒவ்வொரு முஸ்லிமை யும் பயங்கரவாதியாக பார்க்க வேண்டிய அபாயம் ஏற்படும்.

ஆப்கானிஸ்தானில் 1973ம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசாங்கம் இராணுவத்தினரால் கவிழ்க்கப் பட்டது. இதில் தாவுத், பி.டி.பி.ஏ (கம்யூனிஸ்ட் கட்சி) போன்றோர் முக்கிய பங்குவகித்தனர். இதே வருடம் ஆப்கானிஸ்தான் குடியரசாக மாற்றப்பட்டது. 1978 இல் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்தவுடன் தாவுத் கொலை செய்யப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் ஆப்கானிஸ்தானின் முஜ்ஜாகிதின் அமைப்பு உருப்பெற்று அரசாங்கத்திற்கு எதிராகப் போராட ஆரம்பித்தது. 1979ம் ஆண்டு பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டார்கள். 1956ம் ஆண்டி லிருந்து நல்லுறவை வைத்திருந்த சோவியத் யூனியனின் இராணுவம் ஆப்கானிஸ்தானிற்குள் படையெடுத்தது. 1973ம் ஆண்டுமுதல்

ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வருவதாகக் கருதப்பட்ட பின்லாடனை தம்மிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா தலிபானைக் கேட்டுக் கொண்டது. மறுத்தால் தாக்குவோமேன பயமுறுத்தியது. உலகில் முதன்முதலாக பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்றதுபோல் உலக பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்திற்கு ஆதரவு வழங்கும்படி ஏனைய நாடுகளுக்கும் அறைகூவல் விடுத்தது. இந்தியாவும் பாகிஸ்தானும் தமது ஆதரவைத் தெரிவித்தன. பிரிட்டனும் ஜேர்மனியும் அமெரிக்காவின் பிரச்சாரகர்களாகவே மாறினர்.

ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதி கோரப்படாமலேயே ஒக்டோபர் 7ம் திகதி 2001 இல் ஆப்கானிஸ்தானை அமெரிக்கா தாக்க ஆரம்பித்தது.

சக்தி வாய்ந்த குண்டுகளும், பங்கர்களைத் தாக்கும் ஏவுகணைகளும் ஆப்கானிஸ்தானைத் தாக்கின. இழப்பதற்கு ஒன்றுமற்ற மக்கள் கொல்லப்பட்டனர். 20 ஆண்டுகளாக வனாந்திரமாக ஆக்கப்பட்ட ஆப்கானிஸ்தானைத் தாக்குவதற்கு இத்தனை மில்லியன்கள் பெறுமதிமிக்க ஆயுதங்கள் தேவையா என ஆராய்ந்தோமாகில் அதன் உள்ளே அடங்கியுள்ள சூட்சுமத்தை விளங்கிக் கொள்ளலாம். புஷ் குடும்பத்தினதும், அவர்களது நண்ப வட்டங்களினதும் முக்கிய வியாபாரம் ஆயுத உற்பத்தியே. தமது ஆயுதங்களை விற்று வருவாயை ஈட்டிக்கொள்வதற்காகவே இந்தகைய கனரக ஆயுதத் தளபாடங்கள் உபயோகிக்கப்பட்டன.

அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ் தனது பேட்டியொன்றில், "ஆப்கானிஸ்தானிலுள்ள வெறுமையான கூடாரத்தையும், ஒட்டகத்தையும் தாக்குவதற்கு எனக்கு 10 டொலர் பெறுமதியுள்ள குண்டு போதும், அதற்கு 2 மில்லியன் டொலர்களைச் செலவழிக்க வேண்டியதில்லை, நான் அவற்றைத் தீர்மானமானவொரு முடிவுக்காகவே உபயோகிக்கிறேன்" எனக் கூறியது அவர்களது உள்நோக்கத்தை உறுதிப்படுத்துகிறது.

செப்டெம்பர் தாக்குதல்களை சாக்காகக் கொண்டு ஆப்கானிஸ்தானுக்குள் நுழைய வேண்டிய இன்னொரு நோக்கம் அமெரிக்காவிற்கு உள்ளது.

அமெரிக்கா, 1991 இல் வளைகுடா யுத்தத்தை எண்ணெய்க்காகவே ஆரம்பித்தது. மத்திய ஆசியாவிற்குள் இன்னும் உபயோகிக்கப்படாத எண்ணெய் வளங்களும், எரிவாயுக்களும் (Natural gas) உள்ளன. அசார்பஜான், கசக்ஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளில் 15 பில்லியன் பரல்களைக் கொள்ளும் எண்ணெய் வளங்களும், 9 திரிலியோன் கியூபிக் மீற்றர் எரிவாயுக்களும் உள்ளன. ஆப்கானிஸ்தானின் ஆய்வுகளின்படி இவற்றின் கடந்த வருடத்திற்கான பெறுமதி 3 திரிலியோன் அமெரிக்க டொலர்களாகும். 1998ம் ஆண்டு கலிபோனியாவில் தலமையகத்தைக்கொண்ட யுனொகோல் (UNOCAL) என்ற ஸ்தாபனம் 46.5 வீதமான முதலீடுகளை செண்ட் காஸ் (Cent Gas. Central Asia Gas) ஸ்தாபனத்தில் வைத்திருந்தது.

சோவியத் யூனியனில் தங்கியிருந்த நஜிபுல்லா ஆப்கானிஸ் தானிற்குள் கொண்டுவரப்பட்டு, ஆட்சியில் அமர்த்தப்பட்டார்.

அமெரிக்காவிற்கும் சோவியத்யூனியனிற்கும் அப்போது நிலவிய பனிப்போரின் நிமித்தம் அமெரிக்கா சோவியத்யூனியனிற்கு எதிராக முஜ்ஜாகிதின் குழுக்களுக்கு பெருந்தொகையான பணத்தைக் அளித்தது. இந்த இருபது ஆண்டு யுத்தத்தின் போது அமெரிக்கா 45 பில்லியன் டொலர்களை அக் குழுக்களுக்குக் கொடுத்துள்ளது. இந்த அமைப்புக்குப் பின் தலிபானை உருவாக்கியதும் அடக்கம்.

இக் காலக்கட்டத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த றோனால்ட் றேகன் இம் முஜ்ஜாகிதின் குழுக்களுடன் இணைந்து படம் எடுத்தது மாத்திரமின்றி, அவர்களை அமெரிக்கா வின் சுதந்திரத்திற்காகப் போராடின தந்தையர் களுக்குச் சமமானவர்களென வாழ்த்தியும் உள்ளார்.

1987ம் ஆண்டு முஜ்ஜாகிதின் குழுக்கள் வெற்றியீட்டி பதவிக்கு வந்தன. நஜிபுல்லா தெருவில் வைத்துக் கொல்லப்பட்டார். 1989ம் ஆண்டு ஆப்கானிஸ்தானை விட்டு ரஷ்யப் படைகள் வெளியேறின.

1994ம் ஆண்டு ஆப்கானிஸ்தான் அரசியல் சூழலில் தோன்றிய தலிபான், 1996ம் ஆண்டு ஆட்சிக்கு வந்தது. அதன் தலைவராக ஓமார் ஷெரீப் முல்லா இருந்தார். இவர்கள் இஸ்லாமிய அடைப்படைவாதத்தை நிலைநிறுத்துவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கினர். முதன்முதலில் கண்டகார் நகரத்தில் தமது பலத்தை வைத்திருந்தவர்கள் பின் ஏனைய நகரங்களையும் கைப்பற்றினர்.

இக் காலத்தில் இவர்கள் வீடுவீடாய்ச் சென்று தொலைக்காட்சிப் பெட்டிகள், ரேடியோக்கள், இசைக் கருவிகள் போன்றவற்றை பறிமுதல் செய்தனர். இவற்றை உபயோகிப்பதும் தடைசெய்யப்பட்டது.

1959ம் ஆண்டு பெண்கள் பர்தா அணியும் முறை நீக்கப்பட்டிருந்தது. பெண்கள் பல்கலைக் கழகங்களிற்குச் செல்வது அனுமதிக்கப்பட்டது. 1963க்கும் 1964க்கும் இடைப்பட்ட காலத்தில் பெண்கள் பாராளுமன்றத்திலும் அங்கம் வகித்தனர். ஆனால் தலிபானின் உருவாக்கத்துடன் பெண்ஒடுக்குமுறை மிக மோசமாகியது.

பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டது. பெண் பாடசாலைகள் மூடப்பட்டன. அவர்கள் வேலைக்





குச் செல்வது தடைசெய்யப்பட்டது. பெண்கள் பர்தாவுக்குள் தம்மை மூடியபடி வீட்டுக்குள் முடங்கவேண்டி ஏற்பட்டது. வீட்டிற்குள் இருக்கும் போதும் சத்தம் ஏற்படுத்தாத பாதணிகளையே அணிய வேண்டியிருந்தது. அவர்கள் தெருவில் செல்லும்போது ஆண் உறவினர்களுடன் மாத்திரமே செல்ல அனுமதியிருந்தது. ஒரு திருமணமாகாத பெண் உறவினரல்லாத ஒருவருடன் போகும் பட்சத்தில் 100 கசையடிகளுக்கு ஆளாகவேண்டியிருந்தது. அவளுக்கு திருமணமாகியிருந்தால் அவள் கல்லெறியப்பட்டு சாகடிக் கப்படுவாள் அல்லது உயிருடன் புதைக்கப் படுவாள்.

உறவினர் அல்லாத ஒருவருடன் சென்றமைக்காக சொகிலா என்ற பெண் காபூலில் உள்ள ஒலிம்பிக் விளையாட்டுத் திடலுக்கு அழைக்கப்பட்டு முப்பதினாயிரம் ஆண்கள் பார்த்திருக்க 100 கசையடிகளுக்கு ஆளானாள்.

பெண்கள் நேரடியாக ஆண்களுடன் பேசுவதும், பொது வைத்தியசாலைகளில் வைத்தியம் பெறுவதும் தடைசெய்யப்பட்டிருந்தது. தனது 22 வயது மகள் வயிற்றுவலியால் துடித்து, இரண்டு நாட்களுக்குப் பிறகு அவள் வீட்டிலேயே இறப்பதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஒரு தாயிற்கு ஏற்பட்டிருந்தது.

ஆப்கானிஸ்தான் பெண்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களை கலையுருவில் வெளிக்கொண்டு வந்தமை நிச்சயம் பராட்டப்பட வேண்டிய விடயம்தான்.

- உமா

ஆப்கானிஸ்தானூடாக ஒரு குழாய்ப் பாதையை உருவாக்கும் முயற்சி தோல்வியடைந்தமையால் அவர்கள் முதலீடுகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர்.
ஆயுத உற்பத்திக்கு அடுத்தபடியாக புஷ் குடும்பத்தின் முக்கிய வருமானம் எண்ணெய் மூலமே கிடைக்கின்றதென்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் பிறந்து தற்போது அமெரிக்கப் பிரஜையான காலிசாத் என்பவரே யுனொகோலினது ஆலோசகராக இருக்கிறார். இவரின் கணிப்பீட்டின்படியே, முன்னைய சோவியத் குடியரசில் ஒன்றான துர்மெனிஸ்தானிலிருந்து பெறப்படும் எண்ணெயை ஆப்கானிஸ்தான், மற்றும் பாகிஸ்தான் ஊடாகவும் குழாய்கள் அமைத்து இந்து சமுத்திரத்திற்குள் புகுத்தத் திட்டமிடப்பட்டது.

அதுபற்றி 1997ம் ஆண்டு தலிபானுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இது தொடர்பாக தலிபானைச் சேர்ந்த முல்லாக்களும் அமெரிக்கா சென்றுவந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளில் 1995ம் ஆண்டு தீர்மானிக்கப் பட்ட மேற்கு ஆப்கானிஸ்தானூடாக அமையவேண்டிய குழாய் வேலைகளை நடைமுறைப் படுத்துவதே நோக்கமாகவிருந்தது. இச் சமயங்களில் அமெரிக்கா தலிபானால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் பற்றியும், பெண்களுக்கெதிரான ஒடுக்குதல்கள் பற்றியும் கவலைகொள்ளவில்லை.

துர்க்மெகிஸ்தானிலேயே உலகில் அதிகூடிய எரிவாயு கொள்ளளவு (Natural gas) உள்ளது. 2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான குழாய் வடிவமைப்பொன்று ஆப்கானிஸ்தான் நகரங்களான கண்டகார், ஹேராட்டினூடாகவும், பாகிஸ்தானின் நகரான குவெர்டாவினூடாகவும், முல்டானூடாகவும் திட்டமிடப்பட்டிருந்தது. மத்திய ஆசியாவிலேயே உலகின் 6 வீதமான எண்ணெய் வளங்களும், 40 வீதமான எரிவாயு வளங்களும் உள்ளன.

மேலே குறிப்பிட்ட திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் , அமெரிக்காவிற்கு 30 வருடங்களிற்குத் தேவையான எண்ணெயும், எரிவாயுவும் கிடைப்பதுடன், ஏனைய ஐரோப்பிய நாடுகளினது தேவையை இன்னும் கூடியளவு காலத்திற்குப் பூர்த்தி செய்யவும் முடியும்.
இதில் என்ன வேடிக்கையென்றால், ஆப்கானிஸ்தான் மக்களின் விடுதலைக்காகவே யுத்தம் செய்தோம் என உலகத்திற்குப் படம் காட்டிய அமெரிக்கா, ஆப்கானிஸ்தானில் தற்காலிக அரசாங்கம், ஹமிற் காசாயின் அமெரிக்க சார்பான அரசாங்கம் அமைக்கப்பட்டு, ஒன்பது நாட்களுக்கு அப்புறம், காலிசாத்தை யுனொகோலின் பிரதிநிதியாக ஆப்கானிஸ்தான் செல்வதற்கு நியமித்தது என்பதே.
ஆப்கானிஸ்தானின் இழப்பதற்கு ஏதுமற்ற மக்கள் செயற்கைக் கால்களுக்காக என்றும் வானைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்!

# இனியும் நான் தனியாக இல்லை.

அமைதி காக்க வந்தவர்கள்
என் வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே
புகுந்தனரே என் வீட்டினுள்
பதறியது என் தேகம்
பாய்ந்தனர் என்மீது
பதம் பார்த்தனர் என் உடலை

குரங்கின் கையில் அகப்பட்ட
மாலையாய் ஆனதோ என் உடல்
உடல் முழுக்க நோ
உள்ளத்திலோ பாரம் ~ ஆனாலும்
என் இருப்பு உறுதியானது

புலம்பியது போதும்
பொங்கி எழு என் மனமே
பொழுது புலர்ந்துள்ளது
அதோ வானில் தெரிகிறது என்
வாழ்விற்கான நம்பிக்கை
நட்சத்திரங்கள்
அவை தரும் ஒளிபோதும்
இருளடித்த என் மனதிற்கு

நாய் கடித்த புண்போல்
வெறும் புண் மட்டும்தான்
மருந்தினை போட்டுவிட்டால்
ஆறிவிடும் இப்புண்ணும்!
என்துயர் துடைக்க ~இங்கு
ஆயிரம் கரங்கள் உண்டு.
என் உறுதியும் எனக்காக உண்டு
இனியும் நான் தனியாக இல்லை.




ஜெயந்தி தளையசிங்கம்

(09-02-2002)



ஓவியம்: அருந்ததி

ஓவியம் பின்புறம்



**PORNOGRAPHY**

மொழிபெயர்ப்பு
யசோதா

ஆபாச எழுத்து என்று நாம் தற்போது பொருள் கொள்ளும் போர்னோகிராபி என்ற கிரேக்கச் சொல்லின் “வேசிகளைப் பற்றிய சித்திரம்” என்னும் மூலப்பொருளிலிருந்து கட்டுரையாளர் தற்காலப் பெண்ணியம் வரையிலான பிரச்சினைகளை அலசுகிறார். ஆணாதிக்கச் சொல்லாடலை அதன் தீவிரத்துடன் அப்படியே பயன்படுத்தி ஆணாதிக்கத்தை விமர்சிப்பதாலும் இக் கட்டுரையின் தமிழ் வடிவத்தில் ஆணாதிக்ககலைச்சொற்களுக்குப் பதிலாக பெண்ணியக் கலைச்சொற்களை பயன்படுத்துவது கட்டுரையின் தீவிரத் தன்மையைக் குறைத்துவிடும் என்பதினாலும் கட்டுரையின் தன்மையைக் கருதி ஆணாதிக்கக் கலைச்சொற்களான வேசி, விபச்சாரி, வேசைத்தனம், விபச்சாரம் போன்ற சொற்களையே நான் இங்கு பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு பயன்படுத்துவது மொழிபெயர்ப்பாளர்களின் தேர்வுமுறையைக் குறிக்காமல் கட்டுரையின் நிர்ப்பந்தத்தையே குறிக்கிறது. ~ **யசோ-தா**

# வேசிகளைப் பற்றிய சித்திரம்


**போர்னோக்ரா:.பி என்றால் பால-'யல் பற்றி எழுதுவது என்றோ அல்லது காம உணர்வுச் சித்திரங்கள் என்றோ அல்லது பாலியல் செயல்பாடுகளைப் பற்றிய சித்திரங்கள் என்றோ அல்லது நிர்வாண உடல்களைப் பற்றிய வர்ணனைகள் சித்திரங்கள் என்றோ அல்லது பாலியல் ரீ-தியான எழுத்துக்கள் என்றோ பொருள் அல்ல. பெண்களைக் கீழ்த்தரமான வேசிகளாகச் சித்தரிப்பது என்றுதான் அதற்குப் பொருள்**

பழங்கால கிரேக்கச் சொற்களான போர்னே, க்ரா.ஃ.போஸ் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட போர்னோக்ராபி (ஆபாச எழுத்து) என்ற சொல்லுக்கு ‘வேசிகளைப் பற்றிய எழுத்து’ என்று பொருள். போர்னே என்றால் ‘வேசி’ என்று பொருள். அதிலும் குறிப்பாக மிக மிக இழிவான வேசி என்று பொருள். பழங்கால கிரேக்கத்தில் அனைத்துக் குடிமகன்களும் பயன்படுத்தும் வேசியையே அவர்கள் இவ்வாறு அழைத்தார்கள். அங்கே அடிமைகள் உள்ளிட்ட அனைத்துப் பெண்களிலும் மிகவும் மலிவான வளாகவும், மிகவும் இழிவாக மதிக்கப்பட்டவளாகவும், பாதுகாப்பற்ற வளாகவும் இருந்தவள் போர்னே. எளிமையாகவும் நேரடியா-கவும் சொல்வதென்றால் அவள் ஒரு பாலியல் அடிமை-யே. க்ரா.ஃ.போஸ் என்றால் ‘எழுதுவது, தீட்டுவது அல்லது வரைவது’ என்று பொருள்.

‘போர்னோக்ரா.ஃ.பி’ என்றால் ‘பாலியல் பற்றி எழு-துவது’ என்றோ அல்லது காம உணர்வுச் சித்திரங்கள்

என்றோ அல்லது ‘பாலியல் செயல்பாடுகளைப் பற்றிய சித்திரங்கள்’ என்றோ அல்லது ‘நிர்வாண உடல்களைப் பற்றிய வர்ணனைகள்’ என்றோ அல்லது ‘பாலியல் ரீதியான எழுத்துக்கள்’ என்றோ பொருள் அல்ல. அது வேறு விடயங்களுக்கான, அலங்கரிக்கப்பட்ட பெயரும் அல்ல. பெண்களைக் கீழ்த்தரமான வேசிகளாகச் சித்தரிப்பது என்றுதான் அதற்குப் பொருள். பழங்காலக் கிரேக்கத்தில் எல்லா வேசிகளும் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்படவில்லை. போர்னேக்கள் மட்டுமே அவ்வாறு கருதப்பட்டார்கள்.

தற்கால போர்னோக்ராஃபி கறாராகவும், அந்தச் சொல்லுக்கேயுரிய அர்த்தத்திலும், அதன் அடிப்படையான பொருளையே உறுதிப்படுத்துகிறது. கீழ்த்தரமான வேசிகளைப் பற்றிய, அதாவது நமது மொழியில் சொல்வதெனில் விபச்சாரிகள், பசுக்கள், யோனிகள் ஆகியவற்றைப் பற்றிய எழுத்து என்பதே அந்த அடிப்படைப் பொருள். அந்தச் சொல்லின் அர்த்தம் மாறிவிடவில்லை. அந்த எழுத்துப்பாணிக்கு தவறான பெயர் வைக்கப்பட்டுவிடவில்லை. அந்தச் சொல்லின் இரண்டாவது பகுதியான க்ராஃபோஸ் ஐப் பொருத்த வரையில் மட்டும்தான் பொருள் மாறியுள்ளது. இப்போது நிழற்படக் கருவிகள் இருக்கின்றன. நிழற்படமும் திரைப்படமும் காணொளியும் (Video) இன்னும் இருக்கின்றன. சித்தரிக்கும் முறைகளின் எண்ணிக்கையும் வகைகளும் அதிகரித்துள்ளன. ஆனால் உள்ளடக்கம் மாறவில்லை. பொருள் மாறவில்லை; நோக்கம் மாறவில்லை; சித்தரிக்கப்படும்



**பெண்களின் பாலியல் தன்மையே மிகவும் இழிவானது என்றும் வேசைத்தனமானது என்றும் கருதப்படுகிறது. “போர்னொக்கிராஃபி காம உணர்வுகளைப் பற்றிய சித்திரம்” என்று பரவலாக நம்பப்படுவதானது பெண்களை இழிவுபடுத்துவதுதான் பாலியலின் உண்மையான மகிழ்ச்சி என்று கருதப்படுவதையே காட்டுகிறது.**

பெண்களின் அந்தஸ்து மாறவில்லை; சித்தரிக்கப்படும் பெண்களின் பாலியல் தன்மை மாறவில்லை; சித்தரிக்கப்படும் பெண்களின் மதிப்பு மாறவில்லை. சித்தரிப்பதற்கான வழிமுறைகளின் தொழில்நுட்பம் வளர்ந்திருப்பதால், இந்தச் சித்தரிப்பிற்கு நிஜமான பெண்களே தேவைப்படுகிறார்கள்.

“போர்னோக்ராஃபி” என்ற சொல்லுக்கு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் இழிவான “வேசிகளைப் பற்றிய சித்திரம்” என்ற பொருளைத் தவிர வேறு பொருள் எதுவும் இல்லை. ஆண்களுக்குப் பாலியல் ரீதியாக சேவகம் செய்வதற்காகவே வேசிகள் உயிர்வாழ்கிறார்கள். ஆண்களின் பாலியல் ரீதியான மேலாதிக்கம் என்ற கட்டமைப்பிற்குள் மட்டும்தான் வேசிகள் உயிர்வாழ்கிறார்கள். உண்மையில், இந்தக் கட்டமைப்பிற்கு வெளியில் ‘வேசிகள்’ என்ற சொல் அபத்தமானது என்பதுடன் பெண்கள் வேசிகளாகப் பயன்படுத்துப்படுவது சாத்தியமற்றது. ஆண் மேலாதிக்கத்தின் அகராதியில் மூழ்கித் திளைக்காத ஒருவரால் ‘வேசி’ என்ற சொல்லைப் புரிந்துகொள்ள முடியாது. பெண்களை வேசிகள் என்ற வகையாகவும், குழுவாகவும் உருவாக்கியவர்கள் ஆண்களே. ‘வேசி’ என்ற கருத்தாக்கத்தையும், ‘வேசி‘ என்ற அடைமொழியையும், ‘வேசி‘ என்ற அவமானத்தையும், விபச்சாரத் தொழிலையும், விபச்சார வணிகத்தையும், விபச்சாரத்திற்கான சரக்கையும் வேசிகளாகப் பெண்கள் வாழும் யதார்த்த நிலைமையையும் உருவாக்கியவர்கள் ஆண்களே. ஆண்களின் பாலியல் ரீதியான மேலாதிக்கம் என்னும் புறவயமான, உண்மையான அமைப்பிற்குள்ளேதான் பெண் வேசியாக உயிர்வாழ்கிறாள்.


வேசிகளைப் பற்றிய சித்திரமே (போர்னோக்ராஃபி) தன்னளவில் புறவயமானது; உண்மையானது; ஆண்களின் பாலுறவு அமைப்பில் மையமானது. போர்னோக்கிராஃபியில் பெண்களின் பாலியல் தன்மை



பற்றிய மதிப்பீடு புறவயமானது; உண்மையானது. ஏனெனில் பெண்கள் அப்படித்தான் கருதப்படுகிறார்கள்; மதிப்பிடப்படுகிறார்கள். போர்னோகிராஃபியில் விவரிக்கப்படுகின்ற உடல்வலிமை புறவயமானது; உண்மையானது. ஏனெனில் உடல்வலிமை பெண்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது. போர்னோக்ராஃபியில் விவரிக்கப்படுகின்ற, அதன் உள்ளார்ந்த கூறாக விளங்குகின்ற பெண்களை இழிவுபடுத்தும் செயல்பாடு புறவயமானது; உண்மையானது. ஏனெனில் பெண்கள் அப்படித்தான் இழிவுபடுத்தப் படுகின்றார்கள். போர்னோகிராஃபியில் விவரிக்கப் படுகின்ற, பெண்களின் பயன்பாடு புறவயமானது; உண்மையானது. ஏனெனில் பெண்கள் அப்படித் தான் பயன்படுத்தப்படுகிறார்கள். போர்னோகிராஃபியில் பயன்படுத்தப்படும் பெண்கள் அதில் உண்மையிலேயே பயன்படுத்தப்படுகிறார்கள்.

போர்னோக்ராஃபியில் முறையாகவும் தொடர்ச்சியாகவும் கையாளப்படும் பெண்களைப் பற்றிய வரையறை புறவயமானது; உண்மையானது. ஏனெனில் போர்னோக்கிராஃபியில் இந்த வரையறையின் வரம்பிற்குள்ளேதான் உண்மையான பெண்கள் உயிர்வாழ்கிறார்கள்; உயிர்வாழும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். போர்னோக் கிராஃபியானது ‘பாலியல் ரீதியான சித்திரம்’ என்றோ அல்லது ‘பாலுறவு பற்றிய சித்திரம்’ என்றோ பரவலாக நம்பப்படுகிறது. ஏனெனில் பெண்கள் மிகமிகத் ‘தாழ்ந்த வேசிகள்‘ என்ற மதிப்பீடு எங்கும் நிலவுகிறது. பெண்களின் பாலியல் தன்மையே மிகவும் இழிவானது என்றும் ‘வேசைத்தனமானது’ என்றும் கருதப்படுகிறது. “போர்னொக்கிராஃபி காம உணர்வுகளைப் பற்றிய சித்திரம்” என்று பரவலாக நம்பப்படுவதானது பெண்களை இழிவு படுத்துவதுதான் பாலியலின் உண்மையான மகிழ்ச்சி என்று கருதப்படுவதையே காட்டுகிறது. (...)

பெண்களின் பாலியல் தன்மையே ‘அசிங்கமானது’ என்றும் போர்னோகிராஃபியில் உண்மையிலேயே விவரிக்கப்படுவது இந்த ‘அசிங்கம்’தான் என்றும் நம்படுவதிலிருந்துதான் போர்னோகிராஃபி ‘அசிங்கமானது’ என்ற கருத்து உருவாகிறது. பெண்ணின் உடல் (குறிப்பாக பெண்ணின் பிறப்புறுப்பு) தன்னளவிலேயே அசிங்க மானது என்றும் இழிவானது என்றும் நம்பப் படுவதுதான் இதற்குக் காரணமாக இருக்கிறது. சிலர் கூறுவதைப்போல பெண்களின் பாலியல் தன்மைமையே அசிங்கமானது என்ற கருத்தை போர்னோகிராஃபி நிராகரிக்கவில்லை. மாறாக, இந்தக் கருத்தை போர்னோகிராஃபி எடுத்துப் பயன்படுத்திக் கொள்கிறது;



**போர்னொகிராஃபியை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ளும்படி நுகர்வாளரைத் தொழில்நுட்பம் அதன் இயல்பின் காரணமாக மிகவும் ஊக்கப்படுத்துகிறது. ஏற்கனவே எளிதில் நம்புகிற இயல்புடையவராக இருக்கும் நுகர்வாளர் தனது அடங்கிப்போகும் தன்மையின் விளைவாக ஒருபோதும் சந்தேகம் கொள்வதில்லை. ஒரு நம்பிக்கையாளராக அவர் போர்னோக்ராஃபியிடம் வருகிறார்; ஒரு பிரச்சாரகராக அவர் போர்னோக்ராஃபியிடமிருந்து போகிறார்.**

இக் கருத்தை போர்னோகிராஃபி விற்பனை செய்கிறது; பரப்புகிறது.

அமெரிக்காவில் ஒளி/ஒலி பதிவுத் தொழில், திரைப்படத் தொழில் ஆகிய இரண்டையும் சேர்த்தாலும் கூட போர்னோகிராஃபித் தொழிலே அதைவிடப் பெரியதாகும். பொருளாதார ரீதியாக வறுமை பரவும் காலத்தில் இந்தத் தொழில் வளர்கிறது. பெண்களை இழிவான வேசிகளாகச் சித்தரிக்கும் போர்னோகிராஃபியில் ஏராளமான பணத்தை செலவு செய்வதற்கு ஏராளமான ஆண் நுகர்வாளர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். போர்னொகிராஃபியை இப்போது கேபிள் தொலைக்காட்சி அவர்களிடம் கொண்டு செல்கிறது. வீடுகளில் காணொளிக் கருவிகளில் பயன்படுத்துவதற்கான வடிவங்களில் அது இப்போது விற்பனை செய்யப்படுகிறது. தொழில் நுட்பத்தால் திறந்து விடப்பட்டுள்ள சந்தைக்காக ஏராளமான வேசிகள் உருவாக்கப்பட வேண்டுமென்று அத் தொழில் நுட்பமே கோருகிறது. நிஜமான பெண்கள் கயிறால்

கட்டப்படுகிறார்கள்; படுக்க வைக்கப்படுகிறார்கள்; தொங்க விடப்படுகிறார்கள்; புணரப்படுகிறார்கள்; கும்பலால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படு கிறார்கள்; சவுக்கால் அடிக்கப்படுகிறார்கள்; அடித்து நொறுக்கப்படுகிறார்கள்; வேறு செயல்களுக்கும் பலியாக்கப்படுகிறார்கள்.

நிழற்படங்களிலும் திரைப்படங்களிலும் நிஜமான பெண்களே வேசிகளாகப் பயன்படுத்தப் படுகிறார்கள். நிஜமான பெண்களே வேசிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். பெண்களைக் காட்சி ரீதியான நுகர்வுப்பொருளாக விற்கும் சந்தையை விரிவாக்குகின்ற தொழில்நுட்பம் வேசிகளின் பெருக்கத்தைத் தீவிரப்படுத்துவதாலும், அதை விரும்புவதாலும் இலாபத்திற்காக 'வேசிகளை கூட்டிக் கொடுப்பவர்கள்' ஏராளமான வேசிகளை சந்தைக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது. ஆயிரம் சொற்களைக் காட்டிலும் ஒரு படம் இந்த உண்மையைச் சொல்லும். போர்னோகிரா.ஃ. பிக்குத் தேவையான வேசிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிப்பது சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நிழற்படங்களின் எண்ணிக்கைதான். தொழில்நுட்பமும் அதன் பயன்பாடும் வளர்ச்சியடைய அடைய, இவற்றின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. இத்தகைய போர்னொகிரா.ஃ.பியை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ளும்படி நுகர்வாளரைத் தொழில் நுட்பம் அதன் இயல்பின் காரணமாக மிகவும் ஊக்கப்படுத்துகிறது. ஏற்கனவே எளிதில் நம்புகிற இயல்புடையவராக இருக்கும் நுகர்வாளர் தனது அடங்கிப்போகும் தன்மையின் விளைவாக ஒருபோதும் சந்தேகம் கொள்வதில்லை. ஒரு நம்பிக்கையாளராக அவர் போர்னோக்ரா.ஃ.பியிடம் வருகிறார்; ஒரு பிரச்சாரகராக அவர் போர்னோக்ரா.ஃ.பியிடமிருந்து போகிறார். தொழில்நுட்பத்தால் அவரிடம் கொண்டுவரப்பட்ட பெண்களின் பயன்பாடுகளை அத் தொழில்நுட்பமே சட்ட பூர்வமானவையாக ஆக்குகிறது.



ஆண்களின் அமைப்பில் பாலியல் என்பதே பெண்கள்தான்; பாலியல் என்பதே வேசிகள்தான். வேசிதான் போர்னே; அவள் மிகவும் இழிவான வேசி - அதாவது அனைத்துக் குடிமகன்களுக்கும் சொந்தமான வேசி. அவள் வெறும் விபச்சாரி. அவள் வெறும் யோனி. அவளை விலைக்கு வாங்குவது போர்னோக்ரா.ஃ.பியை விலைக்கு வாங்குவதாகும். அவளை வைத்திருப்பது போர்னோக்ரா.ஃ.பியை வைத்திருப்பதாகும். அவளைப் பார்ப்பது போர்னோக்ரா.ஃ.பியை பார்ப்பதாகும். அவளுடைய பாலியலை, குறிப்பாக அவளுடைய பிறப்புறுப்பைப் பார்ப்பது போர்னோக்ரா.ஃ.பியைப் பார்ப்பதாகும். பாலுறவில் அவளைப் பார்ப்பது பாலுறவில் வேசியைப் பார்ப்பதாகும். அவளைப் பயன்படுத்துவது போர்னோக்ரா.ஃ.பியை பயன்படுத்துவதாகும்.. அவளை விரும்புவது போர்னோகிரா.ஃ.பியை விரும்புவதாகும். அவளாக இருப்பது போர்னோகிரா.ஃ.பியாக இருப்பதாகும்.

Pornography
London: Women's press,1981),191-202,
originally published by Perigee Books, New York, 1981)



# இன்பமும் அபாயமும்

## பாலியல் தன்மையின் அரசியலை நோக்கி

**ஒடுக்குமுறைகளைப் பற்றி மட்டுமின்றி அறியாமை, கட்புலானாகத் தன்மை, அச்சம் ஆகியவற்றிலிருந்து பிறக்கும் பெண்களின் வேட்கையின் மீதான ஒடுக்குமுறைகளைப் பற்றியும் பேசவேண்டும். இன்பத்தை இழக்கும் நிலைக்கு எதிராகப் போராடக்கூடிய, இன்பத்தை ஆதரிக்கக் கூடிய அரசியலைப் பெண்ணியம் முன்வைக்க வேண்டும்**

**ஆங்கிலத்தில்
கரோல் வான்ஸ்
தமிழில்
யசோதா**

பெண்களின் வாழ்க்கையில் பாலியல் அபாயத்துக்கும் பாலியல் இன்பத்துக்கும் இடையிலான பதற்றநிலை மிகவும் ஆற்றல் வாய்ந்தது. பாலியல் தன்மையானது கட்டுப்பாடுகள், அடக்குமுறைகள், அபாயங்கள் ஆகியவற்றின் களமாக இருக்கும் அதேசமயத்தில் புதியவற்றைக் கண்டறிதல் இன்பம் மற்றும் செயல்பாடுகளின் களமாகவும் இருக்கிறது. இன்பம், மனமகிழ்ச்சி ஆகியவற்றின் மீது மட்டுமே கவனத்தைக் குவிப்பது பெண்கள் செயல்படுகின்ற ஆணாதிக்க அமைப்பு கவனிக்கப்படாமல் போய்விடுவதற்குக் காரணமாக இருக்கிறது. பாலியல் வன்முறையையும் அடக்குமுறையையும் பற்றி மட்டுமே பேசுவது பாலியல் ரீதியான மனமகிழ்ச்சி மற்றும் பாலியல் ரீதியான தேர்வு ஆகியவற்றில் பெண்களின் அனுபவம் என்ன என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. எனவே பெண்களின் வாழ்க்கையில் பாலியல் ரீதியான பயங்கரங்களும் வேதனைகளும் அதிகரிப்பதற்குத் தம்மையுமறியாமல் இடமளிக்கிறது.

இன்பத்தையும் அபாயத்தையும் அடுத்தடுத்து வைத்தல் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் மற்றும் செயல்வீரர்களின் கவனத்தைப் பெற்றுள்ளது. தங்களுடைய தினசரிக் கணக்கீடுகள், தேர்வுகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றில் எப்படிப்பட்ட விலையைக் கொடுத்து பாலியலின் இன்பங்களைத் தங்களால் பெறமுடிகிறது என்று கட்டாயமாக மதிப்பிட வேண்டிய நிலையில் உள்ள ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கையிலும் தொடர்ந்து இடம்பெறும் விவாதப் பொருளாக இது இருக்கிறது என்று அவர்கள் கருதினார்கள். சிலரைப் பொறுத்தவரையில் பாலியல் வல்லுறவு, கட்டாயப்படுத்தப்பட்ட நெறி பிறழ்ந்த உறவு, பாலியல் சுரண்டல், குரூரமான தினசரி நடவடிக்கைகள், அவமதிப்புகள் ஆகிய வடிவங்களிலான வன்முறை, மிருகத்தனம், கட்டாயப்படுத்துதல் போன்ற பாலியல் தன்மையின் அபாயங்கள் ஒப்பீட்டளவில் இன்பங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுகின்றன. மற்றவர்களைப் பொறுத்தவரையில் உடலைக் கண்டறிதல், ஆர்வம், நெருக்கமான பிணைப்பு, புலனின்பம், சாகசம், மகிழ்ச்சி, மனித உறவு, சிறுபிள்ளைத்தனத்திலும் பகுத்தறிவல்லாதவற்றிலும் ஊறித் திளைப்பது போன்ற பாலியல் தன்மையின் நேர்மறையான சாத்தியக்கூறுகள் பயன்மிக்கவை என்பதுடன் போதுமான ஆற்றலையும் தொடர்ந்து அளிக்கின்றன. ஒரு பெண் தனது வாழ்க்கையின் வெவ்வேறு தருணங்களில் அக மற்றும் புற நிகழ்வுகளுக்கு எதிர்வினை ஆற்றும் விதமாக ஏதேனுமொரு காட்சிப் பரப்பைத் தேர்ந்தெடுக்கக் கூடும் என்பதால்

மேற்கண்ட நிலைமைகள் நிலையானவையுமல்ல.

(...) பெண்ணியத்தின் இரண்டாவது அலை பெண்களின் அதிகமான பாலியல் சுதந்திரத்தையும் ஆண்களின் குறைவான 'பாதுகாப்பையும்' கோரியதுடன் அதில் வெற்றியும் பெற்றது - ஆணாதிக்க அமைப்பின் வரம்பிற்குள்தான் எனினும் கூட. இந்த ஆரவாரத்திற்கு நடுவே பல பெண்கள் தாங்கள் மிகவும் வெளிப்படையானவர்களாகவும் பாலியல் ரீதியாக எளிதில் புண்படுத்தப்படக் கூடியவர்களாகவும் இருப்பதாக உணர்ந்தார்கள். பாலியல் ரீதியான பாதுகாப்பையும் பாலியல் ரீதியான சுதந்திரத்தையும் எதிரெதிராக நிறுத்திய பழைய அமைப்பு சீர்குலைந்த போதிலும், பாலியல்ரீதியான செயல்பாடுகளுக்காக தாங்கள் கண்டிக்கப்படுவோம், தண்டிக்கப்படுவோம் என்று பெண்களுக்கு ஏற்பட்ட அச்சம் இன்னும் குறையவில்லை.

புண்படும் நிலை பற்றிய இந்த உணர்வை எடுத்துக்கொண்டு வலதுசாரிகள் விளையாடுகிறார்கள். பெண்ணியத்தின் வெற்றிகளுக்கு எதிரான பழமைவாதத் தாக்குதல் தார்மீக ரீதியான போராட்டத்தின் வடிவத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. கருக்கலைப்பு, பெண்கள் மற்றும்

**»» பாலியல் ரீதியான பாதுகாப்பையும் பாலியல் ரீதியான சுதந்திரத்தையும் எதிரெதிராக நிறுத்திய பழைய அமைப்பு சீர்குலைந்த போதிலும், பாலியல்ரீதியான செயல்பாடுகளுக்காக தாங்கள் கண்டிக்கப்படுவோம், தண்டிக்கப்படுவோம் என்று பெண்களுக்கு ஏற்பட்ட அச்சம் இன்னும் குறையவில்லை. ««**

ஆண்களின் ஒருபால் புணர்ச்சி உரிமைகள், கருத்தடைக் கல்வி மற்றும் சேவைகள், பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் ஆகிய 'தீமை'களுக்கெதிரான தமது போராட்டத்தில் மரபான பாலியல் ஏற்பாடுகளையும், இனப்பெருக்கம் மற்றும் பாலியல் தன்மை ஆகியவற்றுக்கிடையிலான பழைய இறுகிப்போன பிணைப்புகளையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கு வலதுசாரிகள் முயற்சி செய்கிறார்கள். இந்த முயற்சியில் வலதுசாரிகள் முன்வைக்கும் பாலியல் நடைமுறைக்கான முழுமையான திட்டமானது, ஒழுக்கமின்மை மற்றும் பாலியல் ரீதியான அபாயங்கள் குறித்து பெண்களிடம் நிலவும் அச்சத்துடன் ஓரளவுக்கு ஒத்திசைந்து செல்கிறது.

பெண்ணியவாதிகள் என்ற முறையில் நாம் உறுதியாக எதிர்வினை புரிய வேண்டுமானால் பாலியல் கொள்கையிலும் நடைமுறையிலும் நமது தீவிரமான தொலைநோக்கை நாம் கைவிட்டுவிடக் கூடாது. மாறாக, தங்களது பாலியல் ரீதியான சுய விருப்பத்தின் அடிப்படையில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதற்கும், செயல்படுத்துவதற்கும் அதிகமான பெண்களுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் நாம் அந்தத் தொலைநோக்கை ஆழப்படுத்த வேண்டும்; விரிவுபடுத்தவேண்டும்.

(...) பாதுகாப்பான வெளியில் விரிந்து பரவக்கூடிய காட்சிகளையும் தோற்றங்களையும் கற்பனை செய்வதால் பெண்களுக்குக் கிடைக்கும் இன்ப அனுபவத்தை பெண்ணியவாதிகள் என்ற முறையில் நாம் பெறவேண்டும். நாம் விரும்புவது தெய்வீக உணர்வோ அல்லது வெறுமையோ அல்ல. நாம் பெறவிரும்புவது எது என்பதை ஏற்கனவே நமது அன்றாட அனுபவம் காட்டியிருக்கிறது.



நாம் விரும்புவதை விளக்கும் ஒரு குறிப்பு அபாயத்தின் ஒரு தெளிவான வடிவத்தில் அடங்கியிருக்கிறது: பாலியல் வல்லுறவு, பாலியல் ரீதியிலான ஒடுக்குமுறைகள், நெறிபிறழ்ந்த பாலுறவு போன்ற ஆண்களால் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற பாலியல் வன்முறையே அது. பெண்கள் பேசத் தொடங்கியவுடனே, தோற்ற அளவில் மட்டுமே தடை செய்யப்பட்டிருக்கும் இத்தகைய செயல்பாடுகள் உண்மையில் அன்றாட நிகழ்வுகளாகவே இருக்கின்றன என்பதும், அவற்றால் பெண்களுக்கு ஏற்படும் தீமைகள் மிகப்பெரியவை என்பதும் தெளிவாகிவிட்டது. பாலியல் ரீதியான வன்முறைகளுக்குப் பலியாகிறவர்களுக்கு உண்மையிலேயே இழைக்கப்படுகிற உடல்ரீதியான அல்லது மனரீதியான தொல்லைகளைத் தவிரவும், பாலி யல் ரீதியான தாக்குதல் பற்றிய அச்சுறுத்தல், பெண்களின் நகர்வுகளையும் நடத்தையையும் கட்டுப்படுத்துகின்ற ஆண்களின் உரிமைகளை நினைவு படுத்தும் வலுவான விஷயமாக இருக்கிறது.

பாலியல் ரீதியான வன்முறையைச் சூழ்ந்திருக்கும் பண்பாட்டு ரீதியான தொல்கதைகள், பெண்களின் விருப்பத்தின் மையத்தை ஊடுருவும் அளவுக்கு இந்த அச்சுறுத்தலுக்கு தனித் தன்மையான, ஆற்றல் வாய்ந்த பாதையை அமைத்துத் தந்துள்ளன. தற்காலப் பெண்ணிய இயக்கத்தால் எதிர்க்கப்பட்ட ஏராளமான தொன்மங்களும் நாட்டுப்புற அறிவும் ஆண்களின் காமவெறியை உள்ளார்ந்த இயல்பாகவும் கட்டுப்படுத்த முடியாயாததாகவும், பெண்களின் பாலியல்தன்மையும் விருப்பமும் ஓரளவு வெளிப்பட்டாலும் கூட எளிதில் தூண்டப்படக்கூடியதாகவும் சித்தரித்தன. இந்தக் கருத்தியலின் முக்கியமான அம்சங்கள் ஆண்களுக்கு தப்பிப்பதற்கான வாய்ப்பை அளிக்கின்ற அதே சமயத்தில் பலியாகின்ற பெண்களைக் குறைகூறுவதால், இக் கருத்தியல் பெண்ணியவாதிகளால் தீவிரமாக விமர்சிக்கப்பட்டது. ஆனால் இதன் பின்விளைவுகளும் தீமை பயப்பனவாகவே இருக்கின்றன. பெண்களின் பாலியல் ரீதியான விருப்பங்கள் ஆண்களின் தாக்குதலைத் தூண்டுவதால், இந்த விருப்பங்கள் சுதந்திரமாகவோ அல்லது தன்னியல்பாகவோ, பகிரங்கமாகவோ அல்லது அந்தரங்கமாகவோ வெளிப்படுத்தப்பட முடியாது. (...)

ஆண்களின் பாலியல் ரீதியான வன்முறைகளைக் கடுமையாக விமர்சித்த பெண்ணியத்தின் இரண்டாவது அலையானது அவ் வன்முறைகளை நியாயப்படுத்தும் பண்பாட்டுக் கருத்தியல்களையும், அதற்குத் துணைபோகும் அரசு நிறுவனங்களையும் கண்டனம் செய்தது. எனினும் பெண்களைப் பொறுத்தவரையில் இன்பத்தையும் பாதுகாப்பையும் எதிரெதிராக நிறுத்தும் பாலியல் அமைப்பின் உளரீதியான பாதிப்புகளை பெண்ணி யம் புதிதாகப் பாராட்டத் தொடங்கியுள்ளது. பாலியல் கட்டுப்பாடுகள், கட்புலனாகாத் தன்மை, அச்சம், ஆர்வமின்மை ஆகியவை பெண்களின் பாலியல் ரீதியான உள்ளார்ந்த, தனிச்சிறப்பான இயல்பின் அறிகுறிகள் என்பதைக் காட்டிலும், மிகப்பெரும் தீமையின் அறிகுறிகளாகவே இருக் கின்றன. இதன் விளைவாக ஆண்களின் பாலியல் தன்மையும், பெண்களின் பாலியல் தன்மையும் எதிரெதிரானவையாக மாறின. இது ஏற்கனவே நிலவிவந்த பாலியல் அமைப்பின் விளைபொரு ளாகும். கட்டுப்பாடான, ஆனால் பாதுகாப்பான தென்று கருதப்பட்ட வெளியையும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட பாலியல் ரீதியான வெளிப்பாடுகளையும் பெண்கள் கொண்டிருக்க வேண்டும் என்று நியாயப்படுத்துவதற்காக இந்தப் பாலியல் அமைப்பு பயன்படுத்தப்பட்டது.

பாலியல் ஏற்றத்தாழ்வின் பயங்கரமான விளைவு மிருகத்தனமான வன்முறை மட்டுமல்ல; பெண்களின் உணர்வுகள் அவர்களுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்படுதல், சுயசந்தேகம் மற்றும் அச்சத்தின் விளைவாக வேட்கை அதன் முளையிலேயே கிள்ளியெறியப்படுதல் ஆகியவையும் தான். ஆணாதிக்க அமைப்பு எப்படி பெண்களின் விருப்பத்தில் குறுக்கிடுகிறது, தங்களுடைய சொந்த வேட்கையையே பெண்கள் எவ்வாறு அபாயகரமானதாக அனுபவிக்கிறார்கள் என்னும் இரண்டு விடயங்களுக்கிடையிலும் உள்ள உறுதியான தொடர்பானது கண்டறியப்பட வேண்டிய சிக்கலான விடயமாக ஆகிக் கொண்டிருக்கிறது.

பாலியல் தன்மையின் தனிச்சிறப்பே அதன் சிக்கலான தன்மைதான்; அதன் பல அர்த்தங்கள், உணர்வுகள் மற்றும் தொடர்புகள்தான். பாலியல்

அனுபவத்தை முழுமையான இன்ப அனுபவமா கவோ அல்லது அபாயகரமான அனுபவமாகவோ காட்டுவது மிகவும் எளிது. இவ்வாறு காட்டும்படி நமது பண்பாடு நம்மை ஊக்குவிக்கிறது. தங்கள் மீது வினைபுரியும் ஆண்களின் பாலியல் தன்மை முழுவதும் இன்பமானது, விடுதலையுணர்வை வழங்கக் கூடியது என்று ஏற்றுக்கொள்ளும்படி பெண்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். 'தாங்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதைப் பெண்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக அனுபவிக்கிறார்கள்; ஆனால் அதை அவர்களால் ஒப்புக் கொள்ள முடிவதில்லை; Hustler பத்திரிகையில் அடிக்கடி வரும் பயங்கரமான கேலிச்சித்திரங்கள் சாதாரணமான நகைச்சுவைகள் தான்' என்றெல்லாம் கூறப்படுகிறது. இதை மறுக்கும் விதமாக, பெண்ணிய விமர்சனம் பாலியல் ரீதியான அபாயத்தின் உலகளாவிய தன்மையையும், ஆணாதிக்கச் சூழலில் பெண்கள் சந்திக்கும் அவமானங்களையும் பற்றி மிகவும் தீவிரமாகப் பேசுகிறது. கருத்தியல் ரீதியான குறுக்கீடு என்ற விதத்தில் தொடக்கத்தில் பயனளிப்பதாக இருந்த இந்த விமர்சனமானது இப்போது தனக்கு எதிரான நிலையில் உள்ள கருத்தியலைப் போலவே இயங்கியல் தன்மையற்றதாகவும் எளிமைவாதத் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது. பெண்களின் உண்மையான பாலியல் அனுபவம் மிகவும் சிக்கலானது; அதைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமானது; அமைதியைக் குலைக்கக் கூடியது. ஒருவரின் பாலியல் ரீதியான சுயசரிதை புதிய வடிவில் எழுதப்படும் போது, இன்பத்தைப் பற்றி எழுதாமல் பாலியல் தன்மையை பயங்கரமான அபாயமாகவும் பெண்களை இடைவிடாது பலியாக்கும் செயலாகவும் மாற்றுவதற்கு நேர்மையற்ற இரசவாதம் தேவைப்படுவது போன்றே அபாயத்தைப் பற்றி எழுதாமலிருப்பதென்று ஒப்புக் கொள்வதற்கும் அந்த இரசவாதம் தேவைப்படும்.

**»» நமது அனுபவத்தில் இன்பத்தின் அம்சங்களும் ஒடுக்குமுறையின் அம்சங்களும் இருக்கின்றன; மகிழ்ச்சியின் கூறுகளும் அவமானத்தின் கூறுகளும் இருக்கின்றன என்பதுதான் உண்மை. இந்த இரட்டைத் தன்மையை குழப்பம் என்றோ அல்லது பொய்யான உணர்வு நிலை என்றோ நாம் கருதாமல் பாலியல் விருப்பம், கனவுகள், செயல்பாடுகள் ஆகியவற்றைப் பெண்கள் எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்று ஆராய்வதற்கான ஆதாரமாகவே கருத வேண்டும். ««**

நமது அனுபவத்தில் இன்பத்தின் அம்சங்களும் ஒடுக்குமுறையின் அம்சங்களும் இருக்கின்றன; மகிழ்ச்சியின் கூறுகளும் அவமானத்தின் கூறுகளும் இருக்கின்றன என்பதுதான் உண்மை. இந்த இரட்டைத் தன்மையை குழப்பம் என்றோ அல்லது பொய்யான உணர்வு நிலை என்றோ நாம் கருதாமல் பாலியல் விருப்பம், கனவுகள், செயல்பாடுகள் ஆகியவற்றைப் பெண்கள் எவ்வாறு அனுபவிக்கிறார்கள் என்று ஆராய்வதற்கான ஆதாரமாகவே கருத வேண்டும். நமது இன்பங்கள் நமது துன்பங்கள் ஆகியவற்றின் அடிப்படைக் கூறுகள் எவை என்று நாம் தனித்தனியாகவும் ஒன்றிணைந்தும் நின்று வகைப்படுத்த வேண்டும். உதாரணமாக நமது அனுபவத்தில் ஆற்றல் மிக்கது எது? உயிர்த்துடிப்பு மிக்கது எது? ஆர்வத்தைத் தூண்டுவது எது? என்று காணவேண்டும். இன்பம் தருவது எது? எந்த நிலைமைகளில் அது இன்பம் தருகிறது? என்று அறிவதும் இந்த நிகழ்வு அடிக்கடி நிகழும் வகையில் நமது அனுபவத்தைக் கட்டுப்படுத்துவதும்தான் பணியாகும். முதலில் நமது பாலியல் ரீதியான வரலாறுகளை நாம் அறிய வேண்டும். நமது சொந்த தனிப்பட்ட அனுபவங்களைக் காட்டிலும் அவை மிகப் பெரியவை; நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் பன்முகத் தன்மை கொண்டவை; புரிந்து கொள்ள முடியாதவை; அதே சமயத்தில் நமக்குப் படிப்பினைகளைத் தருபவை. இந்த வரலாறுகளை நாம் கற்க வேண்டுமானால் நாம் ஒருவரோடொருவர் அதைப் பற்றி கண்டிப்பாக பேசியாக வேண்டும். நாம் தங்கு தடையில்லாமல் பேச வேண்டுமானால் பன்முகத் தன்மையையும் ஆர்வத்தையும் சகித்துக் கொள்ளும் உணர்வு வேண்டும். "ஒரு உயிர் மற்றொரு உயிரை மதித்தல்" என்று இதை ஜோன் நெஸ்லே குறிப்பிடுகிறார். பெண்கள் பேசவில்லையென்றால் வரைமுறைக்கு உட்பட்ட வையும் அதிகமாகப் பொதுமைப்படுத்தப்பட்ட வையுமான பிரதிகளிடமும் தொன்மங்களிடமும் தான் நாம் மீண்டும் போய் விழ வேண்டியிருக்கும்.

சில பெண்ணியப் பகுப்பாய்வுகளும் கூட பெரும் பண்பாட்டை அடியொற்றிச் செல்வதன் மூலம் பாலியல் ரீதியான அபாயத்திற்கு அதீத மான அழுத்தம் தரும் நிலைக்குச் சென்று விடுகின்றன. ஒருவிதத்தில் 'வேசிகள் பற்றிய சித்திரத்திற்கு எதிரான இயக்கமும்' கூட (Anti-Pornograpy Movement) பழைய பாலியல் அமைப்பின் முக்கியமான கருதுகோள் களையே மீண்டும் எடுத்துரைக்கின்றது. மேலாதிக்கம் செலுத்தும் பண்பாட்டுக் கருத்தியல் பாலியல் ரீதியான அபாயங்களின் அச்சுறுத்தலை விரிவுபடுத்துகிறது. எனவே 'வேசிகள் பற்றிய சித்திரத்திற்கு' எதிரான இயக்கம், ஆண்களின் பாலியல் தன்மை பகிரங்கமாக வெளிப்படுத்தப் படுவதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பாலியல் ரீதியான அபாயத்திற்கு நேரடியாகச் சவால் விடுகிறது. இது பாலியல் ரீதியான பாதுகாப்பை அடைய முடியும் என்று கூறுகிறது. இது அடக்கு முறை அமைப்பிடமிருந்து தீர்மானகரமாகத் துண்டித்துக் கொண்டது போல் சில குறிப்பிட்ட அம்சங்களில் காட்சியளித்த போதிலும் மற்ற அம்சங்களில் இதன் கவனக் குவிப்பு மாறாமலே இருக்கிறது.

எனவே பெண்களின் பாலியல் இன்பம் இன்னும் குறைத்தே மதிப்பிடப்படுகிறது. பெண் களின் இன்ப அனுபவத்தைக் கண்டறியும் செயல்பாடு புறக்கணிக்கப்படுகிறது. முன்பு வெளியில் கூறவே முடியாதவையாக இருந்த பாலியல் வல்லுறவு, நெறிபிறழ்ந்த பாலுறவு போன்ற செயல்பாடுகளைப் பகிரங்கமான விஷ யங்களாக மாற்றுவதில் பெண்ணியம் வெற்றி பெற்றுள்ளது. ஆனால் பால்வினைத் தொழிலாளர் களைப் பற்றிய சித்திரத்திற்கு எதிரான இயக்கமோ இதை பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரித்து வருவதன் அறிகுறி யாகவும் பெண்ணியத்திற்கெதிரான கூச்சலின் அறிகுறியாகவுமே அடிக்கடி கருதுகிறது. முன்னெப்போதைக் காட்டிலும் பாலியல் ரீதியாக பெண்கள் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள் என்று கூறுவதும் இன்பத்தைக் கண்டறிவதும் அதைப் பற்றிய விவாதங்களை நடத்துவதும் பாதுகாப்பான காலத்தில் நடத்தப்படுவதற்காகத் தள்ளி வைக்கப்படுவது நல்லது என்று கூறுவதும் தான் இதன் விளைவாகும்.

பெண்கள் பாலியல் ரீதியாக அவமானப் படுத்தப்படுவது மிகவும் எளிது. 'வேசிகள் பற்றிய சித்திரத்திற்கு' எதிரான கருத்தியல் இத்தகைய அவமதிப்புகளின் புதிய வடிவங்களைச் சாத்திய மானவையாக ஆக்குகின்றன. பெண்களின் பாலியல் ரீதியான அக்கறைகள் முக்கியமற்றவை என்ற மரபான எதிர்ப்புக் கருத்துக்களே பாலியல் தன்மை கீழ்த்தரமானது, திசைதிருப்பக்கூடியது, அரசியலற்றது என்னும் கருத்துக்களிலும் மீண்டும் எடுத்துரைக்கப்படுகின்றன. பாலியல் ரீதியான விருப்பம் ஆண்களுக்குரியது என்று குறிப்பிடப் படும்போது நாங்கள் என்றேனும் உண்மையிலேயே பாலியல் தன்மையோடு இருந்திருக்கிறோமா என்று பெண்கள் சந்தேகம் கொள்கிறார்கள். நமது வேட்கை உண்மையிலேயே நமக்குச் சொந்தமானதல்ல, மாறாக ஆணாதிக்கப் பண்பாட்டினால் கட்டமைக்கப்பட்ட ஒன்று என்று கருதி நாம் நமது வேட்கையின் மீது அவ நம்பிக்கை கொள்கிறோமா? பாலியல் செயல்பாடு களில் ஈடுபடுபவர்களாகப் பெண்கள் இருக்க முடியுமா? நாம் நமக்காகச் செயல்பட முடியுமா? அல்லது ஆணாதிக்கப் பண்பாட்டில் ஆண்களின் அட்டூழியங்களுக்கு எதிராகப் போராடுவதற்காக அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள வெறும் பலியாட் களா நாம்? பாதுகாப்பான தருணத்தில் வெளிப்படு வதற்காக நமது வேட்கை காத்துக்கொண்டிருக்க வேண்டுமா? அந்த நேரம் எப்போது வரும்? நமது வேட்கை என்னவென்று அப்போது நம்மில் யாருக்கேனும் நினைவிருக்குமா? அடிபணிந்து போதல், நிராதரவான நிலைமை, பலியாளாக இருக்கும்

நிலைமை போன்ற பெண்மையின் வரம்புகளைக் கடப்பதால் நாம் மிகுந்த தொல் லைகளுக்கு ஆளாவோமா? நமது ஆழமான பாலியல் வேட்கையை நாம் செயல்படுத்தினால் நாம் பெண்களாக இருக்கமாட்டோம் என்று நாம் அஞ்சுகிறோமா? இதற்கு மாறாக ஆண்களின் காமவெறியைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளைத் தேடுகின்ற அதே சமயத்தில் பெண்களின் இன்பத்தை அடைவதற்குத் துணைபுரியாத, சகோதரிகளுக்கிடையிலான உறவில் நம்மை நாமே பிணைத்துக் கொள்ள விரும்புகிறோமா? எப்போதுமே கள்ளங் கபடமற்றது என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பே பாலுறவு குற்றம் புரியும் விஷயமாக இருக்கிறது. பாலுறவால் விளையும் எதிர்மறையான கட்டுப்பாடுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், பாலுறவு பெரும் விலை கொடுத்துப் பெறும் விஷயமாக இருக்கிறது.

அபாயத்தின் மீதான அதீத அழுத்தம், பாலியல் இன்பத்தைப் பற்றிப் பேசுவதே தடை செய்யப்பட வேண்டிய விஷயம் என்ற நிலையை ஏற்படுத்துகிறது. ஏதேனும் ஒரு பெண் அபாயத்திலிருந்தாலும் கூட பாலியல் இன்பத்தைப் பற்றி பேசுவதற்கு எந்த ஒரு பெண்ணுக்கும் உரிமையில்லை; அதாவது ஒருபோதும் உரிமையில்லை என்று கூறுகின்ற அரசியல் முழக்கத்தைப் போன்றவற்றால், பெண்ணியவாதிகள் தங்களுடைய சொந்த இன்பம் சுயநலமானது என்று குற்றஞ்சாட்டப்பட்டு எள-ிதில் அச்சுறுத்தப் படுகிறார்கள். சிலர் பின்வருமாறு நம்புகிறார்கள்: "பாலியல் தன்மை என்பது

**»» நாம் காண்கின்ற பாலியல் ரீதியான பன்முகத்தன்மை அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. ஒரு சமூகத்தில் கண்டனம் செய்யப்பட்ட செயல்பாடுகள் மறுசமூகத்தில் ஊக்குவிக்கப்படுகின்றன. கவர்ச்சியானது எது? பாலுணர்வைத் தூண்டக்கூடியது எது? பாலியல் ரீதியான திருப்தியை அளிப்பது எது? பாலியல் ரீதியாக சாத்தியமானது எது? என்பது குறித்த கருத்துக்கள் பெருமளவுக்கு வேறுபடுகின்றன ««**

சலுகை பெற்றவர்களுக்கான விஷயம்; வலிமையானவர்களுக்குத்தான் இது முக்கியமான விஷயம்; எனவே பாலியல் வறுமையில் இருப்பவர்களுக்கு எதிராக இருக்கும், பாலியல் ரீதியாக மேல்நிலையில் இருப்பவர்களின் மோசமான பண்புகளையும் மோசமான அரசியலையுமே இது அம்பலப்படுத்தும்; இன்பம் கிடைக்காதவர்கள் தூலமான, பொருளாயத ரீதியான, வாழ்க்கையைக் காப்பாற்றுகின்ற பிரச்சினைகளில்தான் அக்கறை காட்டுகிறார்கள்.'' பாலியல் தன்மையானது தூலமானதல்ல, பொருளாயத ரீதியானதல்ல, வாழ்க்கையைக் காப்பாற்றக் கூடியதல்ல என்று அவர்கள் நினைக்கிறார்கள் போலும். இதன் விளைவாக பாலியல் இன்பமானது அது எந்த வடிவத்தில் இருந்த போதிலும் பெண்ணியவாதிகளின் மத்தியில் குற்றத்தன்மை வாய்ந்த மிகப் பெரிய இரகசியமாக மாறிவிட்டது. (...)

பாலியல் என்பது பொருளாயத உலகின் பொருளாதார, சமூக, அரசியல் அமைப்புகளின் அடிப்படையில், பலமுனைகளில் வெளிப்படக் கூடிய ஒரு சமூகரீதியான உருவாக்கம் என்ற கருதுகோளிலிருந்துதான் பாலியல் தன்மை குறித்த பல பெண்ணியப் படைப்புகளும் தொடங்குகின்றன. இதற்கு முந்தைய, சாரம்சவாதக் கோட்பாடுகள் கூறியதைப் போல பாலியல் என்பது வெறும் 'இயல்பான' விடயமல்ல. மானிட, பண்பாட்டுச் செயற்பாடுகள் அனைத்தையும் போலவே பாலியல் தன்மையும் உடலை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தாலும் உடலின் அமைப்பு, உடலியக்கம், செயல்பாடுகள் ஆகியவை பாலியல் தன்மையின் அமைப்பையோ



அல்லது அர்த்தத்தையோ நேரடியாகவோ அல்லது எளிதாகவோ தீர்மானிப்பதில்லை. அவ்வாறு தீர்மானிப்பதாக இருந்திருந்தால் உலகத்திலுள்ள பண்பாடுகளுக்கிடையில் நாம் மிகப்பெரும் பொதுவான தன்மையைக் காணமுடியும் என்று நாம் எதிர்பார்க்க முடியும். ஆனால் நாம் காண்கின்ற பாலியல் ரீதியான பன்முகத்தன்மை அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. ஒரு சமூகத்தில் கண்டனம் செய்யப்பட்ட செயல்பாடுகள் மறுசமூகத்தில் ஊக்குவிக்கப் படுகின்றன. கவர்ச்சியானது எது? பாலுணர்வைத் தூண்டக்கூடியது எது? பாலியல் ரீதியான திருப்தியை அளிப்பது எது? பாலியல் ரீதியாக சாத்தியமானது எது? என்பது குறித்த கருத்துக் கள் பெருமளவுக்கு வேறுபடுகின்றன.

பாலியல் ரீதியான குத்துச் சண்டையின் மூலமாகத் தேர்வு செய்வதைப் போன்று புகழ்வது, ஊக்குவிப்பது அல்லது பரிசளிப்பது போன்ற வற்றின் மூலமாக சில பாலியல் செயல்பாடு களைத் தேர்ந்தெடுப்பதும், இகழ்ச்சி, ஏளனம் அல்லது கண்டனம் போன்றவற்றின் மூலமாக மற்ற சில பாலியல் செயல்பாடுகளை நிராகரிப் பதும் மட்டுமே பண்பாட்டின் பாத்திரங்கள் அல்ல. பாலியல் தன்மையின் சமூகரீதியான உருவாக்கம் மிகவும் ஆழமா-னது. இது ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு பண்பாட்டிலும் பாலியலின் கோட்பாடு கள் உருவான விதம், வரையறுக்கப்பட்ட விதம், விவரிக்கப்பட்ட விதம் ஆகியவற்றை உள்ள டக்கியதாகும்.

சில குறிப்பிட்ட உடல்ரீதியான செயல்பாடு களுக்கு மலப்புழைப் பாலுறவு, ஆண்-பெண் உடலுறவு, முத்தமிடுதல், ஆணுறுப்பைச் சுவைத் தல், சுய இன்பம் காணுதல் என்று நம்மால் பெயரிட முடிந்த போதிலும் பாலியல் ரீ-தியான அடையாளம், பாலியல் ரீதியான சமூகம் ஆகிய வரையறைகளின் அடிப்படையில் இந்த ஒவ்வொரு செயல்பாட்டுடனும் இணைந்துள்ள சமூகரீதியான மற்றும் தனிப்பட்ட அர்த்தங்கள் வரலாற்று ரீதியாக மாறிவந்துள்ளன என்பது தெளிவு. உடலை மறுக்காத அதேசமயத்தில் உடலும் அதன் செயல்பாடுகளும் நடைமுறையில் உள்ள அர்த்தங்களுக்கு ஏற்பவே புரிந்து கொள்ளப்படுகின்றன என்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்கிறோம். உதாரணமாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொடக்க காலங்களிலும் 'ஸோடோமி' (அதாவது மலப் புழையின் வழியாகவோ அல்லது மிருகங்க ளையோ புணர்வது) நடைபெற்றது; அது தண்டிக் கப்பட்டது என்றாலும்கூட, எந்தவொரு மனிதனுக்கும் ஏற்படக்கூடிய பாலுணர்ச்சி சார்ந்த வேட்கையின் விளைவாகக் கருதப்பட்டதே தவிர 'ஒருபால் புணர்ச்சியாளர்' என்ற வகையைச் சேர்ந்த குறிப்பான தனிநபரால் புரியப்படும் செயலாகக் கருதப்படவில்லை என்பதை ஆண் களின் ஒருபால் புணர்ச்சியின் வரலாறு குறித்த சமீபத்திய ஆய்வு காட்டுகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் பாலியல் வகைகள் வகைப்படுத்தப்பட்டன. அப்போதுதான் உற்பத்தியிலும் மறுஉற்பத்தியிலும் (இனப்பெருக்கம்) ஈடுபடும் அலகு என்ற விதத்தில் குடும்பச் சூழலுக்கு அப்பாலும் தனி நபர்கள் வாழ்வதை முதலாளித்துவமும் நகர்ப்புற வளர்ச்சியும் சாத்தியமாக்கின. பெண்களின் நெருக்கமான உறவுகளைப் பற்றிய வரையறை கள் மாறி வருவதையும் வரலாற்றாளர்கள் ஆய்ந்து அறிந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரே வீட்டையும் ஒரே படுக்கையையும் பகிர்ந்து கொண்ட இரு பெண்கள் வழக்கமாகவே நெருக்கமான நண்பர்களாகக் கருதப்பட்டார்கள். இருபதாம் நூற்றாண்டிலோ இத்தகைய பெண்கள் லெஸ்பியன்களாகக் கருதப்பட்டார்கள். ஆண்,பெண் உடலுறவின் நவீன வடிவங்களின் வரலாற்றையும் இதேபோன்று எழுதமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

பாலியல் தன்மையானது சமூக ரீதியான உருவாக்கம் என்ற அணுகுமுறையானது பால் தன்மை பற்றிய பிற சமூக உருவாக்கக் கோட்பா டுகளுடன் பல விதங்களில் ஒத்திருப்பதால், இந்த அணுகுமுறையைப் பெண்ணியவாதிகள் ஏற்றுக்கொள்வார்கள் என்று ஒருவர் எதிர்பார்க்கக் கூடும். மனிதச் செயல்பாடுகளின் ஊடகம் உடல் தான்; ஆனால் உடலின் அமைப்பு நேரடியாக அதைத் தீர்மானிப்பதில்லை என்று இந்த அணுகுமுறை கூறுகிறது. மேலாதிக்கம் செலுத்தும் பண்பாட்டு ரீதியான ஏற்பாடுகள் உயிரியலின் விளைவுகள்தான்; எனவே அவை உள்ளார்ந்தவையாகவும்

நிரந்தரமானவையாகவும் மாறாதவையாகவும் இருக்கின்றன என்று கருதும் விஞ்ஞான ‘அறிவும்’ நாட்டுப்புறவியலும் எப்போதும் நடைமுறையிலுள்ள அதிகார உறவுகளையே ஆதரிக்கின்ற கருத்தியல்களாக இருக்கின்றன. ஆழமாக உணரப்பட்ட தனிப்பட்ட அடையாளங்கள் (உதாரணமாக ஆண்மை/பெண்மை அல்லது ஆண்-பெண் பாலுறவு/ ஒருபால் உறவு போன்றவை) முற்றிலும் தனிப் பட்டவையல்ல அல்லது உயிரியலால் மட்டுமே உருவான விளைபொருள்களும் அல்ல; மாறாக காலப்போக்கில் மாறுதலடையும் அரசியல் சமூக பொருளாதார சக்திகள் ஒனறையொன்று குறுக்காக வெட்டிக் கொள்வதால் உருவாகின்றவையாகும்.

எனினும் சமூக உருவாக்கக் கோட்பாடு பாலியல் தன்மை பற்றிய முற்போக்கான பார்வையாக இருக்கிறது. பாலியல் தன்மை பற்றிய சாரம்சவாதக் கருத்துக்களோடு வளர்க்கப்பட்ட பெண்ணிய வாதிகளுக்கும் பிற சிந்தனையாளர்களுக்கும் இந்தக் கோட்பாடு அதிர்ச்சியூட்டும் கேள்விகளை முன்வைக்கிறது. சமூக உருவாக்கத்தின் கட்டுப்பாடற்ற தன்மைக்கும் நமது உடல்ரீதியான உணர்வுகள் மற்றும் செயல்பாடுகளின் உடனடித் தன்மைக்கும் இடையிலான உறவின் இயல்பு என்ன? பாலியல் தன்மையானது சாரம்சமான மையத்துடன் தொடர்ந்து நிகழ்ந்து

> »» **பெண்களின் நெருக்கமான உறவுகளைப் பற்றிய வரையறைகள் மாறி வருவதையும் வரலாற்றாளர்கள் ஆய்ந்து அறிந்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரே வீட்டையும் ஒரே படுக்கையையும் பகிர்ந்து கொண்ட இரு பெண்கள் வழக்கமாகவே நெருக்கமான நண்பர்களாகக் கருதப்பட்டார்கள். இருபதாம் நூற்றாண்டிலோ இத்தகைய பெண்கள் லெஸ்பியன்களாகக் கருதப்பட்டார்கள். ஆண், பெண் உடலுறவின் நவீன வடிவங்களின் வரலாற்றையும் இதே போன்று எழுத முடியும் என்பதில் சந்தேகமில்லை.** ««

கொண்டிருக்கும் ஒற்றையான நிகழ்வுப் போக்கா அல்லது ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்ப வித்தியாசமானதாக உருவாக்கப்படும் ஒரு விஷயமா? பாலியல் தன்மை என்பது பண்பாட்டுக் காரணிகளால் ஓரளவுக்கு உருவாக்கப்படும் வெளிப்பாடுகளைக் கொண்ட வரலாற்றைக் கடந்த, பண்பாட்டைக் கடந்த சாரம்சம் அல்லவெனில் பாலியல் விருப்பம் என்பது உள்ளார்ந்த ஒன்றாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் பாலியல் விருப்பமே கட்டமைக்கப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது என்றும்தான் நாம் கருதவேண்டுமா? ஆம் எனில் எந்த மாதிரியான இயங்குமுறைகளின் அடிப்படையில் அது இவ்வாறு உருவாக்கப்பட்டது. (...)

பெண்களின் பாலியல் தன்மையை விவரிக்கின்ற அல்லது பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இத்தகைய விடயங்களை ஆய்வுசெய்யும் போது பல்வேறுபட்ட பிரதிநிதித்துவப்படுத்தல்கள் எதை அர்த்தப்படுத்துகின்றன என்று, அதாவது பெண்களின் சிந்தனையும் அனுபவமும் உருவானபோது அவற்றுடன் அந்தப் பிரதிநிதித்துவப் படுத்தல்கள் எவ்வகையான உறவைக் கொண்டிருக்கின்றன என்று புரிந்துகொள்வதற்கு ஒரு பார்வையாளர் அல்லது விளக்கமளிப்பவர் அல்லது ஆய்வாளர் முயல்கிறார். இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதற்கு ஒரு பகுப்பாய்வாளர், அர்த்தத்தைத் தேடிக் கண்டறிவதற்கும் புரிந்து கொள்வதற்கும் உதவக்கூடிய விளக்கமளிக்கும் சட்டகம் ஒன்றைப் பயன்படுத்துகின்றார்.இந்த விளக்கமளிக்கும் சட்டகம் அனைத்துப் பெண்களிடமும் இருப்பதாக நாம்



கருதுகிறோமா? இச் சட்டகம் அனைவருக்கும் பொதுவானது என்று நாம் கருதுகிறோமா? (...)

பாலியல் தன்மையைப் பற்றி ஆய்வுசெய்ய வேண்டுமென்று நாம் விரும்பினால் குறியீட்டிற்கும் படிமத்திற்கும் தனிநபர் புரியும் எதிர்வினைகளைப் பற்றிய கூடுதலான செய்திகள் நமக்குத் தேவை. பார்வையாளராக இருக்கும் ஒரு பெண் ஒரு விளக்கத்தை அளிப்பதற்காகத் தன்னுடன் எவற்றைக் கொண்டு வருகிறார் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு பண்பாட்டுச் சட்டகம், ஒத்திசைவுகள், தொடர்புகள், தனிப்பட்ட அனுபவங்கள் ஆகியவை அவை. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மூலப்பொருள், பிற குறியீடுகளுடன் தங்களுக்கு உள்ள உறவுகள் தனிச் சிறப்பான பண்புகளாக விளங்கும். தனிப்பட்ட விளக்கமளிக்கும் சட்டகங்கள் ஆகியவற்றைச் சார்ந்தே ஒவ்வொரு பார்வையாளரும் தமக்கே யுரிய விதத்தில் குறியீடுகளை வாசிப்பதால் சூழல் பற்றிய பிரச்சினையும் முக்கியமானதுதான்.

குறியீடுகளுக்கு ஒற்றை அர்த்தம்தான் இருக்கிறது என்றும், ஒரே ஒரு மேலாதிக்கப் பண்பாடுதான் அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது என்றும் கருதுவது குறியீடுகளைத் தனிநபர் அனுபவிப்பதையும் அறிந்துணர்வதையும் ஆய்வுசெய்யத் தவறுவதாக இருக்கும் என்பதுடன், விளையாட்டு, படைப்பாற்றல், நகைச்சுவை, அறிவு போன்றவற்றை எடுத்துக்கொள்ளக் கூடிய சிக்கலான வழிமுறையில் அக் குறியீடுகளை மாற்றியமைக்கவும் கையாளவும் தனிநபருக்கு இருக்கும் ஆற்றலையும் ஆய்வு செய்யத் தவறுவதாக இருக்கும்.

இவ்விதமாகக் கருதுவது வெகுஜனப் பண்பாட்டிற்கு அது கோரும் பாரம்பரி யத்தை அளிக்கிறது; ஆனால் வெற்றி பெறுவதில்லை. வேறுபடுவதற்கான உள்ளாற்றலைப் புறக்கணிப்பது பெண்களை அதிகார பூர்வமான குறியீட்டு அமைப்பை எவ்வித எதிர்ப்பு மின்றி ஏற்றுக் கொள்பவர்களாகக் கருதி தவறுதலாக அவர்களைப் பண்பாட்டிற்கு வெளியில் வைப்பதாகவே இருக்கும். வெகுஜனப் பண்பாடு எதை மறைத்து வைப்பதற்கு எப்போதும் முயன்று வந்ததோ அதைத் தொடர்ந்து மறுப்பதாகவே இது இருக்கும். குறியீட்டு ரீதியான போராட்டத்தையும், அதேபோன்று பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்களையும் பயன்படுத்தி, ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வெற்றி பெறுவதற்கு உரிமைகள் மறுக்கப்பட்ட குழுக்கள் மேற்கோள்ளும் சிக்கலான போராட்ட வடிவங்களையே அது மறுக்கிறது. வெகுஜனப் பண்பாட்டின் குறியீடுகள் மேலாதிக்கப் பண்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவும் பகடி செய்வதற்காகவும் பயன்படுத்தப்படலாம். (...)

போர்னோக்ரா.்.பி, ஸேடோ-மேஸக்கிஸம் (ஆண்களின் பாலியல் ரீதியான சித்திரவதையை பெண் ஏற்றுக்கொண்டு அதில் இன்பமடைதல்), முரட்டுத்தனமான ஆண் மென்மையான பெண் (Butch Femme) ஆகியவற்றைப் பற்றிய சமீபத்திய பெண்ணியப் பாலியல் ரீதியான கருத்து மாறுபாடுகள் அனைத்தும் குறியீட்டுச் சூழலையும் அதில் ஏற்படும் மாற்றங்களையும் பற்றி மிகவும் மேம்பட்ட பகுப்பாய்வு தேவை என்பதையே உணர்த்துகின்றன. குறிப்பாக இலக்கியப் பிரதிகளைக் காட்டிலும் காட்சிக்குரிய வடிவங்களில் குறியீட்டுச் சூழலும் அதன் மாற்றங்களும் மிகவும் கடினமானவை. அவற்றில் நமது கல்வி, நாம் பயன்படுத்தும் சொற்கள், சொற்களின் நுணுக்கம் ஆகியவை இலக்கியப் பிரதிகளைக் காட்டிலும் மிகத் தாழ்ந்த வளர்ச்சியையே பெற்றுள்ளன. நமது காட்சி ரீதியான கல்வியறிவின்மை படிமத்தை வல்லமை யுடைய ஒன்றாக மாற்றுகிறது. ஒரு படிமத்தால் தூண்டப்பட்ட உணர்ச்சி எளிதில் சொற்சாலம் நிறைந்த வாதங்களோடு இணைந்து கொள்கிறது. மிகவும் தெளிவான பகுப்பாய்வையும் எதிர்வினை யையும் அதே போன்று பார்வையாளர்களையும் சூழ்ச்சித் திறம் நிறைந்த படிமத்தின் மூலமாக வெற்றி கொண்டு விடுகிறது.

வாழ்க்கைக் குழுக்கள் அல்லது சில போர்னோகிரா.்.பி எதிர்ப்புப் பெண்ணிய குழுக்களுக்கு எதிராக வலதுசாரிகளால் நடத்தப்படும் கருத்துப் போராட்டம் என்னும் சறுக்கு விளையாட்டுக் காட்சியில் நடப்பதைப் போன்றே இது நடக்கிறது. ஒவ்வொரு உதாரணத்திலும், சீசாவில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு குழந்தைக் கருவின் படிமமும் சங்கிலிகளால் கட்டப்பட்ட

ஒரு பெண் ணின் படிமமும் ஏற்படுத்துகின்ற அதிர்ச்சியானது விருப்பமான முடிவை நோக்கிப் பார்வையாளர் களை நகர்த்துவதற்காகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகிறது. (...)

பாலியல் குறியீடுகளைப் பற்றிய நடைமுறைக்கேற்ற ஒரு பகுப்பாய்வு நாம் எளிமையான பொதுமைப்படுத்தல்களுக்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்று கோருகின்றது. வரலாற்று ரீதியான சாதாரண மனிதன் அவனைப் பற்றி எழுதிய ஆசிரியர்களைப் போலவே ஆணாகவும், வெள்ளையனாகவும், பெண்ணைப் புணர்பவனாகவும், வளம் மிக்கவனவாகவும் இருந்தான் என்று கருதுகின்ற, தவறாக பொதுமைப்படுத்துகின்ற, ஆண்மையவாத வரலாற்றைப் பெண்ணிய ஆய்வுகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன. மேற்குறித்த ஆண்மையவாத வரலாறுகள் ஆய்வுக்குரியவர்கள் என்ற வகையிலும் சுய உணர்வோடு வரலாற்றில் செயல்படுபவர்கள் என்ற வகையிலும் பெண்களைப் புறக்கணிக்கின்றன. வரலாற்று நிகழ்வுகளை அறிவதையும் அனுபவிப்பதையும் சமூகப் பண்புகள் மாற்றியமைக்கின்றன என்றும் ஆண்-பெண் பால்வேறுபாடு முக்கியமான சமூகக் காரணியாக இருக்கிறது என்றும் திருத்தப்பட்ட ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

» **பாலியல் குறியீடுகளைப் பற்றிய நடைமுறைக்கேற்ற ஒரு பகுப்பாய்வு நாம் எளிமையான பொதுமைப்படுத்தல்களுக்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்று கோருகின்றது. வரலாற்று ரீதியான சாதாரண மனிதன் அவனைப் பற்றி எழுதிய ஆசிரியர்களைப் போலவே ஆணாகவும், வெள்ளையனாகவும், பெண்ணைப் புணர்பவனாகவும், வளம் மிக்கவனவாகவும் இருந்தான் என்று கருதுகின்ற, தவறாக பொதுமைப்படுத்துகின்ற, ஆண்மையவாத வரலாற்றைப் பெண்ணிய ஆய்வுகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன** «

பொய்யான பொதுமைப்படுத்தல்களை விமர்சனம் செய்த போதிலும் அதே பாவத்தைச் செய்வதிலிருந்து பெண்ணிய ஆய்வும் தேடலும் கூட தப்பிக்கவில்லை. சமீபத்தில் கண்டனம் செய்யப்படுவது வரையில், பெண்ணிய விவரிப்புகளும் பகுப்பாய்வுகளும் பெண்களை வெள்ளையர்கள் என்றும், நடுத்தர அல்லது மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆண்களைப் புணரும் இயல்புடையவர்கள் என்றும் வலிமையானவர்கள் என்றும் ஓரளவிற்கு இளமையானவர்கள் என்றும் இந்தப் பெண்களின் அனுபவங்களும், காட்சிப் பரப்புகளும் எல்லாருக்கும் பொதுவானவை என்றும்தான் கருதிவந்தன. பெண்ணியச் சொல்லாடலில் பயன்படுத்தபட்ட ‘பெண்’ என்ற சொல் பெண்களின் அனுபவத்தின் ஒரு பகுதியை முழுமையின் இடத்தில் கொண்டு வந்து வைத்து, சில பெண்களின் அனுபவத்தை மௌனத்தின் நிலைக்குத் தள்ளியது. ஹோர்டன்ஸ் ஸ்பில்லரின் சொற்களில் கூறுவதெனில் ‘பெண்‘ என்ற சொல் கொடிய ஆகுபெயராகப் பயன்படுத்தப்பட்டது. வெகுஜனப் பண்பாட்டிறகும் ‘பெண்களின் பண்பாட்டிற்கும்’ வெளியில் நின்றவர்களின் அனுபவங்கள் பெண்ணியத்தின் பரப்பிலிருந்து வெளியேற்றப்பட்டன. பெண்ணியக் குறுங்குழுக் கோட்பாடு சமீப ஆண்டுகளில் தன்னைத் தானே சுயவிமர்சனம் செய்து கொண்டதால், பல்வேறு பெண்களின் குழுக்களுடைய அனுபவத்தை எடுத்துக் கொள்வதற்கும் ஒவ்வொரு குழுவுக்கும் அதற்கேயுரிய முடிவுகளை அளிப்பதற்கும் பெண்ணியப் பகுப்பாய்வு முயற்சி செய்ய வேண்டும் என்று காட்டுவதில் அது வெற்றி பெற்றுள்ளது.



பெண்களுக்கிடையிலான வேறுபாடுகளை அங்கீகரிப்பதற்கு எழுந்த பெண்ணிய மறுப்பின் ஒரு பகுதி வெகுஜனப் போக்கைச் சேர்ந்த பெண்ணியவாதிகளிடம் இருந்த அகந்தையிலிருந்து வந்த போதிலும் இந்த மறுப்பின் முக்கியமான பகுதி, பெண்களுக்கிடையிலான வேறுபாடுகளைப் பற்றிய அச்சத்திலிருந்துதான் உருவானது. ஆண் களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக் கொள்வதன் மூலமாக, தங்கள் மீதான ஒடுக்கு முறைக்கெதிராகப் பெண்கள் அணிதிரள்கிறார்கள் என்றால் அவர்கள் தங்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்றுபடுத்துகின்ற பண்பாகிய பெண் தன்மையை வலியுறுத்தி ஒரு ஐக்கிய முன்ன ணியை அமைக்க வேண்டாமா? ஆண்களின் குழுவிடம் பெண்களின் கீழ்ப்படிதலும் பிணைப்பு களும் அனுமதிக்கப்பட்டால் பொதுவான சகோதரிகளுக்கு இடையிலான உறவு பலவீனமடைந்துவிடுமா? ஒருமுறை வேறுபாடுகள் அனுமதிக்கப்பட்டால் வெறுப்பும் பிரிவினையுணர்வும் கொண்டவர்களாக அவர்கள் மாறுவதையும், அனைவருக்கும் பொதுவான அரசியல் செயல்பாட்டின் அடித்தளத்தை அவர்கள் சிதைப்பதையும் எப்படித் தடுப்பது? குழுக்களுக்கிடையிலான பகைமைகளைப் பேணி வளர்க்கும் சமூகத்தில் வேறுபாடுகளை அங்கீகரிப்பதற்கும் ஒருங்கிணைந்து பணியாற்றுவதற்கும் நமக்கு முன்னுதாரணங்களாக இருப்பவை எவை?.

வேறுபாடுகளைக் கண்டறிவது என்பது உண்மையிலேயே துயரமான அனுபவமாகும். பெண்களின் இயக்கங்களின் தொடக்கக் கட்டங்களில் லெஸ்பியன்களுக்கும் ஆண்-பெண் பாலுறவில் ஈடுபடுவோருக்கும் இடையிலான வேறுபாடுகளில் தொடங்கி சமீபத்திய ஆண்டுகளில் வர்க்கம், மதம், இனம் ஆகியவற்றிலான வேறுபாடுகள் வரையில் இது தொடர்கிறது. ஒருபுறம் பெண்களின் பொதுத்தன்மையை வலியுறுத்துகின்ற கோட்பாடுகளையோ அல்லது இனம், வர்க்கம் போன்ற காரணிகளைக் கொண்டு பெண்களை முழுமையாக பிரிக்கின்ற கோட்பாடுகளையோ சிலர் ஏற்றுக்கொண்ட போதிலும்கூட, பல பெண்ணியவாதிகள் வேறுபாடுகளைக் கையாள் வதன் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள். இதை எப்படிச் செய்வதென்று அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள்

வேறுபாடுகள் குறித்து நமக்கு ஏற்படும் சங்கடம் குறிப்பாக பாலியல் ரீதியான வேறுபாடு களைப் பற்றிய பிரச்சினைகளில் தெளிவாக வெளிப்படுகிறது. லெஸ்பியன் உறவுக்கும் ஆண்-பெண் பாலுறவுக்கும் இடையிலான வேறுபாடுகள் என்னும் பிரச்சினைக்கும் அப்பால், பெண்கள் இன்பத்தைப் பெறுவதற்கான அனைத்து வழி முறைகளையும் உள்ளடக்கும் அளவுக்கு பாலியல் ரீதியான வேறுபாடுகளைப் பற்றிய பிரச்சினை விரிவடைந்து விட்டது. பாலியல் ரீதியான ஒருமுகப்படுத்தும் ஆற்றல் என்பது 1ய மேற்கொள் வது? எல்லாவற்றுக்கும் மேலாக, பெண்ணியம் பாலியல் தன்மை குறித்து பேசும் இயக்கமாக இருக்கவேண்டும். பேசுவதற்கு விரும்பும் எதிர்ப் புரட்சிக் குழுக்களிடம் தோல்வியடையக்கூடிய தாக அது இருக்கக் கூடாது. பெண்ணியம் பாலியல் ரீதியான தீவிரத்தன்மை கொண்டதல்ல என்று பாசாங்கு செய்வதன் மூலம் நாம் கோழைத் தனமாக நடந்துகொள்ளக் கூடாது. இந்தத் தருணத்தில் பாலியல் ரீதியான தீவிரத்தன்மை உடையவர்களாக இருப்பது என்பது நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைக் காட்டிலும் நீங்கள் எதை நினைக்க விரும்புகிறீர்கள், எதைப் பின்பற்ற விரும்புகிறீர்கள், எதை கேள்விக்குள்ளாக்க விரும்புகிறீர்கள் என்பதைப் பற்றிய விஷயமாகும்.

சமூக நீதி, பொருளாதார சமத்துவம் மற்றும் இனப்பெருக்கத் தேர்வு உரிமை உள்ளிட்ட பெண்களின் சுயேச்சைத் தன்மைக்கு உதவுகின்ற பொருளாயத மாற்றங்களுக்காக பெண்ணியம் கண்டிப்பாகத் தொடர்ந்து பணிபுரிய வேண்டும். அதே சமயத்தில் பெண்ணியம் ஒடுக்குமுறைக்கான களம் என்ற முறையில் பாலியல் தன்மையைப் பற்றியும் கண்டிப்பாகப் பேசவேண்டும். ஏற்கனவே விரிவாகவும் திறன்மிக்க விதத்திலும் பேசப்பட்ட ஆண்களின் வன்முறை, மிருகத்தனம், கட்டாயப்படுத்துதல் போன்ற ஒடுக்குமுறைகளைப் பற்றி மட்டுமின்றி அறியாமை, கட்புலானாகத் தன்மை, அச்சம் ஆகியவற்றிலிருந்து பிறக்கும் பெண்களின் வேட்கையின் மீதான ஒடுக்குமுறைகளைப்

பற்றியும் பேசவேண்டும். இன்பத்தை இழக்கும் நிலைக்கு எதிராகப் போராடக்கூடிய, இன்பத்தை ஆதரிக்கக் கூடிய அரசியலைப் பெண்ணியம் முன்வைக்க வேண்டும். இன்பம் என்பது வாழ்க்கையை உறுதிப்படுத்துவது, வாழ்க்கையின் ஆற்றலைப் பெருக்குவது, மனித உறவுகளின் மீதும் எதிர்காலத்தின் மீதும் நம்பிக்கை வைப்பது என்று பெண்ணியம் புரிந்து கொள்ள வேண்டும்; இன்பம் என்பது அழிவுபூர்வமானது என்றோ வாழ்க்கையின் ஆற்றலைக் குறைப்பது என்றோ அல்லது சீரழிவைத் தருவது என்றோ எண்ணி பெண்ணியம் அஞ்சிவிடக் கூடாது.

பாலியல் ரீதியான இன்பம் என்பது நல்லநேரம் வருவதற்காகத் தள்ளி வைக்கப்பட முடியாத அடிப்படை உரிமை என்று பெண்ணியம் கண்டிப்பாகப் பேச வேண்டும். எந்தப் பெண்களிடம் பெண்ணியம் பேசுகிறதோ, எந்தப் பெண்களைச் சென்றடைய வேண்டுமென்று பெண்ணியம் விரும்புகிறதோ அந்தப் பெண்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பாலியல் ரீதியான இன்பங்களைப் பற்றியும் துன்பங்களைப் பற்றியும் ஆழமான அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெண்ணியம் புரிந்து கொள்ள வேண்டும். பாலியல்தன்மை என்பது உயிராதாரமான, மிகவும் ஆழமான, தீவிரமான போராட்டத்திற்கான களம் என்பதையும் குறுகிய நோக்கம் கொண்ட, வசதிபடைத்த சிறு குழுவின் ஆர்வத்திற்கு மட்டுமே உரிய விடயமல்ல என்பதையும் பெண்ணியம் புரிந்துகொள்ள வேண்டும்.

கட்டாயப்படுத்துதல், பலியாக்குதல் ஆகியவற்றை மட்டுமின்றி பாலியல் ரீதியான அறியாமை, பாலியல் இன்பங்களை இழக்கும் நிலை, வேறுபாடுகளைப் பற்றிய அச்சம் ஆகியவற்றையும் எதிர்த்துப் போராடும்படி பெண்களைப் பெண்ணியம் ஊக்குவிக்க வேண்டும். பெண்களின் பரிசோதனைகளையும் பகுப்பாய்வுகளையும் பெண்ணியம் ஆதரிக்க வேண்டும்; பெண்கள் அறிவைப் பெறுவதற்கு உற்சாகமளிக்க வேண்டும். நமது சொந்த அனுபவத்தை ஆய்வுசெய்வது, நமது சொந்த அனுபவத்தை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துகொள்வது ஆகியவற்றிலிருந்து நாம் தொடங்க வேண்டும். சமூக வாழ்வின் பிற அம்சங்களைப் போலவே பாலியல் தன்மையிலும் நமது சாகசங்கள், துணிகரமான முயற்சிகள், உந்துசக்திகள் மற்றும் பயங்கர நிகழ்வுகள் ஆகியவை எதிர்காலத்திற்கான திறவுகோல்களாக விளங்குகின்றன. பெண்கள் பாலியல் ரீதியான தன்னிலைகள், பாலியல் ரீதியாக செயல்படுபவர்கள், பாலியல் ரீதியான செயலூக்கிகள் என்று பெண்ணியம் வலியுறுத்த வேண்டும். நமது வரலாறுகள் சிக்கலானவை; நமக்கு படிப்பினைகளைத் தரக்கூடியவை என்றும் வலியுறுத்த வேண்டும். நமது அனுபவம் வெறுமையானதல்ல என்றும், ஏற்கனவே சொல்லப்பட்டவற்றையே திரும்பவும் சொல்வதல்ல என்றும், நாம் அனுபவித்த இன்பமானது நாம் அனுபவித்த மிருகத்தனத்தைப் போன்றே நமது எதிர்காலச் செயல்பாடுகளுக்கான வழிகாட்டியாகும் என்றும் பெண்ணியம் வலியுறுத்த வேண்டும்.(...)



# மனிசியாக வாழ என்ன வழி

தலை நிமிர்ந்து போனால்
தலைக்கணம் என்பார்
வழமாக வாழ்ந்தால்
வறுமையில்லை என்பார்

ஏழையாய் இருந்தால்
இயலாதவள் என்பார்
பாசத்தோடு பேசினால்
பயித்திக்காரி என்பார்

சமாதானம் வேண்டுமென்றால்
சன்மானம் கேட்பார்
அன்பு தேடினால்
ஆணவத்தால் மிரட்டுவார்

கணவனை இழந்தால்
கைம்பெண் என்றிடுவார்
பண்போடு நடந்தால்
பகட்டுக்காரி என்பார்

கலையை நேசித்தால்
காதல் என்பார்
சந்தோஷமாய் உறவாடினால்
சோகமே இல்லாதவள் என்பார்

உணர்வுகளை கூறினால்
உதறித் தள்ளிடுவார்
புரிந்துணர்வு தேவையென்றால்
பொய்யென்று சொல்லிடுவார்

நீதியாய் நடந்தால்
நெஞ்சமில்லை என்றிடுவார்
ஒதுங்கி வாழ்ந்தால்
ஒற்றுமை இல்லை என்பார்

வாய் திறந்தால்
வாயாடி என்பார்
ஆடிப்பாடி நடித்தால்
ஆட்டக்காரி என்பார்

மனிசியாக வாழ என்ன வழி?



**அருட்கவிதா**
(2002)

## நான் நானாக மட்டும்

என்னைப் பேசவிடு
தெளிவாக
தீர்மானமாக.

உனக்குப் பிடிக்காதென்பதற்காகவும்
நீ
அனுமதிக்கவில்லையென்பதனாலும்
தினமும் என் தேவைகள்
தீக்கிரையாக வேண்டுமா?

இந்த வாழ்வு பற்றி
(உன் போன்றே)
ஆயிரம் கனவுகளுடன் தான்
நானும் ஜீவிக்கிறேன்.
அன்றாடம் என் கனவுகளைக்
கொன்றுவிடும் விதம் ~நீ
ஆயிரம் ஆணிகள்
அறைகிறாய்.

உன் பொறாமைகளுக்கெல்லாம்
நான் ~ பொறுப்பாளியுமல்ல.

விசாரணைகள்
குற்றப் பிரேரணைகள்
என் மீதான
உன் நம்பிக்கையில்லாத்
தீர்மானம்
எல்லாமும் விவாதிக்க
படுக்கையறை
உன் ~ பாராளுமன்றமுமல்ல.

என்னைப் பேசவிடு.

ஆழ்ந்த வலிகளை
வரைந்து காட்ட முடியாது.

என் வெறுப்பை
புரியவைக்க
உன் முன்னே
ஒரு யுத்தத்தை
நிகழ்த்திக் காட்ட முடியாது.



**அனார்**
(2002)



## தலைப்பில்லாத சில கவிதைகள்

1

இந்த எழுத்து
எனக்கும் உனக்குமான சம்பாஷணையா?
இருக்கலாம்
சிலவேளைகளில் சாத்தியப்படலாம்
நீ
வெட்டுக்கிளியாய்
கனவுகளை துரத்தித் திரியும் போது
கால்களை தொலைத்திருந்தால்
அல்லது
நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருக்கும் போது
கண்களை இழந்திருந்தால்
அல்லது
மரணத்திற்கும் வாழ்விற்கும் இடையிலான சிறிய
நூலிழை அறுந்து போய் நீ
இருளுக்குள் தொலைந்திருந்தால்
அல்லது
வானத்திற்கும் மண்ணுக்கும் இடையில் நிகழ்ந்து கொண்டிருக்கும்
நிகழ்வுகளைப் பற்றியாவது சிறிய கவலை கொண்டிருந்தால்
நான் இவ்வளவு காலமும்
எழுதிக் கொண்டிருந்தவைகளில் சில வரிகளாவது
எம்மை பிணைத்திருக்கும்

2

இரவையும் பகலையும்
தொலைத்து விட்டது
என் ஆத்மா
முடிவிலி இல்லாத
ஒரு இரயில் பயணம் போல்
வாழ்க்கை நீண்டு கொண்டே போகின்றது
வாழ்வு
ஒவ்வொரு நாளும்
திணிக்கப்படும் ஒரு நிகழ்வாகின்றது
மனிதர்கள் மூளைகள் சிதைந்து
முண்டங்களாக கனவுப்போதையில்
காயப்பட்ட பின்பும் நொண்டிக்கொண்டே அலைகின்றனர்
தினம்
மந்திரமாய்க் காதுகளில்
ஓதப்படுப்படுகின்றது
சாத்தானின் வேதம்

எதையாவது ஒன்றை நேசி
யாரையாவது காதலி
கனவுகளை விதை
உறவுகளை எற்படுத்து
உணர்வுகளுக்கு அடிமையாகி
உயிரணுக்களை கடமையாய் விதை
பொய்மையாய்
வாழ்வு உப்பிப் பெருக்கின்றது
கனவுகள் துயரமாய்
துரத்தியடிக்க
மரணம் மட்டுமே நிஜமெனினும்
வாழ்வு மட்டுந்தான் அறிமுகம் செய்யப்படுகின்றது
காதலிக்க கற்றுத்தரப்படுகின்றது

3

நான் கவிஞையாய்ப் பிறக்கவில்லை
சம்பவங்களின்
நினைவுகள்
ஓயாத அலைகளாய் இதயச் சுவர்களில்
முட்டி மோதியதால்

கிறுக்கிக் கக்கவே
நான் எழுத்தைத் தேர்ந்தெடுத்தேன்

சுற்றி நிகழ்ந்தவைகளைப்
பார்த்த பின்பு
எழுத மட்டுந்தான் முடிந்தது
ஓயாத வலியால் இதயத் துடிப்பு நின்றுவிடாமல்
நிறுத்தி வைக்க ஒரு நிவாரணமாய்
இந்த எழுத்து தேவைப்படுகிறது
அழுது புலம்பவும்
சினந்து வெறுக்கவும்
வெடித்துச் சீறவும்
இது மிகவும் பயனளிக்கின்றது

புரட்சியும் புண்ணாக்கும்
விடுதலையும் மனித உரிமைகளும்
எல்லோர் முகத்திலும் குருதி மட்டுமல்ல
எச்சில் துப்பல்களும்தான் கசிகின்றது

சில கணங்கள் எல்லாவற்றையும்
விட்டு விடுகிறேன்



படைத்தலும் காத்தலும் அழித்தலும்
ஏதாவது நடந்து தொலையட்டும்
தொடர்ந்து வந்து
என்னை தொந்தரவு செய்யாதீர்கள்
நான் பாடுவதற்கான சுதந்திரத்தை
இந்த எழுத்து பெற்றுத் தந்திருக்கின்றது
இது எனக்குக் கிடைத்த
தற்காலிகமான பேச்சுச் சுதந்திரம்
இதை ஒரு விடுதலையாய்
அதிகமாக நேசிப்பது ஆபத்து
என்னைச் சுற்றியும் அழுக்குகள் படிகின்றது
என் தோலுக்குள் புணர்ந்துகொண்டிருக்கின்றது
அவை குருதிக்குள் கலந்து
மறுபடியும் உங்களில்
ஒருத்தியாய் நான் புற்றுநோயுடன் விழிப்பேன்

மனித உறவுகளுக்கு போலியாய் கால் பிளந்து கிடக்கின்றது
இறுதியாய் இயலாமையால் சுருண்டு விழுந்து
முயற்சியை தவறவிட்ட விட்டில் பூச்சிகளுடன்
நான் உறங்கிக் கொண்டிருக்கிறேன்

நீங்களும் நானும் வாழும் உலகம் ஒரு சாக்கடை
என்பதால்
கைகுலுக்கவும் காறி உமிழவும் பழகிக்கொள்வோம்
நாட்களின் சுழற்சியில் சேட்டைகளை காவிக்கொண்டு
ஓடித்திரியும் சாரைப்பாம்புகள் மட்டுந்தான் நாங்கள்
தொடர்ந்து வந்து
என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்
மறுபடியும் உங்களில்
ஒருத்தியாய் நான் புற்றுநோயுடன் விழிப்பேன்
அதுவரை
என் பிறப்பு நிகழாத ஒரு சம்பவமாய்
இருளுக்குள் புதைந்து போகட்டும்.



**பாமதி**

(19-02-2002)

# அவர்களின் பார்வையில். . .

அவர்களின் பார்வையில்...
நான் வெறுமையானவள்,
அவளுக்கென்று எதுவுமில்லை,
அவளுக்கென்று யாருமில்லை,
பலரின் கிசுகிசுப்புகள்...

சொத்து இல்லை
சுகம் இல்லை
சொந்தம் என்று சொல்ல
உறவு இல்லை
படிப்பு இல்லை
பட்டம் இல்லை

வாழ்வதற்கு அரசாங்க
உத்தியோகம் இல்லை
அழகு இல்லை
அந்தஸ்து இல்லை
திருமணம் செய்ய
வாய்ப்பு இல்லை
இப்படி பலப்பல...

இவர்களுக்கு எங்கு
புரியப்போகிறது
எனது ஆசைகள்,
நான் விரும்பும் சுதந்திரம்,
எனக்கென்ற சந்தோசம்,
என்னிடமுள்ள பலம்,
எனக்குள்ள நம்பிக்கை
இப்படி பல..
அவர்களின் பார்வையில்
பாவம் அவர்கள்.



அருட்கவிதா தேவநாயகம்

(2002)



சந்திரா இரவீந்திரன்

# பால்யம்
# பால்யம்
# பால்யம்

காற்றடித்தால் தலையை மட்டும் சிலுப்பி ஆரவாரம் பண்ணிவிட்டு அசையாமல் நிற்கும் போர்க்களத்து வீரனென... கோவிலின் தெற்கு வீதியையும் மேற்கு வீதியையும் இணைக்கும் அந்த மூலைப்பொட்டை உறுதிப்படுத்தும் சந்தியில் ஒரு பெரிய அரசமரம்! அருகே நீளமாய் ஆட்கள் அமர, செதுக்கப்பட்டதொரு பளிங்குக் கல்!

அண்ணார்ந்து பார்த்தால்... விண்ணையும் மண்ணையும் தனக்குள் அடக்கிவிடுகிற பிரமை தோன்றும்.

வெள்ளைப் புறாக்களும் கரிக் குருவிகளும் காகங்களும் இந்த விதானத்தினுள் புகுந்து காணாமல் போய்விடுவதைக் கண்டு அதிசயித்திருக்கிறேன். மலைப்பாம்புகளென நீண்டு வளைந்து சுருண்டு, புரண்டு பரவிக்கிடக்கும் அரசின் திரண்ட வேர்களில் கால்களைப் பதித்து தாவித்தாவி நடக்கத் தொடங்கினால் கிழக்கு நோக்கி நீள்வரிசையாக...ஆல், சீனிப்புளி, சஞ்சீவி, வேம்பு, செவ்வரளி, திருவாத்தி, பொன்னலரி... என்று எண்ணிக் கொண்டே போகலாம்.

வீதி எல்லையோடு முட்கம்பிகளின் சில முனைகள் மரங்களின் தடித்த தண்டுகளினுள் புதைந்து... நீளமாய் வரிச்சுக்கட்டி நகரும். அதனோடு ஒட்டியபடி ஒரு குச்சொழுங்கை வீடுகளோடும் பனம் வளவுகளோடும் நெளிந்து வளைந்து குன்றும் குழியுமாய் ஏறி இறங்கிச் செல்லும்.

கோவில் வீதி ஆலம்பழங்களோடு ஆட்டுப் புழுக்கைகளும் கலந்து சிதறிக் கிடக்க மிதிபட்ட புற்களோடு புழுதிபடிந்து கலக்க காற்றில் அசைந்தாடி வந்துவிழும் பழுத்த அரசிலைகளின் பட்டுவிரிப்பில் வழமையான ஊர்வாசனை பறைசாற்றப்பட்டுக் கொண்டிருக்கும்!

தரையில் பாதசாரிகளின் ஒற்றையடித் தடம் வகிடாய் நீண்டு செல்ல முருகன் வாசலைக் கடந்து, கிழக்குப்புற வீதிக்கு வளை-

கிற விரிப்பில் ஒரு கிணறு. அந்த இடம் மட்டும் இலுப்பமரங்களற்று
கோவில் வீதியையும் குச்சொழுங்கையையும் இணைக்கிற ஒரு, பரஸ்பர உறவில் திளைத்தபடி கிடக்கும்! வீதி வளைகிற மூலைப்பொட்டில் அது இருப்பதனாலோ என்னவோ அதனை 'சந்தியாங் கிணறு' என்றார்கள். எங்கிருந்தோ வரும் வெள்ள வாய்க்கால் ஒன்று குச்சொழுங்கையை குறுக்கறுத்து சந்தியாங்கிணற்று முடக்கைத் தொட்டபடி கோவிலின் கிழக்கு வீதிக்கு எல்லை போட்டுக் கொண்டு வடக்கு நோக்கி நகர்ந்து அன்னாமுன்னாப் பற்றைக்குள் புகுந்து காணாமற் போய்விடும். மழைக்காலங்களில் வழியவழிய ஓடுகிற வெள்ளம் ...வடக்கே இந்து சமுத்திரத்தில் போய் சங்கமிக்கிற ஓசை, ஏகாந்த வேளைகளில் இதமாய்க் கேட்கும்!

சந்தியாங் கிணற்றுப் பக்கம் செவ்வரளிப் பற்றைகளை உரசியபடி கீறிச்...கீறிச்... என்ற சீரான லயத்தோடு நீண்ட துலா எப்பவும் மேலும் கீழுமாய் மும்முரமாக விழுந்தெழும்பியபடி இருக்கும். துலாவில் தொங்கும் இரும்புச் சங்கிலியும் வாளியும் எந்நேரமும் தொணதொணத்தபடியே இருக்கும். கிணற்றடிக்குப் பக்கத்தில் தண்ணீர் ததும்பத் ததும்பக் கால்நடைத் தொட்டியொன்று. பக்கத்தில் ஒரு சாய்ப்புக் கற்றூண். ஆடுகள் நன்றாக முதுகு தேய்த்துவிட்டுப் போகும்.

என் துள்ளல் நடையை தூரத்தில் கண்டால் "விசாலி இங்கை வந்து முதுகு தேய்ச்சு விர்றியா" என்ற சீண்டல் குரல்கள் காற்றில் மிதந்து வரும். எந்நேரமும் பேச்சுக் குரல்கள், விசிலடிப்பு, சீட்டியொலி, சந்தனக்கட்டை உரசல், மஞ்சள் தோய்ப்பு, நாமக்கல் குழையல், சோப் வாசனை, தேவாரம், சினிமாப்பாடல், கவிதை வரிகள், பட்டிமன்றம்... என எப்பவுமே அங்கு பரபரப்பும் அமளியும்தான்!

இளவேனிற் காலங்களில் மாம்பூக்கள், பனம்பூக்கள் என்று தண்ணீரெங்கும் படரும் பூவாடை மஞ்சம்... நீரினுள் ஊறிக் கிளம்பும் வாசனை ஊர் மூச்சில் கலந்தபடியிருக்கும்.

கிழக்கு வீதிப் பிள்ளையார் கோவிலின் பிரதான முகப்பையும் கோபுரத்தையும் தரிசித்தபடி வடக்கில் அகலமாய் பரந்து விரியும் வடக்கு நோக்கி வளைகிற முனைப்பில் இன்னுமோர் கிணறு. இது கோவிலுக்கு மட்டுமே உரியதென பிரத்தியேக வரையறைகளுடன் அமைதியாக இருக்கும். கோவிலின் அசையாமணிக் கோபுரத்தைத் தொடுகிற மாதிரி சடைத்து நிற்கும் வெள்ளரச மரத்தின் கீழ் ஒரு வைரவ சூலம் பூவும் பொட்டுமாய் சிவப்பு சால்வை சுற்றியபடி மிடுக்காய் சாய்ந்து நிற்கும்.

நான் இவையெல்லாவற்றையும் கடந்து வடக்கே பரந்து விரியும் பசும் புல்வெளியில் தனிமையாய் ஏகாந்தத்தில் லயித்து நிற்பேன். வடக்கு வீதியின் வடக்கெல்லை முட்கம்பிகளாலும் கட்டைகளாலும் செவ்வரளிச் செடிகளாலும் கோடிமுழுக்கப்பட்டு அதற்கப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீண்ட நெடும் பனங்கூடல் விரியும்! காற்றில் தலைவிரித்தாடும் பனைமரங்கள் பின்னிப் பிணைந்தெழுப்பும் பேரொலி ஒருகணம் அண்டவெளியெங்கும் நிறைந்து ஆத்மாவை உசுப்பிவிட்டு மீளும்!. பனங்கூடல் மேற்காக நகர்ந்து, தார் வீதியுடன் சங்கமிக்கும் முனையில், ஒரு சிறிய கட்டிடம் தகரமடித்து மறைக்கப்பட்ட பாரிய இரட்டை இரும்புக் கதவுகளில் மாங்காய் பூட்டுத் தொங்க, காஞ்சுறண்டி, பாவட்டை, அன்னாமுன்னா, எருக்கலை என சடைத்த பற்றைகள் சூழ இலேசாய் ஒளிந்துகிடக்கும் அந்தக் கட்டிடம் அந்த ஊரின் கிராமசபைக்குரியது. கட்டிடத்தின் உயரத்திலுள்ள சிறிய ஜன்னலினூடாய் எட்டிப் பார்த்தால் உயிர் ஒருகணம் உறைவதுபோல் அதிர்வு கொள்ளும்! சவ வண்டிலின் நீண்ட கருப்புச் குஞ்சங்கள் இருளில் அசையாமல் தொங்கிக் கொண்டிருப்பதை மட்டும்தான் கண்கள் காணும் எனினும் உயிர்நாடியிலிருந்து உலக ஸ்தம்பிதம் வரைக்கும் அசுர வேகத்தில் கணக்குப் போடும் மனக்குதிரை உணர்விழந்து மறுகணமே மண்கவ்விவிடும்!

நான் அந்தக் கட்டிடத்தின் பக்கம் என் கண்கள் செல்வதை எப்பவும் தவிர்த்து வந்தேன்.

எவை நிஜமோ...எவை நிச்சயமோ... அவை எப்பவும் என்னுள் வெறுப்பையும் பயத்தையும் பிரசவிப்பனவாக தோன்றினவோ??

அழகான அந்த வடக்கு வீதியில் கோவில் சுவரோடு ஒட்டியபடி நீளமாக ஒரு பூங்கா. சுவர் நீளத்திற்கு வரிசையாக நிற்கும் சிவப்பு, மஞ்சள், வெள்ளை, அடுக்குச் செவ்வரத்தம் பூக்கள் சுவர்களைத் தாவி கோவிலிற்குள் எட்டிப்பார்த்துப் புன்னகைத்தபடியே இருக்கும். இன்னும் ரோஜா, திருவாத்தி, செந்தேமா, கொத்துமல்லிகை, முல்லை, துளசி, வாழை, செவ்விளநீர்த் தென்னை, திருநீற்றுப் பச்சை, இலுமிச்சை... என்று பூங்கா பசுமையில் நிறைந்து கிடக்கும். பூக்களின் வாசனைக் குழையல் வடக்கு வீதியை நிறைத்து அப்படியே கோவிலை வலம்வரும்.

யாருமற்ற தனிமையில் இதமான மாலைப்பொழுதில் பூங்காவை ஒட்டி இந்தப் புல்வெளியில் கால்களை நீட்டி நான் அமர்ந்துவிடுவேன். மேற்கில் தார்வீதியில் ஆளரவத்தின் பின்னணி. எதிரே பனங்கூடல் சலசலப்பு. வடக்கே தொலைவிலிருந்து அலையலையாய் வந்துவிழும் இந்து





சமுத்திரத்தின் பேரிரைச்சல்... என உலக ஓசைகள் என்னுள் பரவசத்தை ஏற்படுத்தும்! உடலெங்கும் அதனைப் பரவவிட்டு சிலகணங்கள் கண்களை இறுக மூடிக்கொள்வேன். இவற்றிற்குப் பின்னால் எங்கோ ஒளிந்து புதைந்து கிடக்குமோர் பேரமைதி மெல்லமெல்ல ஆத்மாவினுள் புகுந்து அண்டங்களிற்கப்பால் என்னை அழைத்துச் சென்றுவிடும்! இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே என் ஒற்றைப் பார்வைக்குள் அடங்கிக் கிடப்பதான அதிசய உணர்வில் சிலகணங்கள் மூழ்கிக் கிடப்பேன்!

விழிப்பில்... வானம் என்னருகில் வந்து நிற்கும்! மேற்கே தார்வீதிக்கு அப்பாலிருக்கும் வீட்டுக் கூரைகளிற்குப் பின்னால்... நழுவிச் செல்லும் சூரியக் கண்கள்... மயங்கிச் சொருகி... மறைகிற அந்தக் கருக்கலில், இரவும் பகலும் இரகசியமாய் சந்திக்குமந்த அபூர்வ கணங்களில் உயிரொலி கள் மெல்லமெல்ல அடங்கிவிடுகிற அந்த அமைதிப் பொழுதில் பிரபஞ்சத்தின் சூட்சுமம் வெகு அழகாய் என்னுள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்!

உயிர்ப்பை என்னுள் உணர்த்தும் இந்த சுகம் நீடிக்க ஆசைகொண்டு நீள்மை தெரியாமல் மிக நீண்ட நேரமாய் மேகத்தைக் கடந்து மிதந்து கொண்டிருப்பேன்!

பல தடவைகள் பத்மாவதி வந்து என்னை இறக்கி வைப்பாள்! இன்னோர் உலகில் தவறி விழுந்தவளாய் அதிர்ந்து விழிப்பேன்! திடும்மென்று சந்தடிகள் என் உணர்வுகளைச் சூழும். சாக்கடைகள் என் நினைவுகளை சிறைகொள்ளும். துடைத்தெறிய முடியாத அழுக்குகள் என் உடலில் புசுபுசுவென்று பரவி ஒட்டிக் கொள்ளும்! உதறி எறிய வேண்டுமென்கிற வெறி. எனினும் உதறத் தெரியாத பருவம்... உதறும் வலுவற்ற பலவீனம்! அருவருப்புகளை விழுங்கியபடி எழுந்து நடப்பேன். பத்மாவதிக்குப் பின்னால் வரிசையாக வந்து நிற்கும் அத்தனை பெண்களது குடங்களையும் தண்ணீரால் நிரப்பி விடுவேன். அவர்களது விழிகள் ஆயிரம் நன்றிகளை அள்ளித் தெளித்தபடி நகரும்!

அன்றும் அப்படித்தான் விண்ணும் மண்ணும் தண்ணென்ற காற்றும் சொல்லாத பல சேதிகளை சொல்லியபடியிருக்க அவள் வந்தாள்.

பத்மாவதி..!

வடக்கே பனந்தோப்பிற்கு அப்பாலுள்ள சீவல்தொழிலாளர்கள் வாழும் சிறு குடிசையொன்றிலிருந்து அவள் வந்தாள். எப்பவும் போலவே ஒரு வெள்ளிக் குடத்தை இடுப்பில் சுமந்து மேற்கு வீதிவழி வந்து சவவண்டிச்சாலை முடக்கில் இறங்கும் புற்களிடையாய் ஊரும் ஒற்றையடிப் பாதை வழியாய் நடந்து வந்து என்னருகில் தயங்கி நின்றாள். அழுக்கில்லாத அவளின் சட்டையில் ஆறேழு கிழிசல்கள்.

"எங்கையடி அந்தத் தோ...." பத்மாவதியின் அப்பா நிறைவெறியில் பிதற்றும் வார்த்தைகளை பனங்காற்று விழுங்கிவந்து எம் காதுகளில் விழுத்திக் கொண்டிருந்தது.

"வெட்டிப் போடுவன்! சொல்லிவை..."அவளின் தடித்த அண்ணன்களில் ஒருவனாக இருக்க வேண்டும். அவர்களுக்கென்றே எழுதிவைக்கப் பட்டிருப்பதுபோல் அந்த வெட்டுக் கொத்து வார்த்தைகளை வீசியெறிந்து கொண்டிருந்தான்.

இதனால்தான் அம்மாவும் பாட்டியும் என்னை இந்த வடக்கு வீதிக்குப் போகவேண்டாமென்று மந்திர உச்சாடனம் பண்ணுவார்களோ...? இந்த உச்சாடனம் தானே என்னை உத்வேகத்துடன் இங்கு வரவைப்பதுண்டு. இந்தப் பசும்புல்வெளிக்குள் அடங்கிக் கிடக்கும் முழுப் பிரபஞ்சத்தையுமே என்னைத் தரிசிக்க வைப்பதுண்டு.

நான் பத்மாவதியை நிமிர்ந்து பார்த்தேன். மறைந்துவிட்ட சூரியனின் மெல்லிய செம்பூச்சும் நிலவொளியும் தெருவிளக்கும் இணைய... அவளது கண்கள் மின்னிக் கொண்டிருந்தன. மறுகணமே பயமும் கூச்சமும் ஆட்கொள்ள... தலைகுனிந்தாள்.

“பத்மா...என்னைப் பார்... என்ன தண்ணி வேணுமா?” நான் பெரிய இளவரசிப் பாங்கில் அதட்டுகிறேன்.
அவள் “ஓம்” என்று தலையாட்டினாள்.
“ஏண்டி இப்ப பள்ளிக்கூடத்துக்கு வாறேல்லை?” தன்போக்கில் ஏறுமாறாய்க் கிடந்த என் சின்னப் பாவாடையை இழுத்துவிட்டுக் கொண்டு எழுந்தேன்.

“அம்மா படிப்புக் காணுமெண்டு மறிச்சிட்டா...”
அவள் எனக்குப் பின்னால் நடந்துகொண்டு வந்தாள். கள்ளும் கருவாட்டுப் பொரியலும் கலந்த வாடையொன்று வீசியது.

நான் கோவில் முகப்பிலிருந்த துலாக் கயிற்றை ஒரு எக்குப் பற்றுகிறேன். பற்றிய வேகத்திலேயே வாளி கிசுகிசுவென்று கிணற்றுக்குள் இறங்கியது. பத்மாவதி எல்லாம் மறந்து சிரித்தாள். சிரிப்பில் அவளது பால்யம் இழைந்து வழிந்தது.

“ஏண்டி சிரிக்கிறாய்”.
நான் தண்ணீரால் குடத்தை நிரம்பிக் கொண்டிருந்தேன்.
“இல்லை உந்தத் துள்ளல் இழுப்புக்கு ஒருநாளைக்கு துலாவோட நேரே உள்ளை போயிடுவாய்”. அவள் கண் வெட்டாமல் துலாக் கயிற்றையும் என்னையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள்.
துள்ளித்துள்ளி இறைத்துப் பார்க்க வேண்டுமென்று அவளுக்கும் கைகள் துருதுருப்பது போல் தோன்றியது. எனக்கொரு வேதனை கலந்த சுகம்! தலைகீழாய் நின்றாலும் அவள் அந்தக் கயிற்றைத் தொடமாட்டாள் என்று!

குடம் நிரம்பி வழிந்தது. அவள் குனிந்து தூக்கினாள். கிழிந்த சட்டையின் கழுத்து விளிம்பினால் மார்புகள் தெரிந்தன. எங்கள் வீட்டுக் கிணற்றடித் தென்னையில் கிடக்கும் மஞ்சள் குரும்பைகள் ஞாபகத்தில் வந்தன. நான் சிரித்தேன். அவள் அவசரமாய் குடத்தைத் தூக்கி இடுப்பில் தாங்கிக் கொண்டாள். அவளுக்கு வெட்கமாக இருந்ததை முகம் சொல்லியது.
நான் எட்டியெட்டி அவள் முகத்தைப் பார்த்தேன். இப்போ...பால்யம் கலைந்து... பரிதவிப்பொன்று அவள் கண்களிற்குள் நிறைந்து கொண்டது. இந்தப் பரிதவிப்பை இதே புல்வெளியில் நான் எப்பவோ பார்த்திருக்கிறேன்.
ஞாபகம் என்னை சம்மட்டியால் அடித்தது.
“பத்து... இப்பவும் அந்தப் பனந்தோப்புக்குள்ளை விறகு பொறுக்கப் போறனியே...?”
அவசரமாகக் கேட்டேன்.



“ஓம்! போகாட்டில்... அம்மா அடிப்பா. விறகில்லாட்டில் அப்பா அம்மாவை உதைப்பான். மாட்டனெண்டால் சொல்லுக் கேக்கேல்லை யெண்டு அண்ணன்கள் எல்லாம் மாறிமாறி குத்துவான்கள்” அவள் கூறியவாறே புல்வெளியூடாய் நகரும் ஒற்றையடிப் பாதை வழியே போய்க்கொண்டிருந்தாள்.
அவளின் தண்ணீர்க் குடத்தைப் போலவே குரலும் தழும்பிக் கொண்டு போனது.

நான் அவள் போவதையே பார்த்தபடி நின்றிருந்தேன். பால்யம் என்னிலிருந்து விலகியோடியது. பசுமை உணர்வுகள் கரைந்து போயின. இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே கருமை படிந்துபோனது!

பத்மாவதி விறகு பொறுக்கச் செல்லும் பனந்தோப்பிற்குள் ஒளிந்து கிடக்கும் பொத்தல் விழுந்த ஓலைக்கொட்டிலில் வேலனின் சீவற்கத்திகளும் கள்ளு முட்டிகளும் மட்டும் தான் இருக்குமென்பது ஊரறிந்த உண்மை. ஆனால் அதே கொட்டிலினுள் பத்மாவதி என்ற பன்னிரண்டு வயதுச் சிறுமியின் வாழ்க்கை நாளும் பொழுதும் சீவப்பட்டுக் கொண்டேயிருப்பது யாருக்குத் தெரியும்!!

தலைவிரித்தாடும் இந்தப் பனைகளுக்குத் தெரியுமா?
அலையெறிந்து மோதும் அந்தச் சமுத்திரத்திற்குத் தெரியுமா?
இந்தக் காற்றுக்குத் தெரியுமா? நட்சத்திரங்களிற்குத் தெரியுமா?
ஓடிக்கொண்டே திரியும் இந்த முகில்களுக்குத் தெரியுமா?

யாருக்குத் தெரியும்? அல்லது யாருக்குப் புரியும்??

பத்மாவதி சமைந்துபோனால் மட்டும் இந்த ஊருக்குத் தெரியும். சமைய முன்பே அவள் வாழ்வு கரைந்து கொண்டிருப்பது யாருக்குத் தெரியும்..

எனக்கு கண்கள் முட்டி வழிந்தன. பயம் உணர்வுகளை மேவி, உடலையும் பற்றிக் கொண்டது. என் சித்தப்பன் பெரியப்பனிலிருந்து கணக்குப் பாடம் சொல்லித்தரும் கமலநாதன் வாத்திவரை அத்தனை பேரின் விலங்கு முகங்களும் என் முன்னால் வந்து நின்று, கோமாளிக் கூத்தாடுவது போலிருந்தன. ஸ்பரிசம்...அணைப்பு...நசிப்பு..முத்தம்...பிடுங்கல்... ஓட்டம்... கலைப்பு... களைப்பு... பயம் இவையே பால்ய பருவத்தின் நிகழ்ச்சி அட்டவணைகளாய் நிர்ப்பந்தங்களாய்...

மூச்சுப் பெரிதாகி விம்மலெடுக்க நான் அப்படியே அழுதபடி நிற்கிறேன்.

“விசாலி...விசாலி! எங்கடி இவள் போயிட்டாள்? விசாலி..லி..லி “
பாட்டி கத்திக் கூப்பிட்டவாறே சேலைச் சுருக்கலைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு விறுவிறுவென்று வடக்கு வீதிக்கு வருகிறாள்.

“விசாலி உங்கை என்னடி செய்யிறாய். கடைக்கு வெத்திலை பாக்கு வாங்கவிட்டால் ஒருநாளும் நேரத்துக்கு வீடு வந்து சேரமாட்டாய். பங்கை கொம்மா வீட்டில கிடந்து கத்திறாள்”
பாட்டி என் கையைப் பிடித்து உலுப்பி இழுத்துக் கொண்டு போகிறாள்.

“என்னை விடு பாட்டி. நான் வரேல்லை”

“ஏண்டி. அங்கை கமலநாதன் வந்திருக்கிறான். இண்டைக்கு கணக்கு வகுப்பெல்லே. உதுக்குத்தான் அங்கை கொம்மா கத்திறாள். கணக்குப் படிக்கக் கள்ளமெண்டால் இந்தக் கருக்கலுக்கை வந்து வடக்கு வீதியில ஒளிச்சு நிற்கிறதாக்கும்”

பாட்டி வெற்றிலை பாக்கை என் பாவாடைப் பொக்கற்றிலிருந்து பிடுங்கி எடுத்துக்கொண்டு...

விறுவிறென்று என்னை இழுத்து... நடக்கிறாள்.

“பாட்டி, என்னை விடுபாட்டி. எனக்கு கணக்கும் வேண்டாம்; ஒண்டும் வேண்டாம் பாட்டி. என்னை விடு பாட்டி...”

என் கண்களிலிருந்து வழியும் கண்ணீர் காற்றில் சுழன்று மீண்டும் என் முகத்திற்கே விசிறியடிக்கிறது.

நான் வரமாட்டன்!

என் குளறல் காற்றில் கரைந்து பனந்தோப்பினூடாய் எங்கோ மறைந்து போய்க் கொண்டிருந்தது...!

✦



## தென்றல் ஒன்று பூகம்பமாய்

முலைக்குள்
முடங்கிக் கிடந்த
தென்றல் ஒன்று
இன்று
பூகம்பமாய்ப்
புறப்பட்டது

சோகத்தை சுமையாக்கி
சுகமிழந்த
தென்றல் ஒன்று
இன்று
பூகம்பமாய்
சுற்றத்தால்
சுரம் சேர்க்க வந்தவளை
சுடு நெருப்பில் தள்ளிவிட்ட
சுற்றத்தை நோக்கி
பாய்கிறது
அவள் பார்வை

சரமாரியாகப் பொழியும்
தோட்டாக்கள் போல்
பாயும் பார்வைகளை
நோக்கி பாடுகிறாள்
தன் சுதந்திரப் பாடலை

திசை எங்கும் தேசமெங்கும்
ஏன்?
மனிதகுலமெங்கும்
சஞ்சரிக்க
போர்க்கொடி சுமந்தாள்
தன்
உரிமை நோக்கி

அவள் விருப்பம்
அவள் கருத்து
அவள் முடிவு
எதிலும்
அவள் ஆதிக்கம்

ஆம்!
அவளேதான்
அன்று
அலைக்கழிக்கப்பட்டவள்
இன்று
பூகம்பமாய்
பூமியிலே!



**கி.கலைமகள்**

(2002)

## வெட்கம்

வெட்கம் வெட்கம் வெட்கம்
உரத்து ஒரு பெண் பேசினால்,
சிரித்தால்,
வெட்கக் கேடென்பார் ஆண்கள்.
புன்னகை சிந்தாவிட்டாலோ
கர்வம் அவளுக்கு என்பர்.
சுற்றம் திருப்திப்படவே அவள் வாழ்வு.

எதுசரி எது பிழை எனச் சொல்ல அவளுக்கு
இல்லை சுதந்திரம்.
அது வெட்கக்கேடாக்கப் பட்டுள்ளது.
அவளது விடுதலை ஒரு பொருட்டாகவில்லை.
எப்போதைக்குமாய்
அழகாய்த் தோன்றவும்
சமையலில் திறமை புரியவும்
வேண்டும் அவள்.

காதலில் வீழ்வதும் தன்விருப்பில் தெரிவுசெய்தலும்
வெட்கக்கேடுகள் தான்.
அழுத்தமும் குத்தல் பேச்சும்
இதற்காக அவளை வருத்தும்.

அவள் கீழ்ப்படிய வேண்டுமெனவும்
கொடுக்க வேண்டுமெனவும் கருதப்படுகிறது.
வாழ்வதாயின் அவள் அடிமையாக இருத்தல்வேண்டும்.

இதுதான் நிலையெனில்
இதை வெட்கக்கேடு என்பேன்.
பெண்ணாய் இருத்தல் வெட்கமா?
இல்லை
அது மனிதப் பிறவிகளாய்
இருக்கும் பெண்களிற்கெதிரான பாகுபாடு.

பெண் ஆணுக்கு
எவ்வகையிலும் சமன்
என்பதை கரிசனையுடன்
புரிந்து கொள்ளும் நேரமிது.
இல்லையெனில் இது பெரும் வெட்கம்
வெட்கம் வெட்கம் வெட்கம் என்பேன்.

## Shame

*Shame, shame, shame*
*They say it´s a shame*
*For a women to talk aloud*
*And laugh aloud*
*If she doesn´t smile, they say she is proud*
*She must always live to please the crowd*
*She is not free to say*
*What is right and what is wrong*
*It is suppossed to be shame !*
*Her freedom is always taken for a song !*
*She must always be good looking*
*And do best in cooking*
*Otherwise it is a shame !*
*It is also a shame to fall in love*
*Or to choose the way she likes*
*For these she suffers preasure and spikes*
*Chastity counts, she must obey and give*
*She must be a slave if she wants to live !*
*It is a shame I say*
*When things are this way*
*Is it a shame to be a women?*
*No, it is only discrimination*
*Against the women who is also human*
*It is time to pay heed with consideration*
*That woman is equal to man in every way*
*Othrwise it is an utter shame I´ve got to say !*

*Shame, shame, shame!*



**Mallika**
**மல்லிகா**
(2002)

# கருவேலமரமொன்று

காத்திருந்த வாழ்வது
கனிந்து வந்தது
காசுக்காகக் காத்திருந்தேன்
கரையும் வந்தது
இதயத்திற்காகக் காத்திருந்தேன்
இன்னமும் மீளவில்லை
இடுகுழியிலிருந்து

இலையும் பூவும் உதிர்த்தபடி
காதலுக்காய் காத்திருந்த
கண்ணிமணமாய்
கம்மாயுள் காய்ந்த
கருவேலமரமொன்று

பச்சை இதழ் விரியாது
பறவையின் கூடே இலைகளாய்
கைகூப்பி மொட்டுக்களாய்
கூட்டினுள் உள்ளே முட்டைகள்

வாசம்மிக்க வண்ண மலரில்லாது
நேசத்தோடு அலகு விரிக்கும் குஞ்சுகளே மலர்களாய்

இலையும் பூவும் வேண்டாத இலட்சிய மரமாய்
இதயம் மட்டுமே தேடியபடி

உதயம் தோறும் உணவுக்காக
உதடு பிளக்கும்
உன்னதக் குஞ்சுகளை
மலராய் தன் கூந்தலில் செருகியபடி

இனி காத்திருக்கப் போவதில்லை
இலையும் பூவும் தளிர்க்கச் செய்யும்
மழைக்காக
கனியும் விதையும் கொண்டு வரும்
வசந்தத்திற்காக



**திலகபாமா**

(2002)



இருபதாம் நூற்றாண்டு இலக்கிய விமர்சனத்தின் ஒரு போக்காக, பின் நவீனத்துவம் வளர்ந்து வருகின்றது. இதில் கட்டமைக்கப்பட்ட இலக்கியம், வரலாறு, கலை, பண்பாடு முதல-யின கட்டுடைக்கப்பட்டு விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இலக்கியத்தின் உற்பத்தி செய்யப்பட்ட அர்த்தங்கள் வாசிப்புக்கு வாசிப்பு வேறுபட்டு வருகின்றன.

# தலித்தியமும் தமிழ் இலக்கியமும்


பின்நவீனத்துவக் கோட்பாடு இலக்கியத்தை மற்றொரு பிரதி என்று கூறுகின்றது. இதுவரையில் கற்பிக்கப்பட்டு வந்த மதிப்பீடுகள் (values) உடைபடுகின்ற கலாச்சார மரபு பண்பாட்டு விழுமியங்களில் சிக்குண்டு நசுங்கவேண்டாம் என்று எதிர்க்குரலை முன்வைக்கின்ற புனிதம், உன்னதம் என்றெல்லாம் கற்பிதமாக சொல்லப்பட்டவை எல்லாம் பகுத்தறிவிற்கு உட்படுகின்றன.

பின்நவீனத்துவத்தில் மையப்படுத்திச் சொல்லப்படுபவை என்று எதுவும் கிடையாது. அடிக் கட்டுமானத்தைத் தகர்ப்பதற்கு, அதாவது கலாச்சாரம் மற்றும் சமூகத்தின் மீது கட்டப்பட்டுள்ள உறவுகளைக் கேள்விக்கு உட்படுத்துவது கலாச்சாரத்தைத் தொடர்ந்து எழுதவும் பேசவும் சிந்திக்கவும் முயற்சி செய்யும் போது ஒன்றன் தொடர்ச்சியாக மற்றொன்று விரிதலும், எழுதிய பிரதியின் அர்த்தம் தொடர்ந்து வாசிப்போரைப் பொறுத்து மாறுவதும், புதிதாய் அர்த்தக் களத்தை உற்பத்தி செய்வதும் இதன் மற்றொரு பரிமாணமாகக் கொள்ளலாம்.

இதன்மூலம் தந்தையாதிக்கக் கலாச்சாரக் கட்டமைப்பு கட்டுடைக்கப்படலாம். லிங்கமைய வாதம் தகர்க்கப்படலாம். மத, சாதிய பண்பாட்டு விழுமியங்கள் உடைக்கப்படலாம். குறிப்பாக, எல்லாவற்றிலிருந்தும் விடுபடவும், சுயத்தை அறிந்து கொள்ளவும் சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தலாம். உலகளாவிய நோக்கில் மனித இருத்தலை, ஒட்டுமொத்த அடிமைத்தனத்தையும் சிந்திக்கப் பின்நவீனத்துவம் பயன்படுகின்றது.

தத்துவத்தை உள்ளடக்கியும், தீர்மானங்களை வரையறுத்துக் கொண்டும் பேசப்படாமல் இயல்பான போக்கில் அணுகுவதைப் பின்நவீனத்துவம் முன்வைக்கின்றது. தத்துவத்தின் நெறிகளிலிருந்து சிந்திக்கும்போது அது ஒருசார் மக்களின் ஆதிக்க அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. காலந்தோறும் கற்பிக்கப்பட்டுவரும் வருண அமைப்பின் அதிகார வர்க்கங்களின் திணிக்கப்பட்ட சடங்குகள் அடிமை நிலையில் உள்ள மக்களை எவ்வாறு ஒதுக்குகின்றன என்பதைப் பின்நவீனத்துவம் நினைத்துப் பார்க்க உதவுகின்றது. எவற்றின் மீதெல்லாம் நம்பிக்கை கட்டப்பட்டிருந்ததோ அவற்றின் மீதெல்லாம் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தும் சூழல் உருவாயிற்று. ஏனென்றால் நம்பிக்கையின்மை என்பது மனிதத்துவம் தகர்ந்தது என்பதோடு இணைகிறது. இலக்கியத்திலும் இது பிரதிபலிக்கத் தொடங்கியது. இலக்கியத்தில் ரசனை உள்ளிட்ட தரமான விமர்சனப்போக்கு ஒரு காலகட்டத்தில் பேசப்பட்டது. இலக்கியம், அழகியல்/செவ்வியல் சார்ந்ததாக இருக்கவேண்டும்; இலக்கியத்தின் மூலம் அறிவைத்தேடும் முயற்சி தொடரவேண்டும் என்று குரல் ஒலித்துவந்த நிலை மாறி, இலக்கியத்தின் மூலமாக அறிவைத் தேடும் முயற்சி தேவையில்லை என்றாகியது. இந்த வகையில் இலக்கியம் என்பது என்ன? என்று பார்த்து வந்த பார்வையிலிருந்து ஒரு மாற்றுப்பார்வையும் இலக்கியச் செல்நெறியால், இலக்கிய விமர்சனச் செல்நெறியால் புதிய சிந்தனைகள் அறிமுகமாகியுள்ளன. உலகளாவிய ரீதியில் பன்முகப்பட்ட துறைசார்ந்த சிந்தனைகள் தமிழில் உயிர்பெற்றுள்ளன. இதன் விளைவாக தமிழ் இலக்கியத்தில் புதிய சிந்தனைகள் இலக்கியமாக்கப்படுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் மேலை நாட்டினரால் பேசப்பட்ட அமைப்பியலும், பின் அமைப்பியல், பின்நவீனத்துவம், நவீனத்துவம், பெண்ணியம், தலித்தியம் என இலக்கியத்தில் புதுச் சிந்தனைகள் விரிந்தன. குறிப்பாக, பின்நவீனத்துவத்தின் வருகை வாசிப்பாளர்களை ஒதுங்கச் செய்தது. சில-ரை கூர்மையாகச் சிந்திக்க செய்தது. இதன் வெளிப்பாடுதான் தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய எழுத்துக்களைப் பதிவு செய்வதும் விமர்சிப்பதும் வளர்ந்தது



சங்க இலக்கியத்தில் தலித் மக்கள் என்று வழங்கப்படக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களை ‘இழிசனர்’ என்ற சொல்லால் அழைக்கப்பட்டிருப் பதைக் காணமுடிகின்றது. பாணனை பொய்யன், புலையன் என்றும் பரத்தைக்கு ஆண்களைப் பிடிக்க உதவும் தூண்டில் என்றும் ஒரு மனைவியை ஏசியதாக கலித்தொகை (85) குறிப்பிடுகின்றது. கூத்தர், கோடியர் ஆகியோரைப் பற்றியும் குறுந்தொகை 7,8,360 பாடல்கள் விளக்கமாகத் தருகின்றன. புலையர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணமுடிகின்றது. ‘புலை’ என்ற சொல் புல் என்ற அடியில் தோன்றி ‘புன்மை’, ’இழிவு’ ஆகிய அர்த்தங்களை கொடுத்தது. இதேபோல ‘இழிசனன்’, ‘இழிபிறப்பாளன்’ என்ற சொற்கள் மன-ிதருள் ஒரு பிரிவினரை பிறப்பை வைத்தும் அதன் காரண-மாகச் செய்யும் தொழிலை வைத்தும் இழிவைச் சுட்டுவதற்குப் பயன்பட்டன (ராஜ்கௌதமன், தலித்பார்வையில் தமிழ்பண்பாடு எ 64)

இதுபோன்று சங்க இலக்கியத்தில் வழங்கப்பட்ட சொற்களின் பிண்ணனியில் உள்ள வாழ்க்கைப் பின்புலத்தை எண்ணிப் பார்க்கும் போது அவர்கள் இழிந்த தொழில் செய்து வந்துள்ளனர் என்றும், தீட்டுப்பட்டவர்கள் என்றும், அசுத்தமாக வாழ்ந்தவர்கள் என்றும் பார்பன வேத வைதீக நெறிகளிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சைவ மதத்திற்குப் பெருமை சேர்த்த நந்தனார் சரித்திரம், வைணவத்தின் சிறப்புக்குப் பாணாழ்வாரின் பாசுரங்கள் மிகுந்த இலக்கிய வரலாற்றுப் புகழ் பெற்றிருந்த போதிலும் தாழ்த்தப்பட்டவர்கள் பாரம்பரியத்தினர் மேற்குறிப்பிட்ட இருவரும் என்பதாலேயே பக்தி இலக்கியம் அவர்களைப் பதிவு செய்திருக்கிறது.

எனினும் அடிமை நிலையிலும், விளிம்புநிலையிலும் உள்ள மக்கள் பற்றிய வாழ்வியலும் ஆய்வுகளும் பற்றிய பயில்வுகள் தமிழில் விரிவாகப் பேசப்பட்டு வருகின்றன. அழகியல் அல்லாதன என்று ஒதுக்கப்பட்டவை தலித் அரசியல், தலித் பண்பாடு கலை வரலாறு தலித் படைப்புகளாக, தலித் இலக்கியமாக வேர் கொள்ளத் தொடங்கின.

## தலித் படைப்பாளர்கள்:

தலித் அல்லாத பூமணி, டானியல் மற்றும் தலித்துகளான சிவகாமி, பாமா, இமையம், தருமன், விழி.பா,இதயவேந்தன், அழகியபெரியவன் ஆகியோர் சிறுகதை, புதினம் ஆகியன எழுதுவதில் சிறப்பிடம் பெறுகின்றனர். ப்ரதீபா ஜெயச்சந்திரன், கபிலன், ராஜமுருகுபாண்டியன், மீனாமயில் ஆகி-யோர் கவிதைத் துறையில் தலித்துகளின் வாழ்வியலைப் பதிவு செய்துள்ளனர். கே.ஏ.குணசேகரன் நாடகத்துறையில் சிறப்பிடம் பெறுகின்றார்.



ரவிக்குமார், ராஜ்கௌதமன் ஆகியோர் தலித் வரலாறு, தலித் பண்பாடு பற்றிய சிறப்பு ஆய்வுகளை முன்வைக்கும் முன்னோடிகளாக ஆய்வைத் தொடர்கின்றனர். பொருளாதாரச் சிந்தனையில் டாக்டர் செல்வநாதன் முன்னாள் பதிவாளர், தலித் சமுதாயச் சிந்தனையாளராக கோ.கேசவனும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய அரசியல் பற்றி டாக்டர் அம்பேத்கார் ஆய்வும், தலித்துகளின் எழுச்சிக்குப் பறையடிப்பன. தலித் மதவாதி அசாரியா, அரசியல்வாதி டாக்டர் கிருஸ்ணசாமி மற்றும் திருமாவளவன் ஆகியோர் தலித் சிந்தனைவாதிகளாக வளர்ந்து வருகிறா-ர்கள்.

## தலித் மக்களின் வாழ்வியற் பதிவுகள்:



அந்தண, வைசிய, ஷத்ரிய குடியிருப்புகளுக் குப் பிறகு ஓர் ஒதுக்குப்புறத்தில் சூத்திரர்கள் என்று சொல்லப்படக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். விவசாயம், பறையடித்தல், தோல் பதனிடுதல் முதலியன அடிப்படைத் தொழிலாகக் கருதப்படுகின்றன. பள்ளர், பறையர் முதலியோர் விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப் பட்டு அதன் மூலம் தங்கள் வாழ்க்கையைச் செழுமைப்படுத்திக் கொண்ட மேட்டுக்குடிகள். பள்ளன், பறையர் கருத்தமேனியுடையார் என்ப தாலேயே அவர் களைத் தீண்டத்தகாதவ ராக்கினர். ஏனென்றால் ‘கறுப்பு’ இழிந்த நிறமாகக் கருதப்படுகிறது. இது தொடர்பான செய்திகளின் வரலாற்றைச் சங்க இலக்கியப் பின்புலத்திலிருந்து உ



## உணவு முறை

உணவு முறை பற்றிக் குறிப்பிடும் போது வயலில் வாழும் நண்டு, நத்தை, ஆற்றில் வாழும் மீன், ஆடு, மாடு போன்றவற்றின் இறைச்சியை உணவாகக் கொள்வர் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அண்மையில் சி-னிமாவில் ஒலிபரப்பட்ட ‘உப்புக்கருவாடு, ஊறவச்ச சோறு ஊத்திக்கொடு நீ கொஞ்சம் எனக்கு’ என்ற பாடலும், ‘ஊத்திக் கினு கடிச்சிக்கவா கடிச்சிக்கினு ஊத்திக்கவா’ என்ற பாடலும் சேரிப்புறங்களில் வாழும் மக்க ளின் உணவுப்பழக்கத்தைக் கொச்சைப்படுத்திப் பா-டியதுவரை எண்ணிப்பார்க்கும்போது தாழ்த்தப் பட்ட மக்கள் மீதான தவறான பார்வையைச் சிந்திக்க வேண்டியதாகிறது.

## இறை வழிபாடு:

தாழ்த்தப்பட்டவர்களின் இறை வழிப்பாட்டு முறைமையில் கூட பாஞ்சாலி அம்மன், மாகாளி, பத்ரகாளி அம்மன், பேச்சியம்மன், முணியாண்டி, கருப்பசாமி, எல்லைப்பிடாரி போன்ற சிறுதெய்வ வழிபாடுதான் பின்பற்றப்பட்டு வருகின்றது. காரணம் வழக்காற்றிலும், பண்பாட்டிலும் வழங்கிவரும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் தொன்மங்களாகக் கருதப்பட்டுவருகின்றன. உதாரணம், மதநம்பிக்கையும், தெய்வ வழிபாட்டையும் பொருத்தவரையில் ‘கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்ற பழமொழியைச் சுட்டலாம். கிராமப்புறங்களைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்கள் சாதியக் கொடுமையாலும், தற்கொலை செய்து கொள்வதாலும், நிறைமாதக் கர்ப்பிணி குழந்தைப் பேற்றின் போது இறந்துபோக நேர்ந்தாலும் அவர்கள் தெய்வமாக்கப்பட்டனர்.

நிறைமாதக் கர்ப்பிணி இறந்துபோகும் போது சுமைதாங்கி நடுதல், கிராம எல்லைப்புறங்களில் அம்மன் சிலை அமைத்து வழிபடுதல், வேப்பமரம், அரசமரம் இருக்கும் பகுதிகளில் ஒரு கல்லுக்குக் குங்குமம், மஞ்சள், பூ இட்டு தெய்வமாகக் கருதி வழிபடுதல் முதலியன தாழ்த்தப்பட்டவர்களின் தெய்வ நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றன. சமய பழமரபுக் கதைகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் கொலை செய்யப்பட்டிருந்தால் அவர்கள் தெய்வமாக்கப்பட்ட வரலாறு காணமுடிகின்றது என்று ஆ.சிவசுப்பிரமணியன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

குறி சொல்லுதல் மரபு கூட தாழ்த்தப்பட்ட மக்களிடம் தான் பழக்கமாக இருந்திருக்கிறது. குறி சொல்லுபவர்களுக்கு சூடம், சாம்பிராணி காட்டி அவர்களை அதீத நிலைக்குக் கொண்டு செல்லுகின்றனர். மேளங்கள் ஓசை கேட்டவுடன், தன் சுயநினைவு மறந்து ஆடிக்கொண்டே குறி சொல்ல முயலுகின்றனர். இது தாழ்த்தப்பட்ட மக்களின் வழக்கமாக இன்னும் தொடர்கிறது. இது குறித்த யதார்த்தப் பார்வையைப் பறைசாற்றும் அபிமானி கவிதையை இங்கு சுட்டலாம்.

## ஆட்டம்

பம்பை முழக்கிய
ஓசைத் துகள்களில்
கொண்டைப் பரத்தி
ஆடும்
பேச்சியம்மையின் கடைவாய்ப் பற்களில்
பசியின் காய்ப்பு
குரல் கொடுக்கக்கூட
அவளுக்கு ஏலவில்லை
ஆவேசம் தணிகிறது
ஆழமாய் நெஞ்சுக்குள்ளே!

தென்னம்பூக் குலையும்
வேப்பிலைக் கொத்தும்
அவள் முகத்திலறைந்து
தம் இதழ்களை
இழக்கும்.!

புரண்டத் தரையின்
புழுதிப் பறந்து
அண்டைச் சனங்களின்
அவயங்களை நிறைக்கிறது
அடர்த்தி அடர்த்தியாய்
வரம் கேட்டுவரிசையாய்ச் சிதறிடிப்போர்
ஆட்ட மூர்க்கத்தை
முன்னின்று தரிசிக்க
முண்டியடிப்போர்
யாரங்கே...

எந்த சாமியையாவது
வரச்சொல்லுங்கள்
பேச்சியம்மையின்
இடுப்புச் சேலை
கழன்று கிடக்கிறது
அவளின் காலடியில்

-(கலை, தூரிகை -3 அக்: 2001)

இந்த யதார்த்தச் சூழல் தாழ்த்தப்பட்ட மக்களின் அறியாமையின் வெளிப்பாடு என்பதை மறுத்தற்கில்லை. அமுக்கப்பட்ட மனஉணர்வுகளின் வடிகால் குறிசொல்லலாகப் புறப்படுகிறது. இதையெல்லாம் அடக்கி ஒடுக்க, பார்ப்பன வைதீக மரபினர் தங்கள் மீது கவனம் சொலுத்தவேண்டும் என்பதில் மிக சாதுரியத்தோடு சமஸ்கிருதமயத்தை அறிமுகம் செய்கின்றனர். இதன் விளைவாக, வேதங்கள் படிக்க வேண்டும்; அந்தணனாக இருக்க சில தகுதிகள் வேண்டும். இறைவனுக்குத் தொண்டு செய்யும் தகுதி சமஸ்கிருதம் படித்தவர்களுக்குத்தான் என்றெல்லாம் விதிமுறைகளை உருவாக்கி சமஸ்கிருத மயமாக்கலை அறிமுகமாக்கினர்.



இதற்குச் சான்றாக,

வெந்தநீறருங்கலம் விரதிகட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆரங்கம்
திங்களுக் கருங்கலம் திகழும் நீள்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே

என்ற பாட்டில் அந்தணன் என்று சொல்லக்கூடியவன்,
வியாகரணம் - இலக்கணம்
சிட்ஷை - கற்பித்தல்
சந்ததம் - வழித்தோன்றல்
நிருத்தம் - நடனம்
கற்பம் - திருநீறு

சோதிடம் ஆகிய ஆறும் முறையாகக் கற்றவனே அந்தணனாகிறான். வேதம் ஓதும் திறன் பெற்றவனாகிறான். இது தெரியாதவன் அந்தணனாக இருக்கமுடியாது. அசுத்தன் தீண்டத்தகாதவன், கோயிலுக்குள் நுழையக் கூடாதவன் என்று அந்தணனுக்கும் சூத்திரனுக்கும் இடையே சுத்தம்xஅசுத்தம், புனிதம்xதீட்டு, உயர்கடவுள்xதாழ்கடவுள் என்ற எதிர்வை வைதீக முறைப்படி மடைமாற்று செய்திருப்பதை எண்ணிப் பார்க்கும் போது இந்த மண்ணின் மைந்தர்களின் புறவாழ்நிலையை நன்கு உணர்ந்த வைதீக மரபினர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே தாழ்த்தப்பட்டவர்களைத் தொழில் அடிப்படையில் இழிசனராகக் கருதினர்.

**பள்ளத்தில் பணிபரியும் பள்ளர், இறந்தவர்க்கு பறையடிக்கும் பறையன், அறுந்துபோன செருப்பைத் தைக்கும் சக்கிலியன் வரை வைதீக சமூக மனவெளியில் நசுக்கப்பட்டவர்கள்: உடல் எலும்புகள் நுறக்கப்பட்டவர்கள். உழைப்பின் சக்கையாக வாழ்ந்துவரும் அவலநிலையில் பார்ப்பன, வேளாள உயர்மடைமாற்று பிரதிபலிக்கும் படைப்புக்களிலிருந்து மாறுபட்டதாக, சமூக,அரசு ஒடுக்குமுறைக்கு எதிரான கலகத்தை, கலக்குரலை முன்னெடுக்கும் தலித் அழகியலை படைப்பாக்கும் முயற்சியில் தலித் படைப்பாளிகள் ஈடுபட்டுள்ளனர்.**

**அரங்கமல்லிகா**



## தலித் படைப்புகளும் தமிழ் இலக்கியமும்

மேற்குறிப்பிட்டவற்றின் அடிப்படையில் ஒதுக்கப் பட்டிருக்கும் தலித்துக்கள் தங்கள் தன்னிலைகளை, அடையாளங்களை மீட்டெடுக்கும் பணியில் தலித் அரசியலைச் சிந்திக்கத் தொடங்கினர். காலமும், சூழலும் தலித்துகளின் வாழ்நிலைகளுக்கான விடைகளை நோக்கமாக முன்வைக்கிறது. இச் சூழலில் தலித்துகளின் உள, சமூக இருத்தலை முழுமையாக வெளிப்படுத்தும் பணி, தலித் பெண்களிடமே காண வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஏனென்றால் சமஸ்கிருத மய சனாதனத்திற்கு மிகப்பெரிய பாரம்பரியம் இருந்துவரும் சூழலில் இதை உடைக்கும் பெரும் பொறுப்பு தலித்துகளுக்கே தலித் பெண்களுக்கே உண்டு.

இவ்விடத்தில் கருப்பர் பெண்ணியத்தின் அவசியத்தைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. ஏனென்றால் வெள்ளை இனத்த வருக்கான எதிரியாக கறுப்பர் இனத்தவர் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றார்களோ அதே தளத்தில் தான் தலித்பெண்ணின் ஒடுக்குமுறையும் பேச வேண்டியதாகிறது. சமூக விடுதலைக்கு தலித் விடுதலை சாத்தியமாக்கப்படவேண்டும். இதைக் கலகக் குரலாக தலித் படைப்புக்கள் முன்வைக்கின்றன.

தலித் படைப்பாளர்கள் தலித்துகளின் வாழ்நிலையை, களத்தைப் படைப்பவர்கள் தலித்துகளாக வாழும் தன்னிலைகளையும் அவர்களது புறச் சூழல்களையும் பதிவு செய்து வருகின்றனர். தலித்துகள் தங்களுக்கான தன்னிலையற்றவர்களாக, வைதிக மரபினரின் வாழ்நிலை எச்சமாக வாழ்பவர்கள் என்பதை தலித் படைப்புக்கள் எடுத்துக் காட்டுகின்றன. பள்ளத்தில் பணிபரியும் பள்ளர், இறந்தவர்க்கு பறையடிக்கும் பறையன், அறுந்துபோன செருப்பைத் தைக்கும சக்கிலியன் வரை வைதீக சமூக மனவெளியில் நசுக்கப்பட்டவர்கள்: உடல் எலும்புகள் துறக்கப்பட்டவர்கள். உழைப்பின் சக்கையாக வாழ்ந்துவரும் அவலநிலையில் பார்ப்பன, வேளாள உயர்மடைமாற்று பிரதி பலிக்கும் படைப்புக்களிலிருந்து மாறுபட்டதாக, சமூக,அரசு ஒடுக்குமுறைக்கு எதிரான கலகத்தை கலக்குரலை முன்னெடுக்கும் தலித் அழகியலை படைப்பாக்கும் முயற்சியில் சிவகாமி, பாமா, தருமன், இமையம், அழகிய பொ-ியவன், விழி.பா.இதயவேந்தன் இன்னும் பலர் முயன்று வருகின்றனர்.

சிவகாமியின் பழையன கழிதல், ஆனந்தாயி, மற்றும் குறுக்குவெட்டு ஆகிய படைப்புக்களில் தலித்மக்களின் பின்புலம் காட்சிப்படுத்தப் படுவதோடு ஆணாதிக்க, தலித் ஆணாதிக்கப் பண்பாடுகளும் சிதைவுபடுத்தப்படுகின்றன.

பாமாவின் கருக்கு, சங்கதி புதினங்களில் ஒட்டுமொத்த இந்து சமூக மனவெளியின் குரூரங்கள் கருக்காக்கப்பட்டுள்ளன. இமையம் புதினங்களில் ‘கோவேறுகழுதைகள்’ புதினம் உள்சாதிக்குள் மேல்xகீழ் முரணைப் பேசுகிறது. இதில் வாழ்வின் கசிவு மனதில் இரத்தக்கசிவை ஏற்படுத்துகிறது என்றாலும் ஒரு தாழ்த்தப்பட்ட பறை சாதியினருக்கும் வண்ணார சாதியினருக்கும் இடையேயும் அதிகார ஒழுங்கு சாதி மேலமைப்பு ஆதிக்கமாக இருப்பதை உணரமுடிகிறது.

இது ஆசிரியரின் ஆழ்நிலை மனதின் பதிவாக இருக்கிறதோ என்ற ஐயத்தை எழுப்புகிறது. இருந்த போதிலும் தலித் ஊடல், கலை, உழைப்பு வைதீக மரபினரை பயமுறுத்தக் கூடிய உழைப்பாக மாற்ற அதிகாரத்தைக் கட்டுடைக்க வேண்டிய தேவை தலித் படைப்புக்கள் தீவிரமுனைப்புடன் வெளிவந்துகொண்டிருக்கும் நேரத்தில் ‘கோவேறு கழுதைகள்’ புதினம் புதினத்திற்கான அனைத்துச் சிறப்புகளைப் பெற்றிருந்தாலும் தலித் சாதிக்குள் ஒரு மேலாண்மை நிறுவும் போக்கு தேவையற்றது ஆகிறது.

விழி.பா இதயவேந்தன் மற்றும் அழகிய பெரியவன் படைப்புக்களில் தலித்துகளின் அன்றாட வாழ்க்கைப் போராட்டம் மற்றும் தலைமுறையை முன்னேற்றுவதில் தங்களைக் கரைத்துக் கொள்ளும் அவலம் மிக யதார்த்தமாக படைப்பாகி இருப்பது வரவேற்கத்தக்கது. குறிப்பாக, அழகியபெரியவனின் ‘தீட்டு‘ சிறுகதை தலித்பெண் இளம்விதவையாக நேர்ந்ததால் காவல்துறையும், ஆண் சமூகமும் எவ்வாறு அவளை மனச்சிதைவுக்கு உள்ளாக்குகிறது என்பது படைப்பாகி இருக்கிறது. விழி.பா இதயவேந்தன் சிறுகதைகள் பலவும் தலித்துகளின் வறுமையும் வாழிடமும் படிப்பவரின் மனதைப் பிழிவதாய் எழுதப்பட்டிருக்கிறது.

ஆண்படைப்பாளர்கள் பார்வையில் தலித் சமூகம் பார்க்கப்பட்டிருப்பதைக் காட்டிலும், பெண்படைப்பாளர்களின் பார்வையில் வீச்சு அதிகமாக உள்ளது. குறிப்பாக பாமாவின் கருக்கு மற்றும் சங்கதி. தலித் பெண்ணியத்தின் தேவையை முன்வைக்கிறது. பெண்களின் அமுக்கப்பட்ட பாலியல் உணர்வுகள், உளச் சிதைவு, தலித் பெண்கள் இறந்தபிறகு பேயாகத் திரிந்து மக்களைப் பயமுறுத்துவதாகச் சொல்லப் படுகிறது. அழுத்தப்பட்ட மற்றும் அமுக்கப்பட்ட சாதியக்கட்டுகள் மற்றும் தலித் பெண்கள் மீது திணிக்கப்படும் பாலியல் வல்லுறவுகள் யாவும் ஆழ்மனநிலையிலிருந்து இயல்பாய் வெளிப்படுத்த படைப்புக் களன் பயன்படுகிறது. இது பாமாவிடம் அதிகம் காணமுடிகிறது. சனாதன, சமஸ்கிருதமயக் கட்டுகளில் அழுந்தி வாழும் தலித்துகள் தங்களை இயல்பாய் உடைத்துக் கொள்பவர்களாக அடையாளம் காணமுடிகிறது. அதனால்தான் எவையெல்லாம் மரபுகள் பண்பாடுகள் விழுமியங்கள் என்று கற்பிக்கப்பட்டனவோ அவற்றை மீறி புரண்ட தலைமுடியால் புழுதியைக் கிளப்ப முடிகிறது, மார்புச் சேலை அவிழ்ந்து மண்ணில் விழுவது தெரியாது மயங்க முடிகிறது, பசியும் ஆவேசமும் குறிசொல்லுதல் மூலம் வேப்பிலை கொண்டு தணித்துக் கொள்ளப்படுகிறது. அமுக்கப்பட்ட பாலியல் உணர்வுகளை சாமியாடுதல் மூலம் வெளிக்கொண்டு வர முடிகிறது.

தலித்துகளின் படைப்புக்களில் காணப்படும் சிந்தனைகள்

- அழகியல் செவ்வியல் மாற்றம் பெறுகின்றன.
- தலித் உடல், உழைப்பு காட்சிப் படுத்தப்படுகின்றன.
- சனாதனக் கட்டுகளை உடைக்கும் எழுத்துகள் முன்வைக்கப்படுகின்றன.
- தலித்துகளின் இருள்வெளி பேசப்படுகின்றன.
- பால் அடையளங்களை, பாலியல் உறவுகளை முன்வைக்கும் முயற்சி தொடர்கின்றன
- தலித் பெண்களின் அமுக்கப்பட்ட பாலியல் உணர்வுகள் பெண் எழுத்துக்களில் வீச்சாகின்றன. தலித் பெண் அனுபவங்கள் தலித் பெண்ணிய வரைவை முன்னெடுக்க உதவுகின்றன.
- தலித் அரசியலை கையில் எடுக்க வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன.

எனவே தலித்துகள் அதிகார அமைப்பிற்குள் இருந்து செயல்படுவதிலிருந்து மாறி தமது வரலாற்றை தலித் கலக வரலாறாக மாற்றும் முயற்சியில் தலித் பெண்ணியத்தின் வரலாற்றை எழுதும் பல்வேறு சாத்தியப்பாடுகளை முன்வைத்து தலித் இலக்கியம், தலித் பெண்ணியம் ~~வளரவேண்டிய தேவையை தமிழ் இலக்கியம் வரைந்து கொள்ளும்.~~



**யுத்தத்தின் அகதிப் பிரசவிப்பு**
**பெண்களும் குழந்தைகளுமாய்...**

# எனக்கான தேடலில்.

1

அந்த பரந்தவெளி
எத்தனை இன்பமானது.
என் இஸ்டப்படி
மகிழவும் ஆடவும்
அடம்பிடித்து அழவும்
எடுத்தெறியவும்
தடைசொல்ல
யாரும் இல்லை.
ஆண்டுகள் என்னை எண்ண
பெரிய மனிசியாய்.
ஆனாலும் நிறைய ஏதோ
தொலைத்துவிட்டதாய்.
சுற்றிவர பல கரங்கள்
என்னை அழுத்துவதாய்.
முள்நிறைந்த
கல்நிறைந்த
சில ஆறறிவு நிறைந்த
யந்துக்கள்
வாழும்போதே அந்த
பரந்த என் சந்தோச வெளியில்
வாழ்வது தெரியாமல்
தப்பியோட உணர்வு உந்த
ஓ கால்கள் வலித்தது
பாதம் எங்கும் நெருஞ்சி முள்
சேறு சகதி
என்னைப்பார்த்து
முகம்நீட்டும்
கோரப் பற்கள்
நில ஆறறிவு நிறைந்த
ஜந்துக்களின்
முனகல்கள்.
முன்னேறுகிறேன்
மனதும் உணர்வும்
விடுதலை பெற்ற
உணர்வு.
அதிலேயே இருந்து
நிறைய அழுது தீர்க்கிறேன்.
இதயத்தில் வடிந்த குருதியின்
நிண நாற்றம் கழுவுப்படுவதாய்.
நிறைய அழுகிறேன்.



மனசு இலேசாக
மீண்டும் புதுமனிசியாய்
அந்தப் பரந்தவெளி வாழ்வை
போல் அல்லாது
எனக்கான தனி உலகமாய்.
நாளை பலர் இந்த
பண்படுத்தப்பட்ட
தரையில் தம்மையும்
பதியமிட வரலாம்.

2

பதியமிடப்பட்ட பாத்தி
நீண்ட தொடராய்
போகும் பாதை
முடிவுமட்டும் தெரியாமல்
கடந்த கால அழுத்தங்களை
அசைபோட்டபடி
பதியம் அசையாமல்
உறுதியாய்
வழிநடப்பது மனச்சாட்சி
கை கலக்கும் சருகுகள்
சிலிர்த்து நிற்கும் பூக்கள்
ரீங்காரம் இடும் வண்டின் ஓசை
ஆங்காங்கே எரியூட்டும்
சூரியனின் வெப்பத்தை விழுங்கி
எனக்கு சுகம் தரும் மர நிழல்
சுகமான பயணம்.
தடைபோட யாரும் இல்லை.
மனச்சாட்சி கயிற்றின் விழிம்பில் நடப்பதால்.
விமர்சன கல் எறிவுகளைக் கூட
மலர்களின் தூவலாய்
மாலை ஏற்புக்களாய்
செங்கம்பள வரவேற்பாய்
இது எனக்கான பயணம்
எனக்கான இருப்பைக் கூட
உறுதிசெய்யும் படி நிலை.

3

எனக்கான பாதையில்
முகங்கள் காட்டப்படாமலே
பல கைகுலுக்கல்கள்.
விபரீதமான
அணுகுமுறையும் ஆக்கிரமிப்பும்
உள்ள கைகுலுக்கல்கள் என

கைகுலுக்கலின் தொடுகையில் உணர்ந்தவள்
அவர்களுக்கு அது வெற்றிக்களிப்பாய்.
ஆனாலும் என் பாதை
இன்னும் செப்பனிடப்பட்டு
பதியம் அழகுபடுத்தப்பட்டதாய்.
பதியத்தின் ஆழச்சிலிர்ப்பில்
ஏதோ உன் ரணம்
திடீரென காணாமல் போனதாய்
உன் கைகுலுக்கல்
உன் விம்பம்
என் திரையில் பட்டதே தெரியாமல்
எப்படி சாத்தியம்.
உன் மனதில் எழும் கேள்வி.
ஆம்
இது எனக்கான பாதை
எனக்கான பயணம்.
எனக்கான இருப்பைக் கூட
உறுதிசெய்யும் படிநிலை.

4

என் பதியப் பாதைக்கு
மலர்களால் அரண் அமைத்து
அன்பு மூலிகைகளை விதைத்து
எனக்கான வைகறையை
இறுக்கமாய் உருவேற்றி
மேலும் படிநிலை உயர்வாய்
தேவையற்ற ரணவலிகளுக்கு
மனம் அசையா
வைராக்கியத்தை
தீபமாய் ஏற்றி
எனக்கானவை இனி
எனக்கானவைதான்
பகிர்தல்கள் இனி என்
பரந்த பசுமைவெளியுள் மட்டுமே.
இது எனக்கான பயணம்
எனக்கான இருப்பைக் கூட
உறுதிசெய்யும் படி நிலை.



நளாயினி தாமரைச்செல்வன்

(2002)





ஓவியம்: வாசுகி

ஓவியம் பின்புறம்

## துளிர்

ஆழச் செல்லும் வேர்கள்
அர்த்தத்துடன் உதிர்ந்துவிட்ட
இலைகள்,
உறுதியான பட்டைகள்
கண்மணி
இது உன்
இலையுதிர்காலத்துக்
கோலம்
பார்ப்பவர் கண்களுக்கு
நீ பட்டமரமாகாலாம்
ஆனால்
எனக்குத் தெரியும்
பூமி எல்லையின்
அடிவரை தேடும்
உன் தாக வேர்களின்
தேடல்
தொடராய்...
ஓர் நாள்
குயில் ஒன்று கூவ
வசந்தம் மலரும் ~ உன்
கிளைகள் துளிர்க்கும்
பறவைகள் கூடுகட்டும்~ உன் நிழலில்
மானுடம் இளைப்பாறும்
நீயும் சிரிப்பாய்



விஜயலகட்சுமி சேகர்

(2002)

# சத்தமில்லா யுத்தங்கள்

**சந்திரவதனா செல்வகுமாரன்**

இந்த உடுப்பு எனக்குப் பிடிக்கேல்லை; இதை ஆருக்காவது குடுங்கோ என்று சொல்லி கழற்றி எறிவது போல,

"அம்மா எனக்கு அவரைப் பிடிக்கேல்லை; நான் தனிய வாழப் போறன்" என்று துளசி சொன்னபோது கோமதிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

என்ன நீ விளையாடுறியே..? அதென்ன பிடிக்கேல்லை எண்டிறதும் அவரை விட்டிட்டுத் தனிய வாழப் போறன் எண்டிறதும்........! எனக்கு ஒண்டுமா விளங்கேல்லை. உனக்கென்ன பைத்தியம் கியித்தியம் பிடிச்சிட்டுதே?" கோமதி அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய்க் கத்தினாள்.

"இல்லை அம்மா. எனக்குப் பைத்தியமும் இல்லை; கியித்தியமும் இல்லை. அவரோடை வாழத்தான் பிடிக்கேல்லை" துளசி சற்று எரிச்சலுடன் கீச்சிட்டாள்.

என்ன கிரகசாரமடா இது! ஐநூறு கிலோமீற்றர் தூரத்திலை இருக்கிற ஹனோபர் வரை போய் தில்லையம்பலத்தார் நல்ல சாத்திரி என்று எல்லாரும் சொல்லுகினம் என்று அவரட்டைச் சாதகத்தைக் காட்டி பொருத்தம் பார்த்து, பிறகு ஐயரிட்டைப் போய் நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்துத்தானே எல்லாம் செய்தது. பிறகேன் இப்படி நடக்குது.

கோமதி குழம்பினாள்.

ஊர் கூட்டி, உறவுகளுக்கெல்லாம் சொல்லி, உலகின் அந்த அந்தத்திலிருந்து இந்த அந்தம் வரை பார்த்துப் பார்த்து ஈமெயிலாய் அனுப்பி, ரெலிபோனாய் அடித்து, கடிதங்களாய் எழுதி தம்பட்டம் அடித்து, ஹோல் எடுத்து மணவறை போட்டு, இல்லாத அருந்ததி பார்த்து எல்லாரும் வாழ்த்தத்தானே திருமணம் நடந்தது.

ஐந்து மாதங்கள் கூட சரியாக நகரவில்லை. அதற்கிடையில் இவளுக்கு என்ன வந்தது. ஏன் இப்படி அதிரடி முடிவெடுத்தாள்?

கோமதிக்குத் தலையில் இடி விழுந்தது போல இருந்தது.

"நீ கெட்டிக்காரி. மோளுக்கு நல்ல ஒரு பெடியனாப் பார்த்துக் கட்டிக் குடுத்துப் போட்டாய். யேர்மனிலை இப்பிடி படிச்ச நல்ல குடும்பத்து மாப்பிளை கிடைக்கிறதெண்டால் லேசில்லை. நீ கெட்டிக்காரிதான். இனியென்ன? உனக்கு ஒரு பெரிய பாரம் குறைஞ்ச மாதிரித்தான்."

ஏதாவது விழாக்களிலோ அல்லது கடைத் தெருக்களிலோ யாராவது தெரிந்த தமிழ்ப் பெண்களைச் சந்திக்கும் போது அவர்கள் இப்படித்தான் சொல்லி கோமதியின் மனதைக் குளிர வைப்பார்கள்.





அம்மா நான் வாழ ஆசைப்படுறன். ஆருக்காண்டியும் என்ரை ஆசையளை கனவுகளை புதைக்க நான் தயாரா இல்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் குடுத்துத்தான் வாழோணும் எண்டு பேச்சுக்குச் சொல்லலாம். ஆனால் வாழுறபோது அப்பாக்காண்டி நீங்கள் எல்லாத்தையும் விட்டுக் குடுத்தீங்கள். உங்களுக்காண்டி அப்பா என்னத்தை விட்டுத் தந்தவர் எண்டு ஒருக்கால் சொல்லுங்கோ பாப்பம். எங்கடை ஆக்கள் ஒருத்தருக் கொருத்தர் விட்டுக் குடுக்கிறது எண்டு சொன்னால் அதுக்கு அர்த்தம் பொம்பிளையள் எல்லாத்தையும் விட்டுக் குடுக்கோணும் எண்டுறதுதான்.

"நல்லாத்தான் இப்ப பாரம் குறைஞ்சிருக்கு. இவள் என்ரை தலையிலை பாறாங்கல்லை எல்லோ தூக்கிப் போட்டிருக்கிறாள்". கோமதியின் மனசு முணுமுணுத்தது.

துளசியோ ஒரு கவலையுமில்லாமல், சீடீ ஸ்ராண்ட் இல் இருந்து சீடீ ஒண்டை எடுத்துப் போட்டு, பாட்டை ஓட விட்டிட்டு இடுப்பை வளைத்து வளைத்து ஆடிக் கொண்டிருந்தாள்.

கோமதிக்கு அவளின் இந்த அலட்டிக் கொள்ளாத தன்மை எரிச்சலையே தந்தது.

கோமதியும் அந்த நாட்களில் ஆடினவள்தான். ஆனால் அது பரதநாட்டியம். அதுவும் அவளின் கழுத்தில் எப்ப தாலி ஏறிச்சுதோ அன்று வரைக்கும் தான். அதற்குப் பிறகு எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அவளுக்கும் அந்த நாட்களில் வீட்டில் சில சமயங்களில் ஆடவேண்டும் போல ஆசை வரும். இனி ஆட முடியாதென்னும் போது அழுகையும் வரும்.

ஆடவேண்டும் போல் காலும் கையும் பரபரக்கும் போதெல்லாம் 'நீ ஆடுறது எனக்குப் பிடிக்கேல்லை' எண்டு அவள் கணவன் -அதுதான் துளசியின் அப்பா- முதலிரவன்றே சொன்ன வார்த்தைகள் நினைவுகளில் ஒலிக்க அப்படியே கண்கள் பனிக்க கோமதி தன்னைக் கட்டிப் போட்டு விடுவாள்.

பரதநாட்டியம் மட்டுமா! இப்படி எத்தனை விடயங்கள் திருமண பந்தத்தில் உருவழிந்து போய்விட்டன. அதற்காக இந்த இருபத்தைந்து வருடத்தில் ஒருக்காலும் அவள் தன் கணவனை விட்டிட்டுப் போக வேண்டும் என்று நினைத்ததில்லையே!

ஆனால் ஐந்தே ஐந்து மாதத்தில் அவள் பத்து மாதம் சுமந்து பெற்ற அவள் மகள் துளசி வந்து வேண்டிக் கொடுத்த பொம்மையை வேண்டாம் என்று சொல்வது போல கணவனை வேண்டாம் என்கிறாளே!

என்ன செய்வதென்று தெரியாமல் கோமதி குழம்பினாள்.

இந்தக் காலப் பிள்ளைகளிடம் எதையும் அலட்சியமாக எடுத்துக் கொள்ளும் தன்மையும், எதையும் தூக்கி எறிந்து பேசும் தன்மையும் சற்று மிகையாகவேதான் உள்ளன. அதுவும் புலம்பெயர்ந்தவர்களின் பிள்ளைகள் ஒருவிதமான இரட்டைக் கலாச்சாரத்துள் அகப்பட்டு, அவர்களை அழுத்தும் மனஉளைச்சல் காரணமாகவோ அல்லது எதிலும் முழுமையாக ஒட்ட முடியாத இயலாமை காரணமாகவோ தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்பது போல பெற்றோருடன் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு கோமதியின் மகளும் விதிவிலக்கானவளல்ல.

இரவுகளில் பிறந்தநாள் விழாக்களுக்கோ, அல்லது வேறு விழாக்களுக்கோ அல்லது டிஸ்கோவுக்கோ செல்ல அனுமதி மறுக்கப்படும் போது துளசியின் முட்டி மோதலையும் வாக்குவாதத்தையும் சட்டை செய்யாதவள் போல் கோமதி நடித்திருந்தாலும்,

இந்த யேர்மனிய வாழ்வில் அது எத்தகையதொரு பாதிப்பை துளசியிடம் ஏற்படுத்தியிருக்கும் என்பதை அவள் உணராமலில்லை. அதனால் சமயம் வரும் போதெல்லாம் துளசியை தன்னுடன் அழைத்து, அன்பால் அணைத்து ஆறுதலான வார்த்தைகளால் அறிவுரை சொல்லுவாள். அது துளசியின் ஆதங்கங்களை முற்றாக சமாதானப் படுத்தவில்லை என்பது கோமதிக்குத் தெரிந்தாலும் கோமதியாலும் ஒன்றும் செய்யமுடியாமலே இருந்தது.

கோமதியும் பெண்தானே. அவளும் இந்தக் கலாச்சாரம் பண்பாடு என்ற போர்வைக்குள் மூச்சடங்கி முக்குளித்தவள் தானே. ஆனாலும் ‘இந்தக் கலாச்சாரம் பண்பாடு எல்லாம் உனக்குத் தேவையில்லை; நீ ஐரோப்பியக் கலாச்சாரத்துடன் வாழ்’ என்று தன் பெண்ணிடம் சொல்ல எந்தத் தமிழ்த்தாய்தான் மனந்துணிவாள்.

என்னதான் புதுமை, புரட்சி என்று பேசினாலும், எழுதினாலும் தமது குடும்பம் என்று வரும்போது, என் பெண் இந்தக் கலாச்சாரம் பண்பாடுகளிலிருந்து நழுவி விடக் கூடாதே என்பதுதான் பெண்ணைப் பெற்றவர்கள் எல்லோரதும் கவலை.

இந்த நிலையில் தானுண்டு தன் குடும்பமுண்டு என்றும், சமூகம் என்ன சொல்லும் என்று பயந்தும் வாழும் கோமதியின் நிலை பற்றிச் சொல்லவே தேவையில்லை.

கோமதி கூட ஒரு இரண்டும் கெட்டான் மனநிலையில் போராடுபவள் தான்.

படித்த, உலகம் தெரிந்த அவள் மனதுக்கும், நான் ஆண் என்ற திமிர்த்தனம் சற்றும் குறையாத கணவனுடனான அவள் வாழ்வுக்கும் இடையில் அவள் நிறையவே போராட்டம் நடத்தி விட்டாள்.



ஆனால் அவள் போராட்டம் எப்பொழுதுமே அவள் மனதுக்குள் தான். மற்றும்படி கணவன் எள் என்ற உடனே இவள் எண்ணெயாக நிற்பாள்.

இந்த மனதோடு ஒரு வாழ்வு, நியத்தில் ஒரு வாழ்வு என்ற இரட்டை வேஷம் கோமதி அறியாமலே கோமதியிடம் ஒருவித மனஉளைச்சலைக் கூட ஏற்படுத்தியிருந்தது.

அதனால்தானோ என்னவோ கோமதி துளசியின் விடயத்தில், துளசியின் சின்னச் சின்ன ஏமாற்றங்களையெல்லாம் புரிந்து கொள்ளக் கூடியவளாக இருந்தாள்.

இருந்தாலும் பெரிதாக ஒன்றும் செய்துவிட முடியாத நிலையில் துவண்டாள்.

துளசி பெண் என்ற ஒரே காரணத்துக்காக, சில சின்னச் சின்ன விடயங்களில் கூட தடைகள் விதிக்கப்பட்டு அனுமதிகள் மறுக்கப்பட்ட போது, துளசி அப்பா அம்மாவை மீற முடியாத இயலாமையில் பொங்கி எழுந்து, அழுது ஆர்ப்பரிக்கையில் கோமதியும் அழுதாள். நாங்கள் தமிழ்ப் பெண்கள் என்பதையும், பண்பாட்டின் பெருமையையும் விளக்கி அவளைச் சமாதானப் படுத்தினாள்.

ஆனாலும் துளசியின் ரீன்ஏஜ் பருவம் துளசிக்கு மட்டுமல்லாமல், துளசியைத் திருப்திப் படுத்த முடியாத துளசியின் அம்மாவான கோமதிக்கும் கூட மிகுந்த மனஉளைச்சலான வேதனையான காலகட்டமாகவே இருந்தது.

அதன் பிரதிபலன்தான் இதுவோ?

துளசி கணவனை வேண்டாம் என்று சொல்வது ஏதோ பழி தீர்க்கும் படலம் போலவே கோமதிக்குத் தோன்றியது. கட்டுப்பாடுகளை உடைத்தெறிய அன்று பதினான்கு வயதில் அவளுக்கு முடியவில்லை. இன்று இருபத்தினான்கு வயதில் அவள் அப்பாவை மட்டுமல்ல இந்த சமூகத்தையே பழிவாங்க நினைக்கிறாளோ!

கோமதியின் சிந்தனை பலவிதமாக எண்ணியது.

இருபத்து நான்கு வயதுப் பெண்ணுக்கு அடித்தோ உதைத்தோ ஒன்றையும் திணிக்க முடியாது. அதுவும் துளசி அப்பா போலவே பிடிவாதக்காரி. அவளிடம் அன்பால் மட்டும்தான் ஏதாவது செய்ய முடியும். கோமதிக்கு அது நன்கு தெரியும்.

என்ன செய்யலாம், துளசியை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்ற யோசனைகளோடே அன்றைய இரவு அமைதியின்றிய அரைகுறைத் தூக்கமும் யோசனை கழிந்த விழிப்புமாய் கோமதிக்குக் கழிந்தது.

விடிந்தும் விடியாத பொழுதிலேயே தூக்கம் முழுவதுமாய்க் கலைந்து விட எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாள். நினைவு மட்டும் துளசியுடன் எப்படிப் பேசலாமென்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தது. கணவருக்குக் கூட இன்னும் நிலைமையைச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் ஒரு குதி குதித்து ஆர்ப்பாட்டம் பண்ணி, நல்ல வளர்ப்புத்தான் வளர்த்து வைச்சிருக்கிறாய் என்று கோமதியையும் சாடி விட்டு, வேலைக்குப் போயிருப்பார்.

கோமதியின் எண்ணம், கணவரின் காதுக்கு விடயம் எட்டாமலே துளசியின் மனத்தை மாற்றி விட வேண்டுமென்பதுதான்.

கோமதி நினைவுகளுடன் போராடியபடி இருக்க துளசி எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு வந்தாள்.
"அப்பா என்னவாம்" என்றாள்.

"அப்பாக்கு நானொண்டும் சொல்லேல்லை. சொன்னால் இப்ப ஒரு பிரளயம் எல்லோ நடந்திருக்கும். ஏதோ இண்டைக்கு நேற்றுத்தான் உனக்கு அப்பாவைத் தெரியும் போலை இருக்கு உன்ரை கேள்வி. இதை என்னண்டு அப்பாட்டை நான் சொல்லுறது."
கோமதி தனது எரிச்சலையும் கோபத்தையும் வெளியில் காட்டாமல் துளசியின் வினாவுக்குப் பதிலளித்தாள்.

"அம்மா இது மறைக்கிற விசயமில்லை. அப்பா குதிப்பார் எண்டதுக்காண்டி முழுப்
பூசணிக்காயை சோத்துக்குள்ளை மறைக்கேலாது."
துளசி கத்தினாள்.

"இஞ்சை பார் பிள்ளை. இங்கை கத்துறதிலையோ, ஆர்ப்பாட்டம் பண்ணுறதிலையோ ஒரு அர்த்தமும் இல்லை. கொஞ்சமாவது யதார்த்தத்தை யோசிக்கோணும். கலியாணம் எண்டுறது ஆயிரம் காலத்துப் பயிர். அதை நீ இப்பிடி தூக்கி எறிஞ்சிட்டு வாற விசயமெண்டு மட்டும் நினைக்காதை...
ஏன் அவருக்கும் உனக்கும் இடையிலை என்ன பிரச்சனை நடந்தது?
இன்னொருக்கால் அவரோடை கதைச்சுப் பார்க்கலாம்தானே!"
கோமதி துளசியின் குணம் தெரிந்தவளாய் துளசியை ஆறுதல் படுத்தும் விதமாகக் கதைத்தாள்.

"அம்மா நானும் அவரும் கதைச்சுத் தான் இந்த முடிவுக்கு வந்தனாங்கள். எனக்கும் அவருக்கும் ஒத்து வராது. என்ரை இன்றெஸ்ற் (interest) வேறை அவற்றை இன்றெஸ்ற் வேறை. அதுதான்..." துளசி இழுத்தாள்.

"கலியாணம் எண்டு நடந்தால் இரண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் குடுத்து இன்றெஸ்ற் களை மாத்தித்தான் வாழோணும். அதை விட்டிட்டு இதுக்காண்டி ஆரும் எல்லாத்தையும் தூக்கி எறிவினமோ?
என்ன ஒரு முட்டாள்தனமான முடிவு எடுத்திருக்கிறாய்" வினவினாள் கோமதி.

"பின்னை என்ன, உங்களை மாதிரி என்னையும் வாழச் சொல்லுறீங்களோ - நீங்கள் ஆசை ஆசையாப் படிச்ச பரதநாட்டியத்தை அப்பாக்காண்டி விட்டது போலை...!
அம்மா நான் வாழ ஆசைப்படுறன். ஆருக்காண்டியும் என்ரை ஆசையளை கனவுகளை புதைக்க நான் தயாரா இல்லை. ஒருவருக்கொருவர் விட்டுக் குடுத்துத்தான் வாழோணும் எண்டு பேச்சுக்குச் சொல்லலாம். ஆனால் வாழுறபோது அப்பாக்காண்டி நீங்கள் எல்லாத்தையும் விட்டுக் குடுத்தீங்கள். உங்களுக்காண்டி அப்பா என்னத்தை விட்டுத் தந்தவர் எண்டு ஒருக்கால் சொல்லுங்கோ பாப்பம்.
எங்கடை ஆக்கள் ஒருத்தருக் கொருத்தர் விட்டுக் குடுக்கிறது எண்டு சொன்னால் அதுக்கு அர்த்தம் பொம்பிளையள் எல்லாத்தையும் விட்டுக் குடுக்கோணும் எண்டுறதுதான். என்னாலை அது முடியாது."
துளசி ஆக்ரோசமாகக் கத்தினாள்.



கோமதி சில நிமிடங்களுக்கு வாயடைத்துப் போனாள். பிறகு நிலைமை விபரீதமாகப் போகப் போவதை உணர்ந்து கொண்டவளாய்,
"என்ன செய்யிறது துளசி. வாழ்க்கை எண்டால் அப்பிடி இப்பிடித்தான் இருக்கும்.
பொம்பிளையள்தான் ஒரு மாதிரி சமாளிச்சு விட்டுக் குடுத்து கெட்டித்தனமா வாழோணும்.
இஞ்சை பார் நான் இருபத்தைஞ்சு வருசமா உன்ரை கொப்பரோடை வாழேல்லையே?"
என்று சமாளிக்கும் வகையில் பேசினாள்.

"அம்மா நீங்கள் வாழுறது ஒரு வாழ்க்கையே...?
நீங்கள் வாழுறீங்களே- அதுக்குப் பேர் வாழ்க்கை யெண்டு மட்டும் சொல்லாதைங்கோ.
திருமணம் எண்ட பேரிலை ஒரு அடிமை சாசனம் எழுதி, அதுக்கு வாழ்க்கை எண்டு ஒரு பெயர் வைச்சிருக்கிறீங்கள்.
எனக்குப் பிடிக்காத, எனக்கு சந்தோசம் தராத வாழ்க்கையை நான் வாழோணுமெண்டு ஏன் என்னைக் கட்டாயப் படுத்திறீங்கள்?"
மிகவும் எரிச்சலுடன் துளசி சத்தம் போட்டாள்.

கோமதிக்கு ஒன்று மட்டும் தெரிந்தது -
பதினாறு வயதில் கதைத்தே துளசியின் காதலைக் கத்தரித்தது போல, துளசியின் இருபத்து நாலு வயசில் துளசியைக் கதைத்து வெல்வது சுலபமான விடயமல்ல என்பது.

கட்டுப்பாடுகள், அதனால் வந்த ஏமாற்றங்கள் மட்டும் என்றில்லாமல், புலம்பெயர் மண்ணின் பல்கலைக் கழகப் படிப்பும் துளசியைப் புடம்போட்டு எடுத்திருந்தது.

இனி என்ன நடக்கப் போகிறது என்ற எண்ணத்தில் கோமதியின் மனம் கவலை கொள்ளத் தொடங்கியது.
மகளை நல்ல இடத்தில் கட்டிக் குடுத்திட்டாய் என்று வாயாரப் புகழ்ந்தவர்கள் எல்லாரும் இப்ப முன்னாலை நீலிக் கண்ணீர் வடிச்சிட்டு... பின்னாலை,
முகவாய்க்கட்டையை தோள் மூட்டில் இடிச்சு 'பாரன் நல்ல வளர்ப்பு வளர்த்திருக்கிறா' என்று சொல்லி நையாண்டி பண்ணப் போகிறார்கள் என்ற நினைப்பே கோமதிக்குச் சங்கடமாக இருந்தது.

இனி செய்வதற்கொன்றும் இல்லை. கடைசி ஆயுதம் இந்த மனுசன்தான்.
அப்பாவை எதிர்க்கும் தைரியம் துளசியிடம் இருந்ததில்லை என்று நினைத்துக் கொண்டு கோமதி மௌனமாகி விட்டாள்.

மாலை அப்பா வேலையால் வந்த பின் ஒரு பிரளயமே வீட்டில் நடந்தது.
கூடுதலான பேச்சு வேண்டியது கோமதிதான். அது அப்பாவின் றிக்ஸான நடத்தை. தாங்களே பேச்சு வாங்குவதை விட அம்மா பேச்சு வேண்டினால் அது பிள்ளைகளைக் கூடுதலாகப் பாதிக்கும் என்பது மனோதத்துவம். அதை அவர் இப்படியான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தத் தவறுவதில்லை.
கூடவே மானம், மரியாதை, சமூகம், அந்தஸ்து என்று பயமுறுத்தி விடுவார்.
இன்றும் அவர் கடைசி ஆயுதத்தை எடுத்து விட்டார்.
"நான் எவ்வளவு மானம் மரியாதையா இருக்கிறன் தெரியுமோ? இதெல்லாம் உன்னாலை...!"
ஒரு பெரிய பிரசங்கமே வைத்து விட்டார்.

அம்மாவோடு நியாயம் பேசிய துளசி அப்பா முன் தோற்றுப் போனாள்.
தோற்க வைக்கப்பட்டாள். பிறகென்ன...?
மீண்டும் துளசி கணவனோடு சேர்ந்து ஒன்றாக வாழ்வதென்பது தீர்மானமாகியது.

கோமதிக்கு துளசியைப் பார்க்கப் பாவமாக இருந்தது. தனது கண்ணீரும் அப்பாவின் ஆளுமை நிறைந்த தந்திரமான பேச்சும்தான் துளசியை மேற்கொண்டு எதுவும் செய்ய முடியாமல் கட்டிப் போட்டு விட்டது என்பதை கோமதியால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் சமூகம், கலாச்சாரம், பண்பாடு இவைகளுக்கு மத்தியில் இதை விட்டு வேறு வழி ஏதும் இருப்பதாக கோமதிக்குத் தெரியவில்லை.

சமூகத்தின் முன், கணவனின் கெட்டித்தனத்தின் முன் துளசி விடயத்தில் வெற்றி கிடைத்து விட்டதை நினைத்து கோமதி சிரித்துக் கொண்டாள்.

ஆனால் துளசிக்குத் துளியும் பிடிக்காத, சந்தோஷம் தராத வாழ்வை வாழச் சொல்லி துளசியை கட்டாயப் படுத்தி அனுப்பியது தவறு என்று கோமதியின் மனம் கோமதியுடன் சத்தமில்லாமல் யுத்தமொன்றை நடத்திக் கொண்டே இருந்தது.

# எட்ட ஒரு தோட்டம்

கடுங்குளிர் காலத்தின்
கால்கள் நீண்டிருந்தும்
ஆறுதலாய் ஓடி ~ அதன்
ஓட்டத்தை முடித்த போது

அவிந்த இறாலைப்போல் நிறங்காட்டிய
கடைக்காரி ஒருத்தியிடம்
~பெயருடன் நிறமும்
அளவும் அதன் அமைப்பும் கேட்டு~
வாங்கிய பூங்கன்றுகளை
உரமான மண் குழைப்பில்
பதித்து உயிர்ப்பிக்க
நீர் ஊட்டினேன்.

பதின்மூன்று புதன்களின் பின்
செழித்துப் பூத்த
வேனிற்காலத்துச் செடிகளின்
நடுவே

வழக்கமான ஒய்யாரத்துடன்
வேர்விட்ட களைகளின் பெயர்கள்
எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

கொள்ளை அழகொடு
காற்றின் வேகத்துக்கு
ரம்யம் சேர்த்து அசைந்த ~ அம்
மலர்களின் பெயர்களும்
ஞாபகக் கம்பத்தில் இருந்து
வழுக்கினாற் போல் இருந்தது

சுற்றவும் எட்டவும் நின்ற
மரங்களில்
யூக்கலிப்டஸை விடுத்து
வேறொன்றையும்
எனக்குத் தெரிந்திருக்க
நியாயம் ஏதும் இல்லை.

தட்டையாய் விரிந்த
வெளிர் மஞ்சள் நிலப்பரப்பும்
அதில் எறித்த வெயிலும்
என்னில் இருந்து வீணே
அந்நியப்பட்டுக் கிடந்தன.

எனினும்
வெள்ளை நிற வண்ணாத்திப் பூச்சிகளையும்
ஏற்கெனவே அறிந்த
வர்ணங்களைக் கொண்ட
மலர்களின் நிறங்களையும் மட்டுமே
என்னால் அடையாளங் கண்டு கொள்ள முடிந்தது.



**ஆழியாள்**

(09-02-2002)

# மொழியும் ஆண்வழிச் சமூக அமைப்பும்

**ஆண்பாலும், பெண்பாலும் உடல் அமைப்பை மையமாகக் கொண்டிருந்தாலும் அவற்றிற்கு வரையறுக்கப்பட்ட குணாதிசயங்கள் சமூகப் பார்வையினாலேயே தோற்றம் பெற்றன. சமூக நியதிகளையும், கருத்தியலையும் உள்ளடக்கியே மொழியின் இயக்கம் வெளிப்படும். இந்த ரீதியில் மொழி முதலில் உருவாகவில்லை. சமூக உருவாக்கத்தின் பின்தான் மொழி உருவாகியது**

**செல்வி திருச்சந்திரன் (23.1. 02)**

ஆணின் உடல் ஒரு குறியீடு போல் செயல்படுகிறது. அவ்வுடலின் சினம், ஆதிக்கம், அந்தஸ்து போன்றவற்றை அறியும் குழந்தை அதன் பெறுமதிப்பை புரிந்து கொள்கிறது. கலாச்சாரங்கள் வேறானாலும் குழந்தை மனம் உடலை வைத்தே நபரை மதிப்பிடுகிறது. எப்போதும் ஆணுடல் வீட்டிற்கு வெளியே இருக்கிறது; கொடிய ஆபத்தான செயல்களில் ஈடுபடுகிறது. பெண்ணுடல் வீட்டிற்கு உள்ளேயிருக்கிறது; வீட்டினரின் வளர்ச்சி, பாதுகாப்பு போன்றவற்றைக் கவனிக்கிறது. இவ்வாறு குழந்தைகள் உடலை வைத்து ஏற்படுத்தும் எண்ணமே வளர்ந்து சமூகங்களையும் நாகரீகங்களையும் தீர்மானித்துள்ளது.

*-Women: Psychologist puzzle*

இம் மேற்கோள் உளவியல் பகுப்பாய்வு ரீதியில் மொழியின் வேறுபட்ட தன்மையை விளக்க முற்படுகிறது. சமூகங்களையும் நாகரீகங்களையும் தீர்மானித்த ஆணின் உடலான குறியீடு மொழியையும் கூட தீர்மானித்தது என்பதும் இவ் வாதத்தினால் பெறப்படும்.

கட்டமைப்பு வாதத்திற்கும் பின் வந்த ஒரு கோட்பாடு கட்டமைப்பு வாதத்தின் அடிப்படையை ஏற்றுக்கொண்டது. ஆனால் அதன் இறுக்கமான கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. Post Structuralism என அழைக்கப்பட்ட பின்னைய கட்டமைப்பு வாதத்தின் கோட்பாட்டாளர்கள் முதற் பந்தியில் கூறப்பட்ட வாதத்தை ஏற்க மாட்டார்கள். அர்த்தப்படுத்தல் என்பது சமூகமயமானதேயன்றி அதற்குப் புறம்பாக அதை புரிந்து கொள்ள முடியாது. அர்த்தங்கள் நிலையானவை அல்ல; காலத்தால் ஒருமைப்பட்டவை அல்ல. உள்மனத்தின் உணர்வலைகள் கூட காலத்தை வென்று மொழியின் கூறுபாடுகளை நிர்ணயிக்க முடியாது.

குறிகளும் அடையாளங்களும் உள்மன அடக்கத்தை கட்டமைக்கமாட்டா. ஏனெனில் அர்த்தப்படல் என்பது குறியீட்டுடன் ஓர் இயற்கையான தொடர்பைக் கொண்டிருக்க மாட்டாது. குறியீட்டின் அர்த்தம் என்பது ஏனைய குறியீடுகளுடனும், கட்டுமான அமைப்புக்களின் வேறுபாடுகளுடனும் அவற்றின் இயக்கங்களுடனும் தொடர்புடையது. ஒரு வஸ்துவிற்கு தனிப் பொருள் இல்லை. அதன் அர்த்தம் வேறு ஒன்றுடன் தொடர்புற்றே உண்டாக்கப்படுகிறது.

இவ் விளக்கம் கலாச்சார அர்த்தங்கள் எப்படி மாறுகின்றன; இயக்கங்கள் மாறுபட, இருப்புக்கள்



மாறுபட, கட்டுமான அமைப்புக்கள் வேறுபட மொழியின் அர்த்தங்களும் மாறுபடும் என்பதை விளக்குகிறது.

சமூக இயக்கங்களே முக்கியமன்றி உளவியல் தொடக்கங்கள் அல்ல என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஆண்பாலும், பெண்பாலும் உடல் அமைப்பை மையமாகக் கொண்டிருந்தாலும் அவற்றிற்கு வரையறுக்கப்பட்ட குணாதிசயங்கள் சமூகப் பார்வையினாலேயே தோற்றம் பெற்றன. சமூக நியதிகளையும், கருத்தியலையும் உள்ளடக்கியே மொழியின் இயக்கம் வெளிப்படும். இந்த ரீதியில் மொழி முதலில் உருவாகவில்லை. சமூக உருவாக்கத்தின் பின்தான் மொழி உருவாகியது. ஆண்,பெண் சமூக அசமத்துவ நிலையின் பிரதிபலிப்பாக வெளிவந்த மொழி வழக்குகள் ஆண்,பெண் அசமத்துவத்தை வெளிப்படுத்தியே தீரும்.

ஆக, பிழை மொழியில் இல்லை. ஆனாலும் இந்த மொழியின் வழக்கு வகைகளை ஒரு பெண்நிலை நோக்கில் ஆய்வு செய்வது அம் மொழி வழக்குகளைத் தவிர்த்து ஒரு சமத்துவம் கோரும் பணியின் தொடக்கமாகக் கூட இருக்கும். ஏனெனில் ஆண், பெண் அசமத்துவத்தை மேலும் மேலும் வளர்த்தெடுக்கவும் நியாயப்படுத்தவும் இனிவரும் சந்ததியினரை அதே சமூக வழமைக்குள் தள்ளுவதற்கும் இவ் அசமத்துவ மொழி வழக்குகள் காரணமாக இருக்கும். ஆகவே அவற்றை இனங்கண்டு கூறுபடுத்துதலே இக் கட்டுரையின் நோக்கம்.

சமூகத்தால் உருவாக்கப்பட்ட கூற்றுக்கள் பல ஓர் அதிகாரத்தின் பாற்பட்டதாகத் தெரிகிறது. மொழி வழக்கின் தளம்கூட ஓர் ஆதிக்க நிலையின் வெளிப்பாடே. இலக்கண, இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்தபடியால், ஆதிக்கமும் அதிகாரமும் அவர்கள் கையில் இருந்தபடியால் மொழியில் ஆணிலை நோக்கு ஒன்று மிக இலகுவில் புகுத்தப்பட்டு விட்டது என்பதையும் நாம் மறுக்கக்கூடாது. உயர்சாதி, உயர்வர்க்கம், ஏகாதிபத்தியம், பாசிசம், பெரும்பான்மை மக்கள் போன்றோர் அதிகார ஆதிக்கமில்லாத குறை நிலையில் உள்ள மக்கட் கூட்டங்களுக்கு அவர்களது குறைநிலைக் கருத்தியலை உணர்த்தும் மூலமாக பல்வேறு மொழிப் பதங்களை உருவாக்கியுள்ளனர்.

குலமகள், இழிசனர், கூத்து சண்டாளர் (மனுதர்ம சாஸ்திரம்), சிங்கள மரத்துடன் ஒப்பிடப்பட்ட தமிழ்ச்செடி கொடி போன்ற சொற்கள் அந் நிலைக்குச் சான்று. இப்படியே பால்நிலைப் பாகு-

பாடும் ஆணை மேல்நிலை யிலும் பெண்ணை கீழ்நிலையிலும் வைத்து உள்ளது. கீழ்நிலை, மேல்நிலைக்குரிய சொற் பதங்களை இவ்வாறே நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனாலும் மேற்கூறிய வர்க்க, சாதிய, ஏகாதிபத்திய குறியீடுகளைக் குறிக்கும் சொற்பதங்களைப் பல வருட காலங்களுக்கு முன்பே மாக்சிச சமூகவியலாளர் இனங்கண்டு உள்ளனர். ஆனால் பெண்ணை குறிக்கும் இழிவழக்கு மொழிகளை பெண்ணிலைவாதிகளே இனங்கண்டுள்ளனர். சமூக அசமத்துவ நிலை களைப் பற்றி ஆய்வு செய்தவர்கள் பெண்நிலை அசமத்துவத்தைக் காணத் தவறிவிட்டனர். அதேபோல அவற்றை மொழிப்பதங்களில் இனங் கண்ட பொழுது அது ஒரு தேவையற்ற பரபரப்பு என்று நகையாட பலர் முன்வந்தனர்.

கீழ் நிலையில் உள்ளோரை ஓரங்கட்டுவது, எள்ளி நகையாடுவது, தங்களிலிருந்து வேறுபட்ட வர்கள் என்று விலக்குவது, ஒதுக்குவது, அவர்கள் மனதைப் புண்படுத்துவது போன்ற அநாகரீக செயல்களைச் செய்வதற்கும் மொழி பயன்படுத்தப்படுகிறது. தங்களது மேல்நிலை ஆதிக்கத்தை நிலைக்கச் செய்யவும் மொழி பயன்படுத்தப்படுகிறது. மொழி ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு என்று நாம் கூறினால் ஆணாதிக் கத்தின் எத்தகைய கூறுகளை மொழி வெளிப் படுத்துகிறது என்பதை நாம் தெளிவுபடுத்த வேண்டியவராகின்றோம்.

குணாதிசயங்கள், நடத்தை, நடை, உடை, பாவனை போன்றன பெண்களுக்கென்றே வகுக்கப்பட்டுள்ளன. இவை மானிடருக்கு பொது பண்பாக இருந்தாலும் பெண்களுக்குரியன என வகுக்கப்பட்டிருப்பதை மொழி மூலம் வெளிக் கொண்டு வருவர். மெல்லியலாள், பேதை, மடவோள் என்பன பெண்ணின் உடல்ரீதியான இயலாமையையும் மன, உள ரீதியான திண்மை யற்ற நிலையையும் வெளிப்படுத்துகிறது. பெண்களை உயிரற்ற பண்டங்களுடன் இணைத்த இலக்கிய கர்த்தாக்கள் ஆயிழை, சேயிழை, பொற்கொடி என்று அணிகலன்களுடன் சேர்க்கும் பொழுது அதனால் வெளிப்படும் கருத்தியல் அவளைப் பண்டமாகவே நினைக்கத் தூண்டும்.

செல்வி, குமாரி, திருமதி, Mr/Miss/Ms போன்ற சொற்பதங்கள் மேல்நாட்டுச் செல்வாக் கைக் காட்டுகின்றன. எங்கள் நாட்டு வழக்கு அல்ல இது. ஒருத்தியின் தனித்துவம் அவள் பெயரிலேயே இருக்கவேண்டுமேயன்றி முன்பின் வரும் அடைமொழிகளில் அல்ல. அவள் மணமானவளா இல்லையா என்பதை உலகிற்கு அறிவிக்க வேண்டுமென்ற கட்டாயத்தின் பேரில் தான் இந்த முன்னிணைப்புச் செய்யப்படுகிறது. ஆனால் ஆணுக்கு மட்டும் திரு என்று கூறி அவனது மணநிலையை கூறவேண்டிய தேவையில்லை என்று சம்பிரதாயம் நிர்ணயித்துவிட்டதன் பலன்தான் இச் சொற்கள் புகுத்தப்பட்டமை. பெண் ஆணுடன் இணைக்கப்பட்டு செல்வி, திருமதி என புதிய நாமங்களுக்கு உட்படுத்தப் படுகிறாள். அந் நிலையில் அவள் பெயர் அடையாளம் தொலைக்கப்படுகிறது. ஆணுடன் ஒட்டிய இத் தொடர்பு அவளது வாழ்நாள் முழுவதும் வெவ்வேறு காலகட்டங்களில் தொடர்ந்து கொண்டே செல்லும்.

கண்ணகி, மாதவி, நல்லதங்காள், புனிதவதி, பார்வதி என்ற இலக்கிய புராண பெண் நாமங்கள் தகப்பனையோ கணவனையோ ஒட்டி நிற்க வில்லை. மணம் செய்யும் பெண்ணும் ஆணும் தங்கள் மணம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற நியதிக்குட்படுத்தப்பட்ட பொழுது Miss என்றோ Mrs என்றோ அவளது மணமான நிலை வெளிப்படுத்தப்பட்டது. அதன் மொழி பெயர்ப்புகளாக செல்வி, குமாரி, திருமதி போன்ற சொற்றொடர்கள் ஏற்படுத்தப்பட்டன. மேல்நாட்டு காலனித்துவ ஆதிக்கம் ஒரு பக்கமும், அவர்களது ஆண் ஆதிக்க கலாச்சாரத்தின் கூறு மறுபக்கமுமாக இணைந்து புகுத்தப்பட்டது. அவை ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதற்கு எம் நாட்டு மக்களின் ஆண் ஆதிக்கக் கலாச்சாரம் இலகுவில் சம்மதம் அளித்துவிட்டது. இச் சொற்களின் மொழி வரலாறு இதுவே.

சுமங்கலி, வாழாவெட்டி, அறுதலி, விதவை, கைம்பெண், வாழ்விழந்தவள், ஆளிற்பெண்டிர் என்ற சொற்களும் அவள் ஆணுடன் இணைந்த தன்மையையும், அத் தொடர்பு அறுந்த தன்மையையும் சுட்டிக்காட்டுகின்றன. அத்



**கீழ் நிலையில் உள்ளோரை ஓரங்கட்டுவது, எள்ளி நகையாடுவது, தங்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று விலக்குவது, ஒதுக்குவது, அவர்கள் மனதைப் புண்படுத்துவது போன்ற அநாகரீக செயல்களைச் செய்வதற்கும் மொழி பயன்படுத்தப்படுகிறது. தங்களது மேல்நிலை ஆதிக்கத்தை நிலைக்கச் செய்யவும் மொழி பயன்படுத்தப்படுகிறது.**

தன்மைகள் மங்கலமாகவும் மேன்மை கொண்டவையாகவும் சிறுமையற்றதாகவும் கருதப்படும் போது பெண்ணின் பெருமைகள் கல்வி, கேள்விஞானம், சாதுரியம் போன்றவை அர்த்தமற்றதாகி விட, ஆணுடன் இணைந்த/இணையாத தன்மைகளே அவளது பெரும் பொருட்டாக ஆகிவிடுகிறது. ஆணுக்கு சமூகம் அளித்த அந்தஸ்து, அதிகாரம் ஆதிக்கம் இச் சொற்களினூடாக வெளிப்படுகிறது. ஒரு கருத்தியலைப் பிரதிபலிப்பவையாகவும் இவற்றை நாம் கொள்ளலாம். இச் சொற்களும், பதங்களும், சொல் வழக்குகளும் உருவாவதற்கு ஆண்களின் பங்களிப்பே முதன்மையாக இருந்தது என்பதையும் நாம் மறுக்க முடியாது.

தமிழ் மொழியோ, சமஸ்கிருத மொழியோ, ஆங்கில மொழியோ இந்த வளர்ச்சியைத்தான் காட்டுகிறது. இன்னுமொரு படி மேலே போய் அர்த்தப்படுத்தல் என்ற அடிப்படையில் இதன் இன்னுமொரு பண்பையும் நாம் இச் சொற்றொடர்கள் மூலம் கட்டவிழ்க்கலாம். இந்த ஆணுடன் சேர்ந்த, இணைந்த என்ற சொற்கள் எமக்குப் புலப்படுத்துபவை என்னவென்றால், பால்நிலைச் சங்கமம் உடைய/அற்ற பெண் என்பதே Sexual life உடைய/அற்ற என்ற பொருளில் அவை அமங்கலமாகவும், வாழ்விழந்தவளாகவும் வாழாவெட்டியாகவும் கருதப்படுகிறாள். இச் சொற்றொடர்களால் அவளுக்கு விடப்படும் வேண்டுகோள் இன்னுமொரு வாழ்வை, மங்கலத் தன்மையை, பால்நிலைச் சங்கமத்தைத் தேடாதே; மறுமணம் செய்யாதே என்பதே.

இவை ஆணை விலக்கிவிட்டன. பெண்ணின் பால் [illegible]

நீ அதை அனுபவிக்கும் ஆவலை/தேடை- [illegible] போடவேண்டும். இந்த உடல் சம்பந்தப் பட்ட பெண்மையின் பெயர்தான் 'கற்பு' என மாறி உருவெடுத்தது.

## கற்பு என்ற சொல்லின் பொருண்மை வளர்ச்சி

கற்பு என்பதற்கு அடியொற்றிய பொருள் கற்றல், கற்பிக்கப்பட்டது என்பனவே. கற்பின் பொருள் காலத்துக்குக் காலம் ஆளுக்கு ஆள் வேறுபட்டு வந்துள்ளது. அதனால் இப்போது இதனைப் பற்றியே ஒரு முழுமையான கோட்பாடும் ஒரு பரந்துபட்ட கருத்தாக்கச் சட்டமும் உள்ளன. "களவுக் கூட்டத்துக்குப் பின் தலைவன் தலைவியை விதிப்படி மணந்து இல்லறம் புரியும் ஒழுக்கம் " என 'தமிழ் லெக்சிக்கன்' கற்பு என்ற சொல்லின் பொருளை விளக்குகிறது. தொல்காப்பியர் கற்பு என்பதை கொள்வதற்குஉரிய தலைவனுக்கு கொடுப்பதற்கு உரித்துடைய பெற்றோர் தலைவியைத் தத்தம்செய்து கொடுத்தல் என்று வரையறுக்கின்றனர்.

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொள்ளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே.
என்பது தொல்காப்பியச் சூத்திரம்.
(தொல்பொருள்:142)

அக் காலத்தில் கற்பு திருமண விசுவாசத்தை மட்டுமே குறித்தது. ஆண்களும் பெண்களும் திருமணத்துக்கு முந்திய களவுக் காதல் உறவில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்த அக் காலகட்டத்தில் திருமணத்துக்கு முந்திய கன்னித்தன்மை பொருட்படுத்தப் படவில்லை. இந்த முரண் சுவையானது. தாய்த்தெய்வம் ஒரு கன்னியாக இருந்த அதேவேளை, கன்னித் தன்மை பெண்களிடம் எதிர்பார்க்கப்பட்ட ஒரு பண்பாக அமையவில்லை. கன்னித்தன்மை கற்பின் ஒரு பகுதிப் பொருளாக பிற்காலத்தி லேயே சேர்க்கப்பட்டது. மனுவின் சட்டவிதிகளில் விரிவாகக் கூறப்பட்டவாறான உயர்சாதியினரின் திருமணச் சடங்கின் ஒரு பகுதியான 'கன்னிகா தானம்' பிராமணர்களின் திருமண சம்பிரதாயங் களின் ஊடாக சங்ககாலத்தின் பின்னரே இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும் ஏதோ ஒருவகையில் கட்டுப்பாட்டுக்கு உட்படாத எல்லா உணர்வு உந்தல்களையும் கட்டுப்படுத்தல் என்ற வகையில் இப்போது கற்பின் பொருள் விரிவாக்கப்பட்டது (புறம்:196) சாந்தம், அமைதி, மென்சொல், பேச்சில் துடுக்கைத் தவிர்த்தல் போன்ற பண்புகள் கற்புடைப் பெண்ணின் குணங் களாக அமைந்தன. (ஹார்ட்1975:97).

கற்பு உடல் தூய்மையை மட்டும் கருத வில்லை. ஒரு ஒழுக்கக் கோவையையும் உள்ள டக்கியது. இதனை மீறுவது உடல் தூய்மையை மீறுவதற்குச் சமமானது என்பது அதன் உட் கிடையாக அமைந்தது.

கணவன் மனைவியருக்கிடையே நிலவிய தலைவன்-தலைவி என்ற சமூக சமத்துவ உறவு இப்போது கடவுள்-அடியான், ஆண்டான்-அடிமை இடையிலான ஒரு படிநிலை உறவாக மாறு கின்றது. கணவன் தெய்வமாகவும் பதியா-கவும் தோற்றமளிக்கின்றான். இந்த மாற்றம் திருக் குறளில் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்குறள் தமிழில் எழுந்த முக்கியமான நூல்களில் ஒன்றாகும். தமிழரின் வேதமாகவும் அது கருதப்படுகிறது. அரசியல், இலக்கியம் பண்பாடு முதலிய எல்லாவகையான சொல்லாட லிலும் பெரிதும் மேற்கோள் காட்டப்படும் நூல்களுள் அதுவும் ஒன்றாகும். சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒழுக்கம், மதம் சார்ந்த உண்மைகளைக் கூறும் ஆயிரத்து முந்நூற்றி முப்பது குறட்பாக்களை அது கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் வாழும் தமிழ் இந்துக்கள் தமக்கென்று ஒருமுகப்பட்ட சமய விதிகள் இல்லாத நிலையில் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு திருக்குறளையே பயன்படுத்துகின்றனர். இது தமிழ்ச் சமூகம் அதனைப் பூரணமாக ஏற்றுக் கொண்டது என்பதைக் காட்டுகிறது. தெய்வத்தைத் தொழாது கணவனையே தொழுது வாழும் ஒரு கற்புடைய பெண் "பெய் என்று சொன்ன மாத்திரத்தில் மழை பெய்யும்" என திருக்குறள் கூறுகின்றது.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெ-
தழுவாள்
பெய் எனப் பெய்யும் மழை" என்ற குறளின் பொருள் இதுவாகும்.

இது சங்ககாலப் பிற்பகுதியில் நிலவிய கற்புப் பற்றிய கருத்தின் வளர்ச்சியாகும். இக் காலகட்டத்தில் கற்பு கடவுட்தன்மை பெற்று விட்டது. கடவுள் சான்ற கற்பு (புறம்198) கடவுட் கற்பு என அடைமொழியுடன் வழங்கப்பட லாயிற்று.

கற்பின் பொருள் பின்னர் மேலும் விரிவாக்கப் பட்டது. உடல்தூய்மை என்ற நிலையில் இருந்து மனத்தூய்மை என்ற நிலைக்கு இதன் பொருண்மை மாற்றமடைந்ததை இப்போது காணமுடிகின்றது. இக் காலகட்டத்தில் பிற ஆடவனை மனத்தாலும் நினையாது தனது மனதைக் காப்பது பெண்ணின் கற்புப் பற்றிய வரைவிலக்கணத்தின் ஒரு பகுதியாக மாறு கின்றது. இது சங்ககாலத்தின் பின் தோன்றிய திருக்குறளிலேயே வலியுறுத்தப்படுகின்றது.

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை" என்று திருவள்ளுவர் கூறியுள்ளார்.



**ஆண்களும் பெண்களும் திருமணத்துக்கு முந்திய களவுக் காதல் உறவில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்த அக் காலகட்டத்தில் திருமணத்துக்கு முந்திய கன்னித்தன்மை பொருட்படுத்தப் படவில்லை., கன்னித்தன்மை பெண்களிடம் எதிர்பார்க்கப்பட்ட ஒரு பண்பாக அமையவில்லை. கன்னித்தன்மை கற்பின் ஒரு பகுதிப் பொருளாக பிற்காலத்திலேயே சேர்க்கப்பட்டது.**

பெண்களின் கற்புப் பற்றிய இந்த அதீத எதிர்பார்ப்பு, கவிஞர்களையும் இலக்கண ஆசிரியர்-களையும் கற்புப் பற்றிய விரிவான வரைவிலக்கணம் கூறத் தூண்டியுள்ளது. சங்க காலத்தின் பின்னர் சிலப்பதிகாரத்தின் மூலமும் அதன் தலைவி கண்ணகி மூலமும் இத் தெய்வீகக் கற்பு அழியா நிலை பெற்றது. கண்ணகியின் உறுதி குலையாத கற்பு ஓர் அரசை அழிக்கும் ஆற்றலை அவளுக்கு வழங்கியது. கற்புத் தெய்வம் (பத்தினித் தெய்வம்) என அவள் வழிபடப்பட்டாள். இந்தியாவிலும் இலங்கையிலும் அவளுக்கு கோவில்கள் கட்டப்பட்டன. சங்ககாலத்தின் பின்னர் இவ்வகை அதீத ஆற்றல்கள் கற்புடன் தொடர்புபடுத்தப்பட்டன. சுய கட்டுப்பாடு, நெஞ்சுரம் ஆகியவற்றின் விளைவாக ஓர் உள்ளார்ந்த ஆற்றலாக அது சிறப்பிக்கப்பட்டது. காவியத் தலைவி கண்ணகியும், நாட்டார் மரபில் வந்த நல்ல தங்காளும் கற்பின் இத்தகைய ஆற்றலுக்கு உதாரணங்களாகும். நிரபாரதியான தன் கணவனைக் கொன்று அநீதி விளைவித்த அரசனைத் தண்டிப்பதற்கும், மதுரையை எரிக்கவும் கண்ணகிக்கு ஆற்றல் தந்தது அவளது கற்பின் திண்மைதான். நல்லதங்காள் ஈரவிறகை எரியச் செய்தாள். இங்கு நெருப்புப் பற்றிய குறிப்பு தற்செயலான ஒன்றல்ல. அழிக்கும் ஆற்றலுக்கும் ஆக்கும் ஆற்றலுக்கும் அது குறியீடாக உள்ளது.

தொல்காப்பியர் கற்பினை மிக உயர்நிலையில் வைத்துப் பேசுகின்றார். அச்சம், மடம், நாணம் என்பன பெண்களுக்குரிய குணம் என அவர் கருதுகிறார்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப" (தொல்பொருள்:99)

இது தொல்காப்பியச் சூத்திரம். "நாணம் உயிரினும் சிறந்தது" என்றும், "நாணினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தது" என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார்.
(தொல்பொருள்:111)

கற்புடைப் பெண்டிரை அவர் மூன்று வகையாகப் பாகுபடுத்துகின்றார் -முதானந்தம், புறங்காடு, தாபதநிலை என. தன் கணவன் இறந்தான் என்பதைக் கேட்ட அல்லது அறிந்த உடனேயே தன்னையும் மாய்த்துக் கொள்ளும் பெண் கற்பின் உச்சநிலையை எய்தியவளாவாள் (மூதானந்தம்). தன் கணவனின் சிதையில் உடன்கட்டை ஏறுபவள் இரண்டாம் நிலைக்குரியவள் (புறங்காடு). கைம்மை நோன்பை வழுவாது பேணி வாழ்பவள் மூன்றாம் நிலைக்குரியவள் (தாபதநிலை).

தொல்காப்பியர் காலத்து அல்லது அதற்குப் பிந்திய நூலான சிலப்பதிகாரம் முதல் வகையான கற்புக்கு உதாரணம் தருகின்றது. தன் கணவன் இறந்ததைக் கண்ட உடனேயே பாண்டியன் மனைவி தானும் வீழ்ந்து இறக்கின்றாள்.

சங்க காலத்தின் பின்னர் சங்க இலக்கியங்களுக்கு உரைகள் எழுதப்பட்டன. கற்பு என்ற சொல்லின் சொற்பிறப்பு தெளிவற்றதாகவும் மயக்கம் தருவதாகவும் உள்ளது. இதன் அடிச்சொல்லான கல் என்பது கற்றல் என்ற பொருள் உடையது. இது கற்பு என்ற பொருளில் இருந்து முற்றிலும் வேறானது. ஆனால் புகழ்பெற்ற சங்க இலக்கிய உரையாசிரியரான நச்சினார்க்கினியர் சற்றே மரபுக்கு புறம்பான வகையில் இந்த இடைவெளியை நிரப்ப முயன்றுள்ளார். கற்பு என்பதை அவர் பெண்களுக்குக் கற்பிக்கப்படுவது என வரையறுக்கின்றார். அவரது வரையறை பின்வருமாறு:

கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை
இன்னவாறே வழிபடுகவெனவும் இருமுது குரவர்
கற்பித்தலானும் அந்தணர் திறத்துஞ் சான்றோர் தேஎத்தும்
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம்
தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று...

இவளை இன்னவாறு பாதுகாப்பாயெனவும்
இவளிற்கு இன்னவாறே நீ குற்றேவல்
செய்தொழுகெனவும்
அங்கியங் கடவுள் அறிகரியாக
மந்திரவகையாற் கற்பிக்கப்படுதலின்
அத் தொழிலைக் கற்பென்றார்
(தொல்பொருள்:142 நச்சினார்க்கினியார் உரை)

கற்பழிப்பு என்ற சொல் பலாத்காரமாக ஒரு பெண்ணுடன் உடலால் தொடர்பு கொள்ளல் என்ற கருத்தில் இன்று பயன்படுத்தப்படுகிறது. பலாத்காரத்தால், உடல்வலிமையால், கொடுர ஆண்மையால் ஒரு பெண் மானபங்கப்படுபத்தப் பட்டால் அவள் எப்படி தன் கற்பு என்று சொல்லப் படும் வஸ்துவை இழக்கலாம்?. அந்தக் கற்பு அழிக்கப்படுபவருக்கு நாமகரணம் சூட்டப்படும் அதேவேளை, அந்த ஆணைக் கற்பிழந்தவன் என்று கூறும் மரபில்லை. அவன் காமுகன் என்றோ, “சேறு கண்டவிடத்து சேறை உழக்கி தண்ணி கண்டவிடத்து காலைக் கழுவும் ஆண் இயல்புடைய ஓர் ஆண்மகன்” என்றோ அவன் இயல்பு இயற்கை நிலைக்குள் வைக்கப்படுவான்.

சமுதாயப் பண்பை வெளிப்படுத்தும் முகமாகவே தான் பரத்தை, வேசி, தாசி, விபச்சாரி, கூத்தி, சறுக்கி விழுந்தவள் போன்ற சொற்களுக்கு ஆண்பாற் பதங்கள் தோன்றவில்லை. அப்படி நாம் தோற்றுவித்தாலும் அவை அந்த அர்த்தத்தை தரமாட்டா. தாசன், கூத்தன் என்பன உடலை வைத்துச் சொல்லப்பட்ட கருத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கம்பதாசன், பாரதிதாசன் என்பன நிச்சயமாக ஓரினச் சேர்க்கையைக் குறிப்பன அல்ல!

உடலோடு, கருத்தரிக்கும் ஆற்றலோடு சம்பந்தப்பட்ட மலடி என்ற சொல்லுக்கு மலடன் என்ற ஆண்பாற் சொல் வழக்கில் இல்லை. விஞ்ஞானம் வளர்ந்ததால் அத் தன்மையை ஆணிடமும் இனங்கண்டதால் ஆண்மலடு என்ற ஒரு சொல் உருவாக்கம் நடந்தேறியுள்ளது. இது, “பெண்பாற் புலவர்” என புலவருக்கு -புலவி என்று கூறாமல்- பெண்பால் ஏற்றியதை ஒக்கும். ஔவையும், காரைக்கால் அம்மையாரும் தோன்றியிருந்தாலும் பெண் புலவரைக் குறிக்கும் சொல் தோன்றவில்லை. எண்ணிக்கை ரீதியில் இவர்கள் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

### சடப்பொருளாதல்:

கோதானம், பூதானம் போல் பெண்ணை தானம் செய்தலை கன்னிகாதானம் என்று கூறுவர். இது சமயச் சடங்குகளினுடாகத் தானமாக அளிக்கப் படுவதால் அப் பெண்ணை வாழ்நாள் முழுக்க ஆணுக்கு ஏவல் செய்யும் ஒப்பந்தம் அவனுக்கு அளிக்கப்படுகிறது. திருமணம் சமத்துவமற்ற தன்மையில் 33 தேவர் மத்தியிலும் நடந்தேறினா லும் அந்த தான மனப்பான்மை உடமைப்பொருள் என்ற ரீதியில் அவளை நடத்த முற்படுகிறது.



**கற்பழிப்பு என்ற சொல் பலாத்காரமாக ஒரு பெண்ணுடன் உடலால் தொடர்பு கொள்ளல் என்ற கருத்தில் இன்று பயன்படுத்தப்படுகிறது. அந்தக் கற்பு அழிக்கப்படுபவருக்கு நாமகரணம் சூட்டப்படும் அதேவேளை, அந்த ஆணைக் கற்பிழந்தவன் என்று கூறும் மரபில்லை.**

அவள் எப்பொழுதும் மனைவி, இல்லாள், மனையாள் என்று வீட்டுடன் தொடர்புடையவளாக இருக்கிறாள். கணவனுக்கு துணைவியாக அன்றி வீட்டுக்குரியவளாக ஆக்கப்பட்டுவிட்டாள்.

எனது ஆய்வொன்றில் கணவனை இழந்த ஒரு பெண் தன்னைக் குறித்து, தனக்குக் கேட்க வேண்டும் என்ற ஒரே காரணத்தினால் தன்னைப் பற்றி முன்னிலையை படர்க்கையாக்கி “ஏன் அது முன்னால் போய் நிற்குது” என்று கூறியதைக் கண்கலங்கி என்னிடம் கூறிய பொழுது, அந்த ஆணுடன் இணையாத தன்மை அப் பெண்ணை உயர்திணை நிலையிலிருந்து இறக்கி அ.்.றிணையாக்கிவிட்ட கொடுரத்தை மிகவும் துக்கத்துடன் உணர்ந்தேன்.

### இழி பொருளாக்கல்

பேதமை நிறைந்தவள் பெண் என்பதைக் குறிக்க பெண்ணை பேதையாக்கி விட்டனர். பெட்டைக் கழுதை என்று ஒரு பெண்ணைக் குறிக்கும் பொழுது கழுதையே கேவலமானது; அதிலும் பெட்டைக் கழுதை இன்னும் கேவலமானது; அதுவே நீ என்று சொல்லாமல் சொல்லும் பண்பை இச் சொற்றொடர் குறிக்கிறது.

### பால்நிலை வேறுபாடுகள் அசமத்தவ கோட்பாடுகளாக சமூக அமைதி காணல்

பெண்ணின் பால்நிலையை அடிப்படையாகக் கொண்டு பல அர்த்த பேத சொற்றொடர்கள் தொகுக்கப்பட்டன. ‘குமர் கரையேற வேண்டும்’ என்ற சொற்பதம் சாதாரண சொல் வழக்காக வீட்டிலும் சமூகத்திலும் பெற்றோராலும் ஏனையோராலும் மிகவும் துன்பத்துடனும் ஈடுபாட்டுடனும் கூறப்படுவதை நாம் கேட்கிறோம். இதை நாம் அர்த்தப்படுத்தினால் பல உண்மைகள் வெளிப்படும். கன்னி ஒருத்தி ஆணைச் சேராமல் இருக்கும் நிலையை இந்த குமர் (குமரி) என்ற சொல் வெளிப்படுத்துகிறது. கரை என்பது யாது...அவள் நடுக்கடலில் நின்று தத்தளித்துக் கொண்டிருக்கிறாள்; அவளைக் கரைக்குக் கொண்டு வர வேண்டும்; இந்த நடுக்கடல் ஆழம் நிறைந்தது, அவள் அதில் மூழ்கிவிடுவாள்; அவளை கவனமாக கரைசேர்க்க வேண்டும். இது பெற்றோரினதும் சமூகத்தினதும் கடமையாகிறது.

இந்த ஆழமான நடுக்கடல் யாது? அவளை அலைக்கழிக்கிறது என்று கருதப்படுவது யாது? அவளது பெண்மை, உடலோடு சம்பந்தப்பட்ட பால்நிலைப் பெண்மை, அது கட்டுப்படுத்தப்

படவேண்டும்; கரைபுரள விடக்கூடாது; ஆணுடன் சேர்க்கப்பட்டால் அது கரையை அடைந்துவிடும்; அப் பெண்மை ஒரு கட்டாய நியதிக்கு கட்டுப் படுத்தப்பட வேண்டும் என்ற அர்த்தங்களை வெளிப்படுத்தும் இச் சொற்றொடர் பெண்ணுக்கு பல அநீதிகளை உண்டாக்குகிறது. கல்வி, மேன்மை, உத்தியோகச் சிறப்பு, ஆளுமை போன்றவை பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. அவளை ஆணுடன் சேர்த்து அவசரமாக அவளது பெண்மையை கட்டுப்படுத்தி கரை சேர்க்க வேண்டும் என்ற சம்பிரதாயம் பெரு வழக்காக வந்துவிட்டது.

சமூகப் பெறுமதிகளையும் நடத்தை வழி முறைகளையும் இளஞ் சந்ததியினர் கற்று தங்களது நடை, உடை, பாவனைகளை நெறிப் படுத்தும் பொழுது இருமுனைப்பட்ட செயற் பாடுகள் ஏற்படுகின்றன. ஒன்று தங்களுக்குள் தங்கள் பரம்பரை தந்த கலாச்சார பரிமாணங் களை ஏற்றுக்கொள்ளல், அதன்படி நடத்தல்; அடுத்து அதே பரிமாண எல்லைகளை மற்றவர் கள் மீதும் திணித்தும், உபயோகித்தும் அவற் றிற்கு சமூக கலாச்சார அந்தஸ்தை அளிப்பது.

இவ்விரண்டு செயற்பாடுகளும் தங்களைக் தாமே அறியாமல், உள்ளுணர்ச்சியில் (Con-sciousness) கேள்விகளை எழுப்பாமல் தர்க்க ரீதியில் ஒரு விசாரணை செய்யாமல் ஒன்றிணைத்து விடுகிறது. கருத்தியலின் தாக்கமாக இது வருவதற்கு அந்தக் கருத்தியல் அதிகார, ஆதிக்கமேல் அந்தஸ்தைப் (Hi-gemonic) பெற்றதே காரணம். அந்த மேல் அந்தஸ்தைப் பெறுவதற்கு, சமூகத்துடன் ஒன்றிணைவதற்கு, சமூகத்தால் ஏற்றுக் கொள் ளப்படுவதற்கு அக் கருத்தியலை அனுசரிக்க வேண்டியிருப்பது ஒரு தேவையாக ஆகிவிட்டது.

இதனால் தான் தங்கள் மகள்மாரைக் கூட, தங்கள் தங்கைகளைக்கூட வாய்கூசாமல், மனம் நோகாமல் விதவை என்றும் விதவைக்கோலம் பூணுவதற்கும் தந்தையரும், தமையன்மாரும் சமுதாயத்தோடு இணைகின்றனர். 'கற்பிழந்த' மகள் ஒருத்தியை வீட்டை விட்டு வெளியேற்றும் தந்தையும், அரிவாளால் வெட்டிவிடும் தமை யனும் தமிழ்ச் சினிமாப் படங்களின் கதாபாத் திரப் படைப்புக்கள் மாத்திரமல்ல, நடைமுறைச் சித்திரங்களும் கூட. 'கற்பிழந்த' என்ற சொற் றொடரும் அதன் கருத்தியலும் எந்தளவிற்கு அந்த வெட்டுக் கொத்துக்கு காரணமானது என்ப தற்கு ஆழ்ந்த ஆய்வுகள் எதுவும் தேவை யில்லை.

கன்னிக்கெதிரான ஆண்பால் சொல்லை உருவாக்காத தமிழ்க் கலாச்சாரம் காளை என்ற சொல்லை உபயோகிப்பது சகஜமாகிவிட்டது. காளை என்பது ஆண்மை, வீரம், அடங்காத் தன்மை, இளமைத் துடிப்பு போன்றவற்றின் குறியீடு. மாடு என்று சொல்லாமல் காளை என்று சொல்லும் பொழுது மேற்கண்ட குணாதி-சயங் களை நாம் அனுமானிக்கிறோம். ஆக, ஆடவன்/இளைஞன் இப்படித்தான் இருப்பான்; ஆண்மை, அடங்காத்தன்மை அவனுக்கு இருக்க வேண்டும்; ஆகையால் அவை அவனது இயற்கைக் குணங்களாக எடுக்கப்பட்டு அவன் ஏறுமாறாக நடந்திருந்தால் அக் குணங்களின் இயற்கைத் தன்மையை முன்னிட்டு அவன் மன்னிக்கப்பட வேண்டும்; சமுதாய ஏற்பு அவனுக்கு மறுக்கப்பட தேவையில்லை என்ற தத்துவம் தோன்றியது.


பெண்மை புகையிலை போல விரிக்கப்படாமல், சிரிக்காமல் ஒதுங்கிப் பயந்து நடக்காவிட்டால் 'சறுக்கி விழுந்து' விடுவாள்; ஏனெனில் பாதை எல்லாம் அவளை வழுக்கச் செய்யும், சறுக்கச் செய்யும்; பாழ்பட்ட ஆண்மை தேன் குடிக்கும் வண்டாக, காளையாக பரிணமித்திருக்கிறது. கன்னி, காளை, வழுக்கி விழுதல் போன்ற சொற்களின் கருத்தியல் பால்நிலைப்பட்ட வே-றுபாடுகளை மிக அழுத்தி விளக்குகிறது.

10 வயது தொடக்கம் 14 வயது வரை ஏற்படக கூடிய உடல் மாறுபாடு, 'சமைஞ்சுவிட்டாள்', 'பூப்பெய்திவிட்டாள்', 'சாமர்த்தியப் பட்டுவிட்டாள்', 'பெரியபிள்ளையாகி விட்டாள்' எனப் பலவாறு அவளது உடற்கூற்றில் ஏற்படும் மாறுதலை, வாழ்க்கையின் பெரும்பகுதியில் அவளுக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் ஒரு சாதாரண நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்தி சடங்காக்கி விட்டன. பெண்ணின் பால்ய பருவத்தில் ஒரு மனரீதியான, உடல்ரீதியான பாரத்தைச்



சுமத்துவதற்கு என்று பொறுக்கி எடுக்கப்பட்ட சொற்றொடர்கள் இவை. இதனால் சிறு பெண்களில் பலர் தங்களது பாலியத்தைத் தொலைக்கிறார்கள். கன்னிப்பட்டம் இவளுக்கு வழங்கப்பட ஆண்மகனுக்கு காளை என்ற பட்டம் வழங்கப்படுகிறது. இதன் தாற்பரியம் பால்நிலைப்பட்ட ஒரு பெரிய அநீதியாகத் தோற்றுகிறது. சொற்களும், சொற்றொடர்களும், பழமொழிகளும் பல கருத்தியல்களை, சமூக வழக்குகளை, பல அசமத்துவ நிலைப்பாடுகளை நிலைநிறுத்துவதாக, பின் அவற்றை நியாயப்படுத்துபவையாக ஒரு படிமுறை நிலையை வரலாற்றில் இடம்பெறச் செய்கின்றன. நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமூக நிலையை பிரதிபலிக்கும் சொற்கோர்வைகள் ஒருபக்கமும், நடந்து கொண்டிருக்கும் போராட்டங்களையும், முரண்பாடுகளையும் படம் பிடிக்கும் சொற்கோர்வைகள் இன்னொரு பக்கமுமான அவை வளர்ந்து கொண்டே போகும். இச்

Pennkalchanthipumalar@yahoo.com.au





அடுத்த பெண்கள் சந்திப்பு மலர் 2002/05 இல் வெளிவருகிறது.

அஞ்சல்வழித்
தொடர்பு
-கீழுள்ள-
சக்தி முகவரி.


**TP. 0047 23 30 06 76**

web
http://www.geocities.com/pennsakthi
email
sakthinorway@online.no



**Sakthi,**
**Boks 99 Oppsal,**
**0619 Oslo**
**Norway**

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை



இல.20டயஸ் வீதி,
மட்டக்களப்பு.

**TP. 065 -23297**

# ஒரு தேவதாசியின் கதை

ஞானபாரதி

உலகெங்கும் இருக்கும் பாலியல் தொழில், இந்தியாவிலும் இருந்திருக்கிறது. பெயர் மட்டும் உயர்வு நவிற்சி அணியில் ‘தேவதாசி முறை’. தேவதாசி முறை ஆரம்ப காலத்தில் கலாச்சாரம், பண்பாடு இவற்றையெல்லாம் மீறி குறிப்பிட்ட மதம், குறிப்பிட்ட ஜாதி சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. வேதங்களிலும் காப்பியங்களிலும் இதை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் பல இடங்களில் தெரிகிறது. பழங்கால இந்தியாவில், பணக்கார சமூகம், மற்றும் நகர கலாச்சாரத்தில் கூட இவை ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.



ஓவியம்: அருந்ததி ரட்ணராஜா

ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளிலும் இந்த வழக்கம் இருந்திருக்கிறது. அதாவது ஒரு பெண் பெரியவளானதும் அவள் வசதி வாய்ப்பு, அந்தஸ்தில் குறைந்தவளாக இருந்தால் அவளை பெரிய குடும்பத்தில், குறிப்பாக உயர்சாதிக்காரர்களிடம் கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. முகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இதனை புதுவிதமாகக் கையாளத் தொடங்கினர். இவர்களை அந்தப்புரத்தில் (harems) அடைத்தனர். அதுமட்டுமல்லாமல் வெவ்வேறு வயதுடைய பெண்கள் இரவு நேரங்களில் இங்கு வந்து செல்வார்களாம். இதற்குப் பிறகும் கூட ராஜாக்கள், நவாப்புகள், ஜமீன்தார்கள் எனப் பலரும் இதனைத் தொடர்ந்து செய்து வந்திருக்கின்றனர்.

அதன் பிறகு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்த ‘விபச்சாரத்தை’ அதிகமாக நடத்துபவர்கள் ஐரோப்பியப் பெண்களும் சில நகரத்துப் பெண்களுமாகவும் இருந்திருக்கின்றனர். சுதந்திரத்திற்குப் பிறகும் பாகிஸ்தானிலிருந்து வந்த மக்கள் தொகைப் பெருக்கமும் இருந்ததால் எந்தவித தடங்கலும் இல்லாமல் நிறையப் பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டனர். இந்த நேரத்தில் இது வெளிப்படையாகவும் சில இடங்களில் மட்டும் ரகசியமாகவும் நடைபெறத் தொடங்கியது.

‘தேவதாசி’ முறை போற்றப்பட்ட காலத்தில் இவர்களுக்கு மாநிலங்கள் மாவட்டங்கள் வாரியாக நிறைய பெயர்கள் சூட்டியிருக்கின்றனர். அவற்றில் முக்கியமானவை ‘ராஜவேசியர்கள்’ ‘நாகாரிகள்‘, ‘குப்தவேசியர்கள்‘, ‘தேவவேசியர்கள்‘, ‘தீர்த்தகர்கள்‘ அல்லது ‘பிராமவேசியர்கள்‘.

இதுமட்டுமல்லாமல் ’’காமசூத்ரா’’ மாதிரியான நூல்களில் வாத்யாயனா உடலுறவுக்கான முறைகளைக் கூறுவதோடல்லாமல் இந்த ‘விபச்சாரிகளை’ மூன்று வகுப்புகளாகப் பிரித்திருக்கின்றனர்.



கணிகையர்கள்:

இவர்கள் சமுதாயத்தில் ஒரு சிறப்பான அந்தஸ்தைப் பெற்றிருந்தனர். இந்தப் பெண்கள், ஆய கலைகள் அறுபத்து நான்கையும் கற்றதோடல்லாமல் மன்னர்களாலும் கவிஞர்களாலும், கலைஞர்களாலும் பாராட்டப்படக் கூடியவர்கள்.

ரூபாஜிபி:

இவர்கள் உடல் அழகில் கவர்ச்சியுடனும் இளமையுடனும் உடல் இச்சைகளில் சிறந்தவர்களாகவும் இருப்பவர்கள்.



மூன்றாமவர்கள் மற்ற விஷயங்களில் நாட்டமில்லாமல் தங்கள் இளமையையும், உடலையும் பணத்திற்கு விற்கத் தயாராக இருப்பவர்கள்.



இதன்படி பார்த்தோமானால் இந்த ‘விபச்சாரிகள்’ பணத்தை மட்டும் சம்பாதிக்கும் நோக்கமில்லாமல் காதலை சம்பாதிப்பவர்களாகவும் கலையின் மீது விருப்பமுள்ளவர்களாகவும் இருந்திருக்கின்றனர் என்றே தெரிகிறது.

இந்த தேவதாசிகளுக்கென கோவில்களும் களிப்புறுவதற்கென உல்லாச இடங்களும் மட்டுமே இருந்து வந்த காலகட்டத்தில், முதன்முதலில் தைரியமாக மேடையேறிப் பாடிய பெண் நாகரத்தினம்மாள். சங்கீத மும்மூர்த்திகளில் முதலாமவராகத் திகழும் தியாகராஜ சுவாமிகள் காவிரிக் கரையில் திருவையாற்றில் ஒரு மரத்தடியில் அமர்ந்து கிருதிகளை இயற்றிப்பாடி அங்கேயே அடக்கமானார். தியாகராஜரின் சமாதி இருந்த இடம் கவனிப்பாரற்று புல்லும் பூண்டும் வளர்ந்து கிடந்தது. இதனைக் கண்டு வேதனையுற்றுப் பல இடையூறுகளுக்கு இடையில் சமாதி நிலத்தை விலை கொடுத்து வாங்கி அந்த இடத்தில் கோயில் கட்டி 1925 இல் கும்பாபிஷேகம் செய்தவர் பெங்களூர் வித்யாசுந்தரி நாகரத்தினம்மாள். இவருடைய சமாதியும் உருவச் சிலையும் தியாகராஜ ஐய்யர் சமாதிக்கு எதிரே சிறிய அளவில் இருப்பதை இன்றும் காணலாம். நாகரத்தினம்மாளின் வாழ்க்கை சுவையானது.

பெங்களூரைச் சேர்ந்த நாகரத்தினம்மாள் கணிகையர் குலத்தில் தோன்றியவர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மூன்று மொழிகளிலும் புலமை மிகுந்தவர். தெலுங்கில் ‘மத்யபானம்’ சமஸ்கிருதத்தில் ‘ஸ்ரீ தியாகராஜ அஷ்டோத்திர சதநாமாவளி’, தமிழில் ‘பஞ்சீகரண பௌதீக நூல்’ முதலியவைகளை எழுதியவர். சி.எஸ் ராஜரத்தின முதலியார் என்பவர் ஆதரவில் வசித்து வந்த நாகரத்தினம்மாள் தனது இறுதிக்காலத்தில் சொத்துக்கள் அனைத்தையும் விற்றுவிட்டு திருவையாற்றில் வந்து தங்கி தியாகராஜரின் புகழ் பரப்பி அவர் காலடியிலேயே அடக்கமானார்.

கணிகையர் மரபுக்கேற்ப தந்தை பெயர் குறிப்பிடாமல் ‘பெங்களூர் புட்டலக்சுமி அம்மாள் மகள் வித்யாசுந்தரி நாகரத்தினம்மாள்’ என்று அவரது பெயர் குறிக்கப்பட்ட புகைப்படத்தை இன்றும் கூட தியாகராஜ ஐய்யர் சமாதியில் காணலாம். முதன்முதலாக மேடையேறிப் பாடிய பெண் என்கிற பெருமையோடு தியாகராயர் ஆராதனையில் முதன்முதலில் பெண்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவரும் நாகரத்தினம்மாள்தான்.

இதுவரை நாகரத்தினம்மாளைப் பற்றி பார்த்த செய்திகள் ஓரளவு தமிழ் உலகம் அறிந்த ஒன்று. பலருக்கும் தெரியாத நாகரத்தினம்மாளின் இன்னொரு பாகத்தை சமீபத்திய பெண்ணுரிமை சிந்தனையாளர்கள் சிலர் வெளிப்படுத்தியுள்ளனர்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தஞ்சையை ஆண்ட பிரதாப சிம்மன் அவையில் ஆடல்நாயகியாக இருந்தவர் முத்துப்பழனி. இவரும் கணிகையர் குலத்தைச் சேர்ந்தவர்தான். பேரழகி

மட்டுமல்ல பெரும் புலவரும் கூட. தெலுங்கில் அவர் எழுதிய கவிதை நூல் ‘ராதிகாசாந்தவனம்’. இது கண்ணன், ராதை காதல் லீலைகளை மையமாக்கிப் பாடப்பட்ட காதல்காவியம். பலரும் கண்ணன், ராதை உறவை மையமாக வைத்து எழுதினாலும் அவையனைத்தும் ஆண்நோக்கிலிருந்து ஆணின் உணர்வுகளை முதன்மைப்படுத்தி எழுதப்பட்டவையாக இருக்கும். முத்துப்பழனியின் கவிதைகளோ பெண்ணின் உணர்வுகளை மையமாக வைத்து எழுதப்பட்டவை. முன்னோடியான பெண்ணிய நூல்களில் ஒன்றாக இதைக் கருத முடியும் என்கிறார் பேராசிரியர் சுசிதாரு. இந்த நூலின் பதிப்புகள் சரிவர இல்லாததைக் கண்ட நாகரத்தினம்மாள் 1910 இல் இதனை மறுபதிப்புச் செய்கிறார்

முன்னுரையில், “மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் நூல் இது. ‘ரசம்’ ததும்பும் இக் கவிதையை எழுதியது ஒரு பெண் மட்டுமல்ல, நமது சமூகத்தை (கணிகை) சேர்ந்தவள். சரியான வடிவில் இதைப் பதிப்பிப்பது தேவையானது எனக் கருதுகின்றேன்” என்று குறிப்பிடுகிறார்.

இந்நூல் வெளியீட்டை அன்று கடுமையாக சிலர் எதிர்த்தார்கள். அதில் முன்னணிப் பாத்திரம் வகித்தவர் பிரபல கன்னட சீர்திருத்தவாதியான சந்து கூரி வீரேசலிங்கம். தமிழில் பாரதியைப் போல கன்னடத்திற்கு விரேசலிங்கம். முதல் கன்னட நாவல்களை எழுதியவகளில் ஒருவர்.

நவீன கன்னட மறுமலர்ச்சி நாயகனான வீரேசலிங்கம்,

“இந்த முத்துப்பழனி ஒரு தேவடியாள். ஒரு பெண் காதால் கேட்கக்கூட முடியாத ஒரு கவிதையை வாயைத் திறந்து பாடியுள்ளது கொடுமை. சிருங்கார ரசம் என்ற பெயரில் கொச்சையாகப் பாலியல் விவகாரங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. தேவடியாள் குலத்தில் பிறந்த ஒருத்திக்கு ஒரு பெண்ணுக்குரிய இயற்கையான பண்புகள் எப்படி வாய்த்திருக்க முடியும்?” என்று சாடினார்.

ஒரு பெண் தனது ஆசைகளை வெளிப்படுத்துவது தவறு என்று காலம் காலமாக நிலவி வந்த ஆணாதிக்கக் கருத்தை வீரேசலிங்கமும், மற்றவர்களும் முன்வைத்துத் தாக்கினர்.

“இப்படி எழுதுவது தவறு என்றால் இதேபோல ஆண்கள் எழுதினாலும் தவறுதானே? இன்னும் பெரிய ஆண் கவிஞர்களெல்லாம் இதைவிட மோசமாக எழுதவில்லையா?” என்று நாகரத்தினம்மாள் விவாதித்துப் பார்த்தார். ஆனாலும் அவரால் வெற்றிபெற முடியவில்லை. வீரேசலிங்கமும் அன்றைய ஆணாதிக்க உலகும் புத்தகங்களை தடைசெய்வதில் வெற்றி கண்டது.

1911ம் ஆண்டு சென்னை காவல்துறை ஆணையர் கன்னிங்ஹாம் அந்த புத்தகங்களை ‘ஆபாசம்’ எனக் கூறி கைப்பற்றினார். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பிரகாசம் முதலமைச்சராக இருந்த பொழுதுதான் அந்தப் புத்தகத்தின் தடை நீக்கப்பட்டது. வித்யாசுந்தரி நாகரத்தினம்மாள் வீரேசலிங்கத்தை எதிர்த்து நடத்திய இந்தப் பெண்ணுரிமைப் போராட்டம் பலரும் அறியாத ஒன்று.

இந்த வரலாற்றுச் சம்பவத்தை ஆராயும் பொழுது நமக்கு இன்னொரு அம்சமும் கவனத்தை ஈர்க்கிறது. நமது வரலாற்றில் கவிஞர்களாகவும் அறிவாளிகளாகவும் இருந்த பல பெண்கள் இல்லற வாழ்க்கையிலிருந்து விலகி நின்றவர்களாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகவோ அல்லது நாகரத்தினம்மாள், முத்துப்பழனி போன்ற கணிகையர்களாகவோ தான் இருந்துள்ளனர்.

உடலிலும் உள்ளத்திலும் நொம்பலப்பட்டுக் கொண்டு சமூக நிர்ப்பந்தத்தால் உடல்விற்று வாழ்ந்த இவர்களின் நிலை பரிதாபத்திற்குரியது. ஆனால் பிறரின் தங்களுக்கான பரிதாபத்தை இவர்கள் ஒருபோதும் கோரியதில்லை. தம் வீட்டுப் பெண்ணை தங்கப்பூட்டு பூட்டிய அறைக்குள் வைத்துவிட்டு இவர்களை கீழ்மக்களாக நினைக்கும் மேலாதிக்கத்தனம் தான் இவர்களை மனாதியில் துன்புறுத்தி வந்திருக்கிறது.





# ஒத்து

**பாமா**

**சிறுகதை**

இல்லாமல்லி நல்லா பூசணிப்பழங் கெணக்கா குண்டு குண்டா, பாக்க மூக்கும் முழியுமா, செழிப்பாத் தெருஞ்சா. அவளுக்கு அஞ்சு அல்லது ஆறு வயசு இருக்கும். அவுக தெருவுல இருந்த மத்த பிள்ளைக மாதிரியே பள்ளிக்கொடம் போகாமெ தெருவச் சுத்திக்கிட்டு திருஞ்சா. அவுகம்மயும், அய்யனும் அன்னாடங் கூலிவேல செஞ்சாங்க. விடுஞ்சா வேலைக்குப் போயிட்டு பொழுதடைஞ்சா வீட்டுக்கு வருவாக. இல்லாமல்லிதான் அவளோட ஒன்றர வயசுத் தம்பியப் பாத்துக்குவா. வீட்டுவேலயும் செய்வா. தெனமும் கொழாய்ல தண்ணி புடுச்சு வப்பா. செலநாளு அடுப்பெரிக்க முள்ளும் பெறக்கிக் கொண்டாருவா.

தெருவுல பொம்பளைக அவளப் பாத்து அருவசப்படுவாக. மத்த பிள்ளைக கணக்கா பானைல வேகுற கஞ்சியத்தானெ இவளுங் குடிக்கா. பெறகெப்படி இப்படி சமஞ்சபுள்ள கெணக்கா உருண்டு தெரண்டு இருக்கான்னு பேசிக்கிருவாக.

“இவா பெறந்து ரொம்ப நாளா பிள்ள தங்காமெ இருந்துச் சுல்ல. அதுனால கெடந்தாளே. அதான் இப்பிடி குந்தாணி மாதிரி இருக்கா”

“இல்ல அவுக வம்சமே அப்பிடித்தா. அவுக பாட்டியைப் பாரு. அவகம்மையைப் பாரு. சதபுதான்னு இருக்காக. ஊளச்சத”

“நல்லா தெனந்தோறும் குளுச்சு, வளுச்சு இருந்தான்னா, மேகலக்குடி பிள்ளைக கணக்கா இருப்பா”

“இவா ஆளான ஒடனே பாரு எனக்கு ஒனக்குனு மாப்பிளைக போட்டி போட்டுக்கிட்டு பொண்ணு கேட்டு வருசயில நிப்பானுக”

இப்பிடிப் பலரும் பலமாதிரி சொல்லுவாக. எல்லாத்தையும் கேட்டுகிட்டு அவுகம்மெ சொல்வா ‘கடவுள் நல்லமாதிரித்தான் பிள்ளைகள்ளாம் குடுத்துருக்கார். ஆனா அதுகள நல்லபடியா வளத்து ஆளாக்கத்தான் நமக்கு வக்கு இல்ல. என்ன செய்றது?”

இல்லாமல்லி வயசுல இன்னும் ஏழெட்டுப் பிள்ளைக எப்பயும் ஒன்னாச் சேந்துகிட்டு அலைவாக. எல்லாரும் அவுகவுக தம்பியோ, தங்கச்சியோ தூக்கிக்கிட்டே திரிவாக. எங்க போனாலும் சேந்தே போவாக, சேந்தே வருவாக.

ஒருநாளு மதியம் மூனுமணிக்கு மேல இல்லாமல்லியும், மத்த பிள்ளைகளும் ஊருக்குத் தெக்க இருந்த ஓடைக்கு வெளிக்கிருக்கப் போனாக. வழக்கமா அங்கதான் பொம்பளைக போவாக. பொம்பளைக எப்பயும் விடியங்காட்டி, இல்லன்னா மசங்கவும் வெளிக்குப் போவாக. ஏன்னா அந்த ஓட கம்மாக்கரய ஒட்டி இருந்துச்சு. பகலுல கரவழியா ஆம்பளைக தெக்க, வடக்கப் போயிக்கிட்டும் வந்துகிட்டும் இருப்பாக. ஒக்கார முடியாது.

வெளிக்குப்போன இல்லாமல்லியும் மத்த பிள்ளைகளும் வட்டமா ஒக்காந்துகிட்டு கத சொல்லிக்கிட்டே இருந்தாளுக. எடைல அங்ன வேலியோரத்துல பூத்துக் கெடந்த துத்திப் பூவப் புடுங்கி பாவாடைக்குள்ள வச்சுக்கிட்டு ஒவ்வொன்னா எடுத்து தேனுறுஞ்சிட்டு போட்டுகிட்டே பேசுனாளுக. ஒரு எடத்துல நரகலக் குமுச்சுட்டு எந்துருச்சு இன்னொரு எடத்துல போயிக் குத்த வச்சாளுக. அந்நியாரம் அங்க நரகலத் திங்க வந்த பன்னிகளுக்குள்ள போட்டி வந்து பெரிய சண்டையே வந்துருச்சு. இல்லாமல்லியும், மத்த பிள்ளைகளும் பயந்துபோயி எந்துருச்சு தள்ளி நின்னு வேடிக்க பாத்திட்டு திரும்பியும் பாவாடையைத் தூக்கிக்கிட்டு ஒக்காந்தாளுக.

இவுக எப்படா எந்திரிப்பாகன்னு பன்னிக பூராம் காத்துக் கெடந்துச்சுக. ரொம்ப நேரமா இவுக எந்திரிக்காமெ பேசிகிட்டே இருக்கவும், பொறுமை எழந்து கிட்டத்துல வந்து கோவமா உறுமுச்சுக. செத்த நேரத்துல ஒரு பெரிய பன்னி இல்லாமல்லிக்குப் பின்னால வந்து அவள இடுச்சுத் தள்ளிட்டு திங்க ஆரம்பிச்சது. இல்லாமல்லி பயந்து போயி எந்துருச்சு, பக்கத்துல கெடந்த ஒரு கல்ல எடுத்து அந்தப் பன்னிய சத்துனு எறுஞ்சா. அம்புட்டுத்தான். அந்தப் பன்னி ஓடியாந்து லபக்குனு அவளோட நெஞ்சாங் கொலயக் கவ்விக் கடுச்சுப் போடுச்சு. சட்ட போடாத ஒடம்பாங்காட்டி அவளோட வலதுமாரு அப்படியே சதை பிஞ்சு தொங்கிருச்சு. இரத்தமா ஊத்துச்சு.

வலி தாங்கமாட்டாமெ அலறித் துடுச்சா இல்லாமல்லி. அழுதுகிட்டே தெருவுக்குள்ள ஓடியாந்தா. அவளுக்குப் பின்னாடியே மத்த பிள்ளைகளும் பயந்து போயி ஓடியாந்தாக. தெருவுல இருந்த பொம்பளைக பாத்துட்டு, பதறிப்போயி என்ன ஏதுன்னு வெசாருச்சுட்டு ஆளாளுக்கு வசவுல கூடிட்டாக.

“பெயமக்க பன்னி வளக்காகளாம் சின்னசிறுசுக வெளிக்குப் போயிக் குந்தவைக்க முடியல. அந்த முனியாண்டிப் பெயலோட கெடாப் பன்னிதான் இம்புட்டு அகராதி செய்றது. அத இனியும் சும்மா விட்டுவைக்கக் கூடாது. கல்லாலயே அடுச்சுக் கொல்லனும்”

“அட பாதகத்தியா, கரெக்டா மாரப்பாத்து கடுச்சுக் கொதறிடுச்சே. அந்த மாரு வருமோ என்னமோ”

“சரிங்கிடியா, சும்மா பேசிகிட்டே இருக்காமெ பிள்ளையைக் கொண்டு போயி டாக்டர்ட காட்டுங்கடி. ரத்தக்காடு ஒழுகுது”, வீரம்மா அதட்டுனா.

“இவுகம்மயும், அய்யனும் வேலைக்குப் போனவுக இன்னும் வரலியே”

“அட பெயமக்கா, அவுக வாரது வரைல வச்சுகிட்டு இருந்தா, ரத்தம் பூராம் போயி, பிள்ள செத்துல போகும்” வீரம்மா சொல்லிட்டு, அப்பிடிக்கூடி வந்த செல்வராசக் கூப்புட்டு பிள்ளையைத் தூக்கிக்கிட்டு டாக்டர்ட கொண்டு வரச் சொல்லிட்டு, கூடப் போனா. மத்த பொம்பளைகளும் பின்னால போனாக.

“பிள்ளையைப் பாத்து எந்த முண்டையோ கண்ணேறு போட்டுட்டா. இல்லன்னா இத்தன பிள்ளைகள உட்டுட்டு இவள மட்டும் வந்து புடுங்குமா, எழவெடுத்த பன்னி?”

கண்ணேறுமில்ல காடயத்துமில்ல. மத்தியான நேரத்துல ஓடப்பக்கம் போகக் கூடாது. பேய்க்கழுதைக நடமாடுற நேரம்ல. பேய்கூட பன்னி ரூவத்துல வரும்லெ”

“ஆமா.. இவா கண்டா. பேயுமில்ல, ஒன்னுமில்ல. அதவேற சொல்லி சனங்க தெக்க வடக்க போக உடாமெ செஞ்சு போடுவெ போல”

ஆளாளுக்கு ஒவ்வொன்னாச் சொல்லிக் கிட்டே போனாக. பசாருல இருந்த குருமூர்த்தி டாக்டர்ட காட்டுனா, அவரால முடியாதுன்னுட்டாரு. கவுர்மெண்டு ஆசுபத்திரிக்குக் கொண்டு போகனும்னு மாட்டுவண்டி கெட்டிக்கிட்டு இருக்கயில, வேலைக்குப் போயிருந்த அவுகம்மயும் அப்பனும் சோர்ந்து போயி வந்தாக. வந்து விசயத்தக் கேட்டதும், அவுகம்மெ சத்தம் போட்டு அழுதா.

“காட்டுல காக்கா வந்து மண்டையில அடிக்கும் போதே நெனச்சேன். என்னமோ நடக்காதது ஒன்னு நடக்கப்போகுதுன்னு மனசுக்குப் பட்டுச்சு. அப்படியே நடந்து போச்சே. கடவுளே, நானு எந்தத் துட்டு வச்சிருக்கேன். போட்டுப் பாக்க சக்காளத்திக பன்னி வளத்து ஏம்பிள்ளையைக் கடிக்க வச்சுட்டாளுகளே” அழுதுகிட்டே பொலம்புனா.

மாட்டுவண்டி கெட்டிக்கிட்டு பக்கத்து ஊர்ல இருந்த தர்மாசுபத்திரிக்கு போயிக் காட்டுனாக. தொங்கிக்கிட்டுருந்த சதையத் துண்டா வெட்டி எடுத்துட்டு, ஊசி போட்டு, மருந்து கட்டி உட்டாக. அந்தப் புண்ணு ஆற ரொம்பா நாளு ஆச்சு. ஆறுனப் பெறகு பாத்தா, மாரு கீரு ஒன்னுமில்ல. வெறுந் தழும்புதான் இருந்துச்சு.

ஏழெட்டு வருசங்கழுச்சு இல்லாமல்லியோடெ எடது மாரு பெருசாகிக்கிட்டே வந்துச்சு. ஆனா வலது பக்கம் அப்படியே தழும்புதான் இருந்துச்சு. இப்பதான் அவுகம்மெ ரொம்பக் கவலப்பட்டா. இந்தப் பன்னி செஞ்ச கொடும, இப்பிடி ஒத்தமாருக்காரியாப் போனாளேன்னு ரொம்பா வேதனப்பட்டா.

வருசம் ஆக ஆக இல்லாமல்லிக்கும் வருத்தமா இருந்துச்சு. அவா ஆளானப் பெறகு, தெருவுல, “ஒத்த சடங்காயிட்டா”ன்னு எளக்காரமாப் பேசிச் சிருச்சாக. சன்னஞ் சன்னமா, அவள எல்லாரும் ஒத்த, ஒத்தனே கூப்புட்டாக. இல்லாமல்லிங்ற அவளோடை பேர இல்லாமப்போயி, அவா பேரே ‘ஒத்த’ ஆகியிருச்சு. ஒத்தனு கூப்புட்டா அவளுக்கு ரொம்பாக் கோவம் வரும். மானாவாரிக்கு வைவா. அவா ரோசப்படுறத பாத்துட்டு, வேனுக்கும்னே ஒத்தனு கூப்டு உரிக்காட்டுவாக.

ஒத்த வயசுக்கு வந்து நாலஞ்சு வருசமாகியும், ஒருத்தர் கூட அவளப் பொண்ணு கேட்டு வரல. அவா வயசுப் பிள்ளைக பூராம் வாக்கப்பட்டுப் போயி, பிள்ளைகளும் பெத்துட்டாக. ஒத்த மட்டும் பாவம் போல வீட்லய கெடந்தா.

“ஒருமாரு இல்லன்னா என்ன? எனக்கு மட்டும் ஆச இருக்காதா? நாலு பேரப்போல எனக்கும் கல்யாணம் ஆகி, பிள்ளப்பெத்து பால் குடுத்து வளக்கனும்னு ஆசையாத்தான் இருக்குது. ஆனா எங்க.. சாகும் வரைக்கும் இப்பிடியேதான் கெடந்து சாகனும் போல”

இல்லாமல்லி அப்பப்ப நெனச்சு வேதனப்படுவா.

“சரித்தா... என்ன செய்றது? இம்புட்டுக் காலமா இந்த ஓடைல எத்தனை பிள்ளைக போகுது ...வருது... கடவுளு ஒந்தல எழுத்த இப்பிடி எழுதிட்டானே. பொறுமையா இரு. ஒனக்குனு ஒருத்தன் பெறக்காமயா இருப்பான்?” அவுகம்மெதான் ஆறுதல் சொல்லுவா.

அந்தா இந்தான்னு ஒத்தைக்கு முப்பது வயசுக்கிட்டெ ஆகிப்போச்சு. சாதாரணமா வயசுக்கு வந்த ரெண்டு மூனு வருசத்துலயே பிள்ளைக வாக்கப்பட்டுருங்க. இனி நம்மளுக்குக் கலியாணங்

கெடையாதுன்னு ஒத்தயும் மனசத் தேத்திக்கிட்டாலும், மத்த பொம்பளைகளப் பாக்கயில ரொம்பாக் கஸ்டப்படுவா. இதுக்கெடயில அவுகம்மையும் அய்யனும் செத்துப் போயிட்டாக. தம்பிக்காரன் கலியாணம் முடுச்சுட்டான். ஒத்த ஒரு பால்மாடெ வாங்கிக்கிட்டு, அதவச்சு பொழச்சா.

தெனமும் மாட்டுக்குப் புல்லுப் பொறுக்கிட்டு வந்து போடுவா. அந்த மாடுதான் அவளுக்குத் தொண. அதக்கூட 'ஒத்த மாடு'னு பேர் வச்சுட்டாக. எல்லாத்தயும் சகிச்சுக்கிட்டு சீவிச்சா. ஒரு தடவ மேற்க மொச்சிக் காட்டுச் செம புல்லும் பெறக்கப் போயிருந்தா. அந்தக் காட்டுக்காரன் வந்து,
"என்ன ஒத்த, ஒத்தயில வந்து புல்லறுக்க? பால்மாடு வச்சிருக்கியா? எம்புட்டுப் பாலு கறக்குது?" நக்கலாக் கேட்டான்.

"ஒத்த கித்தனு சொன்னா தாறுமாறா வஞ்சு போடுவேன். ஒத்தயாம்... மாடு எம்புட்டுப் பீச்சுனா என்ன? அவுகவுக சோலி மயித்தப் பாத்துட்டுப் போகவேண்டியதுதானெ" கோவமாக் கேட்டா.

"ஒனக்கென்ன இம்புட்டுக் கோவம் வருது. நானென்னமோ புதுசாக் கூப்புட்டேனா என்ன? ஒங்காளுக பூராம் ஒனிய அப்பிடித்தானெ கூப்புடுறாக?"

"எங்காளுக எப்படியுங் கூப்புடுறாக. நீ யாரு கூப்புடுறதுக்கு? இன்னொரு தடவ சொல்லிப்பாரு. நடக்குறதே வேற" சொல்லிட்டு வேக வேகமாப் புல்லறுத்தா.

"சொன்னா என்ன செய்வியாம்? ஒத்தன்னா என்ன? இருக்குற ஒன்னே நல்லாத்தா இருக்கு", எகத்தாளமாச் சொல்லிக்கிட்டே குனுஞ்சு புல்லறுத்த அவளக் கட்டிப்புடுச்சான்.

அம்புட்டுத்தான் ஆங்காரமாத் திமிறிக்கிட்டு நிமுந்த ஒத்த, அவனோட கையத் தள்ளி உட்டுட்டு, ஓடியாரப் பாத்தா. ஆனா அவனும் அவளப் புடுச்சுக்கிட்டு உடவே இல்ல.

சுத்திமுத்திப் பாத்த ஒத்த யாரும் இல்லனு தெருஞ்சுக்கிட்டுத்தான் இந்தப் பெய இப்பிடிச் செய்றான்னு புருஞ்சுக்கிட்டா. புல்லறுக்குற அருவாள வச்சு ஓங்கி அவங்கைய வெட்டப்போனா. ஆனா அது தவறி அவங் கண்ணுல கொத்திருச்சு. வலிலெ அலறித் துடுச்சான். ரத்தம் ஒழுகுன கண்ண கைய வச்சுப் பொத்திக்கிட்டே அலறினான். ஒத்த புல்லப் போட்டுட்டு ஓட்டமும் நடையுமா வீடு வந்து சேந்துட்டா.

அவா வந்த தோரணயப் பாத்துட்டு என்ன ஏதுன்னு தெருவுல வெசாரிக்கவும், காட்டுல நடந்ததச் சொல்லிட்டு அழுதா.

"நீ எதுக்குத்தா அழுகுறெ. இப்பிடிச் செஞ்சாத்தான் பெயல்களுக்குப் புத்தி வரும்" லூர்து பாட்டி சொன்னா.


காட்டுக்கார நாய்க்கர ஒத்தக் கண்ணனா ஆக்குன விசயம் ஊர் பூராம் தீ கணக்காப் பரவிடுச்சு. அன்னைலிருந்து ஒத்தய யாரும் ஒத்தனு கூப்புடுறதுல்ல.




## வாழ்த்துகிறோம்



பலருக்கு உதாரணமாக வாழ்க்கையும் எழுத்தும் வேறு வேறல்ல என்று வாழ்ந்து கொண்டிருக்கும் பாமா உத்தரமேரூரில் பள்ளி ஆசிரியையராகப் பணியாற்றி வருகிறார். தலித் வாழ்நிலையை நாவல்களாக எழு-திவரும் பாமா தனது வாழ்வின் இன்னல்களையும் சராசரி வாழ்வில் அவர் எதிர்கொண்ட அனுபவங்களையும் தனிமைகளையும் எழுத்தாக்கியதோடு அவர் தனித்து வாழ அந்த எழுத்தே துணிவையும் வாழ்க்கை பற்றிய தெளிவையும் கொடுத்துள்ளது என்பது இங்கு முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.




இவரால் எழுதப்பட்டு இன்று பலராலும் பேசப்படும் கருக்கு (1992), சங்கதி (1994), குசும்புக்காரன் (1996) நாவல்கள் மூலமும் மற்றும் சிறுகதைத்தொகுப்பு மூலமும் தமிழின், தலித் படைப்பின் முக்கிய படைப்பாளியாக தன்னை வெளிக்காட்டியவர் பாமா. கருக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது மட்டுமல்லாமல் பெங்காளி, குஜாரத்தி, இந்தி, கன்னடம், மலயாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாப், தெலுங்கு, உருது ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.




அத்துடன் பாமாவின் கருக்கு சங்கதி ஆகிய இருநூல்களையும் தொகுத்து விடியல் பதிப்பகம் "தழும்புகள் காயங்களாகி" என்னும் தொகுப்பை அண்மையில் வெளியிட்டுள்ளது.

2000ம் ஆண்டுக்கான –ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட– சிறந்த நூலுக்கான Crossword விருதை கருக்கு பெற்றுள்ளது.
இவருக்கு எமது வாழ்த்துக்கள்.

# இன்னமும் என் இமை நனைய...

இன்னமும் என் இமை நனைய ~ அம்மா
என் இதயம் வலிக்கிறது
உன் நினைவில்
உயிர் கரைந்து இரவுகளில்
அழுகிறேன்

உயிர் தந்து என்னை
இவ்வுலகின் பிரஜையாக்கிய
என் பிரியத்துக்கினிய அம்மா!
நலமா நீ...?

நலம் கேட்டு நாள்களாகி விட்டது

பட்டாம் பூச்சி பிடித்துத் திரிந்த
பயந்தாங்கொள்ளி மகள் ~ இன்று
இரு குழந்தைகளின் தாயம்மா
நம்பமுடியுமா உன்னால்...?
நானும் தான் கனவா என சிலவேளை
கைகளைக் கிள்ளுவதுண்டு



உன்னை என் உதிரப் பூக்களுக்கு
அறிமுகம் செய்ய விரும்புகிறேன் ~ அம்மா
அந்த நாள் எப்பவம்மா...?
இன்னமும் என் இமை நனைய ~ அம்மா
இதயம் வலிக்கிறது.

உன்னை விட ஒரு சீவன்
என் உதிரப் பூக்களுக்கு உண்மையான
உறவாகும் என்பதில்
எனக்கு எவர் மீதும் நம்பிக்கையில்லையம்மா...
பணம் வாங்கிப் பாசம்
தர பல உறவு உண்டம்மா ~ ஆனால்
என்னிடம் பணமில்லை
அதனால் திட்டும் கொட்டும் என்
தபாற் பெட்டியில் கனக்கிறது அம்மா
உப்புத் திரவம் நிறைந்து ~ என்
இமைகளும் கனக்கிறது
உன்னைத்தான் நினைக்கிறது
இன்னமும் என் இமை நனைய ~ அம்மா
என் இதயம் வலிக்கிறது.

எப்பவம்மா... வருவாய்...?
அம்மா என்னிடம்
எப்பவம்மா வருவாய்...?
உன்மடியில் நான்
விழுந்து ஓவென்று அழவேண்டும்
''ஏனம்மா அழுகிறாய் எழும்பு
சின்னப்பிள்ளை மாதிரி அழாதை''
என் தலை கோதி உன் விரல்கள்
என் கண்ணீர் துடைக்க வேண்டும்
எப்பவம்மா...?

குமரியாய் நான்
உன்னைச் சுற்றிய நாட்களது
எல்லா அம்மாக்களையும் போல் நீயும்
என் 16 வயதை நம்பமறுத்து
''யாரையடி காதலிக்கிறாய்
யாரடி அவன்EPICS-2EPICS-2''

''எழுது...எழுது...என் தோழி...
நானிருக்கிறேன் நம்பு''

எண்டு எழுதுறவன்
கேள்விகளால் என்னைக் குத்தி
''மாப்பிளை கேக்குதே உனக்கு''
நாக்கூசாமல் ~ நீ
கேட்க நெஞ்சில் இடிவிழுந்து
நொருங்க என் இதயம்
''நல்லபிள்ளையா இரு பிள்ளை
கொப்பான்ரை குணம் தெரியுமெல்ல''

வழி கசிந்து நீ சொல்ல
உன் கோப நியாயம் நான் புரிந்து
உன்னுடன் சேர்ந்தழுது
என்னை உனக்குப் புரிவிக்க ~ நான்
எடுத்த முயற்சியெல்லாம்
எடுபடாது தோற்றுப்போய்~ இமை
நீர் முட்டி
ஏன் பிறந்தேன் பெண்ணாய்
எண்ணி நான் ஏங்கியதும்
இன்னமும் என் இமை நனைய ~ அம்மா
இதயம் வலிக்கிறது
ஊருக்கும் உறவுக்கும் ~ நீ
பயந்து என்னைத் திட்டி
என் இனிய நட்பின்
வேரறுத்து இடையில் கிள்ளியெறிந்து
அந்நிய மண் அடிமையாக்கி
இன்னமும் என் இமை நனைய ~ அம்மா
என் இதயம் வலிக்கிறது.

வருவாயா அம்மா உன் மகளிடம்
அம்மா வருவாயா...?
அல்லது நீயும் பணம் காய்க்கும்
மரமாய்த்தான் என்னைப் பார்ப்பாயா...?
என் பிரியமுள்ள அம்மாவே
எப்பவம்மா...?
இன்னமும் என் இமை நனைய ~அம்மா
இதயம் வலிக்கிறது.



சாந்தி ரமேஷ்வவுனியன்

(2002)



## வேண்டியதில்லை சாவிகள்

சாவியைத் தொலைத்தே பூட்டினை இறுக்கினால்
பூட்டதை உடைத்தே ஏட்டுக்குள் இழுத்து
பாட்டுக்குள் புதைத்து பாவிடும் பொழுதுகள் ~ இன்று
தப்பாது உடையுமே தாளாது தெறித்து ~ ஆம்
வேண்டியதில்லை சாவிகள் எமக்கு!

விழிக்குள் விழுங்கி விழிப்பினை மூடி ~ ஜன
பழிக்கு அஞ்சி பாரா முகங்கொளின் ~ ஒரு
மொழிக்குள் இழுத்து பெண்ணியம் பேசவிரையும்
விடியல் குரல்கள் மலர்ச்சியை முகர்ந்தே
அரங்கம் விதைக்கும் இவை அசுரச்சாவிகள்!

அடக்குதல் என்னும் இடர்தர நேரின்
ஒடுக்கும் அந்த ஆழுமை வெறியை
நொடிக்குள் நொருக்கி வற்றாயூற்றாய்
கவிக்குள், கதைக்குள் ஏந்தி கருவாய் உதிக்கும்!

உணர்வினை உள்ளார்ந்து உமிழும் ஆணிகள்
புணருதலில்லை புகழினை இயலுமா? வரியிட
பெயருக்காகவே பெண்ணியம் பேனாபிடியார்
பெண்ணுரிமைக்காகவே உரையிடும் உரிமைக்குரலாள்
ஆற்றாமை அடியிட உமிழ்ந்தே நகைக்கும்!


ஆதிக்க ஆசைக்கும் அழகு வருணைக்கும் ஆட்பட்டுப்போனார்
கடையொன்று போட்டு கணிப்பது நன்றே ~ பெண்கள்
வக்கணை பேசி வளர்த்த புலவரும் வாசிக்க கவிஞரும் கூடவே
வாரிச்சுருட்டி ஓடி ஒழிய அடித்தே துரத்துவோம்
வேண்டியதில்லை சாவிகள் மீண்டுமாய்!



கோசல்யா சொர்ணலிங்கம்

(19-03-2002)

# பெண்களின்
# சில வெளியீடுகள் ~ சில பகிர்தல்கள்





முதற் பதிப்பு : 2000 யூலை
வெளியீடு : மறு
71, First Main Road
Indira Nagar
Adyar, Chennai-600020
பக்கம்-72


**- றஞ்சி**

பெண்களது சுயாதீனம், தனித்துவம், சுய இயல்பு, அடையாளம் ஆகியவை பற்றிய சிந்தனைகள் இன்று மேலோங்கி வருவதைக் காணலாம். அந்த வகையில் இன்று பல பெண்களது கவிதைத் தொகுதிகள் நூலுருவில் வெளிவந்துள்ளன. கவிதை என்பது மொழியின் மூலம் வெளிப்படுவது. ஒருவரது மொழி கலாச்சாரம், இனம், அனுபவம், வாழ்வு, உணர்வு போன்ற பல்வேறு கூறுகளையும் மொழிவழிப்படி வெளிக்கொணரப்படுவது தான் கவிதைகள். அந்த வகையில் பெண்களின் இலக்கியம் என்றாலே அவை ஆணாதிக்கத்தை விமர்சிப்பதுதான் எனக் கருதும் இக் காலகட்டத்தில் ஆணாதிக்கத்தினாலும் நமது கலாச்சாரத்தினாலும் பெண்களுக்கு திணிக்கப்பட்டவை கவிதைகளாக வடிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஆழியாளின் 'உரத்துப்பேச' என்ற கவிதைத் தொகுப்பை வாசிப்புச் செய்யும்போது அதிர்ச்சிகள், கேள்விகள், சிந்தனைகள் என அவரது அனுபவத்திற் கேற்றவாறு உணர்வுகளினுடாக விரிந்து நிற்கிறது அவரது கவிதை வளம்.

கடிகார முட்களின் இடைவெளியில்
இல்லாததும், இருப்பதுமான வர்ணங்களின்
கலவை குழைத்து
வரையத் தெரியாத சித்திரமாய்
உன்னை வரைந்து பார்க்கிறேன்.

நுண்மயிர்க் குழாய்கள் நீலம், சிவப்பாய்
நாலோடிக் கிடக்க சில சமயங்களில்
வெது வெதுப்பானதோர் சதைப் பிண்டமாய்
உன்னை வடித்தும், செதுக்கியும்
அழகு பார்க்கிறேன்

என்ற கவிதை நமக்குள் ஏற்படுத்தும் அதிர்ச்சி, கேள்வி, சிந்தனை என்பது அவரவர் சிந்தனைத் தளத்திற்கேற்ப விரிவு கொண்டவை. இவர் தான் எதிர்கொள்கின்ற சில நிகழ்வுகள், பொருட்கள், காட்சிகள் இவரது கவித்துவ உலகிற்குள் கொண்டு வரப்படுகின்றன.
அதேபோல் இந்தக் கவிதையில்,

நீயும் நானும்
வரையறைகளைக் கடக்க வேண்டும்- நான்
உன் விவேகத்தோடும்
நீ என் வீரியத்தோடும்
கடக்க வேண்டும்
எனினும்
என் கருவறையை
நிறைப்பது உன் குறியல்ல
என்ற புரிதலோடு
வா!
ஒன்றாய்க் கடப்போம்
நீ என் விவேகத்தோடும்
நான் உன் வீரியத்தோடும்.

என தனது புரிதலைக் கூறும் அதேவேளையில், மனிதருக்கிடையேயான உறவில் ஏற்படும் பல்வேறு சிக்கல்களையும் பன்முகத் தன்மைகளையும் அத்துடன் பெண்களது வாழ்க்கை உறவுகள் பற்றியும் இக் கவிதை தொட்டுச் செல்கின்றது. ஆழியாளின் கவிதைகள் நுண்ணிய உணர்திறனையும் கவிதையாக்கலையும் கருத்து நிலையையும் தன்னளவில் நன்கு வெளிப்படுத்துகின்றது. அவரின் கவிதைகள் விரிவுத்தன்மை கொண்டவை. அத்துடன் உணர்ச்சியாழம் கொண்டவையாகவும் உள்ளது.


அடுத்ததாக சல்மாவின் கவிதைத் தொகுதியிலிருந்து சில வரிகளைப் பார்ப்போம்

துக்கத்தை
கண்ணீரை
வேதனையை
வெறுமையை

நான் இனி இங்கில்லை
என்கிற நிஜத்தை

இந்த மண்
என்னை மூடும் போது
மிக இயல்பாய் இருப்பேன்.

கலாச்சார வாழ்வில் தனக்குள்ளேயே வசிக்க நேர்ந்துவிட்ட நீண்ட தனிமையும், அவரது மொழியும் கூடி கவிதைகளாக உருவாகியிருக்கின்றன. எப்போதுமே தான் தனிமை என்ற உணர்வை இவர் முகம் கொடுத்தே வந்துள்ளார்.



**முதற் பதிப்பு : 2000 ஆகஸ்ட்**
**வெளியீடு : காலச்சுவடு பதிப்பகம்**
669, K.P.Road
Nagercoil 629001
**பக்கம் –80**

பாதையோரத்தில்
இடிந்து கிடக்கும்
ஒற்றைச் சுவர்
என்னவாய் இருந்திருக்கும்?
அது ஓர்
அச்சம் தரும் நினைவு.

என்கிறார்.

இன்றைக்கில்லையெனில்
நாளை
நாளையில்லையெனில்
இன்னுமொரு நாள்
இப்படித்தான் தெரியும்
வாழ்வை
நினைவு தெரிந்த நாளிலிருந்து

இவரில் உறைந்திருக்கும் சில உணர்வுகளை இந்த வரிகளின் வழியே நகர்த்த முயல்கிறாா. இவரது பெரும்பாலான கவிதைகள் தனிமையுணர்வையே சுட்டிக்காட்டுகின்றன. கவிதைகள் கூடுதலாக அவரது உள்ளுணர்வுகளையே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவரது கவிதைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

அடுத்து பாலரஞ்சனி சர்மாவின் மனசின் பிடிக்குள் இருந்து சில வரிகள்


மேகமே!
யார் தந்தது தைரியம்?
நிலவுக்கே திரையிடுகிறாயே!

என கேள்வி எழுப்புகிறது இக் கவிதை.
மறுபுறம்,

தினம் ஒரு வீடு கட்டி
இடிந்து விழ ஏமாந்து போய்
அகதியானது சிலந்தி

என வாழ்வில்லாமல் வாழும் பெண்களின் குரலாயும் ஒலிக்கிறது.





**முதற் பதிப்பு : 2001 அக்டோபர்**
**வெளியீடு : மல்லிகைப் பந்தல்**
201 1/1 Srikathiresan Road
colombo-13
**பக்கம் –62**

இந்த நட்சத்திரம் எங்கே தொலைந்தது
அவள் கண்மணிக்குள்

---

வண்டே நன்றி!
மூங்கிலுக்குள் இசை தந்தாயே

---

என்ன தப்புச் செய்து
தனக்குத் தானே சிறைகட்டுது
சிலந்தி?

கவிதைத் தொகுப்பின் பெயரே மனசின் பிடிக்குள் சிக்கிவிட்டன. அந்தளவுக்கு அவரின் ஹைகூக் கவிதைகள் சிறைபிடிக்கின்றன. இக் குறுங் கவிதைக் கலை ஜப்பானிய தேசத்தில் தோன்றி உயிர்ப்புடனும் திறத்துடனும் நுட்பச் செறிவுடனும் செழித்து வளர்ந்து வருவதாகத் கூறப்படுகிறது. இயற்கை மீதான நேசிப்பு உயிர்கள் மீதான நேயம் போன்றவைகளை தெட்டத்தெளிவாகக் கூறுவதிலும் அத்துடன் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கூட இவ்வடிவில் கருவாக்கி கவிதையாக தமிழுக்குத் தந்திருக்கிறார் பாலரஞ்சினி சர்மா. சக ஜீவன்களின் வாழ்க்கையுடன் தானும் ஒன்றி, வாழ்வு தருகின்ற அத்தனை அனுபவங்களையும் வெளிப்படுத்துகின்ற ஆற்றலோடு விளக்குகிறார். உயிர்களின் இயல்புகளைக் காணும் தனது கவித்துவப் பயணத்தின் பன்முகத் தன்மைக்கான எல்லா முயற்சிகளையும் பாலரஞ்சனி செய்திருக்கிறார். இரவது கவிதைகள் அனுபவத்தினூடான உணர்வுகளையும் இயற்கை மீதான நேசிப்பையும் தொட்டுச் செல்கின்றன.

அடுத்து ‘வெளிப்படுதல்‘ என்னும் கவிதைத் தொகுதியிலிருந்து சில வரிகள்...

பெண்ணே உன் சிந்தனைக்கு
விருந்துகள் படைக்க
பேனா எனும் கரம்
உன்னிடம் உள்ளது
அதன் உதவியை
நீ பயன்படுத்து ~ அது
உன் வாழ்வின் வசந்தத்திற்கு
ஒரு அத்திவாரமாக அமையும்.


(ஆக்கம் நீ என்ற கவிதையில்)



**முதற் பதிப்பு : 2000 யூன்**
**தொகுப்பாளர் : ஜெயந்தி தளையசிங்கம்**
**வெளியீடு : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
**20 டயஸ் வீதி**
**மட்டக்களப்பு**
**பக்கம்-52**

என் சுதந்திரம்
என் முடிவுகள்
என் ஆசைகள்
என் கையில்
இப்போதும்
எப்போதும் (என் இருப்பு என்னும் கவிதையில்)

யுத்தசூழலின் அவலம், அது பெண்களுக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கம், வெற்று எதிர்பார்ப்புகள், பிரிவுத் துயர்கள், ஆணாதிக்கம் கொண்டதாக இருக்கும் சமூக அமைப்பின் ஆதிக்கச் சிந்தனைகளின் தாக்கம்... இவற்றையெல்லாம் தாண்டி ஒவ்வொரு பெண்ணின் இருப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு வாழ்வு பற்றிய தேடல்கள், பெண்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்தல் என்பவை இன்று அவசியமாகின்றது. இந்தவகையில் இக் கவிதைத் தொகுதி பதினெட்டு பெண்களின் கவிதைகளை உள்ளடக்கி நிற்கிறது.



புலம்பெயர் வாழ்வியலில் வெளிவந்துள்ள மற்றும் ஒரு கவிதைத் தொகுதி கோசல்யாவின் கவிதைகளாகும்.

என்னினப் பெண்ணே கேளீர்
உன்னது விழிப்பு ~ தாய்
மண்ணது விட்டு மறுபுலம்
பெயர்ந்தபோதும் ~ இன்னும்
நீ விரட்டா விலங்கை ~ எப்போது
உடைப்பதாய் எண்ணம்?
(உன்னது விழிப்பு என்னும் கவிதையில்)

என்ற வரிகள் புலம்பெயர் வாழ்விற்குள் பெண்கள் தங்களை இணைத்துக் கொண்ட போதும் அவர்கள் தங்களை இன்னும் மாற்றிக் கொள்ளவில்லை என்னும் ஆதங்கத்தைப் புலப்படுத்துகிறது.

அதே கவிதையில்,

பொன்னிலும் புதுச்சடங்கிலும்
பொழுதை நீ போக்கிக் கொண்டால்





**முதற் பதிப்பு : 2000**
**வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம்**
**7 (ப.எ.4),தணிகாசலம் சாலை**
**தியாகராய நகர்**
**சென்னை 600017**
**பக்கம்-128**

கற்றும் நீ விழிப்பில்லை
உன் கருத்திலும் எழுச்சியில்லை
உன்னது விழிப்பு எப்போ?
என்றும் நீ ஏதிலியோ?


என்ற வரிகள் புலம்பெயர் நாடுகளில் பெண்களின் பொழுதுபோக்குகளின் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

அச்சா! அச்சா! என்ற கவிதை இன்னொரு தளத்திற்கு செல்கிறது.

நாங்கள்
புத்தி ஜீவிகள்!
விளக்கமற்றதை
விளங்காமல் போவதை
முன்னெடுப்போம்!
வெற்றிக் கூச்சல் போடுவோம்!

சத்தியம்
நிறையப் பேசுவோம்
வெட்கப்படும்படி
மார்க்ஸியம் பெண்ணிலைவாதம்
இரண்டறக் கலப்போம்
நிஜத்தில் நினைப்பிலும் கலவோம்

கலாச்சாரம்
அந்நியம் ஆக்குவோம்
அந்நியத்தை ஆள்வோம்
லட்சங்கள் குட்டிகள் போட
பிச்சைக்கார வேசங்கள் போடும்
அச்சா அச்சா புத்திஜீவிகள்.




**வண்ணங்களில் உணர்வெழுதி**
**ஓவியை : வாசுகி ஜெயசங்கர்**
**30, பழையவாடி வீதி**
**மட்டக்களப்பு**
**ஓவியங்கள் –10**

இந்தக் கவிதை பேச்சு ஒன்றும் செயல் வேறொன்றுமாக முகம் காட்டும் புத்திஜீவிகள் எப்படி முரணாக வாழ்கிறார்கள், வேஷம் போடுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது..

அத்துடன் இவரது கவிதைகள் கூடுதலாக அனுபவங்கள், சிந்தனைகள், போராட்டம் என்பவற்றை தழுவியதாகவே காணப்படுகின்றது. மேலும் இத் தொகுப்பில் காணப்படுகின்ற மற்றைய கவிதைகளை நோக்கும்போது சில கவிதைகள் தான் வாழும் சூழலின் தனித்தன்மைகளை, பிரச்சினைகளை உள்வாங்கி எழும் படைப்புக்களாகக் காணப்படுகின்றன.

இப்படியாக... பல பெண்களின் கவிதைத் தொகுப்புகள் அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளன. ஒளவையின் ‘எல்லை கடத்தல்’, குட்டி ரேவதியின் ‘பூனையைப்போல அலையும் வெளிச்சம்’, சித்திரலேகாவின் தொகுப்பில் ‘உயிர்வெளி’ போன்ற கவிதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.

இன்று பெண்களின் உணர்வுகளை சமூகத்தினுள் எடுத்துச் செல்வதற்கு கவிதை, பாடல், ஓவியம் என்பனவும் முக்கிய பங்கை வகித்து வருகின்றன. அந்த வகையில் உணர்வுபூர்வமான இக் கலைத்திறன் சிலருக்கே அமைகின்றது. ஓவியம் என்பது அவரவரின் சுயவெளிப்பாடாகவோ அல்லது ஒரு சமூகநோக்குடையதாகவோ அல்லது உணர்வு ரீதியானதோ அல்லது காட்சிப் படிமங்களாகவோ இருக்கின்றன. நாம் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பெண்களே இவ் ஓவியத்துறையில் தம்மை ஈடுபடுத்தியுள்ளார்கள்.

கலையாக்கம் காலத்தைப் பிரதிபலிப்பது. அந்த வகையில் தான் வாழும் சூழலிருந்து கொண்டே தன் படைப்பை உருவாக்குவது தான் கலைப்படைப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அடிப்படையில் ஓவியக்கலையும் பெண்களிடையே மெல்ல வளர்வதை நாம் காணலாம்.

சில ஓவியர்கள் சமூகம், அரசியல் என்பவற்றில் தமது ஓவியத்திறனை பதித்து வருகின்றனர். அதற்கு அவர்கள் எதிர்கொண்ட போராட்ட, சமூக மாற்றச் சூழ்நிலையே காரணமாக இருக்கலாம். அத்துடன் கருப்பொருள் அடிப்படையில் சில ஓவியங்கள் நவீனத்துவத்தினூடாகவும் படைக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் வாழும் வாசுகி ஜெய்சங்கர் (2001ம் ஆண்டு புங்கா விருதினை வாசுகி பெற்றுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.), அருந்ததி ரட்ணராஜ் (லண்டன்) ஆகியோரின் ஓவியங்களே இன்று பேசப்படுபவையாக உள்ளன.

பெண்களிடையே எழுத்து ஆற்றல் வலுப்பெறுவது போல் ஓவியத்துறையும் வலுப்பெற வேண்டும். அடக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமன்றி, தமது உணர்வுகளை கோபங்களை சந்தோசங்களை வெளிப்படுத்துவதற்கும் இக் கலை மிகவும் உன்னதமான கலையாக உள்ளது.





ஓவியம்: அருந்ததி

ஓவியம் பின்புறம்

## பிணவலி

எங்கோ தொலைந்து போயிருக்கும்
சுகமான கற்பனைகளும்
என்னை விட்டுப் பிரிந்திருக்கும்
இனிய உலகமும்
வெறும் நினைவுகளாகவே
மீளவும் மீளவும்..!
இழப்பின் வதையில்
அழுவதைத் தவிர ~ என்னால்
வேறெதுவும் முடியவில்லை!

சட்டப் படியாகவும் சடங்குகளாகவும்
அம்மன் சந்நிதியில் வளர்த்த
ஓமகுண்டலப் புகையில் ~
கண்கள் கலங்க
வாழ்த்தொலி முழங்க
அக்கினி சாட்சியாய் என்னுடன்
இரண்டறக் கலந்துவிட்ட
இன்னுயிருக்காக ~
என் சுயங்களையெல்லாம் அழித்து
என்னை அதற்காய்
அர்ப்பணமாக்கிய கணத்திலிருந்து
என்னிடமிருந்து நகர்ந்துபோன
இனிய உலகை எண்ணி
நேற்றுவரை நான் கண்ணீர் சிந்தியதில்லை!

இப்போ...
முடிகள் நரை கண்டு
முகத்தில் சுருக்கம் விழுந்து
முதன்மைகளை இழந்துகொள்ளும்
முதிர்ந்து போன நினைவுகளில்

என்னிதய சிம்மாசனத்தில்
ராஜாவாயிருந்த ~
எனதருமை ஆத்மாவின்
இன்னோர் முகத்தில்
முளைத்திருந்த கோரப்பற்கள்
நானறியாமலே என்றோ என்னைக்
கொன்று விட்ட சேதியினை
கொல்லைப் புறத்தில் உலாவும்
பழைய மூச்சுக் காற்றும்
பறக்கும் சேலைத் துண்டுகளும்
மெல்ல மெல்லக்
கதை சொல்லிக் கொண்டிருக்கிறது!

என்னிடம் வந்தது
எனக்கானதே என்ற நம்பிக்கையில்
இழந்து போன என் சுயங்களிற்காகவும்
தொலைந்து போன என் சுகங்களிற்காகவும்
இப்போ நான் சிந்தும் கண்ணீர்
திரும்பவும் என்னிடமே கேள்வி கேட்கிறது!

உதடுகள் தைக்கப்பட்டு
சிறகுகள் ஒடிக்கப்பட்டு
உயிர்த்துளிகள் சிதறிவிட்ட
இக்கணத்தில் ~

எனது பிணத்தைப் பார்த்து
நானே அழுவதைத் தவிர
என்னால் வேறெதுவும் முடியவில்லை!!



**சந்திரா இரவீந்திரன்**

(2002)



Pfui! Pfui!

# புனித விழா

!
!
!

**யாழ்ப்பாணத்தில்
ஒரு கிராமம்
1983.**



எனக்கும் இரண்டாவது அக்காவுக்கும் ஆறு மாதம் தான் வித்தியாசம். இப்பிடித்தான் நான் சொல்ல, கேட்கிற ஆக்கள் சிரிப்பினம். அப்பவெல்லாம் அவை ஏன் சிரிக்கினம் எண்டோ ஆறுமாத இடைவெளியில பிள்ளை பிறக்க முடியாது எண்டோ எனக்குத் தெரியாது.

பத்து அல்லது பதினொரு வயது.

நாங்கள் மூண்டு பொம்பிளையள். மூத்த அக்கா சாமத்தியப்பட்டு அந்த விழா பெரிசாக் கொண்டாடினனாங்கள். அக்காவப்போலத்தான் எனக்கும் சாமத்தியச் சடங்கு செய்யவேணும் எண்டு மனதுக்குள்ள பெரிய நினைப்பு.

என்னிலும் ஒரு வருசமும் ஆறுமாதமும் மூப்பான எனது அக்காள் கொஞ்சம் சின்னதாக இருந்தாள். ஒல்லியாக இருந்தாள். குறை-வாகக் கதைத்தாள்.

எங்கள் ரண்டுபேரையும் பார்த்துவிட்டு எனது மூத்தக்காவின்ர சினேகிதிகள் சிலர்,

"இவள் சின்னவள்தான் முதல்ல டும்மடிப்பாள் பாருங்கோ" எண்டு சொல்லீட்டு,

ஏதோ குற்றவாளியைப் பார்க்கிறதுபோல என்னைப் பாப்பினம். பிறகு சிரிப்பினம்.

எனக்கும் சாமத்தியப்பட வேணும். சடங்கு செய்யவேணும் எண்டெல்லாம் கனவு இருந்தாலும் அவயள் சொல்லுற மாதிரி முதலிலையே சாமத்தியப்பட்டிடுவேனோ எண்டு பயமாயிருக்கும். அழுகை அழுகையா வரும்.

"பயப்பிடாத வெளியால வா. எங்களுக்கு எல்லாம் தெரிஞ்சு போச்சு"

ஒருநாள் பின்னேரம் நான் எப்பவும்போல யங்கியக் களட்டி வீட்டில ஒரு மூலேக்குள்ள எறிஞ்சுபோட்டுக் கக்கூசுக்குப் போனன்.

(**Pfui Pfui -** வேண்டாதவற்றை துரத்தப் பாவிக்கும் பதம்)

அந்த நேரத்திலதான் இப்பிடி அம்மா அக்கா எல்லாரும் கக்கூசுக்கு முன்னால வந்துநிண்டு கொண்டு கூப்பிட்டினம். அக்காவின்ர கையில இருந்த என்ர யங்கியில ரத்தம். எனக்கு அப்பதான் தெரியும். தம்பிதான் கண்டுபிடிச்சவனாம்.

நான் பயந்தது நடந்திட்டிது. மற்றவையளை பார்க்க எனக்கு பயமா இருந்திது. அவையள் என்னைக் குற்றவாளியைப் போல பார்க்கினம்.

முப்பது நாளும் ஒரு மூலைக்குள்ளதான் இருந்தனான். காலையில வேப்பம் உருண்டை. நான் எறிங்சுபோட்டாலும் எண்டு, பக்கத்தில சாப்பிட்டு முடிக்கும்வரை நிப்பினம். எண்ணக் கத்தரிக்கா அடிக்கடி தருவினம். ஒருநாளைக்கு மூண்டு தரம் அரை ரம்பிளர் தண்ணி தருவினம். தண்ணிவிடா தாங்கேலாமல் களவா கக்கூசுக்கு கொண்டுபோற தண்ணியை எடுத்துக் குடிப்பன். நிறையத் தண்ணி குடிச்சா பிறகு வண்டி வைக்குமெண்டு மற்றவை சொன்னது பயமா இருந்தாலும் தண்ணிவிடாய்ச்சா என்ன செய்யிறது?

வீட்டில ஒரு மூலையும் கக்கூசும்தான் உலகம். செவ்வாய் வெள்ளியில சாணி தெளிச்சு முத்தம் துப்பரவா இருக்கேக்க மிதிச்சா நல்ல பேச்சுத்தான் நடக்கும். பூக்கண்டுகளில தொடவேகூடாது. அது தீட்டு. நான் தொட்டு அதுகள் பட்டுப்போனதாவோ அல்லது எரிஞ்சு சாம்பலானதாகவோ எனக்கு இதுவரையில ஞாபகம் இல்ல. கிணத்தடியில தண்ணி அள்ளிறது மட்டுமில்ல, அந்தப் பக்கம் போறதே துடக்குத்தான். ஒருநாள் கக்கூசுக்குப் போறத்துக்கு தண்ணி இல்ல. வீட்டில துடக்கில்லாமல் அந்தநேரம் இருந்தது ஆச்சி ஒரு ஆள்தான்.

எழுபத்தி மூண்டு வயதில நடக்கிறத்திக்கே அவ கஸ்ரப்படுறவ.

மூத்தக்காவுக்கு எப்பிடியெல்லாம் செய்தவை? வடிவான சாறி, நிறைய நகையள், நிறையச் சனங்கள் வந்து, போட்டோவெல்லாம் பிடிச்சு நல்ல நல்ல பிறசென்ருகளும் கொண்டுவந்து குடுத்தவை. எனக்கும் இப்பிடியெல்லாம் செய்வினம்தானே எண்டு எவ்வளவு ஆசையா இருந்தனான். நான் ரண்டாவது அக்காவுக்கு முதல்லையே சாமத்தியப்பட்டிட்டதால கொண்டாடிற நோக்கம் வீட்டுக்காறருக்கு இல்லப்போல. அதுதான் எனக்குச் சரியான கவலையா இருந்திது.

பிறகு சின்னதாச் செய்யிறது எண்டு அவையள் முடிவுசெய்த பிறகு புதுச்சாறிதான் வேண்டவேணுமெண்டு அடம்பிடிச்சு, உள் சட்டைக்குள்ள கடுதாசியை வைச்சு மார்பைப் பெரிசாக்கி படம் எடுத்து சின்னதா எண்டாலும் கொண்டாடினது சந்தோசம்தான்.

ஒரு மாதத்துக்குப் பிறகு றோட்டில நடக்கேக்க எல்லாரும் முக்கியமா எங்கட வயதுப் பெடியள் எல்லாம் என்னையே பார்க்கிற மாதிரியும், சில நேரங்களில நிர்வாணமாய் நடக்கிற மாதிரியும் இருந்தாலும், நான் பெரிய மனிசி ஆகிட்டன்தானே எண்டு நினைச்சு வெக்கப்படாம நடப்பன்.

அதவிட பேச்சந்தோசம் என்னவெண்டா மாதத்தில மூண்டு நாள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை. ஏன் வரேல்ல எண்டு மாஸ்ற்ரர் கேட்க வயித்துக்குத்து எண்டு சொன்னாக் காணும். பிறகு மாஸ்ரர் ஒண்டும் சொல்லமாட்டார்.

அந்தப் படங்களை ஜேர்மனிக்கு வரேக்குள்ளையும் கொண்டுவந்து பள்ளிக்கூடத்தில ஜேர்மன் பெட்டையளுக்கும் காட்டினனான். ரத்தம் வாறதுக்கு கொண்டாட்டம் செய்யிறனியளோ? எண்டு



அவையள் கேட்டுவிட்டுச் சிரிக்க, முதலில கோபமாய் இருந்தாலும், அவயளின்ர கலாச்சாரம் வேற எங்கட வேறதானே. அவயளுக்கு இதுகள் விளங்காது எண்டு நினைச்சுப்போட்டு பேசாமல் இருந்திடுவன்.

மாதத்தில மூண்டு நாலு நாளுகள் வயித்துக்குத்து தாங்கேலாமல் இருக்கும். அடிவயிறு மட்டுமில்ல துடை முதுகு எல்லாம் நோகும்.

அந்த மூண்டு நாளிலைதான் பிரச்சினையே வந்திது. ஸ்போட்ஸ் பாடநேரத்தில ரத்தம் வந்து கொண்டிருக்கிற நாளென்றால் போகாமல் விட்டிடுவன். ரீச்சர் ஏன் வரேல்ல எண்டு கேட்டா அடி வயிறு நோ என்று காரணம் சொல்லுவன். ரீச்சர் இந்தக் காரணங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளேல்ல. அடிவயிறு நோகிற நேரத்தில உடம்பை அசைச்சுப் பயிற்சி செய்தா நோவெல்லாம் போயிடும் எண்டும், வராட்டி மாக்ஸ் குறைவாத் தருவதாவும் சொல்ல போகவேண்டியதாப்போச்சு. ரீச்சர் சொன்னமாதிரியே வயித்துக்குத்தும் குறைவாத்தான் இருந்திது.

ரண்டு மூண்டு வருசத்தக்குப் பிறகு எனக்கு பதினாறு அல்லது பதினேழு வயதிருக்குமெண்டு நினைக்கிறன். புகலிட இலக்கியத்தில ஈடுபாடு வந்த காலம். 'ராதா பெரிசான பின்' எண்ட ஒரு சிறுகதை (பார்த்திபன் எழுதியது) வாசிச்சு அதிர்ந்துபோனன். பொம்பிளையளுக்கு முதல் முதல் ரத்தம் வாறது பற்றியும், அதை நாங்கள் பெருமையா கொண்டாடிறத கேள்விகேட்டும் எழுதப்பட்டிருந்த கதை அது. இந்தக் கதை பற்றிக் கதைக்கேக்க ரத்தம் வாறது எண்டு பொம்பிள பிறன்ஸ்சோட கதைக்கிறதே வெக்கமா இருந்திது.

எண்டாலும் இந்தக் கதைதான் என்னைப் பிறகு சாமத்தியம், சடங்கு எண்டது பற்றியெல்லாம் கேள்வி கேக்க வைச்சிது. கேள்விகளுக்குள்ளால பதில்களெல்லாம் கிடைக்கேக்கதான் எனக்கு வெக்கமா இருந்திது - நான் ஒற்றைக் காலில நிண்டு சாமத்தியச் சடங்கு செய்விச்சது எள்வளவு கேவலமெண்டு. அதுக்குப் பிறகெல்லாம் இப்பிடிப்பட்ட கொண்டாட்டங்களுக்குப் போறேல்லயெண்டு யோசிச்சு போறதையும் நிப்பாட்டீற்றன்.

### ஏன் சிறுமிகளுக்கு மட்டும்...?

தமது குழந்தைகளுக்கு பல் முளைக்கும்போதும், அவர்களின் முதலாவது வயது முழுமை பெற்றவுடனும் சந்தோசப்படும் பெற்றோர்கள் பலருடன் தமது சந்தோசத்தினைப் பகிர்ந்துகொள்கின்றனர்; கூடிக் கொண்டாடுகின்றனர்.



குழந்தைப் பருவம் அடுத்தபடியாக ஏற்படுத்தக் கூடிய வளர்ச்சி ஆண்,பெண் இருபாலாரிலும் உளவியற் தளத்திலும், உடலியலிலும் பல மாற்றங்களைக் கொண்டுவருகின்றது. பெண் பிள்ளைகளுக்கு இந்த மாற்றமானது மாதம் மாதம் ஏற்படும் இரத்தோட்டமாக அமைந்துள்ளது. இந்த இயற்கை மாற்றத்தினையும் தமிழ்ப் பெற்றோர்கள் இன்று வரையிலும் கொண்டாடியே வருகின்றனர். தமிழீழம், இலங்கை, இந்தியா மட்டுமல்ல எங்கு தமிழர்கள் பெண்பிள்ளைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் மாபெரும் கொண்டாட்டங்களாக சாமத்தியச் சடங்கு, பூப்புனித விழா என்கின்ற பெயர்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது.



சாமத்தியச் சடங்கு கொண்டாடப்படுவது தவறானது என்று கருதும் நாம், அக் கொண்டாட்டங்களை நிராகரித்து வருகின்றோம். இந்தக் கொண்டாட்டங்கள் ஏன் நிராகரிக்கப்பட வேண்டியவை?
சம்பந்தப்பட்ட பெற்றோருடன் இதுபற்றி வாதங்கள் எழுமிடத்து அவர்கள் பின்வரும் விளக்கங்களைத் தருகின்றனர்:

1. சாமத்தியச் சடங்கு செய்யிறதில என்ன பிழை? இதுவொரு சந்தோசமான விசயம்தானே.
2. பதினஞ்சு பதினாறு வயது தாண்டியும் சில பிள்ளையள் சாமத்தியப்படாம இருக்கேக்க
   தாய் தேப்பனுக்கு எவ்வளவு வேதனையா இருக்கிது? எங்கட பிள்ளையள் நேரத்தோட பெரிசானதும் எவ்வளவு சந்தோசம். அதைக் கொண்டாடிறதில என்ன பிழை?
3. சாமத்தியப் படுறது சும்மா ரத்தம் வாற விசயம் இல்ல. எங்கட பொம்பிளப்பிள்ள சரியான வளர்ச்சி அடைஞ்சிருக்கு எண்டு அர்த்தம்.

மேற்குறிப்பிட்ட வாதங்களை மேலோட்டமாக நோக்கும் போது சரியானவையாகத் தெரியும். மேலும் விரிவாகப் பார்ப்போமானால், பெண்குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் பிரதானமாக முதன்முதலில் ஏற்படும் மாதவிடாயின்போது அக்கறை கொள்ளும் பெற்றோர்கள், உறவினர்கள் எல்லோருமே அதே பிள்ளைகளின் வளர்ச்சிக் காலங்களில் ஏற்படும் பிரதானமான உளவியல் மாற்றங்களிலோ, கருத்தியல் மாற்றங்களிலோ அக்கறை செலுத்தாததுதான் ஏன் என்கின்ற கேள்வி முதலில் எழும்பும்? குறைந்தபட்சம் சாமத்தியம் பற்றிய உயிரியல் விளக்கங்களைக் கொடுத்து பெண்குழந்தைகளை தயார்செய்கின்றனரா என்றால் இல்லை, அல்லது மிகக் குறை என்று ஏமாற்றத்துடன் கூறவேண்டியுள்ளது.

உடல், உள மாற்றங்கள் பெண்பிள்ளைகளுக்கு மட்டும்தான் ஏற்படுகின்றதா? ஆண்பிள்ளைகளுக்கு இல்லையா? ஏன் அவர்களுக்குக் கொண்டாடப்படுவதில்லை? என்று தொடர்ந்து கேட்பதுவும் சரியானதுதான். இந்தக் கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமானால் பிரதானமான சில கேள்விகளை இங்கு கேட்பது அவசியமானது.

தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது? தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்த -தமிழர்கள் தஞ்சமடைந்த- நாடுகளில் வாழும் தமிழ்ப் பெண்களின் நிலை எவ்வாறு உள்ளது? ஆதிகாலத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது? பின்னர் ஏன் மாற்றமடைந்தது?

ஒரு சமூகத்தின் மனித மறுஉற்பத்தி பெண்களின் தாய்மையில் தங்கியுள்ளது.
பெண்கள் தமது உரிமைகளை முழுமையாக அனுபவித்த, பெண்களுக்கு மரியாதையும் மதிப்பும் கொடுக்கப்பட்ட பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சமூகம் தாய்வழிச் சமூகம் என்று இன்று நாம் கூறிக்கொள்கிறோம். பெண்கள் ஆண்களுக்கு சமத்துவமாக அல்ல மேலும் உயர்வாகவே அங்கு மதிக்கப்பட்டார்கள். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பெண்கள் வேட்டையாடுதலில் தலைமை வகித்தார்கள். அன்றைய காலத்தில் வளங்கள் பெண்கள் பொறுப்பிலேயே இருந்தன. குழந்தைகள் தாய் வழியே கணிக்கப்பட்டார்கள். விஞ்ஞான அறிவு மிகவும் குன்றியிருந்த காலமது. பெண்களின் மாதவிடாயை ஆச்சரியமாக ஆண்கள் நோக்கினார்கள். மூன்று நான்கு நாட்கள் இரத்தோட்டம் இருப்பதுவும், பின்னர் அது இயல்பாகவே நின்று பெண்கள் தொடர்ந்தும் உற்சாகமுடன் வாழ்வதும், மீண்டும் மீண்டும் இது நிகழ்வதும், பிள்ளைகளைப் பெற்று சமூகப் பெருக்கத்தில் பெண்கள் முக்கிய பங்கேற்பதுவும் அவர்களை ஆச்சரியப்படுத்தியது மட்டுமல்லாது, பெண்களை விசேட இடத்தில் வைத்திருக்கவும் வழிவகுத்தது.



மனிதர்கள் சந்தோசமடையக்கூடிய அனைத்து முக்கியமான விடயங்களுக்கும் பிள்ளைப்பேறு, பெயர்வைப்பு, சாமத்தியம் காலப்போக்கில் கொண்டாட்டங்களாக்கப்பட்டன. தாய்மைக்கான முதலாவது படியைத் திறந்துவிடும் பெண்பிள்ளைகளின் மாதவிடாயானது பெண் உடல் வளர்ச்சியின் முக்கிமானதாக அமைந்துள்ளதால் இதற்கான விழா எடுப்பும் முக்கியத்துவப் படுத்தப்பட்டு இதுவும் கொண்டாட்டமாக்கப்பட்டது.

அன்று கொண்டாட்டங்கள் அமைந்த அர்த்தங்களுக்கும் இன்றைய நிலைமைக்கும் அர்த்தங்கள்
வேறுபட்டுக் காணப்படுகின்றனவா? ஆம் என்றால், ஏன்?
இதனை தாய்வழிச் சமூகத்தின் மாற்றமடைதலிலிருந்து வரலாற்று ரீதியாக விளங்கிக்கொள்ள முடியும்.
தாய்வழிச் சமூகம் மாற்றமடைந்தது, பெண்களை இரண்டாவது பிரஜையாக்கியது மட்டுமல்லாது
ஆண்களில் தங்கியிருப்பவர்களாக்கியது.

சமூக மறுஉற்பத்தி காரணமாக பெண்கள் வேட்டைக்குச் செல்லுதல் குறைக்கப்பட்டு, பின் நிறுத்தப்பட்டது.
குழுக்களுடன் சண்டை செய்வதில் ஆண்களே தலைமை தாங்கலாகினர். அடிமைகளாகக் கொண்டுவரப்பட்ட பெண்களை தமது விருப்பப்படி உறவுகொண்டனர் (இதற்கு முன்னர் பெண்கள் ஆண் உறவுகளைத் தெரிவுசெய்தல் சுதந்திரமாக இருந்தது. ஆண்களே பெண்களை நம்பியிருத்தல் நிலை இருந்தது.)

ஏனைய குழுக்களிடம் பறிக்கப்பட்ட பொருட்கள் ஆண்களிடம் குவியத் தொடங்கியது. ஆண்கள் வளங்களுக்கு உரிமையாளர்களானார்கள். தமது சொத்துக்கள் தம்மிடமே தங்கியிருக்க தமது பெயர் சொல்லும் பிள்ளைகள் தேவைப்பட்டார்கள். ஒருதார மணமுறை உருவாக்கப்பட்டு தந்தைவழியில் பிள்ளைகளின் பெயர்கள் கணிக்கப்பட்டன.

சொத்துக்கள் ஆண்களின் கைகளுக்கு மாற்றப்பட்டது. குடும்பத் தலைவர்களாக ஆண்கள் ஆகிக்கொண்டனர். பெண்களின் உரிமைகள் அனைத்துத் தளங்களிலும் பறிக்கப்பட்டது மட்டுமல்லாது, அவர்கள் இரண்டாவது பிரஜை ஆக்கப்பட்டனர்.

பெண்களில் பெரும்பாலானவர்கள் வீட்டிற்குள் தள்ளப்பட்ட நிலையில் பிள்ளைகளைப் பெறுதல் பராமரித்தல் பெண்களின் கடமைகளாகவும், உழைத்தல் வெளிவேலைகளைக் கவனித்தல், அரசியல் சார்ந்த முக்கிய பொறுப்புக்கள் ஆண்களுக்குமாகவும் மாற்றப்பட்டது. நீண்ட காலப்போக்கில் பெண் ஆண்களிலும் குறைந்த பெறுமதியைக் கொண்டவர்களாக, பொருளாதார ரீதியில் ஆண்களில் தங்கியிருப்பவர்களாக மட்டுமன்றி, கருத்தியல் ரீதியிலும், உளவியற் தளங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன.

எமது தமிழ்ச் சமூகத்தை எடுத்துக்கொண்டால், பொருளாதாரம் உட்பட்டு பல விடயங்களில் பெண்கள் இங்கு புகலிடங்களிலும் நம்பியிருக்கும் நிலை காணப்படுகிறது.
இதனடிப்படையில் தமிழ்ச் சமூகத்தில் பெரும்பான்மையாக (குறிப்பாக சாமத்தியச் சடங்குகளைக் கொண்டாடுபவர்கள், ஆதரிப்பவர்கள்) தமிழ்ப் பெண்கள்,

1. குடும்பத்திற்குப் பிள்ளை பெற்றுக்கொடுப்பவர்
2. இல்லாத பட்சத்தில் மலடி என்கின்ற பெயருடன் வேதனையை அனுபவிக்க வேண்டும்

3. குடும்பத்தில் ஆண் நபர்கள் முதலாவது வரிசையிலும் பெண்கள் இரண்டாவதாகவும் இருப்பதனை சாதாரணம் என்று கருதுகிறார்கள்

புகலிடத்தில் புதிதாக திருமணமான இளம் பெண்களுடன் கதைக்கும்போது "கொஞ்சக் காலம் தனிய ரண்டுபேரும் சந்தோசமா இருப்பமெண்டா சனங்கள் விடுகுதில்ல. கொஞ்ச நாளைக்கு பிள்ளை வேண்டாமெண்டு நாங்கள் தீர்மானிச்சிட்டம். ஆனா சனம் கொண்டுபோய் டொக்ரரிட்டக் காட்டுங்கோ எண்டு சொல்லினம்" என்று எரிச்சலுடன் கூறுவதனைக் கேட்கலாம்.
தமிழர்களைப் பொறுத்தவரை சாமத்தியச் சடங்கு ஒரு முக்கியமான சடங்காகும். தமது மகள் திருமணமாவதற்குத் தயார் நிலை என்பதனை மற்றவர்களுக்குக் கூறிக்கொள்வதில் தயக்கமோ வெட்கமோ இன்றி மிகவும் சாதாரணமாக இக் கொண்டாட்டங்களை நிகழ்த்தி வருகின்றனர்

### புகலிடம்

தமிழர்கள் வாழும் புகலிடங்களில் சாமத்தியச் சடங்கு உட்பட அனைத்துக் கொண்டாட்டங்களும் பிரதானப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வருவதனைப் பார்க்கிறோம்..
இந்தக் கொண்டாட்டங்களில் முதன்மை வகிப்பவர்கள் (இவற்றினை ஒழுங்குசெய்பவர்கள்) பெரும்பாலும் புகலிடங்களில் பிறந்து வளராதவர்கள். அதாவது, பெரும்பாலும் தமது முக்கிய காலங்களை இலங்கையில் கழித்தவர்களாவார்கள். அனைத்துக் கொண்டாட்டங்களும் ஏன் முதன்மைப்படுத்தப் படுகின்றன?

1. பெரும்பாலானவர்கள் தாம் வாழும் நாட்டு மொழியைக் கற்றிராதவர்கள்.

2. ஏனைய புகலிடத்தில் குடியேறிய சமூகங்களைப்போல் தமது கலாச்சாரங்களை கட்டிக் காப்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். அந்நிய நாட்டில் வாழும்போது தமிழ்க் கலாச்சாரம் தனது தன்மையை இழந்துவிடலாம், அந்நிய கலாச்சாரத்துடன் ஒன்றுகலந்து 'பழுதாகிப் போகலாம்' என்கின்ற அச்சத்தில் மேலும் இறுக்கமாக - தாயகத்தில் இருந்ததை விடவும் இறுக்கமாக - புகலிடங்களில் கடைப்பிடித்தல்.
(இது தமிழர்கள் மட்டுமல்ல, ஏனைய சமூகத்தினரும் இப்படித்தான் வாழ்கின்றனர்)

3. மொழி தெரியாமை, மற்றும் புகலிடத்தில் வாழும் ஏனைய கலாச்சாரங்கள் பழக்கவழக்கங்கள் கொண்ட மக்கள் மீதான (ஜேர்மனியைப் பொறுத்தவரையில் துருக்கி, ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள், கிழக்கு ஐரோப்பிய நாட்டு மக்கள் மீதான) தப்பபிப்பிராயம், எமது கலாச்சாரம் பழக்கவழக்கங்களே உயர்ந்ததென்று எண்ணுதல், ஏனைய அந்தந்த நாடுகளில் வதியும் மக்களுடன் தொடர்புகளின்றி தனித்த சமூகமாக வாழும்போது எற்படும் தனிமையைப் போக்க ஒவ்வொரு முக்கிய நிகழ்வுகளையும் கொண்டாட்டமாக்குதல்.

4. யுத்த சூழலின்றி ஓரளவு அமைதியான சூழலில் வாழுதல், மற்றும் பெரும்பாலும் தமிழீழ அரசியலைத் தவிர வேறு எந்தப் பொதுப் பிரச்சினைகளிலும் ஈடுபடாமை

5. பண, மற்றும் தொடர்பு உட்பட்ட பல வசதிகளைக் கொண்டிருத்தல்

6. போட்டி, பொறாமை, சாதித் திமிர்கொண்ட மனப்பாங்கு (தமிழர்கள் தமக்குள் உரையாடும்போது 'அங்க ஊரில மண்ணேத்தின சனம், விறகு பொறுக்கினவன்கள் எல்லாம் இங்க வந்து பென்ஸ் வச்சிருக்கிறான்கள்; பெரிசா எல்லாம் கொண்டாடுகிறான்கள்; இவயளுக்கு நாங்கள் செய்து காட்ட வேணும்' என்றெல்லாம் கதைத்துக்கொள்வார்கள்.)

7. தாயகத்தில் வசதி குறைவானவர்களாக, ஒதுக்கப்பட்டவர்களாக தள்ளப்பட்டவர்கள் இங்கு சமத்துவமாக கூலிபெறுவதால், அங்கு ஒதுக்கப்பட்ட நிலையிலிருந்து பொருளாதார ரீதியில் இங்கு விடுபடும் சந்தர்ப்பம் அமைகிறது. இவர்களும் தாமும் சமனான நிகழ்வுகளைக் காட்ட முற்படுதல்.



இப்படியான தமக்குள் தாயகத்திலிருந்து கொண்டுவந்த மற்றும் புகலிடங்களில் ஏற்படுத்திக்கொண்ட புதிய முரண்பாடுகளுடனும் வாழும் சமூகம், பெண்களின் நிலைமைகளில் கருத்துக்களில் பெரும்பாலும் கருத்து மாற்றங்களின்றி வாழும் சமூகம் 'பூப்புனித நீராட்டு விழாவை' தொடர்ந்தும் கேள்விகளின்றி கொண்டாடுவதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது?

ஆனால் காலம் அப்படியே நின்றுவிடுவதில்லை. கருத்துக்களுக்கு எத்தனை காலமென்று வேலிபோடுவது? வேலிதாண்டி வெளிவரத்தானே இருக்கின்றனர் இளையோர்.

ஒருகாலத்தில் புகலிடங்களில் தனித்த தமிழ் ஆண்களே பெரும்பாலும் வாழ்ந்து வந்தார்கள்; பின்னர் அவர்களின் துணைவிமார் வரவழைக்கப்பட்டார்கள்; பின் குடும்பங்களாக தஞ்சமடையும் நிலை வந்தது. புகலிடங்களிலும் புதிய குடும்பங்கள் உருவாகின. இன்று புகலிடங்களில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் அல்லது தமது பெரும்பான்மையான காலங்களை இங்கு கழித்துவருபவர்களான மூன்றாவது பரம்பரையொன்று உருவாகியுள்ளது மட்டுமன்றி, இது புதிய முரண்பாடுகளையும் தாங்கி நிற்கின்றது

இந்தப் பிள்ளைகள் எமது கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், கொண்டாட்டங்களை கேள்வி கேட்கிறார்கள். நியாயமான பதில் கூறாதவிடத்து பேசாமல் இருக்க மாட்டார்கள். தாம் விரும்பாதவற்றை கடைப்பிடிப்பதற்கு மறுப்பவர்கள். (முடிந்தளவு குடும்பங்களுக்குள் போராடுபவர்களாக இருக்கிறார்கள்). பொது விடயங்களில் பரந்த அறிவினை உடையவர்களாக உள்ளனர். தொழில் வளர்ச்சியடைந்த சமூகம் ஒன்றில் வாழும், பாடசாலைகளுக்குச் செல்லும், பல சமூகங்களிலிருந்தும் நண்பர்களைக் கொண்டிருக்கும், புகலிட நாட்டு மொழி அறிவுகொண்டுள்ள இவர்கள் இங்குள்ள கருத்துக்களையும் விரைவில் உள்வாங்கிக் கொள்கின்றனர்.
இங்கு,

1. பாலியற் கல்வி ஊட்டப்படுகின்றது. மாதவிடாய், கருஉருவாதல் போன்ற விடயங்கள் சிறுவயதிலேயே பாடசாலைகளில் கற்கப்படுகின்றது.
(நாங்கள் ஊரில் சாமத்தியப் பட்ட காலங்களில் உடலியல் ரீதியாக அதுபற்றிய விளக்கங்கள் அறிந்திருக்கவில்லை.)

2. மாதவிடாய்க் காலங்களில் பாவிக்கப்படும் பஞ்சு குறைந்த விலையில் தாராளமாகக் கிடைக்கிறது.
(ஊரில் தற்போது நிலைமை மாற்றமடைந்திருந்தாலும் ஏழைப் பெண்களும், அகதிமுகாம்களில் வாழும் பெண்களும் துணியே பாவிக்கும் நிலை. தண்ணீர் தட்டுப்பாடான இடங்களில் துணிகளைத் தோய்த்துப் பாவிப்பதற்கு பல பெண்கள் கஸ்ரப்படுகின்றனர்.)


### மூன்று பரம்பரைகளுக்குள்ளான முரண்பாடு

புகலிடங்களில் இன்று மூன்று தலைமுறையைச் சார்ந்த தமிழர்கள் வாழ்கின்றார்கள்.

1. வயது முதிர்ந்தவர்கள் (ஐம்பது அறுபது வயதிற்கு மேற்பட்டவர்கள் - பெரும்பாலான காலங்களை இலங்கையில் கழித்தவர்கள்),
2. இளம் பராயத்தைத் தாண்டியவர்கள் (முப்பது முப்பத்தைந்து வயதுடையவர்கள்.

அரைவாசிக் காலங்களை தாயகத்தில் கழித்தவர்கள்)

3. இளையவர்கள், சிறுவர்கள் (புகலிடங்களில் பெரும்பான்மையான காலங்களைக் கழித்தவர்கள், இங்கு பிறந்து வளர்பவர்கள்).



நிருபா

முதலாவது தலைமுறையினர் தமது கருத்துக்களில் மிக இறுக்கமாக இருக்கின்றனர். சாமத்தியச் சடங்கு பற்றி எந்த ஒரு கேள்வி யையும் எழுப்ப மறுப்பவர்கள். புகலிடங்களில் நடைபெறும் சடங்குகளில் முன்நின்று நடத்து பவர்கள். தமது பிள்ளைகள் (இரண்டாவது பரம்பரை) பின்னிற்கும் அல்லது மறுக்கும் பட்சத்தில் போராடி எவ்வாறேனும் நடாத்தி முடிப் பவர்கள். இதனை ஒரு கௌரவப் பிரச்சினையாக கருதுபவர்கள்.

மூன்றாவது பரம்பரையினரும் தமது கருத்துக் களில் தெளிவாக உள்ளனர். விஞ்ஞான விளக்கங்கள் அதிகமாக உள்ளவர்கள். கொண்டாடுதல் கேவலமானதாகக் கருதுபவர்கள். கொண்டாட்டத்தை நடாத்தவிடாமல் தடுப்பதில் தமதளவில் (குறைந்தபட்சம் தமது கருத்துக் களையேனும் தெரிவிப்பவர்கள்) தமது தாய் தந்தையினருடன் போராடுபவர்கள். இவர்க ளுடைய போராட்டம் வெற்றியளிப்பது மிகக் குறைவு. இவர்கள் குடும்பங்களில் பலம் குறைந்தவர்களாக இருப்பது (சிறுமிகளாக இருப்பது) தோல்விக்கான முக்கிய காரணம-ாகும்.

இரு பரம்பரைக்கும் இடைப்பட்டவர்களான இரண்டாவது பரம்பரை இரண்டுக்குமிடையில் திண்டாடுபவர்கள், நடைமுறையிலும் ஊசலாட்டம் உடையவர்கள். பெரும்பாலானவர்கள் முதலாவது பரம்பரையினரினது கருத்துடையவர்களாயினும், புகலிட புதிய கருத்துக்களை அரைகுறையாக அல்லது இல்லாமலும் இரண்டு பரம்பரையையும் சமாளித்துப் போக வேண்டியவர்களாகவும் உள்ள னர். (முன்னொரு காலத்தில் முற்போக்குப் பேசும் போது சாமத்தியச் சடங்குகளை நிராகரிக்கக் கோரியவர்கள் பின் தமது பிள்ளைகளுக்கு கொண்டாடி வருபவர்களும் இந்தக் குழுவையே சேர்ந்தவர்கள்.)

முதலாவது, மூன்றாவது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் பிள்ளைகளின் உளவியற் தளத்தில் செலுத்தும் செல்வாக்கு சில விடயங்களில் வெற்றியும், சிலசமயங்களில் தோல்வியையும் தருகிறது.

சாமத்தியம் என்பது ஒரு சாதாரண இயற்கை நிகழ்வு. இதற்குக் கொண்டாட்டம் அவசியமில்லாதது மட்டுமல்ல, ஊரைக் கூட்டிக் கொண்டாடுவது கேவலமானது என்று கருதும் பிள்ளைகளை சோடினை, வீடியோ பிடித்தல், பரிசுப் பொருட்கள் போன்ற விடயங்களால் இலகுவில் கவர்ந்து விடுகிறார்கள்.

பொதுவாகவே பெண்பிள்ளைகள் சோடினைக்கு உரியவர்களாக சிறுவயதிலிருந்தே தயார் படுத்தப்பட்ட நிலையில், புகலிடங்களிலும் மிகுந்த சோடினைகளால் பெண்பிள்ளைகள், பெண்கள் கவரப்பட்ட நிலையில் இச் சிறுமிகளை இவ் வகையில் கவர்ந்திழுப்பது இலகுவானதாகவுள்ளது.

அடுத்ததாக இரண்டு கலாச்சாரங்களுக்கிடையில் திண்டாடும் நிலை இப் பிள்ளைகளுக்கு இருக்கிறது. "இது எங்கடை கலாச்சாரம்; நாங்கள் அதைக் கடைப்பிடிக்க வேணும்" இப்படி உளரீதியாக நெருக்குதல்கள் கொடுக்கப்படுகின்ற பட்சத்தில், சில வேளைகளில் மறுப்புக் கூறமுடியாத பட்சத்தில், ஏற்றுக்கொள்ள நேர்கின்றது. ஏற்கனவே நிகழும் சாமத்தியச் சடங்குகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, 'உனக்கும் இப்பிடித்தான் செய்வம்' என்று அடிக்கடி கூறப்பட்டு வருகின்றது.



சூதகம், தீட்டு, வெளியாலை, சுகமில்லை என்று அழைக்கப்படும் இரத்தோட்டம் உடலில் ஏற்படும் வருத்தமாகவும், மூன்று நாட்கள் சுத்தமற்ற நாட்களாகவும் உளவியலில் ஊட்டமுனையும் கருத்துக்கள் இந்தப் பிள்ளைகளிடம் (ஊரில் எமக்கு இலகுவாக இவ்வுணர்வுகளை ஏற்படுத்தியதுபோல்) சென்றடைவதில்லை. மேற்குறிப்பிட்ட சொற்பதங்கள் இங்கு இப் பிள்ளைகளுக்கு அந்நிய விளங்காத மொழிகளாகவே இருந்து வருகின்றது.

**ஜேர்மனியில் ஒரு நகரத்தில் – 2000.**

'இவள் வேளைக்குச் சாமத்தியப்படப் போறாள்' இப்பிடித்தான் அம்மம்மா நெடுகலும் சொல்லுறா. எனக்கு விசராக் கிடக்கு. ich hasse es. சித்தி அம்மம்மாவை இப்பிடி எந்தநேரமும் கதைக்க வேண்டாமெண்டு சொல்லுங்கோ. எனக்கு எல்லாம் தெரியும். நாங்கள் எப்பவோ படிச்சிட்டம். Periode வாறது, பிள்ளை பிறக்கிறது எப்பிடியெண்டு எனக்குத் தெரியும். நாலாம் வகுப்பில நாங்கள் படிக்கேக்க அம்மாட்ட வந்து சொன்னனான்.

"ஐயோ உங்களுக்கு இப்பவே இதெல்லாம் சொல்லித் தரீனமே. ஆறு ஏழாம் வகுப்பிலயெல்லோ படிப்பிப்பினம் எண்டு நினைச்சன்" எண்டு சொல்லி அம்மா கத்தத் தொடங்கீற்றா. என்ன படிச்சாலும் தன்னட்ட வந்து எல்லாத்தையும் சொல்லச் சொல்லி அம்மா சொல்லுறவா. எல்லாத்தையும் அவாட்ட கதைக்கேலாது. என்ர டொச் Freundin தன்ர அம்மாட்டத்தான் எல்லாம் சொல்லுறவவாம்.

எனக்கு தமிழாக்கள் செய்யிற சாமத்தியச் சடங்கு செய்ய விருப்பமில்ல. கையில வெட்டுப்பட்டா ரத்தம் வருகிது. அத ஏன் கொண்டாடுறேல்ல. சாமத்தியப்பட்டா மட்டும் கொண்டாடினம். ரண்டும் இயற்கைதானே. இப்பிடித்தான் அம்மம்மாவக் கேட்டன். சும்மா விதண்டாவாதமோ என்னவோ செய்யாத எண்டு சொன்னா. அம்மாட்ட எனக்கு சாமத்தியச் சடங்கு செய்ய வேண்டாமெண்டு சொல்லிப்போட்டன். அம்மா o.k. எண்டு சொல்லீற்றா. எனக்கு அதுவே காணும். ஏற்கனவே தெரியும் எண்டாலும் Binde எப்பிடிப் பாவிக்கிறது எண்டு அம்மா சொன்னவா.

எனக்கு முதல் முதலில Blutung வந்திட்டிது. அம்மம்மாவுக்கு உடன சொல்லேல்ல. நான் அடுத்த நாள் பள்ளிக்கூடம் போக வெளிக்கிட அம்மா முதல் ஓமெண்டிட்டு பிறகு மூண்டு நாளால போகச் சொல்லுறா. அம்மம்மாதான் சொல்லியிருக்கிறா. ஒரு மாதம் வீட்டில நிக்கட்டாம். விசர்தான். மூண்டுநாள் காணுமெண்டு அம்மா சொல்லீட்டா. எனக்கு வீட்டில நிக்க விருப்பமே இல்ல. ரெஸ்ற் வரிது. Blutung க்காக வீட்ட நிண்டனெண்டா ரீச்சர் சரியெண்டு சொல்லமாட்டா. மூண்டு நாளுக்குப் பிறகு நான் பள்ளிக்கூடம் நோமலாப் போவன்தானே. என்னக் கொண்டுபோய் காரில விடப்போயினமாம். விசர்தான்.

எனக்கு வந்த ஆத்திரமெண்டா. எவ்வளவு நேரம் நிக்கிறது. கால் எல்லாம் உளையிது. நெடுகலும் செய்யிறேல்ல எண்டு சொல்லீட்டு அம்மம்மாவோட சேந்து செய்திட்டினம். மூண்டு நாளிலையே அம்மம்மா வந்து கட்டாயம் தண்ணி வார்க்கவேணும் ஏதோவெண்டு சொல்லி தொட்டிக்க இருத்தி வாத்திச்சினம். ich hasse so was. பிறகு நாங்கள் எங்கட குடும்பம் மட்டும் செய்வம் எண்டு சொல்லிச்சினம். ஊருக்கு அப்பம்மாவுக்கு அனுப்பிறத்துக்கெண்டு வீடியோ பிடிச்சினம். ஆர் வெளிக்கிடுத்தினது சரியெண்டு ரண்டு பொம்பிளையள் அடிபடவும் துடங்கீற்றினம். எனக்கு விசரா இருந்திது. ஒவ்வொரு பமிலியாச் சொல்லி நிறையச் சனம் வந்திட்டிது. பள்ளிக்கூடத்தில நான் ஒருத்தருக்கும் இந்த விசயம் ஒண்டும் சொல்லேல்ல. அவயள் சிரிப்பினம்.



# தேடல் வலி

இலட்சியம் நோக்கிய
பெண்களின் இலக்கை
குறி வைத்துத் தாக்குதல்
ஆண்மையின் வீரமாம்.

கன்னிமை
கண் இமைக்கும்
நேரத்திலும்
தெறித்து விடாதபடி
காத்துக் கொள்ள
பழகிக்கொள்,

ஏனெனில்
பெண்ணே!
உன்னை நீயே
உணராத வரையில்
எதற்குமே ~ நீ
உரிமை கொள்ள
முடியாது.

உன்,
உணர்ச்சிகளின்
விளிம்புகளுக்கும்
அப்பால் ~ உலகம்
உனக்காய்
பார்த்துக் கொண்டிருக்கிறது
முனிவன் போல்.

உன்னைப் பற்றி
தெரிந்து கொள்ள
முயற்சியாவது செய்,
இல்லையேல்...
உன்னை நீ
பாரிய காயங்களை
தாங்கிப் பழகிய
உனக்கு,
சின்னக் கீறல்களும்
சிறிய வலிகளும்
நெஞ்சுக் குழியினுள்
எரிமலைக் குழம்பாய்
கொதிப்பது தெரிகிறது.

காரணம்,
நியாயங்களை
உண்மைப் படுத்த
படும் வேளை
உன்னுடைய
கருத்துக்கள்
கருமைப்பட்டு
போகிறது
கார்மேகம் போல்,

உனக்குள்
உன்னையே தேடிப்பார்
உடல் உறுப்புக்கள்
ஒவ்வொன்றின்
அசைவிலும் நின்று
உணர்ச்சிகளை
மீட்டெடுத்துக் கொள்
முற்றிலுமாய்,

வீணையாய்,
மடியில் தவழ்வதை
கொஞ்சக் காலம்
நிறுத்திவை.

சுரங்கள் பேசும்
சுகங்களை மீட்டும்
விரல்களை விடு
மடித்து விடு
தந்திக் கம்பிகளை
நாத விந்தம்
பாடாத படிக்கு
அறுத்து விடு,

அதன் பிறகு
எவருக்கும்
குருதி
கொப்பளிக்காது.



ஜெயந்தி சாம்சன்

(2002)

## உரிமைகளின் கருவாவாள்

என்னிடம் யாருமே
எதுவும் கேட்கமாட்டார்களா?
நான் சிறு குழந்தை என்று
நினைத்தார்களா?

அவர்களுக்கு
நான்
உள்ளம் இல்லாதவளாக
அல்லது
ஊமையாகத் தெரிகின்றேனா?
என் உணர்வுகளை
அவர்கள்
புரிந்து கொள்ளும்படியாக
நான்
வாழவில்லையா?
யார் அவர்கள்
எதற்காக அவர்களை
முக்கியப்படுத்துகிறேன்?
அப்பா,அம்மா,சகோதரன்,மாமி
இவர்கள்தான்
எனது திருமண நாளை
நிச்சயிப்பார்களா?
என்னிடம் எதுவுமே கேட்கமாட்டார்களா?
என்றாலும் எது எப்படியாயினும்
எனது பெண்குழந்தையை
எப்படி வளர்ப்பது என்பதை
நான் நிச்சயிக்க வேண்டும்!



**வாசுகி குணரத்தினம்**

(2002)





# யுத்தம் எதற்காக?

**தேவா**


**(அண்மையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நடாத்தப்பட்ட போர் பற்றி இவர் எழுதிய விமர்சனக் கட்டுரைகளிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களோடான ஒரு கண்ணோட்டம் இது)**

யுத்தத்தின் மூலம் சமாதானம் என்கிற கோசத்தை நாம் பல வருடங்களுக்கு முன்னிருந்தே ஈழத்திலிருந்து கேட்டிருக்கிறோம். அதுவே இன்னொரு வடிவில் யுத்தமே சமாதானத்தைத் தரும் எனும் உறுதியோடு கட்டவிழ்த்து விடப்பட்ட ஓர் அரசின் பயங்கரவாதமானது உலகையே பயமுறுத்தி வைக்கிறது. என்னை தட்டிக் கேட்க யாராலும் முடியாது போன்ற ஆணவம் ஆப்கானுக்கு மேல் தொடுக்கப்பட்ட போரின் அடிநாதமாக ஒலித்தது. ஊடகங்களை தன் ஆக்கிரமிப்புக்குள் வைத்திருக்கும் பலத்தால், உலக அனுதாபங்களை திரட்டிய அரசியலால் இலாபமடைந்த இவ் வர்க்கத்தின் தன்னிச்சையான போக்குக்கு எதிரான குரல்கள் எழுந்தன.

சமாதானத்தை அதிகாரம் மூலம், இராணுவப் படையெடுப்பு மூலம் உலகின் எந்த மூலையிலும் கொண்டுவர முடியும் என்கிற வாதத்தை மறைமுகமாக சொல்லி வந்தவர்கள், நேரடியாகவே அதனை நடைமுறையில் நடாத்திக் காட்டிய அழகை கண்கூடாக கண்டது இவ் உலகம். கண்ணுக்குக் கண்,

### அருந்ததி ராய்





புகழ்பெற்ற எழுத்தாளரும், அரசியல் விமர்சகரும், போராட்டக் காரருமான அருந்ததி ராய் 1960 இல் கேரளாவில் பிறந்தார். அவர் கட்டிடக் கலைப் படிப்பின் பின், விவரணப் படங்கள் (டொக்குமெண்ரி), திரைக்கதை வசனம் ஆகிய கலை முயற்சிகளுக்கு ஊடாக இலக்கியத்துள் புகுந்தார். 1996 இல் வெளிவந்த இவரின் புகழ்பெற்ற நாவல், இந்துத்துவத்தின் சாதி அமைப்பைத் தூக்கியெறியும் ஒரு காதல் கதையை மையமாகக் கொண்டது. இதனாலே இந் நாவல் இந்திய அரசால் தடை செய்யப்பட்டது. இந்திய அரசின் அணு ஆயுதப் பரிசோதனைக்கு எதிராகவும், நதி அணைக்கட்டுத் திட்டம் ஒன்றுக்கு (இத் திட்டம் அங்கு வாழும் மக்களின் இருப்பை அழிப்பதாக உள்ளதால்) எதிராகவும் போராடுவதால், இவருக்கு எதிராக இந்திய அரசு சிறைத் தண்டனை தருவதாகப் பயமுறுத்துகிறது. கடந்த வருடங்களில் இவர் எழுதிய "பொருளாதாரம் உலகமயமாதல்" சம்பந்தமாக தெற்காசியாவின் வறுமை நாடுகளின் நிலை பற்றிய கட்டுரைகளுக்காக, பரிஸின் கலாச்சார சர்வதேச பல்கலைக்கழகம் நவம்பர் 12ம் தேதி இவருக்கு மிகச் சிறந்த பரிசொன்றை வழங்கியது. மனித உரிமை மீறலுக்கு எதிரான அவரது போராட்டத் துக்காகவும் இப் பரிசு சிபாரிசு செய்யப்பட்டது.

இரத்தத்துக்கு இரத்தம், பழிக்குப் பழி என்பதுதான் நியாயம்; அதுவே சரியானது, நீதியானது என்ற கருத்தை மனித மூளைக்குள் சரியான சமயத்தில் திணிப்பதில் வெற்றிகண்ட ஆட்சியாளர்களின் நிலைக்கு எதிர்ப்பக்கம் இருக்கும் நியாயங்களை, உண்மைகளை வெளியிடுவதில் முன்னின்றவர் அருந்ததி ராய். ஒக்டோபர் 7ம் தேதி அமெரிக்கா ஆப்கானின் மேல் தொடுத்த போர் குறித்த இவரின் ஆக்ரோசமான கருத்துக்கள் ஊடகங்கள் மத்தியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

> பயங்கரவாதத்தை அழிக்கிறோம் என்ற பெயரில், ஓர் இனத்தின் மேலும் வெறுப்பை உருவாக்கி அவ்வினத்தையே நிர்மூலமாக்கும் ஆளும் வர்க்கத்தினது மூர்க்கம் ஈழத்தில், பலஸ்தீனத்தில், இந்தியாவில் தலித்துகளை அழிப்பதில்... என்று இன்னும் உலகம் முழுவதுமே தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. எல்லாவற்றுக்கும் கிரீடம் வைத்தால்போல அமெரிக்காவின் பிடி. "பின்லாடன் யுத்தம்" மிக கவனமாக ஆயத்தம் செய்யப்பட்ட ஓர் அதிகார வர்க்கத்தின் வெறியாட்டம். இன அழிப்பை இப்படியும் மேற்கொள்ளலாம் என்பதற்கு இப்போர் ஒரு உதாரணம்.
>
> அருந்ததி ராய் தன் கருத்தில்...

'பயங்கரவாதத்தை அழிக்கிறோம்' சாமி பெயரில் குழந்தைகள், குடிமக்கள் மேல் குண்டு மழை பொழியப்பட்டு, ஒரு பயங்கரவாதியைப் பிடிக்க பத்து குடிமக்களாவது செத்தொழிய வேண்டும் என்ற கோபாவேசம் ஆப்கானின் மேல் பாய்ந்திருக்கிறது. "இலக்கை நோக்கி ஒரு தடவை தவறினோம்; அடுத்த தடவை தவற மாட்டோம்" எனக் கூறிக்கொண்டே வைத்தியசாலைகளுக்கு, பாடசாலைகளுக்கு, குழந்தைகள் காப்பிடங்களுக்கு மேல் குண்டுமழை பொழிந்தது அக்கிரமம் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும். இழக்கவே ஒன்றுமில்லாத மனிதர்க்கு மேல் நடைபெறும் யுத்தம் பற்றி கவனிக்க வேண்டும்.



**பயங்கரவாதத்தைப் பற்றிய வரையறை என்ன? ஒருவருக்கு விடுதலைப் போராளிகளாகத் தெரிபவர்கள் இன்னொருவருக்கு பயங்கரவாதி களாகத் தெரிகின்றனர். இந்த விடயம் உலகம் பூராவும் மிக ஆழமானதாக இலட்சியத்துக்கும், வன்முறைக்கும் இடையில் புதைக்கப்பட்டிருக்கிறது. வன்முறை முதலில் நியாயத்தின் பேரில் இயக்கப்படும் அரசியல் ஆயுதமாக ஏற்றுக்கொள்ளப்படுமாயின், அதையே நெறிமுறையின்படி நோக்கினால், தீவிரவாதிகளின் அரசியலை ஏற்றுக் கொள்வதென்பது கருத்து மாறுபடும் ஒரு கடினமான பரப்பைக் கொண்டு இருக்கும்.**

'நாம் சமாதான விரும்பிகள்' என சொல்லிக்கொள்ளும் அமெரிக்கா உலகின் மிகக் கூடிய -பயிர், இயற்கை, பௌதீக ரீதியான- அழிப்புச் சக்தி கொண்ட ஆயுத உற்பத்தியுடன் உலகின் ஆயுத சந்தையில் முதலிடத்தை வகிக்கிறது. இவர்களே இன்று உலகெங்கும் நடைபெறும் போர்களுக்கு பொறுப்புடையோர். இவர்கள்தான் இன அழிப்புக்கு, மனித உரிமைக்கு எதிராக நடைபெறுபவைகளுக்கு, ஆதிக்க சக்திகளுக்கு தோள் கொடுக்கிறவர்கள்.இவர்கள் மொழியின் கருத்து 'பன்றி என்பது குதிரை! பெண்பிள்ளைகள் எனப்படுவோர் ஆண்பிள்ளைகள்! .யுத்தமென்றால் அது சமாதானம்!". கடந்த மூன்று வருடங்களாக வரட்சியில் வாடும் மக்களின் மேலே குண்டுமழையை ஒருபுறம் பொழிந்தும், மறுபுறம் உணவுப் பொட்டலங்களை ஆப்கான்



மக்களுக்காக கண்ணிவெடிப் பிரதேசங்களிலும் விமானத்திலிருந்து எறிந்த, அமெரிக்காவின் இரக்க சிந்தையை உலகமே பார்த்து வியந்தது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நிகழும் போராட்டத்தினால், அந்த நாட்டிலே ஒன்றரைக் கோடி மக்கள் இப்போது தொடரப்பட்டுள்ள யுத்தத்துக்கு முன்னரே உயிரிழந்துள்ளனர். ஒவ்வொரு பயங்கரவாதிக்காகவும் ஒரு பாவமும் அறியா 100 குடிமக்கள் இறக்கின்றனர். அதேசமயம் புதிதாக பயங்கரவாதிகள் எதிர்காலத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றனர். நிலைமை இவ்வாறிருக்க பயங்கரவாதத்தை எப்படி முடிவுக்குக் கொண்டுவர முடியும்? தாமே ஒரு காலத்தில் போராளிகளை வளர்த்தோம் என்பதை மறந்துவிட்டு, அவர்களை பூண்டோடு அழிக்க கங்கணம் கட்டி நிற்கின்றனர். தாம் கணக்கிடும் அரசியல் இலாபத்தை முன்வைத்து, பணத்தைக் கொட்டியபோதும், ஆயுதங்களை தாராளமாக அள்ளி வழங்கிய போதும், பாதுகாப்புக் கொடுத்தபோதும் பயங்கரவாதிகளாகத் தெரியாதவர்கள் இப்போது உலகின் முதல் தர பயங்கர கொடுமைக்காரர்களாக அமெரிக்காவால் வர்ணிக்கப்படுகின்றனர்."

> ராயுடைய கட்டுரைகள் கோபத்தைக் கொண்டனவா? அல்லது தெற்காசியாவின் குரலா? என்ற தலையங்கத்தில், "சூட் ஆசியன்" பத்திரிகையில் இவரின் கருத்துக்களைப் பற்றிய விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

பென்ரகோனின் சிதைவுக்கு அமெரிக்காவும் சேர்ந்தே பொறுப்பேற்க வேண்டும். அத்துடன் பயங்கரவாதத்திலிருந்து உலகைக் காப்பாற்றப் புறப்பட்ட வளர்ச்சியடைந்த நாடுகளின் அரசியல் நிலைப்பாடு சொல்வது என்ன? "ஒவ்வொரு அரசும் தங்கள் நாட்டிலே செயல்படும், மத அமைப்புகளைப் பற்றி தீவிர கவனம் செலுத்துங்கள். வங்கிகள், பணம் புரட்டப்படுதல் மட்டுமல்ல, கடிதங்களை உடையுங்கள்; ஈமெயில்களைத் திறவுங்கள்; ரெலிபோன்களை ஒட்டுக் கேளுங்கள்" என்கின்றன. ஆகவே இங்கு தொனிக்கப்படுவது, ஒவ்வொரு மனிதனின் விருப்பு வெறுப்பும் அரசாங்கத்தால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படும். ஏனெனில் வல்லரசுகளின் இறைமைக்கு அது ஆபத்து விளைவிக்க முடியும். அமெரிக்கப் பிரஜைகளின் சுதந்திரத்தின் மேல் தலிபான்களுக்கு வெறுப்புள்ளது என கருத்துக்களை வெளியிட்ட அமெரிக்க அதிபரின் போர் அரசியலுக்கு முழு அமெரிக்கர்களையும் பயன்படுத்தும் தந்திரத்தை வெளிக்காட்டுகிறது. யாருக்கு எதிராக அமெரிக்கா போர் செய்கிறது? மத சுதந்திரம், கருத்துச் சதந்திரம், தேர்தல் சுதந்திரங்களைக் கொண்டிராத மக்கள் அவைகளை அனுபவிப்பவர்களைப் பார்த்து எரிச்சலடைந்து, அவைகளுக்கெதிராக பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார்களென்ற கூற்றை நம்புவதானால், தலிபான்கள் அமெரிக்க சுதந்திர சிலையை அல்லவா முதலில் தகர்த்திருக்க வேண்டும்?


உண்மையில் இந்தத் தாக்குதல் அமெரிக்க அதிபர் சொல்வது போல அமெரிக்காவின் ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் எதிர்ப்பதல்ல. ஒருவேளை இராணுவ, பொருளாதார ரீதியாக பயங்கரவாதத்தை, இராணுவ ஆட்சியாளரை, சர்வாதிகாரத்தை, குருட்டுத்தனமான மதவெறியை, இனத் துவேசத்தை அமெரிக்காவுக்கு வெளியே வளர்த்ததற்காக அந்த அரசியலாளருக்குக் கிடைத்த பெருத்த மரண அடியாகவும் இருக்கலாமே! நாம் உலகத்துக்கு நன்மையைத் தேடிக்கொடுக்க எத்தனை பேரையும் நிர்மூலமாக்குவோம் என்பதை நிசமாக்கியது ஆதிக்க அரசு. அரை இலட்சம் பிள்ளைகள் ஊனமுற்றோராய், அனாதைகளாய் இருப்பதாக கணக்கெடுக்கப் பட்டுள்ளன, அண்மையிலான கணிப்பில் 10 லட்சம் கண்ணிவெடிகள் நாடு பூராவும் புதைக்கப் பட்டுள்ளதான ஆப்கானுக்கு எதிராக உலகின் அதிவல்லரசுகள் தங்களின் மிக உக்கிரமான ஆயதங்களைக் கொண்டு அந்த நாட்டை சுற்றி வளைக்கின்றன. "ஒசாமா பின்லாடன்" தான்

பயங்கரவாதத்துக்கு பொறுப்பு என குற்றம் சாட்டப்படுகிறது. இதற்குரிய அத்தாட்சிகளை இன்னும் சமர்ப்பிக்க முடியாத அமெரிக்காவிடம் எமது முக்கியமான கேள்வி: போபால் அணுசக்தி விபத்தில் 16,000 பேர் பலியானார்களே. அந்த நிலையத்துக்கு பொறுப்பானது யூனியன் காபைட். இதன் தலைவர் வாரன் அண்டர்சனை (இந்தியாவிடம் போதிய நிருபணங்கள் உள்ளன) இன்றுவரை எம்மிடம் ஒப்படைக்கவில்லையே! இதற்கு உங்கள் பதில் என்ன?

> ராய் தரும் செவ்விகளில்: "நான் இந்தியப் பிரஜை மட்டுமல்ல, உலகப் பிரஜை. தெற்காசியாவிலிருக்கும் மற்றைய புத்திஜீவிகளைப் போலவே நானும் பயங்கரவாதத்தை மறுக்கிறேன். அமெரிக்காவிலும், ஆப்கானிலும் உயிரிழந்த மக்களுக்காக ஆழ்ந்த துக்கமடைகிறேன். ஆனால் அமெரிக்காவின் நியாயத்தையும், தன்பக்க சார்புநிலைக்கு உலகை மாற்றி அமைக்கும் செயலைத் தொடர்வதை வன்மையாய் கண்டிக்கிறேன்." என்கிறார்.

ஒருவரை இன்னொருத்தர் அழிக்க புதிது புதிதாக ஆயுதங்கள் தயாரிக்கவெல்லாம் தேவைப்பட வேண்டியதே இல்லை. இந்த யுகத்தில் எந்த நவீன ரக ஆயுத உற்பத்தியை விடவும் புதுமையான முறையில் இப்போது மனிதர்களாலேயே மனித ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன. விளையாடும் பருவ சிறுவர்களுக்கே ஆயுதங்கள் விளையாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக கொடுக்கப்படுகிறது. தந்தையின், தாயின், சகோதர அரவணைப்புக்குப் பதிலாக அவர்களுக்கு இயந்திரத் துப்பாக்கிகள் கிடைக்கின்றன. வளர்ந்தவர்களைப் போல அதிகாரம் செய்கின்றனர். மற்றவர்களை துன்புறுத்துகின்றனர். கற்களாலும்கூட தாக்கு கின்றனர். தலிபான் பெண்களையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குகின்றனர். என்ன செய்வது, எது செய்வது என்ற நோக்கங்கள் இல்லாமல் மனம்போன போக்கில் நடக்கின்றனர். காலம்காலமாக அவர்கள் மேல் திணிக்கப் பட்டிருக்கும் போர் அவர்களின் இளமையை, மென்மையை பறித்துவிட்டது. நட்புணர்வுக்கும், இரக்க சிந்தனைக்கும் அந்நியமாகி விட்டனர். தம்மை ஆளும், சுற்றிவிழும் குண்டுகளுக்கு மத்தியில் வாழப் பழகிவிட்டனர். இப்போது அவர்கள் தம் சொந்த மக்களையே கொடுமைப் படுத்தும் தன்மைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ராயின் கருத்தின்படி, ஆப்கானை தாக்கும் அமெரிக்காவின் நிலைப்பாடு கோரமானது. ஆயுத, பொருளாதார பலத்தின் முன்னால் ஆப்கான் பலி யாக்கப்பட்டதன் அறிகுறியை-யே அவர் காணகிறார். கண்மூடித்தனமான ஆத்திர த்தைக் கொண்ட உணர்வுகள் உலகை ஆட்டிப் படைக்கின்றன என்கிறார்.



**ஒசாமா பின்லாடன் தான் பயங்கர வாதத்துக்கு பொறுப்பு என குற்றம் சாட்டப்படுகிறது. இதற்குரிய அத்தாட்சிகளை இன்னும் சமர்ப்பிக்க முடியாத அமெரிக்காவிடம் எமது முக்கியமான கேள்வி: போபால் அணுசக்தி விபத்தில் 16,000 பேர் பலியானார்களே: அந்த நிலையத் துக்கு பொறுப்பானது யூனியன் காபைட். இதன் தலைவர் வாரன் அண்டர்சனை (இந்தியாவிடம் போதிய நிருபணங்கள் உள்ளன) இன்றுவரை எம்மிடம் ஒப்படைக்க வில்லையே! இதற்கு உங்கள் பதில் என்ன?**

மேலும் இவர் பேசுகிறார்...

பொருளாதாரம் உலகமயமாக்கப் படுதலுக்கு



நேரவிருக்கும் ஆபத்துக்களையும், உரிமை இழப்புகளையும் பற்றிய எனது கண்ணோட்டங்களை அரசியல் கட்டுரைகளில் ஆராய்ந்து வருகிறேன். உலகப் பொருளாதார சந்தையை மேலெடுக்கும் முயற்சி உலகின் பெரும்பான்மை மக்களைப் பற்றிய அக்கறையை கடந்து போகிறது. வசதி படைத்த வர்க்கம், ஊடகங்களை தந்திரமாக கையில் வைத்துக்கொண்டு அவைகளை நெறியாழ்த்தும் போக்கில், பெரும்பான்மையினரை திருப்திப்படுத்தும் செயல் தொடர்கிறது. திருப்திப் படுத்த முடியாத நிலையைத் தொடும்போது, அவர்களின் முதுகிலேயே சவாரிவிட்டு அவர்களை நெருங்குகிறது. மத அடிப்படைவாதத்தை கேள்விக்குள்ளாக்கி அது மனித நேயத்துக்கு எதிரான-தாகவும், நேர்மையற்றதாகவும் உலகத்துக்கு தோற்றம் காட்டுதலும் அந்த மத நம்பிக்கையையே அழிப்பதையும் கருவியாக தூக்கிப் பிடிக்கிறது. பொருளாதார உலகமயமாக்கலின் நடைமுறைச் செயலானது, அதன் துணைச் செயல்பாட்டு தோற்றத்தின் அடிப்படையில், தனக்கு புறம்பான மத, அரசியல், பொருளாதாரத்தில் கைவைக்கும் கைங்கரியத்தைக் கொண்டுள்ளது. ஆகவே அங்கு தொனிக்கப்படுவது பயங்கரவாதிகள் மதவாத அடிப்படையில், சொந்த மக்களை -குறிப்பாக பெண்களை- ஒடுக்குகிறார்கள் (இத்தனை காலமும் அவர்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர் என்பது மறக்கப்பட்டு) என்ற ஆத்திரத்தை உலகிடம் கிளப்பிவிடுகிறது.

நீங்கள் யார் பக்கம் இருக்கிறீர்கள்? என்ற கேள்வியை எழுப்புவதன் மூலம் உலகத்துக்கே சவால் விட்டு, என் பக்கம்தான் சரி, நான் எது செய்தாலும் சரி என்ற வாதத்தை முன்வைக்கிறது ஆதிக்க அரசு. ஆப்கானுக்கு எதிரான போரை துவக்க, அதனை நியாயப்படுத்த, தமக்கு தேவை-யான கருத்துக்களை ஊடகங்கள் மூலம் உறுதிப் படுத்திக் கொண்டது. ஆத்திரம் வெளியாவதற்கு ஒரு வழி தென்பட்டால் அது உண்டானதற்கும் ஒரு நோக்கம் இருந்துதானே ஆகணும். பயங்கரவாதமே அழித்தொழிக்கப்பட வேண்டியது என்ற குருட்டாம் போக்கை விடுத்து, இவ் வாதம் உருவாவதற்கு அடிப்படைக் காரணிகள் என்னென்ன என்பதை ஆராயாமல், அதன் அறிகுறிகளை உணர்வதே தற்போதைய தேவை. மாற்று மத நம்பிக்கைகளுக்கு எதிரான, கலாச்சாரங்ளுக்கு எதிரான போராக இருந்தால், இது நீண்டகாலத்துக்கு முன்னரேயே திட்டமிடப்பட்ட காரியமென சனத்தொகை நிரம்பிய நாடுகள் கருத ஏது உண்டு.

ஒரு தீவிரவாதத்தை ஒழிக்க அந்த நாட்டையே தகர்த்து அழிக்கும் ஏகாதிபத்தியத்தின் எல்லை கடந்த உரிமையை கேள்வி கேட்க வைக்கிறது. உலகின் வல்லமை மிகுந்த அணு, பௌதிக சக்தி ஆயுதங்களை உற்பத்தியாக்கும் வல்லரசுகளின் இந்த எல்லையற்ற உரிமை நிலைநாட்டுதலானது, கடவுளின் வாசகமொன்று கேட்பது மாதிரியான மயக்கத்தைத் தருகிறது. ஆனால் உண்மையில் அங்கு பழிவாங்கப்படுவதுதான் என்ன? ஆயிரக்கணக்கிலும் அதற்குமேலும் அழித்தொழிக்கப்படும் மனித உயிர்களே. கடவுளே தங்களுக்கு இந்த அழிப்பு அதிகாரம் கொடுத்திருக்கிற ஒரு பாவனை உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களின் வன்முறைக்கு, மனித அழிப்புக்கு முன்னால் தலிபான்கள் கூட ஈடுகொடுக்க முடியவில்லை. ஆளரவமற்ற நகரங்கள், அண்டை நாட்டுக்கு உயிர் தப்பியோட முயன்ற சிறுவர்களுக்கு முன்னால் மூடப்பட்ட எல்லைகள் இருந்தன. நகர்களை இணைக்கும் முக்கிய வீதிகள் சிதைக்கப்பட்டும், மூடப்பட்டும் கிடந்தன. 7,5 லட்சம் ஆப்கானியர் பெற்றுக் கொள்ளக்கூடிய உணவுப் பொருட்கள் நவம்பர் தொடக்கத்திலிருந்தே அவர்களை போய்ச் சேரவில்லை. இதன்மூலம் தொடர்ந்த பனிக்காலத்தில் பட்டினியால் வாட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்த லட்சணத்தில், தலிபான்களிடமிருந்து ஆப்கான் மக்களை யார்தான் மீட்கமுடியும்? பெண்களுக்கு சுதந்திரத்தை எது கொடுத்துவிடும்?

யூலை 1997 இல் தலிபான்கள் ரேடியோவில் அறிவித்தனர்:

பெண்கள் வீட்டுக்கு வெளியே வேலைக்குப் போகக்கூடாது; தனியே பயணம் செய்யலாகாது; கார், சைக்கிள் உட்பட எந்த வாகனங்களும் செலுத்தத் தடை; பெண் குளியல் தடாகங்கள் மூடப்படும்; வீதியால் போகும் யாரும் அவர்களைப் பார்க்காதிருக்க யன்னல்களில் திரைச்சீலை தொங்கவிடப்பட வேண்டும்; நடக்கும் போது பெண்கள் தங்கள் செருப்புச் சத்தம் கூட கேட்கக் கூடாத அளவுக்கு மெதுவாய் நடக்க வேண்டும்; முக்காடு அணியாத பெண்களினால் ஆண்களின் இறை தியானம் குழம்பும் என்பதால் பெண்கள் முக்காடு அணியவேண்டும்; குடும்பத்தைத் தவிர மற்ற எல்லாரோடும் கொண்ட தொடர்பு உடைக்கப்பட வேண்டும்.

பல்வேறு நிறங்களுள்ள சீலையை உடம்பு முழுதும் போர்த்துக் கொண்ட பெண்களை -ஆப்கானுக்கு எதிரான அமெரிக்காவின் போர்க்காலத்தில்- அடிக்கடி ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. “பெண்கள் தம்மை வெளியாட்களுக்குக் காட்டிக் கொள்ளக்கூடாது.” இது இறைவாக்கு என்று எடுத்துக் கொண்டாலுமே, அந்த வாக்கை சிரமேற் கொள்வது பெண்களின் தீர்மானத்தில்தான் அடங்கியுள்ளது. இந்த இறைவாக்கை ஆணாதிக்கம் எப்படி பெண்களின் மேல் திணிக்க முடியாதோ, அதே மாதிரித்தான் பெண்கள் நாம் “இறை ஆணையின்படி உடம்பு மூடித்தான் வெளியில் போவோம்” என முடிவெடுத்து, அதன்படி நடப்பதை மறுக்க முடியாது என்பதும். அப்படியாயின் இந்த விவகாரத்தை “பெண்கொடுமை” என உலகுக்கு எடுத்துக்காட்ட முனைவது ஒரு போர் அரசியல் தந்திரம். பெண்களை போர்க்காலத்தில் சிறைப்படுத்துவது, பாலியல் கொடுமைக்கு உள்ளாக்குவது, கருவுறச் செய்தல் போன்றவை போலவே இதுவும் நடைபெறுவது இயல்பே என்ற மாயையை இன்னும் நிலைபெறச் செய்து கொண்டிருப்பதானது, பெண்கள் இன்னும் அதிகாரத்தின் உடைமைகள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

மேலும் அதிகாரத்தின் கூறுகளிலொன்று பெண்ணின் இருப்பைப் பற்றிய உரிமையை தன்னகத்தே வைத்துக் கொள்கிறது. அவள் சம்பந்தப்பட்ட உடை, நடை, உடல், கர்ப்பப்பை, உழைப்பு உட்பட எல்லா விதமானமாவைகளுக்கும் சொந்தம் கொண்டாடுகிறது. போர்ச் சூழலிலே பலப்பல வருடங்களாய் வாழ்ந்திருந்து, வரட்சி, அபின் போதை, விபச்சாரம், சொந்த குழந்தைகளை வயிற்றுப் பசிக்காக விற்கும் கொடுரம், கண்[illegible]களினால் ஊனம் என்று இன்னும் உலகமே இதுவரை அறிந்திராத கொடுமைகளுக்கு ஆளாகியிருந்த பெண்கள் தம் தலை முக்காட்டை நீக்கிவிட்டால் விமோசனம் கிடைத்துவிடுமென்று, உலகுக்கு “படம்காட்டும் வித்தையை” புரிந்து கொள்ளணும். உடலை துணிபோர்த்து மூடிய பெண்கூட போரை தொடர்வதற்குரிய காரணமாக்கப் படுகிறாள். பெண் உடல் வியாபார விளம்பரங்களுக்கு பயன்படுத்தப் படுவது போல, அவள் கட்டாயப்படுத்தப்பட்டோ/படாமலோ (இது சர்ச்சைக்குரியது) அணியும் ஆடை



**இரண்டு தரப்புமே ஒரு மொழியைத் தான் ~நான் செய்வதே சரி என்ற பாஷையை~ பேசுகின்றனர். ஆனால் இவர்கள் தாம் இயற்றிய மோசமான அரசியல் வலையிலே சிக்குண்ட குற்றவாளிகள். நீரும் நெருப்பும் இவர்கள.**





**ஒரு தீவிரவாதத்தை ஒழிக்க அந்த நாட்டையே தகர்த்து அழிக்கும் ஏகாதிபத்தியத்தின் எல்லை கடந்த உரிமையை கேள்வி கேட்க வைக்கிறது. உல~கின் வல்லமை மிகுந்த அணு, பௌதிக சக்தி ஆயுதங்களை உற்பத்தியாக்கும் வல்லரசுகளின் இந்த எல்லையற்ற உரிமை நிலைநாட்டுதலானது, கடவுளின்**



**வாசகமொன்று கேட்பது மாதிரியான மயக்கத்தைத் தருகிறது. ஆனால் உண்மையில் அங்கு பழிவாங்கப் படுவதுதான் என்ன? ஆயிரக்கணக்கிலும் அதற்குமேலும் அழித்தொழிக்கப்படும் மனித உயிர்களே.**



யுத்தத்துக்கு ஒரு கருவியாக்கப்படுகிறது என்பதே யதார்த்தம். ஒரு மதத்தை, ஒரு கலாச்சாரத்தை, இன்னொருவர் விமர்சனத்துக்கு உரியதாக்குகிற வேலைகளைக்கூட இந்தப் போர் உடன் சேர்த்துக் கொண்டதால் ‘உடலை மூடியிருத்தல்’ பெண் கொடுமையின் அடையாளமாக பிரகடனப்படுத்தப் படுகிறது.

ஆப்கான் மக்களுக்கு உணவு ‘உலகை இரட்சிக்கப் போனவர்களால் அருளப்பட்டது’ என்பதுபோல் ஊடகங்களால் உலகம் பூராவும் காட்டப்பட்டன. மக்களைப் பற்றியே கவலைப்படாத, ஆயுதங்களையே மட்டும் நம்பியிருக்கிற, சர்வாதிகாரத்தை மட்டுமே போற்றும் பின்லாடனுக்கும், வல்லரசுகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எதிரி ஒருவனை கண்டுபிடித்து அவனை மக்களின் முன் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கு இருந்தது. போரைத் தொடர்வதற்கான இயக்கப்பாடுகள் அங்கு நடந்த அநியாயங்களை காரணம் காட்டியும், வாதங்களை முன்வைத்தும் செயலாற்றுகின்றன. இவ்விடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும்.

பயங்கரவாதத்தைப் பற்றிய வரையறை என்ன? ஒருவருக்கு விடுதலைப் போராளிகளாகத் தெரிபவர்கள் இன்னொருவருக்கு பயங்கரவாதிகளாகத் தெரிகின்றனர். இந்த விடயம் உலகம் பூராவும் மிக ஆழமானதாக இலட்சியத்துக்கும், வன்முறைக்கும் இடையில் புதைக்கப்பட்டிருக்கிறது. வன்முறை முதலில் நியாயத்தின் பேரில் இயக்கப்படும் அரசியல் ஆயுதமாக ஏற்றுக் கொள்ளப் படுமாயின், அதையே நெறிமுறையின்படி நோக்கினால், தீவிரவாதிகளின் (இவர்கள் உரிமைப் போராளிகளா அல்லது விடுதலைப் போராளிகளா) அரசியலை ஏற்றுக் கொள்வதென்பது கருத்து மாறுபடும் ஒரு கடினமான பரப்பைக் கொண்டிருக்கும்.

யுத்தம் சமாதானத்துக்கான தீர்வு அல்ல. அரசியல் ரீதியாய் இம்முறையும் எதற்காக போர் நடைபெறுகிறது என அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். உலகின் எல்லா மக்களும் வல்லரசுகளின் பக்கம் நிற்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். போர் நிகழ்ந்த நாட்களிலே எங்களுக்கு ஆத்திரமூட்டப்பட்டன. எமது உணர்வுகள் முடமாக்கப் பட்டன. உலகின் எல்லா

ஆதிக்க அரசுகளும் இந்தப் போர் சூழ்நிலையைப் பயன்படுத்தி கருத்து சுதந்திரத்தையும் மற்ற மனித உரிமைகளையும் கட்டுப்படுத்த முயலலாம். தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவும், இன, சமய ரீதியாய் சிறுபான்மையினரை தந்திரமாய் கட்டுப்படுத்தவோ செய்யலாம். உள்நாட்டு அத்தியாவசிய தேவைகளை வெட்டி, இராணுவத்துக்கான செலவினங்களை அதிகரிக்கலாம்.

யுத்தம் தொடுக்கப்பட்டதன் கேள்வியை கேட்காதிருக்கும் பொருட்டு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட முன்னேற்பாட்டினால், அமெரிக்காவின் வெற்றியைப் பற்றிய ஆவல் மக்களிடையே புகுத்தப்பட்டது. அரசாங்கங்கள் எடுக்கும் நிலைப்பாடு சரியானதே என்ற கருத்துக்கு அவர்களை உட்படுத்தவும் இச் சூழ்நிலை தூண்டியது.

இரண்டு தரப்புமே ஒரு மொழியைத் தான் -நான் செய்வதே சரி என்ற பாஷையை- பேசுகின்றனர். கடவுள் தங்கள் பக்கமாக இருப்பதாகக் கூறிக்கொண்டே தீமையை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிறார்களாம். ஆனால் இவர்கள் தாம் இயற்றிய மோசமான அரசியல் வலையிலே சிக்குண்ட குற்றவாளிகள். நீரும் நெருப்பும் இவர்கள். இருவரையுமே பொறுத்துக் கொள்ள முடியாது. நாம் சுவாசிக்கின்ற நல்ல காற்றைக் கெடுத்தார்கள். வறிய நாடுகளின் வயல்களை வெட்டுக் கிளிகள் முழுவதுமாய் அழித்தது போல், நாம் குடிக்கும் நீரை கெடுத்ததுமில்லாமல், எங்கள் சிந்தனைகளையும் குட்டிச் சுவராக்குகிறார்கள்.

மனிதக் குழுவுக்கு ஒரு வலிமையுள்ள தலைமை உயிர் வாழ்தலுக்கு, மனித இருப்புக்கு நெருக்கடி நேர்ந்த போதெல்லாம் உறுதி கொள்வதற்கு தேவைப்பட்டது. அதேசமயம் தலைமைத்துவம் தானாய் பெற்றுக் கொண்ட அதிகாரத்தை என்றுமே இழக்கத் தயாராய் இல்லை. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள பலம் தேவைப்பட்ட போது, ஆயுதங்கள் இன்றியமையாததாகி விட்டன என்ற கருத்தியலானது, இறுதியில் மனிதனையே அழிக்கும் நிலைக்கு இட்டுச் செல்கிறது. அதிகாரத்தின் அதி உயர்ந்த உணர்வு என்னவெனில், ஆயுதங்களால் மனிதனை ஒடுக்கி வைத்திருக்க முடியுமென்பதை புரிந்து வைத்திருப்பதுதான். புராணகாலத்திலே கூட போர்கள் நடந்தன. அழிவுகள் ஏற்பட்டன என்ற எடுகோள்களை நோக்கினாலும் கூட அங்கு புலப்படுவதும் ஒரு போர் அரசியலே.

மக்களை அழிக்கும், ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கும் எந்தப் போரையுமே நியாயப்படுத்த முடியாது. மக்களுக்கு மேல் வலிந்து ஏற்றப்படும் எந்த மத அரசியலும் உயிர்த்திடவும் முடியாது.

**இரண்டு தரப்புமே ஒரு மொழியைத் தான் –நான் செய்வதே சரி என்ற பாஷையை– பேசுகின்றனர். கடவுள் தங்கள் பக்கமாக இருப்பதாகக் கூறிக்கொண்டே தீமையை ஒழிக்கப் புறப்பட்டிருக்கிறார்களாம். ஆனால் இவர்கள் தாம் இயற்றிய மோசமான அரசியல் வலையிலே சிக்குண்ட குற்றவாளிகள். நீரும் நெருப்பும் இவர்கள். இருவரையுமே பொறுத்துக் கொள்ள முடியாது.**





## வன்மப்படுதல்

சுற்றி வளைத்து
நீ ~ ஏவிய சூறாவளி
வேலி கட்டி
வெற்றிகரமாய் வீசி வீசி
அதற்குள் என்னை ~ என்
தேசத்தையே
சுவாசிக்கச் சொல்வதுதான்
நாசப்படுத்தலாம்.

நீ ~ காட்டும் சுதந்திரம்.
உலகில்
விரிந்தெழுகிற
ஒரே கால நிலை
என் தேடல்களைப் பரிசோதிக்க
ஒரே அதிகாரம்
உன் கையில் அதிகாரம்
நிலைத்திருப்பதில்லை என்பதை
நீ ~
மறந்து விட்டாய்.
அதனால் தான்
நினைத்தபடி
நீ ~ சத்திர சிகிச்சை செய்ய
என் வாழ்க்கை
விபத்திலடிபட்ட பிராணியாகிவிட்டது.

சுயத்தையெல்லாம்
ஒப்படைத்து விட்டு
வைக்கோல் பொம்மையாகி
உன் ~ இழுப்புக்கு
ஆட வேண்டுமென்றே
நீ ~ நினைக்கிறாய்.
நீ ~ சொல்வது தான் வேதம்
நீ ~ காட்டுவது தான் உலகமெனில்
எனக்கென்று
இதயமும் கண்களும் எதற்கு?

முன்னேற்பாட்டுடன் நடத்தும்
தாக்குதலைப் போன்று
திடீர் திடீரென என்னைச்
சுற்றி வளைக்கிறாய்.
(எதிலும் முன்னேற விடாமல்)
நீ ~ வஞ்சித்தவர்களை
மறந்து துரோகி என்கிறாய்.
நீ ~ குற்றவாளியாக இருந்து
கொண்டு
என்னைத் தண்டிக்கிறாய் ?



அனார்

(2002)




# சபியா
# ஒரு முடிவல்ல, அவள்ஒரு தொடர்...

ஜயந்திமாலா

## இது ஒரு ஆபிரிக்கத் துயரம்:

### ஆண் குற்றவாளி விடுதலை!
### அப்பாவிப் பெண்ணுக்கு மரணதண்டனை(?)!!



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் இஸ்லாமிய நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பு உலகை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இரண்டு பிள்ளைகளின் தாயான சபீயா ஹுசைனாவிற்கு வயது 35. ஏழு ஆண்டுகளாக விவாகரத்துப் பெற்று தனியாக வாழ்ந்துவந்த சபீயா, அபுபக்கர் என்பவரால் பல தடவைகள் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டார். இதனால் கருவுற்ற அவள் இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்படி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது வட நைஜீரிய இஸ்லாமிய நீதிமன்றம் அவளுக்கு மரணதண்டனைத் தீர்ப்பு அளித்திருந்தது. விவாகரத்துப் பெற்றிருந்த காலத்தில் முறைப்படி திருமணம் செய்யாமல் இன்னொரு ஆணுடன் பாலியல் உறவு கொண்டிருந்ததற்காக இத் தண்டனை வழங்கப்படுவதாக நீதிமன்றம் அறிவித்தது. இத்தனைக்கும் மத்தியில் தனது கணவன் தன்னைப் பராமரிக்கவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில் ஷரியா சட்டப்படி சபியா விவாகரத்துப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சபியா கருவுற்றிருக்கும் விடயம் ஊரவர்களால் இஸ்லாமிய நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டபோது, ஆரம்ப விசாரணைகளில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு முன்னால் அபுபக்கர் தான் சபியாவுடன் பாலியல்உறவு கொண்டிருந்ததை ஏற்றுக் கொண்டிருந்தார். அவர் சபியாவைத் திருமணம் செய்வதாகக் கூறியதனால், தனது விருப்பத்திற்கு மாறாகப் பாலியல்வன்முறை மேற்கொள்ளப்பட்டதை சபியா விசாரணைகளின் போது தெரிவிக்கவில்லை. “நான் அல்லாஹ்விடம் முறையிடுவதுபோன்று உங்களிடம் முறையிடுகிறேன்” என சபியா பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தாள். இந்த நிலையில் ஷரியா சட்டத்தின்படி நான்கு ஆண்கள், அபுபக்கர் சபியாவின் கருத்தரிப்பிற்கு காரணமில்லை என இஸ்லாமிய நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததை அடுத்தும், அபுபக்கர் ஏற்கனவே அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மறுத்ததை அடுத்தும் அவர் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் 2001 ஒக்டோபரில் சபியா, 60வயதான அபுபக்கர்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை நிராகரித்த நீதிமன்றம் அவளை கல்லெறிந்து கொல்லுமாறு தீர்ப்பளித்திருந்தது.

இத் தீர்ப்பினை எதிர்த்து மேன்முறையீடு செய்யக்கூடிய சக்தி சபியாவிடம் இல்லாததினால், சர்வதேச மனிதஉரிமைகள், பெண்கள் அமைப்புக்களின் உதவியுடன் மேன்முறையீடு செய்யப்பட்டது. இவ்வழக்கைக் கொண்டுநடாத்திய சட்டத்தரணிகளுக்கான செலவினை Ford & Marcarthur Foundation வழங்கியிருந்தது. வழக்கு விசாரணைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சபியா பெண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். அடாமா என்ற அக் குழந்தைக்கு தற்போது இரண்டு வயது. இந்த நிலையில் சபியாவிற்கு அளிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்புக் குறித்து வடநைஜீரிய இஸ்லாமிய சமூகம் பெரும் மகிழ்ச்சி தெரிவித்ததுடன், இது ஒரு முன்மாதிரியான தீர்ப்பு எனவும் குறிப்பிட்டிருந்தது. ஆனால் தென்நைஜீரியாவில் குறிப்பிட்ட தீர்ப்பு கிறிஸ்தவ சமூகத்தினை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருந்தது.



சபியாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து இஸ்லாமிய ஆண்கள் ஆண்ஆதிக்க வெறியுடன் கூடிய கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். வடநைஜீரியாவின் அரசதரப்புச் சட்டத்தரணி அலியு அபுபக்கர் சன்ஜின்னா இப்படிக் கூறியிருந்தார்.

“சபியா தப்பி ஓடிவிட முடியாதவாறு அவளை தலைவரை நிலத்தினுள் ஆழப் புதைத்து அல்லது மரமொன்றில் உறுதியாகக் கட்டிவைத்து கல்லெறிந்து சாகடிக்க வேண்டும். நீதிமன்றம் என்னை அனுமதித்தால் அவளைச் சாகடிப்பதற்கான முதலாவது கல்லை எறிய நான் ஆவலாய் உள்ளேன்.”

இந்த வார்த்தைகள் இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் மனிதம் எந்தளவிற்கு மரணித்துள்ளது என்பதை எமக்குச் சொல்வனவாக உள்ளன.

சர்வதேசத்தின் பெரும் கவன ஈர்ப்பை பெற்றிருந்த இந்த வழக்கு மேற்முறையீட்டு நீதிமன்றத்தில் 2002 மார்ச் 25ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இந்த மேன்முறையீட்டின்போது புதிய வாதம் ஒன்றினை சபியாவின் வழக்கறிஞர்கள் முன்வைத்திருந்தனர். அடாமா, சபியாவை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய 60வயது அபுபக்கரின் பிள்ளையல்ல. மாறாக முன்னாள் கணவரின் பிள்ளையாகும் என்பதே அந்த வாதம். இதற்கிடையில், தான் விவாகரத்துப் பெற்றதற்கு தனது முன்னாள் கணவனின் தாயே காரணம் என்றும் அவர் இறந்துவிட்டதால் தான் மீண்டும் அவருடன் சேர்ந்து வாழப்போவதாகவும் சபியா நீதிமன்றத்திற்குத் தெரிவித்து இருந்தார். ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றமோ இந்த வாதங்கள், கருத்துக்கள் எதனையும் கருத்தில் கொள்ளாதது போல் வேறு ஒரு காரணத்தைக் கூறி சபியாவிற்கு விதிக்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பு செல்லுபடியற்றது என அதிசயிக்கத்தக்க வகையில் தீர்ப்பு அளித்துள்ளது. குறிப்பிட்ட வழக்கு போதுமான ஆதாரங்களுடன் சரியான முறையில் பொலிசாரால் தாக்கல் செய்யப்படவில்லை என்பதே அந்த வழக்கைத் தள்ளுபடி செய்வதற்கான காரணமாகும். இந்தத் தீர்ப்பானது பல்வேறு காரணங்களுக்காக திட்டமிட்டுச் செய்யப்பட்டிருக்கலாம் என அரசியல் நீதித்துறை அவதானிகள் கருதுகின்றனர்.

1. ஷரிதா சட்டத்துடன் முரண்படாது இருத்தல்: இதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்ட முறையில் உள்ள குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டு, வழக்கு நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஷரிதா சட்டத்தின் குறைபாடுகள் இங்கு மறைக்கப்பட்டுள்ளன.
2. சபியாவின் பக்கமுள்ள நியாயத்தன்மையை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாது விடல்.
3. சர்வதேசத்தினை திருப்திப்படுத்துதல்: சபியாவிற்கு வழங்கப்பட்ட மரணதண்டனைத் தீர்ப்பு நைஜீரியா குறித்த அதிருப்தியை சர்வதேசத்திற்கு ஏற்படுத்தியிருந்தது. இந்த அதிருப்தியைத் தகர்ப்பதற்காக இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது ஷரியா சட்டத்துடன் முரண்படாது அதனைப் பாது

காக்கும் வகையில் திட்டமிட்டு இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒருவகையில் சபியா விடுதலை செய்யப்பட்டுள்ள போதும் உண்மை யான குற்றவாளியாகிய அபுபக்கர் தண்டிக் கப்படவில்லை. அத்தோடு ஷரியா சட்டம் தொடர்ந்தும் பேணப்படுவதை, அதனை ஏற்றுக் கொள்வதை உறுதி செய்வதாக இத் தீர்ப்பு அமைந்துள்ளது. நெதர்லாந்தைச் சேர்ந்த பேராசிரியர் Ruud Peters இத் தீர்ப்புக் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ‘ஷரியா சட்டத்தினை நீக்குவது என்பது நைஜீரிய அரசியல்வாதி ஒருவருக்கு அரசியல் தற்கொலையாக அமையும்’ என்று கூறியுள்ளார். கணவனைப் பிரிந்து வாழ்வது கொலைக் குற்றம் ஒன்றுக்கும் மேலான குற்றமாகக் கொள்ளப் படுவதாகக் கூறும் அவர், ‘பாகிஸ்தானிலும் லிபியாவிலும் ஷரியா சட்ட நடைமுறைகள் உள்ளபோதும் அங்கு உடல் உறுப்புக்களைத் துண்டித்தல் அல்லது கல்லெறிந்து கொல்லுதல் போன்ற தண்டனைகள் இல்லை’ என்று குறிப்பிடுகின்றார்.

இறுதியாக நீதிமன்றத்தைவிட்டு வெளியே வந்தபோது சபியா கூறிய வாசகம் இது:

“ஒரு முஸ்லிம் பெண் என்ற வகையில் அல்லாஹ்வின் சட்டம் செல்லுபடியானது என்பதை நான் அறிவேன். ஆனால் அது நீதியானதாக இருக்க வேண்டும்.”

இந்த வழக்கின் தீர்ப்பானது சபியா ஒரு முடிவல்ல; அவள்ஒரு தொடர்... என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. ஷரியா இன்னும் பல சபியாக்களின் உயிர்களை பலிகொள்ளும், ஆண்களைக் காப்பாற்றும் என்ற நிலையே தொடர்கின்றது. இத் தீர்ப்பு வழங்கப் பட்டு சில தினங்களில் வடநைஜீரியாவின் மற்றொரு மாநிலத்தில் இதே காரணத்திற்காக அமீனா லவால் என்ற பெண்ணுக்குக் கல் எறிந்து கொல்வதற்கான மரணதண்டனை வழங்கப் பட்டிருப்பது இதனையே காட்டுகின்றது.

கடந்த இரு ஆண்டுகளில் நைஜீரியாவின் 12 மாநிலங்களில் ஷரியா சட்டம் நடை முறைக்கு வந்துள்ளது. திருட்டுக் குற்றத்திற்கு கை வெட்டப்படுகிறது. பாலியல் வியாபாரம் மற்றும் பிரிந்து வாழ்தல் போன்றவற்றிற்கு கல்லெறிந்து கொல்லும் மரணதண்டனை வழங்கப்படுகிறது கொலைக் குற்றத்திற்கு சிறைத்தண்டனையும் வழங்கப்படுவதுடன், மதுபாவனை, சூதாட்டம் என்பனவற்றிற்குத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் மிகமோசமான புறக்கணிப்புக்கும் ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கும் உட்படுத்தப் படுகின்றனர். திருமணமாகாத பெண் ஒருவர் பொது நிகழ்வு களுக்கு சமூகம் அளிப்பது தண்டனைக்குரிய குற்றமாக உள்ளது. இக் குற்றத்திற்காக பகிரங்கத் தண்டனை வழங்கப் படுகிறது. பஸ்கள், வாடகைக் கார்களில் பெண் கள், ஆண்களுடன் சேர்ந்து பிரயாணம் செய்வது தடைசெய்யப் பட்டுள்ளது. போக்குவரத்து வசதிகள் குறைவாகவுள்ள நைஜீரியாவில் பல கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு கால்நடையாகச் செல்வதற்கு பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.



1960ம் ஆண்டு பிரித்தானியாவிலிருந்து சுதந்திரம் பெற்ற நைஜீரியாவில் சுதந்திரம் என்பதன் அர்த்தம் இன-மத மோதல்களாகவும் இவற்றினூடாக இனவாதிகளும், மதவாதிகளும் தமக்கிடையிலான பலப்பரீட்சையில் பிள்ளைகளையும் பெண்களையும் பலிக்கடாவாக்கும் நிலைமையுமே காணப்படுகிறது. 120 மில்லியன் மக்களையும், சிறந்த எண்ணெய் வளத்தையும் கொண்ட நைஜீரியா இந்த மோதல்களால் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது. 2000வது ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தென்நைஜீரியாவைச் சேர்ந்த கிறிஸ்தவரான முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் ஜனாதிபதியானார். ஆனால் வடநைஜீரியாவின் ஸம்பாரா மாநில ஆளுனர் இஸ்லாமிய ஷரியா சட்டத்தினை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து இன்று வடநைஜீரியாவின் 12 முஸ்லிம் மாநிலங்களில் இச்சட்டம் நடைமுறையில் உள்ளது. நைஜீரியாவின் பொதுவான சட்டத்தினை விடவும் ஷரியா மிகக் கடுமையான தண்டனைகளை அதுவும் பெண்களுக்கு வழங்கி வருவதனால் இந்த நாகரீக உலகில் இது ஒரு கொடூரமான சட்டமாக விமர்சிக்கப்படுகிறது.



# எடுக்கவோ கோர்க்கவோ

வானில் நட்சத்திரங்களாய்
என் மனச் சிதறல்கள்

எடுத்துக் கோர்க்க எண்ணி
ஊசி நூல் எடுத்து வராதே

குத்தல்களால்
கோர்க்கப்படுவதை விட
சிதறிக் கிடப்பதே
சௌகரியமாய்

நார் எடுத்து என்
நரம்பு தெறிக்கக் கட்டி
கழுத்து நெரிக்கப்பட்டு
கழுத்துக்கு மாலையாவதை விட
உதிரியாய் இருப்பதே
உள்ளத்துக் கினியதாய்

எடுக்கவோ கோர்க்கவோ
எனை செய்ய வேண்டாம்

சிதறிக் கிடப்பதே சீதனமாய்
உதிரியாய் இருப்பதே உண்மையாய்
இயற்கையாய் இருளோடு
மின்ன விட்டு விடு



**திலகபாமா**
(2002)

# பாரம்பரியமற்ற தொழில்களில்

பாரதி

"இயற்கை சார்ந்து மனிதக் கரங்களிலினால் (Human hands) பிரயோகிக்கப்படும் அனைத்துத் தொழிற்பாடுகளும் தொழில்" என்று சமூகவியலாளர் ஹனா ஹரண்ட் (Hanna Harrand) கூறுகின்றார். ஆனால் அவரே இன்றும் தொழில்நுட்பம், கணணி என்று மாறிக் கொண்டு வருகின்ற இந்த உலகில் தொழிலுக்கு ஒரு அடிப்படையிலான வரைவிலக்கணம் ஒன்றை முன்வைக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் அனைத்துலக மக்களாலும் பேசப்படுகின்ற ஒரு முக்கிய விடயம் Labour in gender - அதாவது தொழிலில் பால்நிலை. இத்தகைய ஒரு எண்ணக்கரு மனித மனங்களிலே புதைக்கப்பட்டு, விதைக்கப்பட்டு வேரூன்றி நிற்கிறது என்றால், அதற்குப் பெண்களைப் புதைத்து ஆராய்ச்சி நடத்துகிறார்கள் என்றால், அங்கே பெண்கள்- தொழில் ஆகிய இரண்டிலும் முரண்பாடு அல்லது சமூகரீதியான பிரச்சினை என்று நாம் விளங்கிக் கொள்ளலாமா?

ஆண், பெண் என்பது இயற்கையினால் உயிரியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு விடயம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அதற்கு அளவுக்கதிகமான முக்கியத்துவத்தை அல்லது சுய இலாபம் கருதி அந்த எண்ணக்கருவுக்கு மெருகூட்டி அதை மேன்மேலும் ஸ்திரப்படுத்தி விடுவதனால் தான் இன்று இத்தகைய ஒரு தலைப்பில் நாம் சிந்திக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளோம்.

1996 இல் பீக்கிங் நகரில் நடைபெற்ற மகளிர் மகாநாட்டில் பேசப்பட்ட பெண்களின் பதின்மூன்று பிரச்சனைகளில் ஒன்று "மரபுசாரா தொழில்" என்னும் ஒரு விடயமாகும். "மரபுசாரா அல்லது பாரம்பரியமற்ற" என்னும் பதம் இந்தச் சமூகச் சூழ்நிலையில் ஏன் இந்தளவிற்கு முக்கியம் பெறுகின்றது என்று பார்த்தோமானால் அதற்கென்று ஒரு வரலாற்றை நாம் காண்கின்றோம்.

கைத்தொழில் புரட்சிக்கு முற்பட்ட காலத்திலேயே -hunter father,gathering mother- அதாவது வேட்டையாடுபவர் தந்தை, உணவு சேகரிப்பவர் தாய்- எனும் ஆணாதிக்கக் கருத்து நிலவியது. குடும்பம், வீடு, தொழிற்சாலை என்பன ஒரே அர்த்தத்தில் மூடப்பட்ட ஒரு பொருளாதாரத்துவ அடிப்படையில் இருந்தது. இந்த ஆணாதிக்கக் கருத்து கைத்தொழில் புரட்சியில் தனிநிலை சார்ந்த தந்தையாதிக்க முறைமையிலிருந்து (private patriarchy) பொதுநிலை சார்ந்த தந்தையாதிக்க முறைமையாக (system of public patriachy) மாற்றப்பட்டது. அதாவது வீட்டிலே பெண்களுக்கு உரியன என்று சிலர் கூறிய பெண்கள் தொழில்கள் - அதாவது உணவு சேகரித்தல், சமைத்தல், தைத்தல், குழந்தை பராமரிப்பு, கற்பித்தல், முதியோர் பராமரிப்பு போன்ற சில தொழில்கள் பொதுநிலையில் அவளைக் கொண்டு செய்யப்பட்டன.

வேதனத்தின் அடிப்படையில் கைத்தொழில் புரட்சியில் கைத்தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதேவேளை இலாபமீட்டும் தொழில்களில் மலிவான கூலியுடன் வேலை செய்யக்கூடிய பெண்கள் தேவைப்பட்டார்கள். எனவே வீட்டினுள் அவள் பாரம்பரியமாக செய்து வந்த தொழில்கள் தையல் நிலையங்களிலும், பாடசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும் (தாதியாக) செய்யப்பட்டன. பாரம்பரியத் தொழிலுக்கு முகமூடி அணிவித்து வீட்டிற்கு வெளியே அதே பாரம்பரியத் தொழிலைச் செய்வித்தனர்.




இந்த நிலையில்தான் ஆணாதிக்கத்திற்கும் (male dominance) முதலாளித்துவத்திற்கும் (capitalism) முரண்பாடான கருத்துநிலை தோன்றியது. முதலாளித்துவ வாதிகள் பெண்ணுரிமைச் சுரண்டல், மலிவான விலையில் மனிதவளம் என்று மரபுசார்ந்த தொழில்களில் பெண்களை அழுத்த, ஆணாதிக்கமானது அவள் வீட்டிற்கு வெளியே வேலை செய்யும்போது கிடைக்கும் கௌரவம், மனத்துணிவு வேதனத்திற்கு ஏற்ப உரிமை போன்றவை மகளிருக்கு வழங்கப்படலாகாது என்று சாடியது.

இந்த நிலையில் தான் பெண்களின் விருப்பு வெறுப்பு என்று எழுதப்படாத விழுமியங்களின் அடிப்படையில் ஆணாதிக்கச் சமூகத்தால் பெண்ணின் இயலாமை ஆணின் நலன் போன்றவற்றின் அடிப்படையில் formation of women's work -அதாவது பெண்ணின் தொழில் உருவாக்கம்- எனும் விடயம் கருத்துருவானது. அந்தக் கருத்து உருவம் பெற்றது எப்படி என்று தெரியுமா? பாரம்பரியத் தொழில் தான் பெண்களின் தொழில் என்று பெண்களின் கருத்தைக் கேட்காத ஒரு விதத்திலே இது உருவாக்கப்பட்டது.



கீழைத்தேய உலகில் மட்டுமல்ல, மேலைநாடுகளிலும் கூட இந்தப் பெண்களின் தொழில் பாரம்பரியத் தொழில் என்னும் கருத்து காணப்பட்டுத்தான் வருகிறது. ஏலவே விதைக்கப்பட்ட அந்தக் வித்தைப் பிடுங்குவது என்பது மிகவும் கடினமானதாகவே காணப்படுகிறது.

தொழிற்படையினை உருவாக்குவது பெண் அதைப் போதிப்பவள் பெண் அதனால் அடக்கப்பட்டு சுரண்டப்படுபவளும் அவளே. இதற்கு அவர்கள் (ஆணாதிக்கவாதிகள்) கொடுக்கும் விளக்கம் வியக்கத்தக்கது; வேதனைக்குரியது. பேறுகால உடல்நிலை, மகப்பேறு போன்றவை எந்தளவிற்கு தொழிற்படையை உருவாக்குகின்றதோ, அந்தளவிற்கு அதே காரணங்கள் அவள் மரபுரீதீயற்ற தொழில்களில் ஈடுபட தடையாக இருக்கிறது.



முதலாம் உலகப் போரின் காலப்பகுதியில் ஆண்கள் போர்முனைக்குச் செல்ல அவர்களின் தொழில்களைக் கவனிக்க பெண்கள் வேலைக்குச் செல்லும் நிலையானது பெண்களை வீட்டிற்கு வெளியே தொழில்புரிய வைத்தது. பெண்கள் தொழில் புரிவதற்கான திடீர் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் தந்தையாதிக்கம் நெகிழ்ந்து கொடுத்தது. இதற்குப் பின் வந்த காலப்பகுதியில்தான் பால்நிலையிலான தொழிற்பிரிவு (sexual division of labour) எனும் ஒரு எண்ணக்கருவானது நெகிழ்ந்து கொடுக்கப்பட்ட தந்தையாதிக்கமும், முதலாளித்துவ முறைமையின் நெகிழ்ச்சித் தன்மையும் சந்திக்கும் ஒரு சம புள்ளியில் உருவானது. வேலைகள் பெண்களுக்கென்று குறைந்த வேதனத்துடனும் குறைந்த அந்தஸ்துடனும் வரையறுத்துக் கொடுக்கப்பட்டன. முதலாம் உலகப் போரின் பின்னர் காலனித்துவ ஆட்சி கீழைத்தேய நாடுகளில் இடம் பெற்றிருப்பினும் கீழைத்தேய கருத்துக்களில் மாறுதல்கள் ஏற்படவில்லை. ஏனென்றால் மேலைத்தேய மண்ணிலும் புதைக்கப்பட்ட அதே எண்ணக்கருதான் கீழைத்தேய மண்ணிலும் வேரூன்றி இருந்தது. அதனால் மரபுரீதியான பாரம்பரிய தொழில்களிலேயே பெண்களை அது ஈடுபடுத்தியது.



19ம் நூற்றாண்டில் இத்தகைய எண்ணக்கருவுக்கு எதிராக கோசம் போட்டவர்கள் குரல் எழுப்பியவர்கள் அன்னிபெசன்ற், ராஜாராம் மோகன்ராய், மகாத்மா காந்தி, சுப்பிரமணியபாரதி ஆகியோராவார். வரலாறு இவ்வாறிருக்க இக் காலகட்டத்தில் புள்ளிவிபரங்கள் பெண்களின் பங்களிப்பு தொழிற்படையில் அதிகமாகக் காணப்படுகிறது என்கிறார்கள். ஆயினும் அந்த ஆராய்ச்சிகள் மரபுரீதியான தொழில்துறைகளில் தான் பெண்களின் பங்களிப்பைக் காட்டுகின்றனவே ஒழிய மரபுரீதியற்ற தொழில் முயற்சிகளிலல்ல என்பதனையும் தெரிவிக்கின்றன.

ஆயினும் அண்மைக்காலங்களில் பெண்கள் மரபுரீதியற்ற தொழில் துறைகளில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை காணப்படாமலில்லை. முன்பு ஆண்களுக்கு மாத்திரம் என்று கருதப்பட்டு வந்த தொழில்களான சாரதித்தொழில், தொழில்நுட்பவியலாளர், மின்னிணைப்பாளர் போன்ற இன்னோரன்ன தொழில்களில் இன்று பெண்களும் பங்கேற்று செயற்படுகிறார்கள் என்பது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம். பெண்கள் அதிகமாகப் பங்கேற்கும் தொழில் முயற்சிகளை இலகு வழி கருதி இரு பிரிவுகளாக நோக்கலாம். உடற்திறமையினால் செய்யும் வேலைகள், மூளை சார்ந்த வேலைகள். பாரம்பரியமாக பெண்ணுக்கு வழங்கப்பட்ட வேலைகள் உடற்திறமையை வைத்துக் கொண்டு தான் வழங்கப்பட்டன. இதன் மறுதலை உடலியலாமையை உயிரியல் பாகுபாட்டை ஸ்திரப்படுத்தி தொழில் வழங்கப்பட்டது. அதாவது பாரம்பரியத் தொழில்கள் பெண்களுக்கென்று வழங்கப்பட்டன. ஆயினும் அந்த நிலையில் இன்று சிறியதொரு மாற்றமும் காணப்படவில்லை.

அண்மைய தரவுகளில் பெண்களின் பங்களிப்பு வீதம் இவ்வாறுள்ளது.

| | |
|---|---|
| தாதிச்சேவை | 90.39 |
| தட்டெழுத்து, சுருக்கெழுத்து | 81.40 |
| அரசஅதிகாரி- முகாமையாளர் | 11.14 |
| பொறியல் | 9.88 |
| அளவையியல் | 11.11 |
| கணக்காளர் | 19.17 |
| தொழில்நுட்பவியலாளர் | 11.52 |
| தொழில் திறன்வாய்ந்த ஊழியர் (workers) | 3.78 |

இவ் ஆய்வானது மரபுரீதியற்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதைக் காட்டுகிறது. இதற்கு உந்துதலாக இருக்க வேண்டியது அரசாங்கம். மரபுரீதியற்ற தொழில்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கப் பண்ணுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும்; ஆவன செய்து கொடுக்க வேண்டும்; தொழில் முயற்சிகளை ஆரம்பித்து விட வேண்டும். ஆயினும் மனவருத்தப்பட வேண்டிய ஒரு விடயத்தையும் இதில் கூறிக் கொள்ளத்தான் வேண்டும்.

"பெண் பூரண பகுத்தறிவு ஜீவி" என்று (Women is a fully rational being) a vidication of the rights of womens(1792) இலேயே மேரி ஆல்ஸ்டர் கிராப்டின் எனும் மாது கூற அதைப் பின்பற்ற வேண்டிய எமது மகளிர் விவகார அமைச்சர் (ஹேமா ரத்னாயக்க) அதற்கு மாறாக பெண்கள் பார்க்க வேண்டிய தொழில்துறைகளை விடுத்து வெளியில் வந்து வேறு தொழில்கள் பார்க்கும் போது தான் பாலியல் வல்லுறவு ஏற்படுகிறது எனும் கருத்துப்பட கூறியுள்ளார்.

இந் நிலையில் அரசு சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பை (NGO) நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. பெண்களை பாரம்பரியமற்ற தொழில்களில் ஈடுபடுத்த அது அரும்பாடுபடுகிறது. கனேடிய உலகப் பல்கலைக்கழக அமைப்பு (WUSC) எடுக்கும் பல முயற்சிகள் பெண்களைப் பாரம்பரியமற்ற தொழில்துறைகளான மேசன் வேலை, தச்சுத்தொழில், இரும்புவேலை (welding, plumping) இன்னும் பல தொழில்களில் ஈடுபட வைக்கிறது. மற்றும் மகாசக்தி எனும் அரசு சார்பற்ற அமைப்பும் பெண்களின் பாரம்பரியமற்ற தொழில்களில் பெண்களின் பங்களிப்பை உயர்த்த உதவுகிறது.



பாரம்பரியமற்ற தொழில் துறைகளில் ஈடுபடும் பெண்கள் பற்றி சமூக மனோநிலை மாற்றமே இத்தகைய கருத்தை முன்னெடுத்துச் செல்ல உதவும்.

கிழக்கிழங்கையில் அமைந்துள்ள கடதாசி ஆலையில் முக்கியமான உயர் பதவிகளில் இருப்பவர்கள் ஆண்கள் தான். எனினும் நிர்வாகப் பதவிகளில் உயர்நிலைகளில் இக் காலகட்டத்தில் பெண்கள் ஓரிருவர் ஆங்காங்கே இருக்கிறார்கள் என்பதும் கண்கூடு. கொழும்புப் பல்கலைக் கழகத்தில் உபவேந்தராக கடமையாற்றுபவர் சாவித்திரி குணசேகர. இது எம்மவருக்கு ஒரு எடுத்துக்காட்டு.

இலங்கையில் தென்பகுதிகளில் இந்தக் கருத்து -அதாவது பாரம்பரியமற்ற தொழில்களில் பெண்களை ஏற்றுக் கொள்ளுதல் என்பது- ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மனோபாவம் மனப்பாங்கு மாறாமல் இக் கருத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியாது.

மக்களின் மனநிலை மாற்றம்தான் பாரம்பரியமற்ற தொழில்களில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் என்பது உறுதி.

## மாலதி மைத்ரியின் இரண்டு கவிதைகள்

1

உனக்கும் எனக்கும்
இடையில் பரத்தப்பட்டிருக்கும்
மௌனம் பரவிய உரித்த தோல்
வெட்டுப்படாத
முடிகள் கழன்ற
உயிரற்ற உயிர்

சவுக்கின் அதிர்வுகளையும்
பிரம்பின் வரிகளையும்
கொடையாய்ப் பெற்ற
உடல்
உணர்த்தும் வரிகள்
பூரித்து நெளியும் திசைவழியே

வலி ஒழுகிக்கொண்டிருக்கிறது
தேங்க இடமின்றி
தெறிக்கும் மனக்குவியங்கள் மீது

புரண்டு தடுமாறும் மனம்
அடுத்த பக்கத்தில்
வதை அறம்காக்கும்
செங்கோல் ஏந்தி

2

மூன் இரவின் இறக்கத்தில்
நமது வாசலைக் கடந்து
இருட்டின் எல்லையை
நூல் பிடித்து வெளியேறுகிறோம்
அகன்ற வீதிகளை நோக்கி

தெருவிளக்குகள் எங்கோ ஒளிதெறிக்க
நமது நிழலின் முன்பின்
ஆட்டங்களில் தடுக்கிக்கொள்கிறோம்
இடுப்பில் துணிமூடிய சட்டியுடன்
நாய்கள் அங்கொன்றும்
இங்கொன்றுமாகக் குரைத்துப் பார்க்கும்
பழகிய வாசனை பிடித்து அடங்கும்

அவரவர் தெருக்களில் அவரவர்
பிரிகிறோம்
குடித்தனக்கார
ஆண்டைகளின் வாசலை நோக்கி

தெரு வாசலில் வெளிச்ச
சட்டத்துக்கு அப்பால் நின்று
குரலெடுப்போம்
அம்மா அன்னம் போடுங்க
கூடப்படிக்கும் பொடிசுகள்
எட்டிப்பார்த்துவிட்டுச் செல்லும்

ஏகாலி வந்திருக்காம்மா...
அம்பட்டன் வந்திருக்காம்மா...
தோட்டி வந்திருக்காம்மா...
சக்கிலி வந்திருக்காம்மா...
படியாளு வந்திருக்காம்மா...
குடிபுள்ள வந்திருக்காம்மா...
ஏன்டி உன் அப்பன், ஆத்தா வரலியா
ஒனக்கு நேரம்காலமே தெரியாதா
இப்பத்தான் சாப்பிடப்போறோம்
இருட்டுல நின்னு பூதங்காக்காதே
தோட்டத்துப் பக்கமா வந்து
ஓரமா நில்லு

ஐயாாா...
தஞ்சம் கொடு
உணவு கொடு
தண்ணி கொடு
வேல கொடு
மண்ணு கொடு
வாழ்வு கொடு
உயிர் கொடு
கொடு... கொடு... கொடு... கொடு...

வரிசைகள் நீண்டு கொண்டே
இருக்கின்றன

உடலே பெரும் பிச்சைப் பாத்திரமாக
வாய்பிளந்து நிற்கிறோம்
எல்லாக் காலங்களுக்குள்ளும்

எல்லா தர்மங்களும்
நமது பாத்திரத்தில்
இடப்படுகின்றன
அவை ஒரு பழகிய
விலங்கென படுத்திருக்கிறது



மாலதி மைத்ரி

(2002)

## பைத்தியக்காரன்

தனக்குத்தான் தெரியும் என நினைத்து
நீ வடித்த காவியங்கள்
தவிடு பொடியாகும் காலம்
வெகுவிரைவில் ~ நீ
நின்ற இடம் தெரியாமல்
நிற்க வழியில்லாமல் ~ நீ
நிலைகுலையும் கண்கொள்ளாக் காட்சி
இன்னும் சொற்ப காலங்களில் ~ புரியவில்லையா
புரியாத புதிராக உனக்கு இது இருந்தாலும்
புதிய புதிர் இல்லை என்பதும் உண்மைதான்!

மாதத்தில் ஆறுநாள் தடக்காக நான் இருந்தால்
வருடத்தில் எழுபத்திரண்டு நாள் தொடக்காக நான் இருப்பேன்
அப்படி என்றால் உன் வருகையோ... பெருந் தடக்கு
இதனைக் கூட அறியாத பெருங் கவிஞா!
உன்நிலை பாராது மற்றவர்களை இழிவுபடுத்துகின்றாயே!

எங்கள் தடக்கு நேரத்தில் கூட ~ நாங்கள்
இருப்புக்களை திடப்படுத்துகின்றோம்
நீயோ எங்கள் உயர்வு கண்டு மடிந்து போகின்றாய்
ஏன் இந்த அவலநிலை?
எங்களுக்கு மாத்திரம் களைப்பும் தடக்கும் என்றால்
உங்களுக்கு அவ்வப்போது ஏற்படும் தடக்குகளை
எதில் சேர்ப்பது...? உங்கள்
தூரநோக்கமே பெண்களை தரங்குறைப்பது என்றால்
நடைமுறையில் இருக்கும் செயல்வாதம்
உங்களை நீங்களே இழிவுபடுத்துவதாகும்
இறுதியாக ஒன்று....!

தடக்கு என்ற கூட்டில் ஏற்றி
கிடங்கு என்ற பள்ளத்துக்குள் ~ என்னை
கிடத்தி விட்டோம் என
கனவு காணாதே...!
உன் தூரநோக்கில் ~ பெண்
தடக்குள்ளவள் என்றால்
என் சொல்வாதம் ~ நீ
பைத்தியக்காரன் என்பதே!



**மஸாஹிறா பாயிஸ்**

(2002)





# ஒரு முற்போக்குவாதி காதலிக்கிறான்

**ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

டெலிபோன் மணியடித்தது. நித்தியா படுக்கையின் மறு பக்கத்திலிருந்த அலாம் குளோக்கைப் பார்த்தாள். அதிகாலை ஒன்றரை மணி. போன் பண்ணுவது யாரென்று தெரியும். அசையாமல் படுத்திருந்தாள். ஆறுதரம் மணியடித்தபின் ஆன்சர் மெசினுக்கு டெலிபோன் மேஸேச் போகும்.

கொஞ்ச நேரத்தின் பின் ஆன்சர் போனைப் போட்டுக் கேட்டாள். குமார் ஏதும் பண உதவி கேட்க வேறு ஏதோ காரணங்களைச் சொல்லி அவளைக் குழப்புவான் என்று அவளுக்குத் தெரியும்.

'என்ன இரண்டு மூணு நாளா ஒரு மூச்சையும் காணலல்ல... என்னில கோபமா... நான் கேட்டது பிடிக்காட்டா நேரில அதப்பற்றிச் சொல்லலாம் தானே'
அவன் குரலில் ஆத்திரமா ஆதங்கமா தெரியவில்லை. யோசித்துப் பார்க்க எரிச்சலாக இருந்தது.

அதேநேரம் கீழ்வீட்டில் ஏதோ பட்டென்று விழுந்த சத்தம்! பெரிய சத்தம். அவளை மட்டுமல்ல, அடுத்த வீட்டுக்காரர்களையும் குழப்பியிருக்கும். நித்தியா திடுக்கிட்டு எழுந்தாள்.
என்னவாயிருக்கும்? யாரும் காயப்பட்டிருப்பார்களா?
மேல் வீட்டிலும் கீழ் வீட்டிலும் உள்ளவர்கள் எல்லோரும் பார்ட்டிக்குப் போய்விட்டார்கள் என்று நினைத்தாள்.
இப்போது என்னவென்றால்...

ஐயைய்யோ யாரும் திருடனாக இருந்தால்...?
பயத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. காதைத் தீட்டிக்கொண்டு கூர்ந்து கேட்டாள். கீழ்வீட்டில் யாரோ நடமாடும் சத்தம்.
திருடனாக இருக்க முடியாது, ஏனென்றால் கீழ்வீட்டுப் பூனையின் பெயரைச் சொல்லி ஏதோ பேசிக்கேட்டது.

என்ன சத்தம்? ஏதோ விழுந்துடைந்து விட்டது போல்... யாருக்கும் காயமா?
தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கீழேயிறங்கினாள். இவள் கீழே வரவும் கீழ்வீட்டுக்காரன் கதவைத் திறக்கவும் சரியாக இருந்தது.
‘உன் நித்திரையைக் குழப்பியதற்கு மன்னித்துக் கொள்.’

மூன்று மாதங்களின் பின்...
“அண்டைக்கு நான் தவறுதலாக வைன் போத்தலை உடைத்துக் கொண்டது மிகவும் அதிர்ஸ்டமான காரியம் என்று நினைக்கிறேன்.”
மார்ட்டின் தனக்கு முன்னால் தர்ம சங்கடத்துடன் அங்குமிங்கும் பார்த்தபடியிருக்கும் நித்தியாவிடம் சொன்னான்.
தேம்ஸ் நதி ஓரத்தில் உள்ள றெஸ்ட்ரோண்டில் மிகவும் அமைதியான அந்த நேரத்தில் மோஸாட்டின் பியானோவின் இசையும், ஜன்னலுக்கப்பால் தேம்ஸ் நதியில் தெறித்து விழும் நிலவு வெளிச்சமும் ரம்மியமாக இருந்தது.

அவள் பார்வை தேம்ஸ் நதிக் கரையில் அக்கரையில் பிரமாண்டமாய் உயர்ந்து நிற்கும் மிலேனியம் டோமில் பதிந்திருந்தது.
‘எலிசபெத்துக்கு நீ என்னுடன் சாப்பிட வரச் சம்மதித்தது ரொம்பவும் ஆச்சரியம் போலிருக்கிறது’
மார்ட்டின் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.
கொழும்பில் கோட்டையில் ஒரு சாப்பாட்டுக் கடையில் கடைசியாக குமாரைச் சந்தித்தது ஏனோ ஞாபகம் வந்தது.

அவள் அழுது அழுது மூக்கைச் சீறிக்கொண்டிருந்தாள். அது பத்து வருடங்களுக்கு முன்னால் நடந்தது. அவளுக்கு அப்போது இருபத்தைந்து வயது.
‘உனக்கு விருப்பமில்லாவிட்டால் நான் கல்யாணத்தை வேண்டாம் என்று சொல்றன்‘
அவன் முணுமுணுத்தான்.
‘அப்படியே செய்யுங்கள்’ என்று அவள் மனம் வந்தாலும்... அடக்கிக் கொண்டு சொன்னாள்,
‘ஐயையோ எனக்காக உங்கட தங்கச்சியின்ர வாழ்க்கையில் பிரச்சனை வரவேண்டாம்...’
பாதிப் பொய், பாதி உண்மை.
ஆழ்கடல் வற்றினாலும் எங்கள் அன்புக்கடல் வற்றாது என்று ஏதோவெல்லாம் கடந்த ஐந்து வருடமாக எழுதிக்கொண்டவர்கள்; யார் தடுத்தாலும் எங்கள் புனித காதல் குலையாது என்று ஆத்மீகமாய்ச் சொல்லிக் கொண்டவர்கள் இன்று அவனின் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

‘யார் தடுத்தாலும் உன்னைக் கைவிடேன்’ என்று உறுதி தந்தவன் இன்று,
‘தயவுசெய்து மன்னித்து விடு. தங்கச்சிக்கும் எனக்கும் மாற்றுக் கல்யாணம் பேசியிருக்கிறார்கள், நான் மறுத்தால் என் தங்கை விரும்பும் கணவனை அவள் அடைய முடியாது...’
‘அப்படி என்றால் என் கதி’ என்று நினைத்தவளுக்கு, அவன் தங்கையின் பெயரை அழுத்தம் திருத்தமாகச் சொன்னது ஒரு தவிப்பை உண்டாக்கி விட்டது.

‘நிலவுத் துண்டுகளும், லைட்டின் பிம்பங்களும் அந்த நீரோட்டத்தில் எப்படித் தெரிகிறது பார்த்தாயா? இயற்கையின் அற்புதமும் ஒன்றாய்ச் சேர்ந்து என்ன அழகான பிரமையை உண்டாக்குகிறது’
மார்ட்டின் இப்படிச் சொன்னபோது...



அவள் கொழும்பிலிருந்து நினைவை லண்டனுக்கு இழுத்தாள்.
‘உன்னை முதற் தரம் எலிசபெத்துடன் சந்தித்தபோது...’
மார்ட்டின் மிகுதியைச் சொல்லாமல் அவளை நிமிர்ந்து பார்த்தான்.
‘ஸார் சாப்பாடு ஓர்டர் பண்ண ரெடியா?’ வெயிட்டர் பணிவுடன் கேட்டான்.
‘ஆமாம்...’ மார்ட்டின் மெனுவைப் புரட்டிக் கொண்டிருந்தான்.
‘வெஜிடெரியன் டி‘... அவள் முணுமுணுத்தபடி இன்னும் மெனுவில் பார்வையைப் பதித்தபடியிருந்தாள்.

வெயிட்டர் பொறுமையுடன் காத்திருந்தான்.
அவன் வதக்கிய மாட்டிறைச்சி, பொரித்த உருளைக் கிழங்கு, அரைகுறையாக வெந்த மரக்கறிகள் ஓர்டர் பண்ண, அவள் கத்தரிக்காயும் சீஸ்ஸும் போட்டுச் செய்த முஸாக்கா ஓடர் பண்ணினாள்.
‘நீ வாழ்க்கை முழுக்க வெஜிடேரியனா‘
மார்ட்டினின் கேள்வி அவளை உலுக்கியது.
‘

குமார் பிறவிச் சைவம் அவனுக்காகத்தான் சைவமானேன்‘ என்று அழவேண்டும்போல் இருந்தது. குமார் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை. அவள் இன்னும் கன்னி; கத்தரிக்காய் முஸாக்கா சாப்பிடும் வெஜிடேரியன்!

‘ஏன் என்னைச் சந்திக்க மாட்டாய்‘ என்று கேட்டுத் தொல்லை கொடுக்கிறான்.
பத்து வருடங்களுக்குப் பின் லண்டனில் சந்தித்ததும் பழைய ஞாபகங்கள் முள்ளாய்க் குத்தின.

சந்திரிகாவின் தளபதிகள் தமிழ்ப் பகுதிகளைச் செல்களாலும் குண்டுகளாலும் துளைத்துக் கொடுமை செய்ய உயிர் தப்பி ஓடிய லட்சக்கணக்கான தமிழ் உயிர்களில் அவளும் ஒருத்தி. திருமணமாகி அவன் லண்டனுக்கு வந்தபின் காதலிலே தோல்வியுற்றாள் கன்னி ஒருத்தி என்று மனத்துக்குள் அழுதுகொண்டு ஒன்றிரண்டு வருடங்கள் பறந்தன.

‘எப்படி முஸாக்கா...‘ மார்ட்டின் அவளைப் பார்த்துக் கேட்டான்.
‘கத்தரிக்காய்க் குழம்பு எனக்குப் பிடிக்கும், ஆனால் முஸாக்கா இப்படி ருசியாயிருக்கும் என்று இன்றுதான் தெரியும்.’
‘எதையும் அனுபவித்தாத்தான் தனிப்பட்ட அனுபவம் வரும்‘
மார்ட்டின் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னான் என்று தொனியிற் தென்பட்டது.

இவனுடன் சாப்பிட வந்தது குமாரின் கெஞ்சலுக்கும் அல்லது சாடையாகத் தென்படும் மிரட்டலுக்கும் பயந்தா என்று தெரியாது. இவன் ஆங்கிலேயன் விடயத்தை நேரே சொல்லிப் பழகுபவன். எலிஸபெத் என்ற பெண்ணின் சினேகிதியாக நித்தியா அறிமுகப்பட்டு, எலிஸபெத்தின் வீட்டுக்குக் குடியிருக்க வந்தபோது, மேல்மாடியில் இருக்கும் இரு ஆண்களையும் அறிமுகம் செய்து வைத்தபின், அவர்கள் இருவரும் ஹோமோ செக்சுவல்ஸ் என்று மெல்லமாகச் சொன்னாள் எலிஸபெத். கீழ்வீட்டிலிருக்கும் மார்ட்டின் கல்யாணமாகாத யூனிவர்சிட்டி லெக்ஸரர் என்றும் சொன்னாள்.

நித்தியாவும் எலிஸபெத்தும் ஒரு சிறிய கொம்பனியில் வேலை செய்கிறார்கள். எலிஸபெத் நீண்டநாள் அந்தக் கொம்பனியின் டைப்பிஸ்ட், நிர்வாகி, கணக்காளர் என்ற பல முகங்களில் வேலை செய்கிறாள். எப்படியும் தான் ஒரு தனிக் கொம்பனி தொடங்க வேண்டுமென்று அடிக்கடி சொல்வாள் எலிஸபெத்.

நித்தியா றிஸப்ஸனிஸ்ட்டாக வேலைக்கு வந்தவள். ஒருசில கிழமைகளில் எலிஸபெத்தைச் சினேகிதம் பிடித்து விட்டாள்.

மாமா முறையான ஒருத்தரின் வீட்டிலிருந்து, ரூட்டிங் நகரிலிருந்து, ஹோபோர்ன் நகர் வருவது அதிகாலைக் கும்பலில் பெரிய கஸ்டம்தான்.

'வேண்டுமானால் எனது பிளட்டில் ஒரு அறை காலியாக இருக்கிறது வந்து பார்'
வெள்ளைக்காரர்களுடன் வாழ்வதை நித்தியா எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் தலையிடி தரும் பிரயாணத்தை விட புதிய இடம் பரவாயில்லைப் போலிருந்தது.

கீழ் வீட்டில் மார்ட்டினும் இன்னொருத்தனும் இருந்தார்கள். மார்ட்டின் ஒரு கல்லூரி விரிவுரையாளர் என்று எலிஸபெத் அறிமுகப்படுத்தினாள்.

'ஹலோ, ஹவ் டு யு டு' என்பதற்கு அப்பால் எப்போதாவது மாடிப்படியால் வரும்போது ஒரு புன்சிரிப்பு, அல்லது குட் மோர்னிங் அல்லது குட் ஈவினிங்.

எலிஸபெத் வெளியில் போயிருந்த நேரம் மார்ட்டின் வைன் பாட்டிலை கைதவறிப் போட்டு உடைத்திருக்காவிட்டால், இவர்கள் இன்று இந்த றெஸ்ட்ரோரண்டுக்கு வந்திருக்க முடியாது.

கத்தரிக்காய் முஸாக்காச் சாப்பாடு நல்லதுதான். அவள் எதையோ யோசித்துக் கொண்டிருக்க அவன் எதையோ கேட்கின்றான்.
இன்னும் சில நாட்களில் மார்ட்டின், எலிஸபெத் மற்றும் சிலரும் லேக் டிஸ்ரிக் போகிறார்களாம். நித்தியா வந்தால் சந்தோசமாக இருக்குமாம்.

'ஏன் கொஞ்ச நாளா சரியாகப் பேசாமலிருக்கிறாய்' குமார் நேற்றுக் கேட்டான்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் கொழும்பில் இருந்து தப்பினோம் பிழைத்தோம் என்று யாழ்ப்பாணம் போய் அங்கே ஒரு ரியுட்டரியிற் படிப்பிக்கும் போது நித்தியா குமாரைச் சந்தித்தாள். தமிழர்கள் எல்லோரும் ஒன்றாய்ப் போராடாவிட்டால் எங்களுக்கு விடிவு காலம் இல்லை என்றான். எல்லோரும் என்று அவன் சொன்னபோது ஆண்கள், பெண்கள், படித்தோர், படியாதார், முதியோர் இளைஞர் என்ற பேதமின்றிச் சொல்கிறான் என்று நினைத்துப் பெருமைப்பட்டாள்...

அவனுடன் சேர்ந்து சில கூட்டங்களுக்கும் போனாள்.
'இன விடுதலையடைய முதல் எங்களுக்குள் நாங்கள் போட்டிருக்கும் அடிமைத்தளைகளை வெட்டியெறிய வேண்டும்' என்று முழங்கினான்.
அவள் அவனின் ஆவேசப் பேச்சில் பரவசப்பட்டாள். பேச்சில் நியாயமிருக்கிறது என்று நினைத்தாள்.

தமிழரின் விடுதலைக்கு எத்தனையோ இயக்கங்கள் உருவாகிய காலகட்டம் அது. நித்தியாவின் தாய்க்கு இவள் குமாருடன் சேர்ந்து கூட்டம், ஆர்ப்பாட்டம் என்று திரிவது பிடிக்கவில்லை. ஒருதரம் குமார் வீட்ட வந்தபோது...
'தம்பி எப்படித்தான் இருந்தாலும் ஒரு குமர்ப்பிள்ளை தனியாக ஒரு இளைஞனுடன் திரிந்தால் நாலுபேரும் நாலு விதமாகச் சொல்லுவினம்'



அந்தத் தாயின் தவிப்பு அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும்.
'எங்கள் இருவருக்கும் எத்தனையோ விடயங்களில் ஒற்றுமையிருக்கிறது. எதிர்காலத்திலும் ஒன்றாய் வாழ நாம் இணைந்தால் அதைப் பெரிய பாக்கியமாக் கருதுவேன்' என்று நெகிழ்ச்சியுடன் சொன்னான்.
பண்ணைக் கடற்கரை தவழ்ந்து, முனியப்பர் கோயிலில் முடங்கிப் பதுங்கிய இளம் காற்று இவளைத் தடவி, அவன் சொல்வது இனிமையாயில்லையா என்று கேட்பது போலிருந்தது. ஒருசில வருடங்களாகத் தெரிந்தவன் எதிர்காலத்தில் ஒன்றாக இணைவது பற்றியும் சொல்கிறான் என்று நினைத்து மகிழ்ந்தாள் நித்தியா.

அதைத் தாயிடமும் சொன்னான் குமார்.
நித்தியாவின் தாய் குமாரின் தாயைச் சந்தித்தபோது,
'என்ன? அவிழ்த்து விட்ட மாடுமாதிரி ஊர் மேயிற உன்னுடைய மகளுக்கோ என் மகனைக் கேட்கிறாய்'.
குமாரின் தாய் நரம்பில்லா நாக்கால் நிர்த்தாட்சண்யமின்றிக் கேட்ட கேள்வி நித்தியாவின் தாயைக் கூனிக் குறுகப் பண்ணி விட்டது.

'குமார் உங்கள் தாய் இப்படிப் பேசியிருக்கக்கூடாது'
கோபத்தை அடக்கிக் கொண்டு நித்தியாவின் தாய் கூறினாள்.
குமார் தலையைக் குனிந்து கொண்டான். தங்கைகளுக்காகத் தாய் தன்னை ஒரு மாற்றுக் சடங்குக்கு சரியெனச் சொல்லச் சொல்லிக் கேட்கிறா என்று தயக்கத்துடன் கூறினான்.

நித்தியா அழுவதைக் கூட வெட்கம் என எண்ணினாள். முற்போக்கு சொன்ன இவன் இப்படி ஒரு முழுப் பொய்யைச் சொல்வானா என்று அவள் அடிக்கடி யோசித்தாள். அவள் அறைக்குள் குறுகிப்போய் நாட்களைக் கழித்தபோது... அவன் புது மனைவியுடன் லண்டன் வந்துவிட்டான்.

இலங்கையில் பிறந்த தமிழர் உயிர்தப்ப உலகின் பல பக்கங்களும் ஓடியபோது ஒரு மாமாவின் உதவியுடன் நித்தியா லண்டன் வந்து சேர்ந்தாள்.

அவன் இரு குழந்தைகளுக்குத் தகப்பன் என்று கேள்விப்பட்டாள்.
தற்செயலாக ஒருநாள் யாரோ கல்யாணத்தில் சந்தித்துக் கொண்டார்கள். கல்யாண மண்டபத்தில் வானரங்களாய் ஓடித்திரியும் சில சிறார்களில் இருவரைக் காட்டித் தன் குழந்தைகள் என்று சொன்னான்.
இவனுக்கும் தனக்கும் பிறந்திருக்க வேண்டிய குழந்தைகள் என்று ஒரு நிமிடம் அவள் மனம் ஏங்கியது.
உங்கள் மனைவி யார் என்று அவள் கேட்கவில்லை. பட்டுச்சேலை சட்டைகளாய் அல்லது அளவுக்கு மீறி அலங்கரிக்கப்பட்ட நத்தார் மரங்களாய் அங்குமிங்கும் திரிந்து கொண்டிருக்கும் பல அட்டியல் கனத்த பெண்களாக இருக்கும் என்று நினைத்தாள்.

எங்கேயிருக்கிறாய், எப்படியிருக்கிறாய் என்று அவன் பழைய இனிய குரலில் அவன் மனைவி பார்க்காத நேரம் கேட்டபோது... முட்டாள்தனமாக அல்லது கௌரவத்திற்காக இவளது டெலிபோன் நம்பரைக் கொடுத்தாள்.

‘என்ன நித்திரை கொள்ளாமல் லைட்டைப் போட்டுக்கொண்டு... விடிய விடிய கண் விழிப்பதான யோசனையோ?’
எலிஸபெத் எட்டிப் பார்த்தபோது இவள் சிந்தனை கலைந்தது.

நித்தியாவின் தமக்கை இரண்டு குழந்தைகளுடன் சுமாராக வாழ்கிறாள். தம்பி கொம்பியூட்டரில் நல்ல கெட்டிக்காரன். எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள்.

குடும்பக் கஸ்டம் பற்றி குமார் இவளிடம் பட்டும் படாததுமாகச் சொன்னபோது பழைய இனிய ஞாபகங்கள் தந்த வேதனையின் காரணத்தால் இவள் சேர்த்து வைத்திருந்த பணத்தில் கணிசமான பணத்தைக் கொடுத்தாள். நான் எப்படியும் திருப்பித் தருகிறேன்
என்று அவன் சொல்லவுமில்லை, எப்படியும் தரப் பாருங்கள் என்று இவள் சொல்லவும் இல்லை.

ரொக்கமாகக் கொடுத்த பணத்தின் ருசி மாதா மாதம் இவள் கொடுப்பதை எதிர்பார்த்தது என்று இவளுக்குப் புரிந்தபோது தர்மசங்கடமாக இருந்தது.

‘யார் இந்த மனிதன்‘, எலிஸபெத் கேட்டாள்.
நித்தியாவால் பொய் சொல்ல முடியவில்லை. எலிஸபெத் நேர்மையானவள். நித்தியா அவன் யார் என்று குமாரைப் பற்றிக் கூறியதும்,
‘உன்னை வைப்பாட்டியாக வைத்திருக்கும் யோசனையா அவனுக்கு‘ என்று எலிஸபெத் நேர-டியாகக் கேட்டுவிட்டாள்.
எலிசபெத்தின் கேள்வியின் தாக்கத்தால் வெலவெலத்துப் போனாள் நித்தியா.
‘பெண் உரிமை, சமத்துவம் எல்லாம் சிலர் பேசுவது பெண்களைக் கட்டிலிற் பாவித்து முடியுமட்டும்தான்‘ எலிஸபெத் சீறினாள். ‘நேர்மையுள்ளவன் என்றால் உன்னை எப்போதோ திருமணம் செய்திருக்க வேண்டும்.‘
‘என்ன செய்வது, சூழ்நிலை அப்படியாக்கி விட்டது.‘ நித்தியா முணுமுணுத்தாள்.
‘உனது இஸ்டம்‘ எரிச்சலுடன் சொன்னாள் எலிஸபெத்.

எலிஸபெத் இப்போதுதான் கல்யாணத்தைப் பற்றி யோசிக்கிறாளாம். தனக்கு வருபவன் எப்படியிருக்க வேண்டும் என்ற தன் கற்பனையைச் சொன்னாள்.
‘மார்ட்டின் உனது கற்பனைக்குச் சரிவருவான்‘ நித்தியா குறும்பாகச் சொன்னாள்.
‘மார்ட்டின் உன்னைப் பார்த்து இளிப்பதிற் தெரிவில்லையா, அவன் பார்வை எங்கேயிருக்கிறது என்று?’
நித்தியா இதை எதிர்பார்க்கவில்லை. மார்ட்டின் நடுச்சாமத்தில் வைன் பாட்டிலை உடைத்த சமயத்திலிருந்து ஏதோ ஒரு சாட்டுச் சொல்லிக்கொண்டு இவர்களின் பிளாட்டை எட்டிப் பார்ப்பதை அவள் அவதானிக்காமலில்லை.

எலிஸபெத்தையும் இவளையும் தங்கள் கல்லூரிக் கலைவிழாவுக்குக் கூப்பிட்டான். பின்னர் சாப்பிடக் கூப்பிட்டான். எலிஸபெத் ஏதோ சாட்டுச்சொல்லிப் பின்னடைய நித்தியா அவனுடன் போய் கத்தரிக்காய் முஸாக்கா சாப்பிட்டு வந்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பின் குமார் வந்தான். இவள் ஏன் பழையபடி இல்லை என்று குறுக்கு விசாரணை செய்தான்.



‘இங்கிலிஸ்காரர்களுடன் சேர்ந்து கிளப் பார் என்று அலைகிறாயா‘ என்று நக்கலாகக் கேட்டான்.
‘கல்லூரி கலைவிழாவுக்குப் போனேன். நவீன நாடகம் பார்த்தோம்‘. அவள் அவன் நையாண்டியைப் பொருட்படுத்தாமற் சொன்னாள்.
‘நாங்கள் தமிழர்கள்... கண்ணியமாக வாழப் பார்க்க வேணும்‘. அவன் மிகவும் கறாராகச் சொன்னான்.
கண்ணியம் என்றால் என்ன?
கல்யாணம் செய்கிறேன் என்ற உறுதியைக் காற்றில் விடுவதா? வெளியில் வரும் பெண்கள் விளக்கேற்ற உதவாதவர்கள் என்று விலகிப் போவதா?

இப்போது போரடித்த கல்யாண வாழ்க்கையில் கொஞ்சம் சுவை சேர்க்கவா குமார் இவளைச் சுற்றுகிறான். எத்தனையோ பெரிய படிப்புப் படித்தும் ஒரு பெரிய வேலை கிடைக்காததால் அவன் தற்காலிகமாக ஏதோ செய்கிறான் என்று துயரத்துடன் சொல்லிக்கொண்டான். இவளுக்கு முப்பத்தைந்து வயதென்றபடியால் அக்காவும் மற்றவர்களும் கல்யாணம் பேசுவதில் கருத்தாயில்லை.

‘இந்தக் காலத்து ஆண்கள் இருபத்தைந்து வயதுக்குமேல் பெண் என்றால் இனித் தூக்கில் பரணில் போட வேண்டியதுதான் என்கின்ற தோரணையில் பேசுகின்றார்கள்‘ அக்கா ஆதங்கத்துடன் சொல்லிக் கொண்டாள்.

லேக் டிஸ்ட்ரிக்ட்டுக்குப் போவதற்கு முதல்நாள் குமார் போன் பண்ணினான். கண்டபாட்டுக்கு வெள்ளைக்காரருடன் திரிந்தால் இவளுக்கு கல்யாணம் நடப்பது கஸ்டம் என்று அக்கறையாய்ச் சொன்னான். எலிசபெத்தின் வீட்டைவிட்டுத் தனியாகப் போயிருந்தால்தான், அடிக்கடி வந்து பார்க்கலாம் என்று ஆசையாகச் சொன்னான்.

‘மார்ட்டின் உன்னைத் திருமணம் செய்யச் சொல்லிக் கேட்டால் , என்ன சொல்லப் போகிறாய்’ எலிஸபெத் நித்தியாவை ஊடுருவிப் பார்த்தபடி கேட்டாள்.
குமாரின் தாய்மாதிரி மார்ட்டினின் தாயும் ‘நீ வீட்டை விட்டு வெளியில் திரியும் பெண், குடும்பத்துக்குச் சரியில்லை என்று சொல்வாளா?. நித்தியா குழப்பத்துடன் கேட்டாள்.
எலிஸபெத்துக்கு சிரிப்பு வந்தது.

தமிழர்கள் என்பதன் முழுக்கருத்தும் வெற்றுப் பெயர்களுடன் மட்டும் ஒட்டிக் கொள்ள எவ்வளவு தூரம் இவளிடம் பிடுங்கலாமோ, எதையெல்லாம் பிடுங்கலாமோ என்ற குமாரும், இவள் என்ன செய்வாளோ தான் கல்யாணம் செய்யச் சொல்லிக் கேட்டால் நித்தியாவின் மறுமொழி எப்படியிருக்கும் என்று யோசிக்கும் மார்ட்டினும் நித்தியாவின் மனத்திரையில் படம் போட்டார்கள்.

டெலிபோன் மணி அடித்தது.
தான் எப்படி நடந்தாலும் மனைவி ஒன்றும் கேட்கப் போவதில்லை‘ என்று மனைவி (பட்டுச்சேலை மூட்டை) சொன்னதாகக் குமார் சொன்னான். அதாவது அவன் நித்தியாவுடன் ‘உறவு’ கொள்வதை மனைவி கண்டு கொள்ளமாட்டாளாம்!
அவனைப்போல் அவன் மனைவியும் ஒரு முற்போக்குவாதியாய் இருக்கலாம்...



நித்தியா எரிச்சலுடன் போனை வைத்தாள்.

## முன்னைய சோவியத்திலிருந்து

## இன்றைய அமெரிக்காவரை...



# ஒரு பெண்நிலைப் பயணம்

ரஞ்சி

1999ம் ஆண்டு செப்டம்பரில் யுனிசெப் நிறுவனம் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் ஆய்வு ஒன்றை நடத்தியது. அத்துடன் "பெண்களின் மாற்றங்கள்" என்னும் அறிக்கையையும் வெளியிட்டுள்ளது. கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டு வரும் பொருளாதார மாற்றம் அங்குள்ள பெண்களை வெகுவாகப் பாதித்தது மட்டுமல்லாமல் வறுமையையும் வளர்த்திருக்கிறது. அத்துடன் சமூக வீழ்ச்சியையும் பெருக்கியுள்ளது. இதனால் ஏற்பட்ட விளைவுகளை எதிர்த்து அவர்கள் விழிப்புடன் போராடத் தொடங்கியிருக் கிறார்கள். 1990 களிலிருந்து முன்னாள் சோவியத் யூனியன் உட்பட முன்பு கம்யூனிச நாடுகளாகவிருந்த 27 நாடுகளில் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. இம் மாறுதல் கள் பெண்களை பொருளாதாரத் திலும் அரசியலிலும் நிர்வாகத்திலும் பெரும் பாலும் ஒதுக்கி வைத்துவிட்டன. ஆணுக்கு பெண் சரிசமம் என்னும் கோட்பாடு கிழக்கு ஐரோப்பிய தேசிய அரசமைப்புகளில் இன்னும் எழுத்தளவிலேயும் உதட்டள விலேயும்தான் இருந்து வருகின்றன.

முன்னைய சோவியத் ஒன்றியம் வேலைவாய்ப்பை இணக்கமாக ஒருங்கி ணைத்து பெண்கள் விடுதலையை அறிவித்தது. பெண்களுக்கு அதிக மருத்துவக் கவனிப்பும், கல்வியும் வேலைவாய்ப்புகளும் அளிப்பதில் அரசு பெருமளவு முதலீடு செய்தது. ஆண், பெண் பிரிவினைகள் ஒருபோதும் பகிரங்கமாக கையாளப்படவில்லை என்றாலும் ஆணாதிக்கத்தின் மனப்போக்குகள் மிகவும் பிற்போக்குத்தனமாகவே இருந்தன. பெண்கள் வேலை பார்த்தல், குடும்பக் கவனிப்பு என்ற இரட்டைச்சுமைகளையும் தாங்க வேண்டியிருந்தது. ஆய்வுகளின்படி பெண்கள் வாரந்தோறும் ஆண்களைவிட 15 மணிநேரம் வேலைசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. பெண்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தாலும் குடும்பப் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வதில் ஆண்கள் பின்நின்றார்கள். அங்கு கூறப்படுகின்ற சமத்துவம் இருபாலாருக்கும் இடையில் ஏற்படவில்லை.

கிழக்கு ஐரோப்பாவில் 1989க்குப் பிறகு ஏறத்தாழ 2.6 கோடி வேலை வாய்ப்புகள் இல்லாமல் போயின. இவற்றில் 1.4 கோடி வேலைகள் பெண்களால் செய்யப்பட்டவை. முக்கியமாக போலந்தில் வேலைக்கு விண்ணப்பிக்கும் பெண்களை அவர் கள் கருவுற்றிருக்கிறார்களா



என்று பரிசோதனை செய்தபின்பே வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். ஆனாலும் போலந்தில் பெண்கள் சட்டப்படியான வேலையில் அமர்த்தப்பட்டாலும் அங்கும் ஆண் களை விட குறைந்த சம்பளமே பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த சம்பள ஏற்றத்தாழ்வு ரஷியாவில் 24 வீதமும் போலந்தில் 16 வீதமும் ஹங்கேரியில் 15 வீதமுமாக உள்ளது. கணவனை இழந்த பெண்கள் இளம் குழந்தை களுடைய தாய்மார்கள் போன்றோருக்கு வழங்கப் பட்ட சலுகைகள் யாவும் ஒழிக்கப்பட்டு விட்டமை யாலும் பெண்கள் புதிய வேலையை பெறுவதற் கான வாய்ப்புகள் குறைந்து விட்டன. 1990க்கு பிறகு பொருளாதார மறுசீரமைப்பு காரணமாக பெருமளவு பெண் தொழிலாளர்களைக் கொண்ட தொழில்கள் முக்கியமாகப் பாதிக்கப்பட்டன. ஆண் பெண் தொழிலாளர்கள் இருசாராரும் பணியாற்றும் தொழில்களிலிருந்து ஆண் தொழி லாளர்களுக்கு முன்பாக பெண் தொழிலாளர்களே வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடியினால், தேசிய எல்லைகளைத் திறந்து விடுவதினால் ஏற்பட டுள்ள விளைவுகளில் இளம் பெண்கள் பால்வினைத் தொழிலாளர்களாக மாறிவருவது சர்வ சாதாரணமாகிவிட்டது. ரஷியா உட்பட கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த 5 இலட்சம் இளம் பெண்கள் இன்று மேலைநாடுகளில் பால்வினைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஆண்டுதோறும் 10000 இளம் பெண்கள் பல்கேரியாவிலிருந்து பால்வினைத் தொழிலுக்குக் கொண்டு வரப்படு கிறார்கள்.

பல்கேரியாவில் ஆண்டுதோறும் 60000 பெண் களை அவர்களின் கணவன்மார்கள் அடித்து துன்புறுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல் பாலியல்வல்லுறவு நிகழ்வுகளில் 1 வீதம் மட்டுமே காவல்துறைக்கு தெரிவிக்கப்படுகிறது. எய்ட்ஸ் நோய் உட்பட பால்வினை நோய்கள் பரவி வருகின்றன. ரசியாவில் 100 இளம்பெண்களில் ஒருவருக்கு இந்த நோய் பீடித்திருக்கிறது. 1994ம் ஆண்டு 30000 த்தில் இருந்த எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு பார்க்கும் பார்க்கும்போது 1998 இறுதி யில் 270000 ஆக உயர்வடைந்துள்ளது. 1959 முதல் 1993 வரை கருக்கலைப்பு அனுமதிக்கப் பட்டது. ஆனால் கருக்கலைப்பு தாயின் உயிருக்கு அபாயம் போன்ற கருத்துக்களை கத்தோலிக்க திருச்சபை வலியுறுத்தி நிற்கின்றன. போலந்தில் ஆண்டு தோறும் 30,000 க்கும் அதிகமான கருக்கலைப்புகள் நடைபெற்று வருகின்றன. ருமேனியாவில் 1965-1989 வரை கருக்கலைப்பு தடை செய்யப்பட்டிருந்த போதிலும் 1990க்கு பிறகு கருக்கலைப்பு அனுமதிக்கப்பட்ட தினால் அனாதை விடுதிகளில் குழந்தைகளை விட்டுச் செல்வது குறைந்துள்ளது என ஆய்வாளர் கள் கூறுகிறார்கள். ஆனால் ஹங்கேரி, லிதுவேனியா, ஸ்லோவாக்கியா, உக்ரேன், ஆர்மேனியா, பல்கேரியா, ஜார்ஜியா போன்ற நாடுகளில் கருக்கலைப்பு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய பெண்களின் அரசியல் பங்கேற்புகள் மிகவும் குறைவாகவே காணப்ப டுவதாக யுனிசெவ் ஆய்வு தெரிவிக்கிறது. போலந்து நாடாளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் 13 வீதமாகவும், பல்கேரியாவில் 10.4 வீதமாகவும், செக் குடியரசில் 10 வீதமாகவும் எஸ்டோனியாவில் 12.9 வீதமாகவும் அங்கேரியில் 8 வீதமாகவும் ருமேனியாவில் 7 வீதமாகவும் ஸ்லோவாக்கியாவில் 14.7 வீதமாகவும் ஸ்லோவேனியாவில் 7.8 வீதமாகவும் பெண்களின் நாடாளுமன்ற விகிதாசாரம் உள்ளது. ஒருசில நாடுகளில் வர்த்தக நிறுவனங்களில் 25 வீதமானவை பெண்களின் தலைமையில் இயங்கி வருகின்றன. இச் சமூகங்களில் சமூகத் தகுதி நிலைக்கான பெண்களின் கோரிக்கைகள் ஏளனம் செய்யப்படுகின்றன.

என்றாலும் பல பெண்கள் அமைப்புகள் அரசு சார்பற்ற நிறுவனங்களாய் தோன்றி வருதுடன் தீவிரமாகவும் இயங்கி வருகின்றன. அத்துடன் வர்த்தகத்திலும் பெண்கள் மேன்மேலும் ஈடுபட்டு வருகிறார்கள். இத்துடன் இந் நாடுகளில் பெண் கள் இணையங்களையும் ஏற்படுத்தி வருகின்றனர்

அத்துடன் கிழக்கு ஐரோப்பிய பெண்கள் அமைப்புகள் தமது கோரிக்கைகளை முன்வைத் துப் போராடி வருகின்றனர்.

- பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்து போராடுதல்..
- பெண்களின் கல்வி அறிவை வளர்த்தல். பெண்,ஆண் சமத்துவம் பற்றிய பொதுவிவாதங்களுக்கு ஏற்பாடு செய்தல்
- பெற்றோர் பொறுப்புகளைக் பகிர்ந்து கொள்வதுடன் குழந்தைகளுக்கு கல்வியறிவை ஊட்டுதல்.
- கணவன்மாரை இழந்த பெண்களுக்கு அரசு கொடுப்பனவுகளை ஊக்குவித்தல்.
- தேர்தல்களில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்கும்படி அரசியல் கட்சிகளை கேட்டுக்கொள்ளல்.
- பெண்களின் கைத்தொழில் வாய்ப்புகளுக்கு கடன் உதவி வழங்கல்.
- போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிவாரணம் வழங்குதல்

போன்ற பல காரணங்களை முன்வைத்து போராடி வருகின்றன.

உலகமெங்கும் ஆண் மேலாதிக்கமே மேலோங்கி நிற்கின்றது. அது வளர்ச்சியடைந்த நாடுகளிலும் சரி, வளர்ச்சியடையாத நாடுகளிலும் சரி பெண்கள் இரண்டாந்தரப் பிரஜையாகத்தான் கணிக்கப்படுகிறார்கள். 2000ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வொஷிங்டன், நியுயோர்க்கில் நடந்த உலகப்பெண்கள் அமைப்பு ஒரு ஊர்வலத்தை நடத்தியிருந்தன. இவ் உலகப் பெண்கள் அமைப்பினால் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள் கருக்கலைப்பிற்கான உரிமை, சமவேலைக்கு சமகூலி, ஓரினச் சேர்க்கைக்கான உரிமை, சிறுவர்களை பாலியில் தொழிலில் ஈடுபடுத்து வதை இல்லாதொழிப்பது போன்றவை.

அதுமட்டுமன்றி உலகவங்கியின் மீது பல குற்றச்சாட்டுக்களையும் சுமத்தினர். உலகவங்கி, மற்றும் சர்வதேச நிதிநிறுவனமான ஐ.எம்.எவ் (IMF) போன்ற நிறுவனங்களே உலக வறுமைக்கு காரணிகளாகும் எனவும் சாடினர். இன்றைய ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த உலகில் உலகமயமாதல் என்பது இந் நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் வளர்ச்சியடைந்த நாடு களின் சுயநலனுக்கு பயன்படுத்தப்படுகிறாதா? என்ற கேள்வியையும் எழுப்பினர்.

அத்துடன் "அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏழ்மை உண்டா" என்று ஆச்சரியப்படுபவர்களின் கவனத்தை ஈர்த்தனர். தனியாக வாழும் தாய்மார்களில் 90 சத வீதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் என்றும், நகரங்களில் வீட்டு வசதியின்மை, உணவு தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் எவ்வளவோ கஸ்டப்படுகிறார்கள்; அவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்றும் இப் பெண்கள் அமைப்புகள் கோஷமிட்டனர். இப் பேரணியை அரசு முழுமையாக இருட்டடிப்புச் செய்தது. பத்திரிகைகளில் அமெரிக்கப் பெண்கள் ஊர்வலம் என மட்டும் விளம்பரப்படுத்தியது. இதுதான் இன்றைய வளர்ச்சியடைந்த நாடுகளின் போலிமுகங்களாகும்.


தகவல்கள்
unesco courier
Albania Women in development jeta kata belull Collection
Macedonia gender studies centre -linda






# ஒரு வெட்டுமுகம்

பாசப்பிணைப்புகளையும் பரஸ்பர கடமைகளையும் கொண்டுள்ளதாக இந்திய சமூக சூழலில் கட்டிக்காக்கப்பட்டு வருகின்றதே எமது குடும்ப அமைப்பு முறை. இந்தப் பரஸ்பர கடமைகளும் பாசப் பிணைப்புகளும் எனப்படுபவை குடும்பத்தில் பால் வித்தியாசங்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் படிநிலை அதிகாரங்களைப் பேணுவதற்கும் ஆக தனது மறைமுக செயற்பாட்டைச் செய்து வருகின்றது. பெண்ணடிமைவாதப் போக்கை காப்பாற்றுவதற்கு கலை, கலாச்சாரம், மதம் போன்றவை ஆற்றிவரும் பங்கிற்கு இந்த குடும்பம் என்கின்ற அமைப்புமுறையே அடிப்படையாக அமைந்துள்ளது. பெண்விடுதலை குறித்துப் பேசவரும் யாரும் இக் குடும்ப அமைப்புமுறையை கேள்விக்குட்படுத்த வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் சிவகாமியின் 'குறுக்கு வெட்டு' என்னும் நாவல் எமது குடும்ப அமைப்பு முறையையும், அதன் புனிதத்துவத்தையும் இதனூடாக தக்கவைக்கப்பட்டிருக்கும் ஆண் அதிகார மையத்தினையும் கேள்விக்குட்படுத்தும் பணியை நோக்காகக் கொண்டுள்ளது.




குறித்த நாவலின் பிரதான பாத்திரங்களான சரோ-ரவி இருவரும் தம்பதிகள். இவர்கள் இருவருக்கும் இரண்டு குழந்தைகள். ரவிக்கு இன்னுமொரு பெண்ணுடனும், சரோவுக்கு குமார் என்பவனோடும் குடும்பத்துக்கு வெளியே உறவேற்படுகிறது. இதன் காரணமாக இவ்விருவருக்கும் இடையில் ஒரு இடைவெளி உருவாகுகிறது. இருவரும் அன்பாகப் பேசுவது கூட இல்லை என்ற நிலைமாறி பேசினால் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டி இறுதியில் சண்டையில் முடியும் அளவிற்கு முரண்பாடுகள் அதிகரிக்கின்றன. ஆனாலும் இருவரும் குழந்தைகளின் பராமரிப்பில் கவனம் செலுத்துகிறார்கள். இதில் வழமையான நமது குடும்ப அமைப்பில் பெண்ணுக்கு இருக்கும் இரண்டைச் சுமை சரோவையையும் ஆட்கொள்கிறது. சரோவின் நண்பனான குமாரின் மனைவி சுப்பு. இவள் 'நல்ல' பெண்மணியாக வாழ விரும்புபவள். அதாவது கணவனின் எந்தச் செயற்பாடுகள் மீதும் குற்றம் காணாது தன் 'கடமையைச்' செய்பவள்.

சரோவுக்கும் குமாருக்கும் இடையிலும் நிறைய வாக்குவாதங்கள் ஒவ்வொரு தடவையிலான சந்திப்பின் போதும் நடக்கும். மீண்டும் மீண்டும் ஆளை ஆள் சந்திப்பதும், தங்கள் பிரச்சனை பற்றிப் பேசுவதும் தொடர்கிறது. ஆனால் ஒருவருக்கொருவர் ஏதோ ஒருவகையில் இன்றியமையாதவர்களாகி விடுகிறார்கள். மறுபுறம் தம்பதிகளான சரோவுக்கும் ரவிக்கும் இடையில் முரண்பாடுகள் கூர்மையடைந்து கைகலப்பில் முடிவடைகிறது.

சரோ 'நான் வீட்டைவிட்டுப் போகிறேன்' என்று சொல்ல உடனே 'வெளியில் போ' என்று விரட்டுகிறான் ரவி. வெளியில் பெட்டியுடன் போன சரோ போவதற்கு இடமின்றியோ அல்லது போவதற்கு விருப்பமின்றியோ, வாங்கிய அடியின் வலி தாங்கமுடியாமல்

**விஜி**

மொட்டைமாடியில் தூங்கிவிட, காலையில் ரவியின் ஆதரவுக் கரங்கள் அணைத்ததன்பின் இருவருக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வுடன் ஒருவர் மற்றவரை அவரது விருப்பு வெறுப்புகளை அனுசரித்து வாழ்க்கை தொடர்கிறது.

இந் நாவலில் கணவன் மனைவி உறவு முறை, உறவில் புனிதத்தன்மை என்பவை 'கற்பு' என்கின்ற கற்பிதம் கொண்ட ஒரு மையத்தை சுற்றியே கட்டமைக்கப்பட்டிருப்பதையும் இந்தக் 'கற்பு' எனும் கற்பிதத்தை சிதைப்பதில் இருந்துதான் உறவின் புனிதம், குடும்ப அமைப்பின் அதிகாரத்துவ தக்கவைப்பு என்பவற்றை கேள்விக்கு உள்ளாக்கமுடியும் என்பதையும் சரோ பாத்திரத்தினூடு புரிய வைக்கிறார் கதைசொல்லி.

ஆரம்பத்தில் சரோவின் கணவனான ரவிக்கு இருந்த வேறு பெண்ணுடனான உறவு குடும்பத்தை எந்த இடத்திலும் பாதிக்கவில்லை. எப்போ சரோவுக்கு வேறு ஒரு ஆணுடன் உறவு ஏற்படுகிறதோ அப்போதிருந்தே குடும்பத்தினுள் பிரச்சனை எழுகிறது. இந்த நிலை எமது தமிழ் குடும்பங்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டினாலும் மறுபக்கத்தில் ஆணு க்கு இவ்வகையான உறவு இருப்பதனால் பெண்ணுக்கு இருந்தால் என்ன? என்கின்ற தோற்றத்தைத் தருவதாகவும் இருக்கிறது.

எனினும் கதைசொல்லியின் நோக்கம் ஆணோ, பெண்ணோ என்பதல்ல. குடும்பத்தினுள் இருக் கும் அதிகாரத்தன்மையை உடைப்பதும், ஒருவரின் விருப்பு வெறுப்புகளை மற்றவர் அங்கீகரித்த எந்த வித நிர்ப்பந்தங்களும் அற்ற



இணைந்த வாழ்க்கையையே கூற வருகிறார் என்பது நாவலினுள் மூழ்கி எழும் போது புரிகிறது.

அடுத்து இந்நாவலில் சரோவுக்கும் குமாருக்குமான உரை யாடல்கள் அதிகம் உளவியல் சார்ந்ததாக காணப்படுவதை நாம் இவ்வாறு பார்க்கமுடியும். அதாவது பொதுவாகவே திருமணம் என்ற உறவுக்குப் பின் குடும்பம் என்ற அலகு மிக இறுக்கமாக கட்டமைக்கப்படுகிறது. இதனுள் ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு வெறும் அதிகார படிநிலைகளைப் பேணும் அல்லது சாத்தியமாக்கும் உறவாகவும், அசமத்துவ உறவாகவும் இருப்பதோடு பெண்ணின் உளவியல் தேவைகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படாமலும் புறக்கணிக்கப்படுகிறது.


உதாரணமாக ஒரு ஆண் வெளியில் 8 அல்லது 10 மணித்தியாலங்கள் வேலை செய்துவிட்டு வீட்டுக்கு வரும் போது வீட்டில் இருக்கும் பெண் வேலை முடிந்துவரும் ஆணை முகமலர்ச்சியுடன் வரவேற்று அவருக்கு தேவையானவற்றை செய்துகொடுத்து அவரது குறை நிறைகளை கேட்கவேண்டும். ஆனால் ஒருபெண் வீட்டில் 12,14 மணித்தியாலம் செய்யும் வீட்டுவேலையை வேலையாகவோ அவளது சோர்வையும், களைப்பையும், தனிமையையும் பொருட்டாகவோ கருதுவதில்லை. இதனை சரோ மனம்விட்டு பேசுவதற்கு குமாரைத் தேடுவதும் குமாருக்கும் சரோவுக்குமான உரையாடல்கள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி விரிவதையும் காணலாம். 'நான் என்னோட வாழ்க்கையை வாழ விரும்புகிறேன். படிப்பு, வேலை, திருமணம், குழந்தைகள் இந்த அனுபவங்களுக்குப் பிறகானும் இஸ்டம் போல் பிரயாணம், ஆர்வத்தின் மீதான படிப்பு, விவாதங்கள், குரோதமற்ற நிபந்தனையற்ற மனித உறவு...' என்று சரோ தன்னுடைய ஏக்கங்கள் பற்றி குமாரிடம் சொல்லும் போது ஒரு பெண் எம்முடைய சமூகத்தின் அனைத்து கட்டுப்பாடு களினாலும் எவ்வாறு கட்டப்பட்டிருக்கிறாள்; உளவியல் ரீதியில் தாக்கமுறுகின்றாள் என்பதை வெளிப்படுத்தி யிருக்கின்றது.

இவ்வாறு பல கோணங்களில் பெண்களின் பிரச்சனைகளை இந் நாவல் பேசியிருந்தாலும் இன்றிருக்கும் குடும்ப இறுக்கம் தளர்த்தப்பட்டு குடும்ப அமைப்புக்கு வெளியில் உள்ள பாலியற் சுதந்திரத்தை அங்கீகரித்தல் என்பதினூடு இருவரின் இணைந்த வாழ்க்கையையே கோருகிறது. இந் நாவலில் வரும் வேறு சில இடைச் செருகலான சிறுகதைகளும் இதையே மையமாகக் கொண்டவையாக இருக்கிறது.

மற்றும் இந் நாவலில் ஒவ்வொரு பக்கத்தின் அடிப்பாகமும் இன்னுமொரு கதையாகவோ அல்லது









குறுக்குவெட்டு
நாவலிடை
ஓவியங்கள்

கருத்தாகவோ நீண்டுசெல்வது பொதுவான நாவல் அமைப்பைவிட வேறுபட்டிருக்கிறது. ஆனால் இது அந் நாவலின் வாசிப்பை வழிநடாத்துவதாக ஒருபுறமிருந்தாலும், கதைசொல்லியால் நாவலில் கூறமுடியாத ஆனால் கதையின் கருவுக்கு வலுசேர்க்கக்கூடிய உரையாடல்கள் என ஆசிரியை நினைப்பவற்றை வாசகர் மீது திணிக்கின்றது. இது ஒருவகையில் பன்முக வாசிப்பு தளத்தை கொண்ட வாசகர்களின் உரிமையை மறுப்பதாகும். சிலவேளை இந்த ஒரு நாவலில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியவில்லையே என்கின்ற ஆதங்கமோ தெரியவில்லை.

இந்திய, தமிழ்க்குடும்ப அமைப்புமுறையை நோக்கி பலவித கேள்விகளை தொடுக்கின்ற இந்த நாவல் 1999 இல் வெளிவந்த போதும் ஏனோ எமது பெண்ணியலாளர்களாலும் பெண்ணியம் பேசும் சஞ்சிகைகளாலும் பெரிதாகக் கண்டுகொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயம்.

எனினும் இந்த நாவலில் முன்வைக்கப்படும் பாலியல் சுதந்திரம் குறித்த கேள்விகள் குடும்பம் என்ற அமைப்பின் சிதைவுக்கு, அல்லது குடும்பத்தினுள் பெண்-ஆண் சமத்துவ போக்குக்கு போதுமானதா? ஏனெனில் குடும்பத்தின் தோற்றமானது பெண்களின் மறுஉற்பத்தித் திறனை ஆண்கள் தங்களுடையதாக ஆக்கிக் கொள்வதற்காக திட்டமிட்டு உருவாக்கப்பட்ட தொன்று, என்கின்ற போது இவற்றைப் பெண்கள் மீண்டும் கையேற்றுக் கொள்வது அல்லது உதறிவிடுவது அல்லது ஏதோ ஒருவகையில் குடும்பப் பெண் என்ற சுமையில் இருந்து விலகிவிடுவது என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மறுஉற்பத்தி மீதான ஆழமான கேள்விகள் இந் நாவலில் இல்லாமல் போனது இந்திய குடும்ப அமைப்பில் சிறு மாற்றத்தைக் கொண்டுவருமேயொழிய பெண்களுக்கான முழு உரிமையையும் கொண்ட அமைப்பாக இக் குடும்பம் ஒருநாளும் இருக்க முடியாது.

இந் நாவலை எழுதிய சிவகாமியின்
ஏனைய படைப்புகள் பற்றி:

கருத்தம்மா, ராசாத்தி, நித்தியா போன்ற புனைபெயர்களில் எழுதிவருபவர்.

'இப்படிக்கு உங்கள் எதார்தமுள்ள', 'பழையன கழிதல்', 'ஆனந்தாயி', 'பழையன கழிதலும் ஆசிரியையும்', 'குறுக்குவெட்டு' போன்ற நாவல்களையும், 'நாளும் தொடரும்', 'கடைசி மாந்தர்' போன்ற சிறுகதைத் தொகுதிகளையும், தலித்தியம் பெண்ணியம் சம்பந்தமான பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். மேலும் இவர் முன்நின்று 1995 இல் வெளிவந்த 'கோடாங்கி' நின்று போய் தற்போது 'புதிய கோடாங்கி' எனும் பெயரில் மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. மற்றும் இவர் குறும்படத்துறை முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார். 'ஊடாக' எனும் முதலாவது குறும்படம் வெளிவந்துள்ளது.

# அந்த எரிந்த இதயம்

**நோர்வே அரசின் அரசியல் தஞ்ச சட்டக் கோவைகளின் கெடுபிடிகளுக்குள் சிக்குண்டு நீண்டகால போராட்டத்தின் பின்பு நோர்வேயில் அரசியல் தஞ்சம் பெற்ற ஆப்கான் பெண்ணியப் போராளியும் கவிஞையுமான மாரியம் அஸிமியின் முதலாவது வெளியீடான அந்த எரிந்த இதயம் பற்றிய ஓர் அறிமுகம்**

**ஆப்கானிய போராளியின் புலம்பெயர் கவிதைகள்**

**தயாநிதி**

ஆப்கானிய போராளியான இவர் இக் கவிதைத் தொகுதியில் தனது புகலிட வாழ்வின் அவலம், மனிதநேயம், யுத்தகால நெருக்குதல், ஒரு தேசிய இனத்தின் திட்டமிடப்பட்ட அழிப்பு என்பவற்றைத் தொட்டுச் செல்கிறார். தன்னுடைய கவிதைகளை நோர்வேஜிய கவிஞை Inger Elisabeth Hansen உடன் பகிர்ந்து கொள்கிறார். பகிர்வுகளும் கவிதைகளுடன் தொடர்கின்றன. இலகுவான நடையில் உள் மன வேதனைகளை வெளிப்படுத்தி நிற்கின்றன கவிதைகள். தொகுதி கவிஞையின் தாய்மொழியான பார்சியையும் நோர்வேஜிய மொழியையும் கொண்டதாக அமைந்துள்ளது. இத் தொகுதியை வாசிக்கும் போது கவிதைகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சங்கிலிகளாக இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. வெளியீட்டிற்காக குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் அடக்கவேண்டும் என்ற கட்டாயத்தில் தெரிவுகளை மேற்கொண்டுள்ள அவலம் முகம் காட்டுகின்றது.

ஒரு நிச்சயமான வரலாற்றையும் தனிப்பட்ட அனுபவங்களையும் தனதாக்கிக் கொண்ட நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கவிஞை. இவர்களது சுயசரிதையும் பயணம் செய்து வந்த பாதையும் வெளிப்படுத்தப்பட முடியாதவை. கவிதைகள் மெதுவாக விதைக்கப்பட்டுள்ளன. இவைகள் தடுத்து நிறுத்தப்பட முடியாதவை. அகதிகளின் பாடலாக வடிவமெடுத்துள்ளன. கவிதைகள் புலம்பெயர்வதில்லை. அவை எந்த நிலத்திற்குரியனவோ அங்கேயே காலூன்றி விடுகின்றன. அவை நிலம், தேசம் தேடும் மரபுகொண்டவை. இவருடைய கவிதைகளும் அழுத்தம் நிறைந்த வாழ்நிலையிலிருந்து எழுந்தவை. இவருடைய கவிதைகளுக்கு திகதியையும் இடத்தையும் குறிப்பிடுவோமாயின் எமது காலத்தின் கடுமையான பயணத்தை நாம் சந்திக்கலாம்.

யுத்தத்திலிருந்து சமாதானம் அல்லாத சமாதானத்திற்கு எம்மை அவர் அழைத்துச் செல்கிறார். அமைதி என்றும் சமாதானம் என்றும் மேலைத்தேய மக்கள் தொடர்பு சாதனங்கள் கோஷமிடும் நிலைமையையும் எம்முன் நிறுத்துகிறார். அவர் எம்மை காபூலுக்கு அழைத்துச் செல்கிறார்.



“

பதினாறு வயதில் என்னைச் சூழவுள்ள அரசியல் நிலமைகளினால் நான் போராளி யாகினேன். காபூலில் இயங்கும் அமைப்புடன் இணைத்துக் கொள்கிறேன். நான் காபூலிலுள்ள தொழிநுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தேன். 1974 டிசம்பரில் சோவியத் ஆப்கானைக் கைப்பற்றுகிறது. ஆட்சிக்கு வந்த முதல் வருடமே சோவியத்துக்கு எதிரான பாடசாலை மாணவர்கள், ஆண்கள், பெண்கள், கிராமத்துப் பெண்கள் குழந்தையுடன் எல்லோரும் கொள்ளை கொள்ளையாகக் கைது செய்யப் படுகிறார்கள். தலைமறைவாகும் வாய்ப்புக் கிடைத்தவர்கள் தலைமறைவாகின்றார்கள். அதில் நானும் ஒருவர்.

1980 இலையுதிர் காலத்தில் கல்லூரி நண்பன் ஒருவனை காபூலில் சந்திக்கிறேன். 1978 இல் கைது செய்யப்பட்ட பல ஆயிரக்கணக்கானோரில் அவனும் ஒருவன். ஒரு கல்வி நிலையத்தில் கல்வி பயின்ற அத்தனை பேரையும் அவர்கள் ஒரு நாளில் கைது செய்தார்கள். அவர்களின் சித்திரவதைக்குத் தப்பி மூன்று வேறுபட்ட சிறை முகாம்களை, சிறை வாழ்க்கையை அனுபவித்து தப்பிய ஒருவன். இந் நிகழ்வு அவனுக்கு மட்டும் தனித்துவமானதல்ல. இச் சம்பவத்தை நான் நினைவு கூருவதற்குக் காரணம் முதல் தடவையாக நான் யாருக்காக எழுதினேனோ அதை வாசிக்க வாய்ப்புக் கிடைத்தது. என்னுடைய கவிதை போராட்டம் பற்றியதாக அமைந்திருந்தது. இருளுக்கும் ஒளிக்கும் இடையேயான போராட்டம் அது.

நான் என்னை ஒரு நீண்டகாலப் போராட்டத்திற்கு தயார்படுத்த வேண்டியிருந்தது. தலைமறைவு வாழ்க்கை ஒன்றும் இலகுவானதல்ல. தொடர்ந்து போராடுவதற்கு உயிர்வாழக் கிடைத்த ஒரு வாய்ப்பாகவே அதனை நான் கருதுகிறேன். பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்காக என்னை தயாரித்துக் கொண்டிருந்த காலத்தில் 1977 இலிருந்து 1983 வரையிலான காலத்தை எனது அரசியல் பின்னணியையும் பிரக்ஞையையும் ஏற்படுத்திய காலமாகச் சொல்வேன். இக் காலத்தில் தான் நான் மனித உரிமை என்பது இயல்பாகவே கிடைப்பதல்ல, மாறாக நாம் அதற்காகப் போராடவேண்டும் என்பதையும் கற்றுக் கொண்டேன்.

ஆப்கானிஸ்தானிலிருந்து பல காத தொலைவிலுள்ள யேர்மனில் நான்கு வருடங்கள் தங்கியிருந்த போதிலும் நான் அனுபவ வாயிலாகக் கற்றுக் கொண்டவற்றை என்னால் மறக்க முடியவில்லை. யேர்மனில் அகதி அந்தஸ்து கிடைத்த போதிலும், என்னால் அங்கு வேரூன்ற முடியில்லை. காபூல் பற்றிய செய்திகளையும் அங்கு நடைபெற்ற கும்பல் கும்பலான கைதுகளையும் அறியக் கூடியதாக இருந்தது.

என்னுடைய இதயத்தில் காபூலின் எரிக்கப்பட்ட கிராமிய தோட்டங்களிலிருந்து பறவைகள் கூடு இழைத்து விட்டிருந்தன. பாடல்களைப் பாடின. அந்தக் குரல்களை என்னால் மீள நினைவு கொள்ளக் கூடியதாக இருந்தது. அவைகள் என்னை வருடிச் செல்கின்றன. ஒரு சிறிய பறவையொன்று தன்னுடைய தாய்ப் பறவையுடன் சேர்ந்து சிறை பிடிகக்கப்பட்டதாக உணர்ந்தேன். அவர்களை எனக்கு நன்கு தெரியும்.

1981இல் காபூலில் வைத்து கைதுசெய்யப்பட்டபோது அங்கிருந்தேன். நான் பாகிஸ்தானினூடாக திரும்பவும் ஆப்கானிஸ்தானுக்கு செல்ல முயன்றேன். மூன்று மில்லியன் ஆப்கானிஸ்தானிய அகதிகள் பல்வேறுபட்ட முகாம்களில் ஏழு அல்லது எட்டு அடிப்பபடைவாத குழுக்களின் இருபத்தி நான்கு மணிநேர கட்டுப்பாட்டிலும் பார்வையின் கீழும் எல்லாவித கொடுமைகளையும் சிததிரவதைகளையும் அனுபவித்தபடி இருந்தனர். புத்திஜீவிகள் கொல்லப்பட்டார்கள்; பெண்கள் அடிமைகளாக பிடித்து வைக்கப்பட்டனர். எனவே நான் மீளவும்

தலைமைறைவு வாழ்க்கையை வாழவேண்டியதாயிற்று. அங்கு ஆசிரியையாக மருத்துவ தாதியாக ஊர்வலங்களுக்கு தலைமை தாங்குபவராகவும் அமைப்பாளராகவும், பாகிஸ்தானில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களிலும் பெண் போராளிகளின் கூட்டங்களிலும் கடுமையாக உழைத்தேன். நாள் முழுவதும் அகதி முகாம்களில் வேலை செய்தேன். குறிப்பாக அங்கு வெளி நோயாளர் பிரிவுக்கு வந்த பெண்கள் குழந்தைகளை கவனித்துக் கொண்டேன். இவ்வாறு தான் நான் யேர்மனியில் ஆரம்பித்த மருத்துவ தாதிகளுக்கான கல்வியைத் தொடர முடிந்தது. அரசியலில் ஈடுபட்டுள்ள நான் 1984~1994 வரை பெண்கள் தந்தையர் சகோதரர்கள் அல்லது துணைவனின் அனுமதியின்றி பங்குகொள்ளும் அரசியலுக்கு அலைந்தேன். செப்ரெம்பர் 1993 இல் இறுதியாக நான் பாகிஸ்தானுக்குச் சென்றேன். அப்போது எனக்கு இரண்டு பிள்ளைகள். தலைமறைவாக இருந்து அரசியலில் ஈடுபட முடியாததுடன் இரு பிள்ளைகளையும் மறந்துவிட முடியாத சூழலில் எங்காவது செல்ல வேண்டும் என்ற கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டேன். நான் நோர்வேயை தெரிவு செய்தேன். 1994 இல் மார்ச் 8 ற்கான அமைப்பினரின் அழைப்பை ஏற்று 9 மார்ச் நோர்வே வந்து சேர்ந்தேன். ஆனால் தங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. மூன்றரை வருடகால கடுமையான போராட்டத்தின் மூலமும் நூற்றுக்கு மேற்பட்ட சர்வதேச அமைப்புக்களினதும் நோர்வேஜிய அமைப்புகளினதும் மற்றும் எழுத்தாளர்கள், 15 000 பாடசாலை மாணவர்களின் போராட்டத்தின் பின்பு மனிதாபிமான ரீதியில் தங்குவதற்கு அனுமதி கிடைத்தது.

”

## Urte gate **அகதிமுகாம் செப்ரெம்பர் 1994**

இங்கு மனிதர்கள்
தனித்து பெயர்கள் மாத்திரமே
மரங்களிலிருந்து இலைகள் உதிர்கின்ற வேளை
யாரும் அவற்றை வரவேற்பதில்லை

இங்கு ஒவ்வொரு மரத்திலுள்ள ஒவ்வொரு இலையும்
கண்ணீர் விடுகின்றன.
சூரியனின் களியாட்டத்தின் பின்பு
இந்த வேளை மழை வேர்களை மண்ணிலிருந்து அகழ்கிறது.
இங்கு விபத்துக்கள்
தங்கள் சத்தங்களிலேயே அழிந்துவிடுகின்றன.
மனித ஒலிகளுக்கு செவிகள் பழகப்பட்டு விடுகின்றன.
நாய்,
மழை
போக்குவரத்துக்கள்
வெறுமையான அவலங்களின் சத்தங்கள்
நாட்பொழுதின்
நீண்ட வாகன ஊர்திகள்
வெற்று அலுவலகங்களின் ஒலி
அலுத்துக் களைக்கின்ற இரைச்சலான நேரம்
மாலையில் குழந்தைகளை விட்டுச் செல்லும் கெட்ட நேரம்
பயனுள்ளபடி எல்லோரும் தூங்கவேண்டும்
இரவில் பயனுள்ளபடி தூங்காவிடில்



பகலில் விற்பதற்கு குறைந்த சக்தியைப் பெறுவாய்
நாட்கள் வேகத்தை அதிகரிக்கின்றன
நீயும் வேகத்தைக் கூட்டுகிறாய்
இங்கு நாளாந்தம் தேவையாகிறது
அதியுயர்நத சக்தியை நிர்வகித்து
அதே பூட்டிய வீதியை நோக்கி
யாருக்கும் அதை திறக்க நேரமில்லை.

பாலரும் பெரியோரும்
எழுவதிலும் வாசிப்பதிலும் மூழ்கிவிடுகின்றனர்
தாளின் பாவனை அதிகரிக்க கூடவே அதிகரிக்கும் அறியாமை
மறதி வெடிச்சிரிப்புடன் எல்லோரையும் சந்திக்கிறது.

இங்கு குண்டுகள் இல்லை
ராக்கற்றுகள் இல்லை
குப்பைகள் தினசரி வெடிக்கின்றன
தலையங்க குவியலில்.
இங்கு படுகொலைகள் பொருந்துகின்றன
பல மில்லியன் மக்கள் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும்
புள்ளிவிபரக் கணிப்புக்கு மட்டும்.
இங்கு தனி இதயம்
பின்தங்கிய ஒரு நிலையில்
இங்கு விழிகளைவிட கண்ணாடிகள் அதிகம்
இங்கு எதிர்ப்புகளை விட பலவீனங்களே அதிகம்
இங்கு இரும்பு இருக்கிறது ஆனால் இதயமில்லை.
இங்கு இதயத் துடிப்பு தொடர்புகளுடன் தொடுக்கப்பட்டுள்ளது
இதயக்கூட்டில் நவீன உதவிக்கருவிகள்
பங்கப்படுத்துவதற்காக

இங்கே மனிதர்கள் இறப்பர் உறைகளால் இடத்தில் அமர்த்தப்படுகின்றனர்
தொடர் இரவுகளில் திறந்த முகாம்களில்.
குருதி குருதியால் நோயாளியாகிறது இங்கே
வர்ணம் சிவப்பல்ல
இங்கு சொற்கள் நாவுடன் விளையாடுகின்றன.
இங்கு உனது கதறலே உன்னை விழுங்கி விடும்
பேச்சுரிமை என்பதன் அர்த்தம் நீ சுதந்திரமானாய்
எந்த பங்களிப்பையும் வழங்காமல் இருப்பதற்காய்.
இங்கு இதயங்கள் ஒவ்வொன்றாக நிறுத்தப்படுகின்றன
ஒவ்வொரு நெஞ்சறையிலும் இதயங்கள் இங்கு இறக்கின்றன
மனித இதயங்கள் துடிப்பது மிக அருமையாக
மனிதர்களுக்காய்
இங்கு மனிதர்கள் பெயர்கள் மாத்திரமே
இங்கு பெயர்களே
மனிதர்கள் ●

பனியையும் குளிரையும் ஊடறுத்துக் கொண்டு செல்கின்ற அந்த பஸ் மலைநாட்டின் வளைவுகளை மிகுந்த சிரமத்தோடு கடந்து கொண்டிருந்தது. இனிமேல் திணிப்பதற்கு இடமேயில்லை என்ற போதும் ஒவ்வொரு நிறுத்தத்திலும் பஸ் நிற்காமலும் இல்லை. ஆட்கள் ஏறாமலுமில்லை. பஸ்ஸினுள் சீட்டில் அமர்ந்திருப்போர் கதி நின்று அவஸ்தைப்படுகின்றவர்களை விட கஷ்டமானது. தலை வரை நிறைந்து விட்ட புத்தகப் பைகளையும், கைப்பைகளையும் குடைகளையும் எந்த கையால் பிடிப்பது எனத் தடுமாறிக் கொண்டு, பாதை வளைவுகளில் பஸ் திரும்புகையில் மடியிலுள்ள சுமைகளைப் பிடிப்பதா தாம் விழாமல் காத்துக் கொள்வதா என புரியாமல்...

பஸ்ஸின் பின் சீட்டில் அமர்ந்து மேற்சொன்ன அவஸ்தைகளை அனுபவித்துக் கொண்டிருந்த பைரவியின் தற்போதைய பிரச்சினை தான் இறங்க வேண்டிய நிறுத்தத்தில் எப்படி இறங்குவது என்பதுதான். இறங்க வேண்டிய நிறுத்தத்துக்கு ஒரு மைலுக்கு முன்னதாகவே தவிக்கத் தொடங்கியவள் 'எப்படி இந்த வியூகத்தை ஊடறுத்துச் செல்வேன்... அதற்குள் நான் இறங்க வேண்டிய இடம் கடந்து விடுமே... என எண்ணியவளாய் அவசர அவசரமாய் தன்னிடம் ஒப்படைத்திருந்த பொதிகளை இறக்கி வைத்து விட்டு அந்த நெரிசலின் திட்டுக்களை சுமந்து கொண்டு கீழிறங்கினாள்.

# ஸ்டிரைக்

## பாலரஞ்சினி ஜெயபால்

கீழிறங்கியவளுக்கு தான் இறங்க வேண்டிய நிறுத்தத்திற்கு முன்னாலேயே இறங்கிவிட்டதை உணர்ந்த போது சோர்வேற்பட்டது. கண் முன்னால் தெரிந்த பாதையின் ஏற்றம் வேறு பயமுறுத்தியது. எப்படியும் இந்த தூரத்தை நடந்து கடந்தேயாக வேண்டிய நிர்ப்பந்தத்துடன் இயலாமையும் சேர நடக்கத் தொடங்கியவள் சற்று நிதானித்து தன்னை....பார்த்துக் கொண்டாள். கசங்கிய சேலையும் கலைந்த கூந்தலும் சே... காலையில் கஷ்டப்பட்டு கட்டிய அந்த புடவையின் கோலம் மனதில் எரிச்சலை ஏற்படுத்தியது. தன் மீதான கழிவிரக்கத்துடன் நடக்கத் தொடங்கியவளை பின்னாலிருந்து வந்த பல குரல்கள் திரும்பிப் பார்க்க வைத்தன.

"குட்மோர்னிங் டீச்சர்"

"குட்மார்னிங்.. அட நீங்கள்ளாம் இங்கயிருந்துதா வாறீங்களா? என்ற பைரவியைப் பார்த்து

"ஆமா டீச்சர்" நம்ம லயம் கீபிரட்டுல தானே இருக்கு அங்கயிருந்து ஸ்கூலுக்கு பஸ் கெடயாது டீச்சர். நாம நடந்துதா வருவோம்" என்றான் ஒரு பையன்.

அப்ப ஒங்க லயம் கிட்டத்துலதா இருக்கா" என்றாள் பைரவி.

இல்ல டீச்சர்...தோ... பாருங்க தெரியுது. அதுதான் நம்ம லயம். அவன் காட்டிய அந்த லயகாம்பராக் கள் பைரவியின் கண்களுக்கு சின்ன பொட்டாய்த் தெரிந்தது.

"இவ்...வளவு தூரத்துல இருந்து நடந்தா வாறீங்க" ஆச்சரியமாய் கேட்டாள் பைரவி.

"ம்....அப்புறம்.." என்ற பதிலை கேட்ட பைரவி சட்டென்று திரும்பிப் பார்த்தாள். "அதுதானே பார்த்தேன் இப்படி பேசுறவன் நீயாதானே இருக்க முடியும். நீயும் இங்கிருந்துதா வாறியா ராசு...?



சிரித்தபடி தலையாட்டிய அந்த பத்து வயதுச் சிறுவன் முகத்தில் சிறுபிள்ளைத்தனமான அழகு இருந்தது..அவன் சிரிக்கின்றபோது தெரிகின்ற தெத்துப் பல்லின் வடிவில் எப்போதுமே பைரவிக்கு ஒரு பிரியம் உண்டு. பைரவியின் வகுப்பில் கற்கின்ற ராசுவின் முகத்தில் மாத்திரமல்ல, பேச்சிலும் சிறுபிள்ளைத்தனம் இருக்கும். அவனிடம் கேள்வி கேட்பது டீச்சராயிருக்கட்டும், அதிபராயிருக்கட்டும், ஏன் கல்வி அதிகாரிகளாயிருக்கட்டுமே. ஆமாம் என பதில் சொல்ல வேண்டியதற்கு பதிலாக 'ம்....அப்புறம்" என ஒரு எகத்தாளமான பதில் அவனிடமிருந்து வரும். 'ராசு, காலயில சாப்பிடியா? "ம்... அப்புறம்"; "வீட்டு வேலை முடிச்சுட்டியா ராசு? 'ம்...அப்புறம்"; "பூக்கன்றுகளுக்கு தண்ணி ஊத்துறது ராசுவோட வேலதானே?" "ம்...அப்புறம்"...

அவனுடைய பதிலில் தொனிக்கின்ற குழந்தைத்தனமும் பேச்சில் தெரிகின்ற மழலைத்தனமும் அவனை அதட்டவோ, அடிக்கவோ முடியாது செய்துவிடும்.

இந்தப் பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாக கடமை புரிகின்ற பைரவிக்கு, போக்குவரத்து வசதி குறைந்த, பின்தங்கிய அந்த பாடசாலை ரொம்ப பிடித்துக் கொண்டது. இங்குள்ள சிறார்களின் அன்பு, மதிப்பு, கள்ளமற்ற வெள்ளை உள்ளம் எல்லாவற்றுக்கும் மேலாக, வெகுளித்தனமிக்க அந்த சிறுவர் மீதான அன்பும் அவர்கள் இவள் மேல் செலுத்துகின்ற அபரிதமான அன்பும் பைரவியை இப் பாடசாலையிலேயே கட்டிப் போட்டு விட்டது.

ஐந்தாம் தரத்திற்கு ஆசிரியையான பைரவி அந்த வகுப்பு மாணாக்கர் மீது அதீத கவனம் செலுத்தியதால் மாணவர்கள் அனைவருக்குமே எதற்கெடுத்தாலும் பைரவி டீச்சர் தான் வேண்டும். அதிபர் கேட்டுக் கொண்டதற்கிணங்க புலமைப்பரிசில் பரீட்சைக்கான விசேட வகுப்புக்களை பைரவி நடாத்தத் தொடங்கிய பின் அவர்களோடு கூடுதலாக பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. பாடசாலை விட்டதும் அவர்களைச் சாப்பிடச் சொல்லுவாள் பைரவி. சிலர் அருகிலிருக்கும் தம் லயங் களுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வருவர். தூரத்திலிருந்து வருகின்ற மாணவர்கள் சாப்பாட்டை கட்டி எடுத்து வந்து சாப்பிடுவர். என்ன சாப்பாடு என்றால் சோறு கறி இத்யாதி களோடு இருக்குமா?? வழக்கமான ரொட்டிதான்.

ஏண்டா எந்த நாளும் ரொட்டி சாப்பிடுறீங்களே; ரொட்டின்னா அவ்வளவு விருப்பமா? என்றால், பிடிக்குதோ பிடிக்கலியோ ஆச்சி இதத்தா சுட்டு வச்சிருக்கும் என்பார்கள்.

இப்படித்தான் ஒருநாள் மாணவரை சாப்பிட சொல்லிவிட்டு தானும் சாப்பிடவென கைகழுவ போனாள் பைரவி. பாடசாலை வளவில் இருந்த ஜேம் மரத்தில் பழங்களைப் பறிக்கத் தயாராகிக் கொண்டிருந்த ராசுவை கண்டதும் சாப்பிடாமல் என்ன பண்ணுகிறான் என எண்ணியபடி...

"ராசு சாப்பிடலயா நீ? இன்னும் பத்தே நிமிசத்துல பாடத்தைத் தொடங்கிடுவேன். சுருக்குன்னு சாப்பிட்டுட்டு வா" என்றாள் பைரவி, மரத்தை பார்த்தபடியே பதில் வந்தது.

"சாப்பாடு கொண்டாறல டீச்சர்"

"ஏன் இன்டர்வலுக்கு கொண்டாந்த எல்லா சாப்பாட்டையும் சாப்பிட்டுட்டியோ"

"இல்லீங்க டீச்சர். இன்டர்வலுக்கு சாப்பிடல நா. இன்னிக்கு சாப்பாடே கொண்டாறல டீச்சர்".

பாவமாய் போனது பைரவிக்கு. அவனருகில் போய் தோளில் கைவைத்து,

ஏண்டா சாப்பாடு கொண்டாறல" என ஆதுரத்தோடு கேட்டவள் அவன் முகத்தைப் பார்த்ததும் திகைத்துப் போனாள். பசியால் வாடியிருந்த அந்த முகத்தில் ஏராளமாய் உணர்வலைகள் நிரம்பியிருந்தன. ஏதோ புலப்பட,

'சரி சரி வா நானும் நீயுமாய் சாப்பிடலாம்" என அழைத்தாள்.

வர மறுத்தவனை வலுக்கட்டாயமாய் இழுத்து வந்து அமர வைத்தாள் அவள். கண்களில்

நீர் நிறைய பைரவியை பார்த்தபடி அவள் கொடுத்த இடியப்பத்தை வாய்நிறைய திணித்துக் கொண்டான் ராசு. பாவம் பசியை மறைக்கத் தெரியாத அந்தப் பச்சை மனசு வேண்டாம் என மறுக்காமல் வாயில் இடியப்பத்தை திணித்த காட்சி பைரவி மனதில் ஆழமாய் பதிந்தது. எந்தக் கேள்வியும் கேட்காமல் சாப்பிட்டு முடித்ததும் வகுப்பை நடாத்த ஆரம்பித்தாள் அவள்.

அடுத்தநாள் காலை பாடசாலைக்கு பைரவி வந்ததிலிருந்து அவளது காலையே சுற்றிச் சுற்றி வந்தான் ராசு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பைரவி தாளாமல் கேட்டாள்,

‘என்ன ராசு ஏதாவது வேணுமா? ”

தயங்கியபடி பேசினான் ராசு,

‘இல்ல டீச்சர் நேத்திக்கு ஒங்க சாப்பாட்ட நா சாப்புட்டுட்டனா... ஒங்களுக்கு பசிச்சிருக்குமே... அப்படின்னு குமார் சொன்னான். ஏ... டீச்சர் ஒங்களுக்கு நேத்து ரொம்ப பசிச்சுச்சா? ”

‘இல்லியேடா நானும் ஒங்ககூட சாப்பிட்டேன்தானே”

“ஆமா, இத்துாண்டுதா சாப்பிட்டிருப்பீங்க. நான்தா எல்லாத்தையும் முழுங்கிப்புட்டனே”

‘போடா நா ஒண்ணும் இத்துனூண்டு சாப்பிடல. நல்லா சாப்பிட்டேன். அது சரி நேத்து ஓம்பசி போயிருச்சா? ”

ம்...அப்புறம் அதுதா வயிறு ரொம்ப சாப்பிட்டனே”

அவன் முகமலர்ச்சியோடு கூறிய விதம் பைரவிக்கு சிரிப்பை ஏற்படுத்தியது.

“அது சரி இப்ப சொல்லு ஏ நேத்து சாப்பாடு கொண்டாரல”

‘இருந்தாத்தானே கொண்டார” எகத்தாளமாய் வந்தது பதில்.

‘முந்தியெல்லாம் கொண்டு வருவதானே”

‘முந்தி அம்மா வீட்டுல இருந்தாங்க. சமைப்பாங்க. இப்ப அப்பா நல்லா இருந்தா சமைப்பாரு. குடிச்சுப்பிட்டு வந்தா ஒண்ணுமில்ல”

“ஏன் ஒங்க அம்மா எங்க”

‘அவங்கதா வெளிநாடு போயிட்டாங்களே. ஒரு வருசமாவுது”

“காசு அனுப்புவாங்களா? ”

‘ம்... அப்புறம் அனுப்பாமயா. அப்பா அதானே நல்லா குடிச்சுப்பிட்டு கெடக்குறாரு”

தோட்டங்களுக்கு தொற்றியுள்ள நோய் இது. அம்மாமார் வெளிநாடு சென்று அனுப்பும் காசில் குடித்து வெறித்துக் கொண்டு அப்பாமார் கிடக்க பாவம் இந்த சின்னஞ்சிறுசுகள் தான் தாய்ப் பாசமும் இல்லாமல் தந்தையிடம் அடிபட்டுக் கொண்டு, கால் வயிற்றுக்கும் அரை வயிறுக்கு மாய் சாப்பிட்டுக் கொண்டு படுகின்ற அவஸ்தை சொல்லி மாளாது. அட வெளிநாட்டில் எத்த னையோ பிரச்சினைகளுக்கு மத்தியில் உழைக் கின்ற அந்தப் பெண்களின் உழைப்புமல்லவா வீணாகிக் கொண்டிருக்கிறது.

மனசுக்குள் பொருமிக் கொண்ட பைரவி தன்னை சுதாகரித்துக் கொண்டு,

‘சரி எல்லா கதையையும் விட்டுபுட்டு நா சொல்றத கேளு. இனிமே நீ சாப்பாடு கொண்டு வராட்டி எங்கூடதா வந்து சாப்பிடணும் சரியா?” என அன்புக் கட்டளை இட்டாள்.

“சரி டீச்சர். ஆனா நீங்க நெறய சாப்பாடு கொண்டாறனும். இல்லாட்டி ஒங்களுக்கு இல்லாம போயிடுமே” என்றான் ராசு

காலம் நகர்ந்தது.

பைரவியோடு ரொம்பவும் ஒட்டிப் போன ராசு அவள் கூறுகின்ற எதையும் தட்டாமல் செய்வான். அன்றும் அப்படித்தான் பிரத்தியேக வகுப்பில் வைப்பதற்காக தீர்மானிக்கப்பட்ட பரீட்சை களுக்காக எல்லோரையும் அப்பியாசக் கொப்பி வாங்கிவர பணித்தாள் பைரவி.

‘இங்க பாருங்க. தொடர்ந்து நடக்கப் போற



எல்லா டெஸ்ட்களையும் நீங்க ஒரே கொப்பியில செய்தாதா ஒங்களுக்கு படிக்க வசதியா இருக்கும். அதனால சின்ன கொப்பியா வாங்கிடாம பெரிய கொப்பியா வாங்குங்க. என்ன சரிதானே” என்ற அவளின் குரலுக்கு,

“சரி டீச்சர்” என கோரஸாக பதில் கிடைத்தது.

“டீச்சர் அந்தக் கொப்பி எவ்வளவு விலை?” சிறுபிள்ளைத்தனமாய்க் கேட்டான் ராசு

‘என்ன முப்பது நாப்பது ரூபாய்க்குள்ள வரும். ஏன் கேக்குற?”

தெத்துப்பல் தெரிய சிரித்துவிட்டு அமர்ந்துவிட்டான். ஒரு கிழமையாகி விட்டது. வகுப்பில் ஓரிரு-வரைத் தவிர வேறு யாரும் கொப்பி இன்னும் வாங்கவில்லை.

‘நாளைக்கு வாங்கித் தாறேன்னாங்க டீச்சர்”

இதே பல்லவி நாலைந்து நாள் தொடர பைரவிக்கு கோபம் வந்விட்டது.

‘எத்தனை நாளா கொப்பி கொண்டு வரச் சொல்றன். ஏன் இன்னும் ஒருத்தரும் கொப்பி கொண்டு வரல”

ஒருவன் எழும்பிச் சொன்னான்,

‘சம்பளம் போட்டவுடன வாங்கியாறதா அப்பா சொன்னாரு டீச்சர். இன்னும் சம்பளம் போடலயாம். இப்ப வேலநிறுத்தம் நடக்குதாம்”

அடடா இதை எப்படி மறந்தேன் நான் என மனசுக்குள் குற்றவுணர்வு தலைதூக்க...

‘அப்பிடியா அப்ப அரவிந்தன், ஜெகன் நீங்க மட்டும் எப்பிடி வாங்கீனீங்க?” என்றாள்.

டீச்சர் ஏச மாட்டார் என தெரிந்ததும் ராசு எழுந்தான்.

“அது டீச்சர்... அவங்க அப்பாமாரு தோட்டத்துல வேல செய்யலியே. டவுனுல கடையில வேல பாக்குறாங்க”

‘நீ ஏன் கொப்பி வாங்கிட்டு வரல. ஒங்கம்மா அனுப்புற காசு இருக்குல்ல”

‘ம்... அப்புறம் அந்த காசத்தான் அப்பா குடிச்சே முடிச்சுடுவாரே. அதுதா அம்மா இப்ப காசே அனுப்புறதில்ல; கடுதாசியும் போடுறதில்ல”

ம்‘ம்... இந்த ஸ்டிரைக் எப்ப முடிஞ்சு... எப்ப சம்பளம் போட்டு... எப்ப நீங்க கொப்பி வாங்கிட்டு வந்து... எப்ப நான் டெஸ்ட் வைக்கிறது என அங்கலாய்த்த பைரவியைப் பார்த்து சிரித்தார்கள் மாணவர்கள்.

ஸ்டிரைக் தொடர்ந்தது. சம்பள உயர்வு வேண்டி இவர்கள் நடாத்தும் இந்த அகிம்சா போராட்டம் தொழிலாளர்களை பாதித்தது போல அதிபர் ஆசிரியர்களையும் பாதித்தது. பாடசாலை முழுதும் வரண்ட பூமியாய்க் கிடந்தது. மாண-வர்களின் முகங்களில் தெரிகின்ற சோர்வு களை படிப்பிக்க விடாமல் செய்தது. கொப்பி, பென்சில் பேனா என அத்தியாவசியமான பொருட்கள் இல்லாமல் மாணவர் வர மாணவ ரைத் தட்டிக் கேட்கவும் வழியில்லை. அரசாங்கம் இவர்களது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுக்கவே வேலைநிறுத்தம் தொடர்ந்தது.

பாடசாலைக்கு மாணவர் வரவு படிப்படியாகக் குறைந்தது. வருகின்ற மாணவர்களையும் கூட படிப்பில் ஈடுபடுத்த முடியாதவாறு சோர்ந்து காணப்பட்டனர்.

‘மூணு நாளா ஒருவேள கஞ்சி மட்டும்தான் டீச்சர் சாப்பாடு. வீட்டுல இருந்தா பசிக்குது. கோபம் கோபமா வருது. அதுதா ஸ்கூலுக்கு வந்தோம். இங்க வந்தாலாவது ப்ரெண்ட்ஸ் கூட கதைச்சுக் கிட்டு இருக்கலாமே” என அங்கலாய்த்தனர்.

ஸ்டிரைக் முடிந்தபாடில்லை. தோட்டப்புற ஆசிரியர்களும் அதிபர்களும் தொழிலாளி-களோடு தோள் கொடுக்கத் தயாரானார்கள். இந்த வேலை நிறுத்தம் ஒரு முடிவுக்கு வந்தாலேயொழிய பாடசாலை நடாத்த முடியாது என்ற நிலையில் அவர்களோடு இணைவதே சா-ரியான வழி என ஆசிரியர் சங்கம் தீர்மானித்து அதை நடைமுறைப் படுத்தியது.

தோட்டத்துக் காரியாலயத்தின் முன் அனைவரும் குழுமியிருந்து கோஷங்களை எழுப்பினர். தம்மோடு ஆசிரியர்களும் அதிபரும் இணைந்ததில் தோட்டத்து மக்கள் பெரிதும் உற்சாகமாயினர்.

கூட்டத்தில் ஒருவர் எழுந்து,
'நீங்கள்ளாம் நம்ம கூட சேர்ந்து இந்த பிரச்சினைக்கு தீர்வு கெடைக்கணும்னு பாடுபடவந்திருக்கிறது நம்ம எல்லாருக்கும் ரொம்ப சந்தோசம். நாம கேக்குற சம்பள உயர்வு மாத்திரம் அரசாங்கம் கொடுத்துடட்டும், அப்புறம் பாருங்க. மொத வேலயா நம்ம பிள்ளைகள் படிக்க தேவையான எல்லாத்தையும் வாங்கி குடுத்துப்பிட்டுத்தா மறுவேல. அவங்களாவது படிச்சு பெரியாளா வரணும். நம்மள மாதிரி கூலிவேல செஞ்சுகிட்டு மத்தவங்க முன்னால கைகட்டிகிட்டு நிக்காம பெரிய மனுசனா வரணும்.''

உண்மையிலேயே நாம இந்த சம்பள உயர்வு கேட்கிறதே பசங்களுக்காக செலவு செய்யத்தான். என்னடாப்பா நாஞ் சொல்றது?''
என கூட்டத்தைப் பார்த்து கேட்கவும்... கூட்டம் வீரமாய் கைதட்டி ஆமோதித்தது.

நாட்கள் நகர்ந்தன. நாடு முழுவதும் இந்த வேலைநிறுத்தம் பரவியது. தோட்டத்தில் கொழுந்துகள் எல்லாம் முற்றிவிட்டன. நாட்டின் பொருளாதார ஏணி சற்றே ஆட்டம் கண்டது. அரசாங்கம் விழித்துக் கொண்டு அவசர அவசரமாய் தோட்டத்து யூனியன்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு தீர்மானத்துக்கு வந்தது.

அன்று காலை அரசாங்கத்தின் முடிவு அறிவிக்கப்பட்டது. தொழிலாளர் கேட்ட நாள் சம்பளத்தை வழங்காவிட்டாலும் தொழிலாளரின் அன்றாட வாழ்விற்கு ஏற்ற விதத்தில் நியாயமான ஒரு சம்பள உயர்வை அரசாங்கம் வழங்க தீர்மானத்திருப்பதாக அறிவித்த அந்த செய்தி கேட்டு தொழிலாளர் ஆனந்தக் கோஷமிட்டனர்.

பைரவி, 'அப்பாடா...' என பெருமூச்சு விட்டுக் கொண்டாள். இந்த மட்டிலாவது ஒரு தீர்வு ஏற்பட்டு பாடசாலை மீண்டும் இயங்கத் தொடங் கினால் போதுமென்றிருந்தது அவளுக்கு. ஒரு கிழமைலேயே அரசாங்கம் தான் அறிவித்தபடி அந்த சம்பள உயர்வை வழங்கியது. ஒவ்வொரு தொழிலாளியும் தமது நிலுவை சம்பளத்துடன் மிக்க சந்தோசத்தோடு வீடுகளுக்குப் போவதில் உண்மையான சந்தோஷத்தின் தார்ப்பரியம் புரிந்தது.

அடுத்த நாள் காலை பாடசாலைக்கு வந்த பைரவிக்கு அந்த சோக செய்தியை கூறினார் அதிபர். ராசுவின் தந்தை காலமான செய்தி கேட்ட பைரவிக்கு அந்த பையனின் குழந்தை முகம் ஞாபகத்துக்கு வந்து அவஸ்தைப்படுத் தியது. பாடசாலை மாணவர்களையும் அழைத்து கொண்டு அந்த இழவு வீட்டுக்குள் நுழைந்த பைரவிக்கு தூக்கிவாரிப் போட்டது.

'இவரா ராசுவின் அப்பா? அன்னைக்கு பசங்க ளோட படிப்ப பத்தி ரொம்பவும் அக்கறையா பேசினாரே. பாவம் இப்படி அநியாயமாய் போயிட் டாரே'' என மனசுக்குள் புலம்பிக் கொண்டவள், ராசுவை கண்களால் தேடினாள்.
அதோ அந்த மூலையில்...
"ராசு..'' என பக்கத்தில் அமர்ந்து கூப்பிட்டாள் பைரவி. நிமிர்ந்து பார்த்தவன் கண்கள் கலங்க, நெஞ்சு விம்ம 'டீச்சர்...'' என்றபடி அவள் மடியில் படுத்து அழுதான். அவனைத் தடவிக் கொடுத்தபடி எதுவும் பேச முடியாதவளாய் அமர்ந்திருப்பதைத் தவிர பைரவிக்கு வேறு



வழி தெரியவில்லை.
திடீரென அவள் மடியிலிருந்து நிமிர்ந்தவன்...
'டீச்சர் எனக்கு... நா ...இனி கொப்பி வாங்கிட்டு வரவே முடியாது டீச்சர். ஏன்னா... அப்பா அந்த... அந்தக் காசிலதா நேத்தைக்கு குடிச்சுப்பிட்டு வந்து...
நா கேட்டேன்... "ஏம்பா எனக்கு கொப்பி பென்சில் ஒண்ணும் வாங்கிட்டு வரலயான்னு. கேட்டதுக்கு என்னய அடிச்சுப்பிட்டு... படுத்தவருதா...
டீச்சர், இனி எனக்கு கொப்பி வாங்கிட்டு வரவே முடியாது டீச்சர்'' என்றபடி விம்மினான்.

## 2000ம் ஆண்டில்

வன்முறைகள் ஒழிந்து
புதுவரலாறு படைக்கட்டும்
கண்ணெதிரில் மக்கள்
கஸ்டங்கள் நீங்கட்டும்
சொல்லமுது செயல்கள்
எல்லாம்
ஆணுக்கும் பெண்ணுக்கும்
சரிநிகராக நடக்கட்டும்
பெண்ணைப்
புதைகுழிக்குள்
அனுப்புகின்ற
கயவர்கள் ஒழியட்டும்
அகதிகள் எல்லோர்க்கும்
ஆறுதல் கிடைக்கட்டும்.



சி.சிறிவதி
(2002)

# தொழில் நுட்பமும்

பெண் என்பவளுக்கு வீடே உலகமாக உருவாக்கப்பட்ட ஆணாதிக்க உலகில் அவளுக்கு வெளியுலக செய்தி என்பது கணவன் மூலமாக அல்லது சுற்றம் ,உறவுகள் மூலமாகவே தெரிய வந்தது. ஒரு மூன்றாவது கருத்து என்பதை அவள் வேறு ஒருவர் வாயால் கேள்விப்படாமலே பல நூற்றாண்டுகளாக இருந்தாள். ஆனால் ஐரோப்பியர் ஆசியாவில் கால் வைத்த போதே தொழில் நுட்பத்துடன் பெண்விடுதலையும் சேர்ந்து விட்டது. அச்சுத் தொழில் வந்தபோது பத்திரிகைகள், தினசரிகள் வீட்டிற்குள் நுழைந்துவிட்டன. அதன் மூலமாகவே பாரதி போன்ற கவிஞர்கள் பெண்விடுதலைக் கருத்துக்களைப் பரப்பினர். பின் வானொலி வந்தது. உலகின் மூலையில் நடைபெறும் விஷயங்களை பெண்ணும் அறிந்தாள். தொழில்நுட்பம் மெதுவாக பெண்ணை அவளது குடும்பத் தளைகளிலிருந்து விடுவிக்கத் தொடங்கியது. உலகம் சுருங்கிக் கொண்டு வருவதற்கு உலகம் எல்லைகள் தாண்டி வீட்டிற்குள் வருவதற்கு இக்காலச் சான்று 'வைய விரிவு வலை'யில் இயங்கும் இணையமாகும்.

# பெண் விடுதலையும்

கணினி எனும் கம்யூட்டர் மனிதனின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைந்து விட்டது. அலுவலகமாக இருந்தாலும் சரி ஆராய்ச்சிக் கூடங்களாக இருந்தாலும் சரி, பள்ளிகள் கல்லூரிகள் என எல்லா இடங்களிலும் தகவல்களைப் பெற்று அதனைச் சேகரித்து வைத்து, மீண்டும் பயன்படுத்த கணினியின் தேவை அடிப்படை ஒன்றாகி விட்டது. இணையம் எனும் internet அறிமுகத்திற்குப் பின் அதன் தேவை பன்மடங்காகப் பெருகி விட்டதை நாம் அறிவோம்.

கணினியில் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மட்டும் தான் பயன்படுத்தமுடியும் என சிலர் இன்றளவும் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கணினி, மொழி எனும் எல்லையைத் தாண்டி உலகின் எல்லா பாகங்களிலும் வாழும் மக்களுக்கு பயனளித்துக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் தமிழர்களாகிய நாம் அதனை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பதை நோக்குவது சிறப்பு.

கணினி இல்லாத தமிழ் வீடுகளே குறைவு. நம்மில் பலரும் கணினியை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்திக் கொண்டு தானிருக்கின்றோம். கணினியை வைத்திருக்கின்றோம் என்பது ஒரு சாதாரண விஷயமே. அதை எவ்வாறு நமது குடும்ப மேம்பாட்டிற்கு, சுயமேம்பாட்டிற்கு பயன்படுத்துகின்றோம் என்பதே கேள்வி.

இணையத்தில் தமிழர்களுக்கான பக்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழகத்திலிருந்து வருகின்ற தமிழ் பத்திரிகைகளாகிய விகடன், குமுதம், தினமணி போன்ற பல பத்திரிகைகள் எல்லோருக்கும் எப்போதும் இணையத்தின் வழி கிடைக்கின்றன. அத்தோடு அச்சு வடிவமற்ற இணைய பத்திரிகைகள் பலவும் கூட வலம் வந்து கொண்டிருக்கின்றன.
உதாரணத்திற்கு
http://www.ambalam.com
http://www.webulagam.com போன்றவை.



சுபா

இவை ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட்டு எல்லாரும் செய்திகளை அறிந்து கொள்ளும் வகையில் அழகாக வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர இணையம் வழி இடைவிடாது பாடல்களை கேட்டு மகிழவும் முடியும். 24 மணி நேர வானொலிகள் இருக்கின்றன. அவற்றை கேட்டும் மகிழலாம்.

இணையத்தின் வழி செய்திகளையும் விபரங்களையும் மட்டும் அறிந்து கொள்வதோடு எவ்வகையில் அதனைப் பயன்படுத்தி நமது சிந்தனைத் திறனையும் அறிவையும் பெருக்கிக் கொள்ள முடியுமென சிந்திப்பது சிறப்பு. ஒரு கருத்தானது நம்மிடம் இருக்கும் போது அது சிறப்படையாது. அக்கருத்து பலரிடமும் சென்று சேர்ந்து அதனை விவாதித்து அதனைச் செம்மைப்படுத்தும் போது அக் கருத்து வளம் பெற்று பலருக்கும் உதவுகின்ற ஒன்றாக அமைய வாய்ப்புக்கள் உண்டு. அந்த வகையில் உங்களது கருத்துக்களை மற்றவர்களும் தெரிந்து கொள்ளும் வகையிலும், நீங்கள் வெளியிடும் பல FORUM கள் (மடலாடற் குழுக்கள்) இயங்கி வருகின்றன. இவ்வகை மடலாடற் குழுக்களில் உலகின் பல பாகங்களிலிருந்து மக்கள் செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். இந்த மடலாடற் குழுக்கள் ஒரு தனிப்பட்ட விசயத்தை ஆய்வு செய்வதற்காகவோ அல்லது பொதுவாக எல்லா விசயங்களையும் பற்றி விவாதித்து கருத்துப் பரிமாற்றத்தை வளர்ப்பதற்காகவோ அமைத்திருக்கின்றன. இவ்வகையிலான மடலாடற் குழுக்களில் சேர்ந்து பங்களிப்பது மிகவும் சுலபமானதே.

http://www.groups.yahoo.com/group/esuadi
http://www.groups.yahoo.com/group/tamilulagam
http://www.groups.yahoo.com/group/meykandhar
http://www.groups.yahoo.com/group/agathiyar
http://www.tamil.net

இவ்வகை மடலாடற் குழுக்களின் வழி பல அரிய திட்டங்கள் தனித் தமிழுக்காக வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழில் கிடைக்கின்ற அத்தனை புத்தகங்களையும் மின் வடிவாக்கும் முயற்சியில் இறங்கி பல புத்தகங்களை இதுவரை சேர்த்துள்ளது மதுரைத் திட்டம். இதன் இணைய முகவரி
http://www.projectmadurai.com

இம் முயற்சியில் பங்களிக்க அடிப்படையில் நமக்குத் தேவையானது முயற்சியும் சேவை மனப்பான்மையுமே. இந்த வலைப்பக்கத்தில் இதுவரை மின் வடிவாக்கப்பட்டுள்ள நூற்றுக் கணக்கான நூல்கள் இருக்கின்றன. அவை எல்லோருக்கும் பொதுவானவை. வாசகர்களாகிய நீங்களும் உங்களுக்குச் சிறப்பாகப்படுகின்ற ஏதாவது ஒரு நூலை மின்பதிப்பாக்கி இங்கு சேகரிக்கலாம். சென்ற ஆண்டு மலேசியாவில் நடந்த 4ம் அனைத்துலக கணினி கருத்தரங்கிற்கு பிறகு தமிழ் மரபு அறக்கட்டளை உருவாக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையின் வழி, ஓலைச்சுவடிகள் மறுபதிப்பு, சேகரிப்பு, மேலும் அதனை ஒட்டிய ஆய்வுகள் என பல்வேறு கோணங்களில் தமிழர்களின் மரபு சார்ந்தவற்றை மின்பதிப்பாக்கி பாதுகாக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தில் உலகில் வாழும் அனைத்து தமிழர்களும் கலந்து சிறப்பு சேர்க்க முடியும். மேலும் தகவல்களைப் பெறுவதற்கு,
http://www.infitt.org/thf எனும் வலைப் பக்கம் உதவும்..

கணினியின் வழி மொழி அறிவை மாத்திரமே பெருக்கி கொள்ள முடியும் என சிலர் நினைத்துக் கொண்டிருக்கலாம். இது முற்றிலும் தவறான ஒரு கருத்து. மொழிப் பயிற்சியோடு

பல தொழிநுட்பத் திறனையும் கூட வளர்க்கிற ஊடகமாக இணையம் விளங்குகின்றது. இணையம் வழி கணினி இயந்திரத் தொழில்நுட்பக் கல்வியை சிறார்களுக்குச் சிறு வயதிலேயே தமிழில் அறிமுகப்படுத்தும் ஒரு திட்டத்தினை உருவாக்கி வருகின்றேன். இப்போது இத் திட்டமானது மலேசியாவில் இயங்கி வருகின்ற ஒரு தொடக்கப் பள்ளியில் அமுல் படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் வழி அனைத்து தமிழ் சிறார்களும் பங்கு பெற்று பயன் பெறமுடியும். இதனைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள,

http://www.subaonline.de

என்ற வலைப்பக்கத்திறகுச் சென்று அங்கு Education பகுதிக்குச் சென்று பார்க்கலாம்.

தகவல் தெரிந்த சமுதாயமே மேம்பாடு அடைந்த நாகரீகம் பெற்ற சமுதாயமாகக் கருதப்படுகின்றது. பெண்கள் தங்களது வாழ்க்கையை ஒரு சிறிய வட்டத்திற்குள் மட்டுமே திணித்துக் கொண்டு வாழும் போது அங்கு சிந்தனைக்கு விடுதலை கிடைக்க வாய்ப்பில்லை. இணையம் பெண்கள் தங்களது சிந்தனைத் திறத்தை சீரிய வகையில் வளர்க்க பெரும் வகையில் உதவுகின்றது. கல்வி என்பது பள்ளிப் படிப்போடு மட்டுமே முடிந்திடக்கூடிய ஒன்றல்ல.கணினியன் வழி பட்டப்படிப்பை உலகின் பல பாகங்களிலும் இயங்கி வருகின்ற பல்கலைக் கழகங்களிலும் படித்து பட்டம் பெற இப்போது இணையம் வழி வகுத்துக் கொடுத்துள்ளது. வீட்டில் இருந்தபடியே வேலை செய்து பணம் சேகரிக்கவும் கூட பல திட்டங்களை இணையம் வழங்குகின்றது.

இணையமென்பது தகவல் விடுதலை. தகவல் பொதுமைப்படும் போது அதனுடன் பெண் விடுதலையும் இணைகிறது. அடிப்படையில் அவரவர் விடுதலை அவரவர் கையில் தான் உள்ளது. அவ்வகையில் இணையத்தைப் பெண் விடுதலைக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பது பெண்களின் ஆக்கமான சிந்தனைகளைச் சார்ந்தே உள்ளது.



ஓவியம்: றஞ்சினி



ஓவியம்: றஞ்சினி

ஓவியம் பின்புறம்



# பெண்களும் அடங்குதலும்

சந்திரவதனா செல்வகுமாரன்



அடங்குதல் என்பது அன்பு, பாசம், நட்பு, மரியாதை இவைகளுக்குள் அடங்கும் ஒரு விடயம். அதை ஆண்-பெண் என்ற இருபால்களுக்கிடையில் அடக்க நினைப்பது அபத்தம். அன்பின் முன்னோ பாசத்தின் முன்னோ அடங்கு என்றோ அல்லது வளைந்து கொடு என்றோ யாருமே யாருக்கும் சொல்லத் தேவையில்லை. அன்பின் நெகிழ்ச்சியில் பாசத்தின் இறுக்கத்தில் அது தானே வரும். அதே போலத்தான் நட்பு என்ற தூய்மையான உறவின் போதும் மனங்கள் நட்புக்காய் அடங்கும் அல்லது வளைந்து கொடுக்கும்.அதை விடுத்து ஆண் என்ற அதிகாரத்துக்கு முன் அடங்குதல் என்ற தேவை ஒரு பெண்ணுக்கு நிச்சயமாக இல்லை.

ஏன் ஒரு பெண் அடங்க வேண்டும்? என்ன காரணத் துக்காக அடங்க வேண்டும்?

ஆணின் அடக்குதலும், பெண்ணின் அடங்குதலும் அல்ல வாழ்க்கை.ஆணோ பெண்ணோ மனசு ஒருமித்து, அன்பிலே ஒருவருக்கொருவர் அடங்கி, வளைந்து இன்புற்று வாழ்தலே வாழ்க்கை. இங்கே பெண் மட்டும் அடங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஏன்? அதுவும் ஆண் என்ற அதிகாரத்துக்கு முன் அடங்கவேண்டும் என்று ஏன் எல்லோரும் எதிர்பார்க்க வேண்டும்.

பெண்கள் அடங்கினால்தான் குடும்பம் சந்தோஷ மாக இருக்கும் என்பதுதான் இன்று பலரது கருத்தாக இருக்கிறது. உண்மையில் இப்படி நினைப்பதே தப்பானது.

ஒரு ஆண் தன் மனைவியை அடக்கும் போது அவள் அடங்கி ஒடுங்கி இருந்து விட்டால் அதற்கு அர்த்தம் அவள் சந்தோஷமாக இருக்கிறாள் என்பதா? நிச்சயமாக இல்லை.

அவள் தன் இயலாமையில் தனக்குள்ளே அழுது புலம்பி, எண்ணுவதை எடுத்தியம்ப முடியாமல் மனசுக் குள் குமுறி, ஒரு அழுத்தமான அமைதியற்ற மனது டன்தான் வாழ்கிறாள். அதை ஆண்கள் அவள் சந்தோஷமாக வாழ்கிறாள் என்றோ அவர்கள் குடும்பம் சந்தோஷமாக இருக்கிறது என்றோ சொல்ல முடியாது.

ஆண் சொன்னால் பெண் கேட்க வேண்டும்; ஆணின் அதிகாரத்தில் பெண் அடங்கித்தான் போக வேண்டும்; அதுதான் பெண்ணுக்கு அழகு; அதில்தான் பெண்ணுக்கு சந்தோஷம் என்று எப்படி ஒரு ஆணே தீர்மானிக்க முடியும். அவளுக்கு எது சந்தோஷம், எது துன்பம் என்பதை அவள்தான் தீர்மானிக்க வேண்டும். அதை விடுத்து ஆண்கள் தமது சந்தோசம் ஒன்றையே கருத்தில் கொண்டு அவளுக்கு இதுதான் சந்தோசம் என்று தாங்களே தீர்மானிப்பது  கொடுமையானது.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவையெல்லாம் காலங்காலமாய் பெண்களுக்கே உரியதென்று வகுக்கப்பட்டிருக்கும் போது இன்றைய புலம்பெயர் பெண்கள் அந்த வரையறைகளிலிருந்து வழுவிக் கொண்டிருக்கிறார்கள் என்பது சில ஆண்களது ஆதங்கம்.

எத்தனையோ விடயங்கள் காலத்துக் கேற்ப மாறும்போது இப்படியான பெண்களை அடக்கும் விடயங்களை மட்டும் ஆண்கள் இழுத்துப் பிடித்து வைத்திருப்பதன் முழு நோக்கமும்தான் என்ன?

ஒன்று - சுயநலம்.

தமது சொகுசான வாழ்க்கை இதனால் பறிக்கப்பட்டு விடுமே என்ற சுயநல எண்ணம்.

அடுத்தது - பயம்.

பெண்களின் வலிமையில் பயம். பெண்களின் புத்திசாலித்தனத்தில் பயம். எங்கே பெண்கள் தங்களை விஞ்சி விடுவார்களோ என்று பயம்.

பெண்கள் மென்மையானவர்கள், பூப்போன்றவர்கள், வலிமையில்லாதவர்கள், புத்தியில்லாதவர்கள் என்றும் அவர்கள் அடங்கிப் போக வேண்டியவர்கள்தான் என்றும் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் ஆண்களால் சொல்லிக் கொண்டிருக்க முடியும்! அதைக் கேட்டுக் கொண்டு இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் பெண்களால் மனதுக்குள் குமுறிக் கொண்டு வெளியில் பதுமை போல் நடிக்க முடியும்?

ஒரு பெண் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாது, எது அவளால் முடியும், எது அவளால் முடியாது என்பதான அவள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களுமே முதலில் சமூகத்தால்தான் தீர்மானிக்கப்படுகிறது. அடுத்து அவளது தந்தையால், சகோதரனால், கணவனால், மகனால்....... என்று இப்படித்தான் இதுவரை காலமும் தீர்மானிக்கப்பட்டு வந்தன. இன்னும் அந்த நிலை தொடர வேண்டுமென்று நினைப்பவர்களே அடக்கம் ஒடுக்கம் பற்றிப் பெண்களுடன் சம்பந்தப்படுத்தி இன்னும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பத்து வயதானதும் படலை தாண்ட விடாமல் பெண்களை அடைத்த காலமும் உண்டு. அது சற்று மாறி பாடசாலை வீடு என்று ஆன காலமும் உண்டு. அங்கும் எத்தனை கட்டுப்பாடுகள். பெண்பிள்ளைகளுக் கென்றே சில விளையாட்டுக்கள். அவை வீட்டுக்குள்ளிருந்து கயிறடித்தல், கொக்கான் வெட்டுதல்.. இப்படித்தான் இருந்தது. இல்லாவிட்டால் பாடசாலையில் கூடைப்பந்து ஓட்டம் போன்ற மென்னையான விளையாட்டுக்கள். கால்பந்தோ, தற்காப்புக்கு ஏற்ற கராத்தே, யூடோ போன்ற விளையாட்டுக்களோ பெண்களுக்குத் தேவையில்லையென்று விட்டு விட்டார்கள். ஏனெனில் பெண்கள் மென்மையானவர்களாம்.

இவர்களது இந்தச் செயற்பாட்டைப் பார்க்கும்போது பெண்களை வலிமையற்றவர்களாக ஆக்க வேண்டு மென்று திட்டமிட்டே அவர்கள் இதைச் செய்துள்ளார்கள் என்பது புரிகிறது. காலங்காலமாக வந்த இந்தச் சதிச்செயலின் கள்ளத்தனம் புரியாமலே எமது முந்தைய பெண்கள் தமது வாழ்வை தம்மோடு சேர்த்துப் பிணைக்கப்பட்ட பெண்அடிமைச் சங்கிலிகளுக்குள் நெரிபட்ட படியே கழித்து... களைத்து வாழ்க்கையின் அர்த்தம் புரியாமலே மடிந்தும் விட்டார்கள். இன்றும் இன்னும் எத்தனையோ பெண்கள் சமூகத்துக்காக வாழ்கிறார்கள். அல்லது ஆண்கள் சமூகம் கலாச்சாரம் பண்பாடு என்ற போலி ஆயுதங்களை வைத்து பெண்களை மிரட்டி ஒடுக்கி அடக்கி வைத்திருக்கிறார்கள்.



இன்னுமொரு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாய் அமைவது. இதுகூட ஒரு இயலாமையின் வெளிப்பாடுதான். சிறையில் இருந்து வெளிவர முடியாத ஒருவருக்கு வெளியில் திரிபவரைப் பார்க்கும் போது ஏற்படுகின்ற சின்னத் தனமான பொறாமைதான் அது. எல்லோரும் நினைப்பது போல் பெண்கள் வலிமையிலோ புத்தியிலோ வீரத்திலோ குறைந்தவர்களல்ல. இன்னும் சொல்லப் போனால் ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் மனவலிமை அதிகம். பெண்களை மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் வலிமையற்றவர்கள் என்று கூறி அடக்க நினைப்பது ஆண்களினது சுயநல சிந்தையுடனான சாதுர்யம்.

அடங்குதல் என்பது பெண்களுக்கு மட்டுமானது என முத்திரை குத்தக் கூடிய, பால் சம்பந்தப் பட்ட ஒரு விடயமே அல்ல. அது அன்பு பாசம் நட்பு என்பவற்றுள் அடங்கும் ஒரு விடயம்.

## விஜிகலாவின் ஒரு கவிதை

எத்தனை தலையணைகள் ~ பெண்களின்
கண்ணீரால் நனைந்து கொண்டிருக்கிறது
ஊமைப் பொம்மைகளாய்
சொல்வதற்கெல்லாம் தலையாட்டி
உணர்வெல்லாம் அடக்கப்பட்ட
மரக்கட்டைகளாய்,
மூலைக்கு மூலை நின்று
பெண்கள் விடும் கண்ணீர் பிறருக்கு எங்கே புரியப்போகின்றது!

அடுப்படியில் கிடந்து
அனலில் வெந்தும்
அடி உதைபட்டு அங்கங்கள் நொந்தும்
அடுக்களைப் பூனைகளாய்
அமிழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள்
எத்தனை... எத்தனை...

விலைமதிப்பே இல்லா ~ ஆற்றல்தான்
அவளிடம்
எத்தனை இருந்தாலும்

ஆட்டக்காரி என்றே
அவளை அலட்சியம் செய்வதும்
அதிலும் ஏழைப் பெண்ணென்றால்
எடுத்ததிற்கெல்லாம் அவளைத் திட்டுவதும்
எரிக்கின்ற நம் சமூகத்தின்
தீராத நோயாகும்!

பெண்களே...
பெண்ணாய் பிறந்திடுங்கள்
ஏழைப் பெண்களாய் பிறக்காதீர்கள்
எரிமலைக்குக் கூட ~ நம்மில் இரக்கம் வரும்
ஆனால் நம் சமூகத்திற்கு இரக்கம் வராது
முள்ளுக்கம்பியால் குத்தினால் கூட
தாங்கிக் கொள்ளலாம் ~ ஆனால்
முள்ளான சொற்களால் குத்தும் போது
இதயத்தால் இரத்தம் வடிகிறது
இதயங்கள் மரத்த
கல்நெஞ்சாய் போவது
மற்றவர்கள் இருந்து கொண்டிருப்பதால்
போதும் பெண்களே
நீங்கள் விட்ட கண்ணீர்
உங்கள் கண்ணீரை
கம்பிகளாக்குங்கள்
நமக்கெல்லாம் விடிவு காலம்
கிடைப்பதற்கு!.



**பு.விஜிகலா**

(09-02-2002)



## பாடல்

தட்டெனத் தட்டெனப் பலமாகத் தட்டினோம்
சட்டெனச் சட்டெனக் கதவுகள் திறந்தன
பட்டெனப் பட்டெனப் பாடுகள் பட்டோமே வாழ்வில்
கட்டெனக் கட்டெனக் கட்டுண்டு கிடந்தோமே
வெட்டென வெட்டென வெட்டுண்டு நின்றோமே
தெட்டெனத் தெட்டென இன்றே தெளிந்தோமே நாமே.
(தட்டென...)

பொன்னினால் மூடி கல்லெனவாக்கி பூஜைக்குரியதானோம்
நாற்குணம் போர்த்தி கோடுகள் கீறி குலத்தில் விலக்கப்பட்டோம் (விளக்கானோம்)
ஒருத்திக்கு ஒருவன் என்றோர் பின்னர் ஐந்து தந்தார்
நகரை எரிக்க வைத்தார் எமையே தீயிலிட்டார் காவியத்தில்
பூவென்றார் நிலவென்றார் உறுப்புக்கோர் பெயர்கொண்டோம்
முகத்தைத் தொலைக்கச் செய்து ஆடைகலைத்துவிட்டார் ஓவியத்தில்
கற்புக்கரசியென்றார் படிதாண்டாப் பத்தினியென்றார்
மழையும் பெய்ததென்றார் கிணற்றுக்கயிறும் நின்றதென்றார் ஏட்டினிலே
(தட்டென...)

புளித்த கதைகள் நமக்கெதுக்கடி சகியே...சகியே...
மிளகரைக்கத் தலை கொடுத்ததும் போதும் போதும்
புதிதாய் எமை வார்த்திடுவோம் இனியே... இனியே...
இனி எம்கதை தானே வாழும் வாழும்
பூவாய் நசிக்கையிலே முள்ளாய் மாறிடுவோம்
தென்றல் வருடிக் கொன்றால் புயலாய் வீசிடுவோம்
வேரில் பலமிருந்தால் விழுதுகள் உறுதிபெறும்
விழிநீரை மழையாக்கி எங்கும் பொழிந்திடுவோம்
வாழ்விற்குரம் போட்டு எம்மை (பிறப்பை) உயர்த்திடுவோம்
பூமிதனைப் பிளந்து புதுவித்தும் வானுயரும்.
(தட்டென...)



**உமா**

(2002)